சந்திரசேகரம்
https://telegram.me/tamilbooksworld

இந்திரா சௌந்தர்ராஜன்

www.pustaka.co.in

Pustaka
Digital Media
http://www.pustaka.co.in

சந்திரசேகரம்!

Chandhira Sekaram!

Author:

இந்திரா சௌந்தர்ராஜன்

Indira Soundarajan

For more books
http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5
அத்தியாயம் 6
அத்தியாயம் 7
அத்தியாயம் 8
அத்தியாயம் 9
அத்தியாயம் 10
அத்தியாயம் 11
அத்தியாயம் 12
அத்தியாயம் 13
அத்தியாயம் 14
அத்தியாயம் 15
அத்தியாயம் 16
அத்தியாயம் 17
அத்தியாயம் 18
அத்தியாயம் 19
அத்தியாயம் 20
அத்தியாயம் 21
அத்தியாயம் 22
அத்தியாயம் 23
அத்தியாயம் 24
அத்தியாயம் 25
அத்தியாயம் 26
அத்தியாயம் 27
அத்தியாயம் 28

அத்தியாயம் 29
அத்தியாயம் 30
அத்தியாயம் 31
அத்தியாயம் 32
அத்தியாயம் 33
அத்தியாயம் 34
அத்தியாயம் 35
அத்தியாயம் 36
அத்தியாயம் 37
அத்தியாயம் 38
அத்தியாயம் 39
அத்தியாயம் 40
அத்தியாயம் 41
அத்தியாயம் 42
அத்தியாயம் 43
அத்தியாயம் 44
அத்தியாயம் 45
அத்தியாயம் 46
அத்தியாயம் 47
அத்தியாயம் 48

சந்திரசேகரம்!

இந்திரா சௌந்தர்ராஜன்

என்னுரை

உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் இந்த சந்திரசேகரம் நா எழுதிய நூல்களிலேயே மிக வேறுபட்டது. மிக பவித்ரமானதும் கூட...

அடிப்படையில் நான் ஒரு தமிழ் நாவலாசிரியன். அதாவது எழுத்தாளன். பெரும்பாலும், எழுத்தாளர்கள் இடது சார்பு கொண்டிருப்பார்கள். வழிவழியாக வரும் நம்பிக்கைகளை கேள்வியாய் கேட்பார்கள். அவைகளை மறுதலித்துவிட்டு ஒரு புதுவழியில் நடப்பார்கள். கடவுள் விஷயத்தில் பெரிதாக மண்டையை உடைத்துக்கொள்ள மாட்டார்கள். கடவுள் இருக்க வாய்ப்பில்லை என்கிற கருத்தே பெரும்பாலும் இவர்களிடம் இருக்கும்.

இதை எல்லாம் எதற்கு சொல்கிறேன் என்றால் அந்த நாளிலேயே தங்களை பொதுமைப்படுத்திக்கொண்ட எழுத்தாளர்களைக் கண்ட நாடு இது. இன்றும் எழுத்தாளன் என்பவன் ஒரு பொதுமை விரும்பியாகவே காணப்படுகிறான். நானும் அதற்கு விதிவிலக்கில்லை. அதே சமயம், என் ஆன்மீக நம்பிக்கைகளை நான் மூடிமறைத்துக் கொண்டதேயில்லை. அதன் தொடர்பாக என் கேள்விகளையும் நான் அப்படியே சுமந்து திரியவில்லை. என் நம்பிக்கைகளுக்கும் கேள்விகளுக்கும் ஆன்மீகத்தில் நல்ல பதில் கிடைக்கவே செய்தது. கௌதம புத்தர் கூட எனக்குள் பல இடங்களில் சுடர்விட்டுப் பிரகாசித்தார். ஆனால் ஒரு அத்வைதியான மகாபெரியவர் மட்டுமே என்னுள் விசுவரூபமெடுத்து நின்றார். என் சகல குழப்ப ரோகங்களுக்கும் அவரே நிவாரணியாகவும் திகழ்ந்தார்.

அவரது தெய்வத்தின் குரல் என்வரையில் அசலான தெய்வத்தின் குரல்.

அந்த தெய்வத்தின் குரலை வியந்தேன். அதுதான் சந்திரசேகரமாகிவிட்டது.

ஒருவரை நமக்குப் மிகப் பிடித்துவிட்டால் அவர்களது குணப்பாடுகளை நாம் வியப்பது இயல்பான ஒன்றுதான். அப்படித்தான் காந்தியை வியந்தும், காமராஜரை வியந்தும் தாகூரை வியந்தும், பாரதியை வியந்தும் பல நூல்கள் வந்துள்ளன.

அப்படி நான் பெரியவரை வியந்ததாகக் கூறலாம் தான். ஆனால் மனிதராகப் பிறந்து நல்ல மனிதராக வாழ்ந்தவர்களை வியப்பதற்கும், அம்மட்டில் பல படிகள் மேலேறி தெய்வத்தன்மையை அடைந்துவிட்டவர்களை வியப்பதற்கும் பெரிய வேற்றுமை உள்ளது.

“குறிப்பாக எது ஆன்மீகம்?

அது ஏன் மனிதனுக்கு தேவை?

அதனால் அவன் என்னவாகிறான்?" - போன்ற கேள்விகளுக்கு பெரியவரின் பதிலை விட எளிய, புரியும்படியான தெளிவான, திடமான ஒரு பதிலை என்வரையில் எவரும் சொன்னதில்லை என்றால் மற்ற ஆன்மிகப் பெரியவர்கள் எல்லாம் சராசரிகளா... பெரியவர் மட்டும்தான் பெரிய்ய்யவரா...? என்று யாரும் சினந்து என்னை கேட்டு விடக்கூடாது. நானும் அந்தப் பொருளில் சொல்லவில்லை. இதை எழுதும் நானே கூட வைணவ மரபின் வழிவருபவன். எனது ஆச்சார்ய பெருமக்களையே என் சத்குருநாதர்களாகவும் வரித்திருப்பவன். இவர்களிடம் நான் வியந்தவைகளும் நெகிழ்ந்தவைகளும் ஏராளம்... ஏராளம்...

அதே சமயம் மகா பெரியவருக்குக் கிடைத்த ஒரு நெடிய வாய்ப்பும் போக்கும் மற்றையோர்க்கு சித்திக்கவில்லை என்பதே உண்மை. பன்னிரண்டு வயதில் துறவறம்! அதன்பின் 88 ஆண்டுகளுக்கு சன்யாசம் வாழ்க்கை என்று "நெடிய 88 கால வாழ்வை பெரியவர் மட்டுமே வாழ்ந்திருக்கிறார். அதனால் பாரத தேசம் முழுக்க மிக அதிகம் நடக்க இவரால் முடிந்தது. மிக அதிகம் பேசவும் சரி, மௌனமாக தவத்தில் ஈடுபடவும் இவரால் முடிந்தது. அடுத்து இவரிடம் காணப்பட்ட எளிமை மற்றும் சரித்ர புராண, விஞ்ஞான ஞானமும் ஆழமும் இந்த நெடிய கால அனுபவத்தோடு கலந்து பத்தரைமாற்றத் தங்கமாக வெளிப்பட்டது. அந்தத் தாக்கம் தான் தெய்வத்தின் குரல் நூலாகும். இந்த அளவிற்கான பாகம் பாகம்பாகமான நூலை வேறு எவரும் வெளியிட வாய்ப்பும் அமைய வில்லை. இதெல்லாம் தான் பெரியவரை நாம் எளிதாகவும் வலிமையோடும் நெருங்க பெரும் காரணமாகி விட்டது.

தெய்வத்தின் குரலுக்கு இணையாக நான் திரு முக்கூர் லக்ஷ்மி நரசிம்மச்சாரியாரின 'குறையொன்றுமில்லை'யை வியந்திருக்கிறேன். ஆனால் காலம் அவரை மிகச் சிறிய வயதிலேயே அழைத்துச் சென்றுவிட்டது. அவருக்கு தீர்க்க ஆயுளை அளித்திருந்தால் ஆன்மீக உலகில் அவரும் தெய்வத்தின் குரல்போல பல அரிய ஆன்மீக நெறிபாடுள்ள நூல்களை தந்திருப்பார். அதெல்லாம் நம்மையும் மிகப் பிரகாசப்படுத்தியிருக்கும்.

இம்மட்டில் காலத்தை வென்ற ஒருவராக பெரியவரை மட்டும் காலம் அடையாளம் காட்டுகிறது. அந்த ஞானியும் தன் கடப்பாட்டில் நூலளவு சிடுக்குக்கும் இடம் தராமல் மிகச் சிறந்த சன்யாசிக்கு இலக்கணமாகவும், குருநாதருக்கு இலக்கணமாகவும் மனிதருக்கு இலக்கணமாகவும் வாழ்ந்து விட்டு இப்போதும் ஸ்தூலமின்றி சூட்சமமாக நடமாடியபடி

உள்ளார்.

அந்த சூட்சமத்தை இன்றைய விஞ்ஞானத் தாக்கங்களோடு நான் உணர்ந்ததைக் கொண்டே இந்த சந்திர சேகரத்தை எழுதினேன்.

எவ்வளவோ ஆன்மீக நாவல்களை எழுதியுள்ளேன். அவைகளில் கிருஷ்ண தந்திரம், எங்கே என் கண்ணன், ருத்ரவீணை, சிவம் போன்றவை பெரும் வரவேற்பு பெற்றவைகளாகும். குறிப்பாக கிருஷ்ண தந்திரம் கன்னடத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டுத் தொலராக வெளியானது. ருத்ர வீணை புத்தகவிற்பனையில் லட்சம் எங்கிற எண்ணிக்கையை கலத்த ஒன்றாகும் வாசக ஆதரவுக்கு இவை சாட்சியாக இருந்தாலும் இந்த சந்திர சேகரம்தான் என்வரையில் திருப்தியான ஒரு முழு முதல் நூல் என்பேன். அதற்கு காரணம் உண்மையான அந்த தவசிதான்!

இதை வாசிப்பவர்களுக்கு நிச்சயம் பல விதங்களில் தெளிவு பிறக்கும். அவர்கள் மனங்களில் ஒரு நம்பிக்கைப் பூ பூத்து ஒரு வெளிச்சம் உருவாகிவிடும். இந்த நூல் ஒரு கோணத்தில் மத பேதங்களுக்கும் அப்பாற்பட்டது. கல்கி நிறுவனத்தின் தீபம் இதழில் தான் இதை எழுதக் கிட்டிய வாய்ப்பை ஒரு வரம் என்றறே கருதுகிறேன். அதை பொறுப்பாசிரியனரான திரு ஸ்ரீனிவச ராகவனும் அழகாய் வழி நடத்தினார். இம்மட்டில் உள்ள வாய்த்தைகள் அவ்அரின் ஆன்மீக ஆழத்தை நமக்கு உணர்த்திடும் அதுபோல வழக்கறிஞர் மணிவண்ணனின் பொதுமைப் பார்வை,தராசுத் தன்மை,கவித்வமான எழுத்துப் பேச்சு என்று எல்லமே அமிர்தமயமானவை சந்திரசேகரத்தின் ஒரு சிறந்த வாசகனாய் விமர்சகராய் இவரை நான் கருதினேன் என்னைப் பெரிதும் ஊக்கப்படுத்தியவர் இவர்.இவர்களுக்கெல்லாம் என் நன்றிகன், பெரியவர் ஆசிகள் இவர்களுக்கெல்லாம் மட்டுமல்ல. இந்நூலை வாசிக்கப்போகும் உங்களுக் கும் காத்திருக்கிறது. ஒரு ஆன்மீக நெகிழ்வுக்குத் தயாராகுங்கள்.

நன்றி!

13.4.2014

மதுரை-3.

அன்புடன்,

இந்திராசௌனந்தர்ராஜன்,

சந்திர சேகரம்!

1

‘அரிதரிது மானிடராய் பிறத்தல் அரிது - அதனினும் அரிது கூன் குருடு பேடு நீங்கிப் பிறத்தல்’ என்றார் அவ்வைப் பாட்டி பாட்டியின் அட்டெஸ்டட் சர்ட்டிபிகேட்டின்படி, நாமெல்லாமே இந்த உலகின் அரிய பிறவிகள்.

அரிய பிறவிகளான நாமெல்லோருமே, அரிய வாழ்க்கை வாழ்கிறோமா என்றால், அங்கே தான் கொஞ்சம் இடிக்கிறது. வாழவில்லை; வாழவும் முடியவில்லை.

எவ்வளவு முயற்சித்தாலும் எங்காவது ஓட்டை விழுந்து போய்விடுகிறோம்! அரிய வாழ்க்கைதான் வாழ முடியவில்லை; அறியாமை வாழ்க்கையையாவது வாழாமல் இருக்கலாமே? ஆனால், அங்கேயும் சிக்கல். நமக்கான அறியாமையும் நாளொரு மேனியும் பொழுதுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே செல்கிறது.

இதற்கு ஒரு நல்ல உதாரணத்தையும் ஒரு ஞானி போகிற போக்கில் சொன்னார்: ‘பிறந்தவர்கள் ஒருநாள் இறந்துதான் தீர வேண்டும். மரணத்தை வென்ற ஒரு மனிதனை இந்த உலகம் இதுவரையில் பார்த்ததே இல்லை. நமக்கும் ஒருநாள் மரணம் நிச்சயம். இதை தினம்தோறும் நாம் சந்திக்கும் பலரது மரணங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் நாமென்னவோ, காலகாலத்துக்கும் வாழப்போவதுபோல, ஆசை மிகுந்த இந்த வாழ்க்கையை விழைகின்றோமே, இதைவிட ஒரு அறியாமை இருக்க முடியுமா?’ என்று கேட்கிறார் அந்த ஞானி.

நம் காதில் அது விழுந்தாலும் விழாததுபோல் காட்டிக் கொள்வதில்தானே, நம் புத்திசாலித்தனம் உள்ளது. உண்மையில் இது புத்திசாலித்தனமா? இது எத்தனை பெரிய அறியாமை!

இந்த ஆமை புகாத மனித மனமே இல்லை என்பது தான் உண்மையோ? கல்லாதார் முதல் கற்றறிந்த பேரறிவாளர் வரை எல்லோருக்குள்ளும் ஏதோ ஒரு வகையில் அறியாமை இருக்கத்தான் செய்கிறது. நம் பிறப்பை, அரிய பிறப்பென்றாளே அவ்வைப்பாட்டி, அவளிடமும்தான் இருந்தது அறியாமை!

அதை அவளுக்கு உணர்த்த விரும்பினான் ஞான குருவான அந்த

முருகன். இடையன் வேடத்தில் வந்தான். நாவற்பழ மரத்தடியில் அமர்ந்திருந்த அவ்வையின் பசியாற்ற, “பழம்வேண்டுமா?” என்று கேட்டான்.

உலக ஞானப்பழமான அவ்வையிடம், அந்தப் பழத்துக்கெல்லாம் பழமானவன் கேட்டான். ‘பழம் வேண்டுமா?’ என்று! உண்மையில் அவன் பழம் வேண்டுமா என்றா கேட்டான்? ஞானம் வேண்டுமா என்றுதானே கேட்டான்! பாட்டிக்கு அது தெரியவில்லை. அவளிடமும் அறியாமை. “கொடப்பா” என்றாள், அது உண்ணும் பழம் என்னும் எண்ணத்தில். அவனும் திரும்பக் கேட்டான்.

“சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?” என்று.

பாட்டிக்கு இப்போதும் புரியவில்லை. அதைக் காட்டிக்கொள்ள வயதும் ஞானமும் இடம் தரவில்லை. சமாளித்து விட எண்ணி, “சுடாத பழத்தையே தா” என்றாள். அவனும் மரத்தை உலுக்கினான். அவளும் பழத்தை பொறுக்கி எடுத்து தூசை விலக்க ஊதினாள். அவனும் காத்திருந்து கேட்டான். “என்ன பழம் சுடுதா?”

அதிர்ந்து போனாள்.

அவள் வாழ்ந்த வரையில், அதுதான் மில்லியன் டாலர் கேள்வி.

அந்த ஒற்றைக்கேள்வி, அவளது அறியாமையை - அவளுக்குள் இருந்த சிலந்தி வலை போல் பின்னத் தொடங்கிவிட்டிருந்த, தனக்கு எல்லாம் தெரியும் எனும் அகங்காரத்தை, என்று சர்வத்தையும் ஒரு கிழிகிழத்துவிட்டது. ஆடிப் போனவள் முன், அந்த ஆதிபூரணன் மகன் ஜெகஜ்ஜோதியாகக் காட்சியளித்தான். அப்பாலே அவள் அறியாமை போனதோ போகவில்லையோ அது இங்கே கேள்வியில்லை.

‘அறம் செய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல், ஈவது விலக்கேல்’ என்று வைரக் கருத்துக்களை இரண்டு மூன்று வார்த்தைகளுக்குள் புகுத்தி, இன்றளவும் அவளது அறவுரைகளுக்கு பதிலுரையையோ - இல்லை, அதை விஞ்சிய ஒரு உரையையோ காணாத உயரத்தில் இருக்கிறாளே இந்தக் கிழவி, இவளிடமே அரியாமை இருந்திருக்கிறது என்றால், நாமெல்லாம் எந்த மூலை?

இவளை ஆட்கொள்ள அந்த ஞான பண்டிதன் வந்தான்? நமக்கு?

இங்கேதான், ‘தேடி அடையுங்கள் நல்ல குருநாதனை. அன்றேல் அறியாமைச் சேற்றில் புதைந்து, பொறாமை, கல்லாமை என்று

Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

அறியாமையின் கூடப்பிறந்த மற்ற ஆமைகளோடு நாம் சேர்ந்துவிடுவோம்' என்கின்றனர் நம் சான்றோர்கள்.

'குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை' என்கிறது ஆகமம். இந்த குருவருள் எத்தனை பெரியது என்பதற்காக சில சம்பவங்களும் விவரிக்கப்படுகின்றன.

வைணவ உலகின் நித்ய சூரி என்று ராமானுஜரைக் கூறுவார்கள். அவர் இன்று ஜகத்குரு. இந்த குரு தனக்கான குருவைத் தேடிய விந்தை இருக்கிறதே, அதற்குள் இருக்கிறது குருவருள் எத்தனை பெரியது என்பதற்கான உண்மை.

'இறைவனை உணர பக்தி போதாதா? இடையிலே எதற்கு ஒரு தரகர்" என்கிற எண்ணத்தோடு அவர் இருந்த போது, 'நமது பக்தியால் மட்டுமே அந்த இறைவனை அடைந்துவிட முடியாது. அப்படி அடைய முடியும் என்பது, சிற்றெறும்பானது தன் வாழ்நாளுக்குள் இந்த உலகத்தைச் சுற்றி வர முயல்வதற்குச் சமம். குருவை நாம் சரண் புகுந்துவிட்டாலோ, நாம் தேடி அடையத் தேவையின்றி நம்மைத் தேடி அந்த இறைவன் வந்தவிடுகிறான்' என்னும் நுட்பமான உண்மையை, அவருக்கு ஒருவர் உணர்த்தப் போக, ராமானுஜருக்குள் குருவைத் தேடும் வேட்கை மூள்கிறது.

ராமானுஜர் தேடி அடைய விரும்பிய குருவான திருநம்பி அன்று திருக்கோட்டியூரில் இருந்தார். அவரை காஞ்சியிலே இருந்து பலமுறை சென்று சந்தித்து சீடனாக ஏற்றுக்கொள்ள விண்ணப்பித்தார் ராமானுஜர், ஒவ்வொரு முறையும் நடையாய் நடந்து வந்த ராமானுஜரை துளியும் இரக்கமின்றி "அடுத்தமுறை பார்க்கலாம்" என்று கூறி திருப்பி விடுகிறார் திருநம்பி.

ஒவ்வொரு முறையும், "யார் அது?" என்று நம்பிகள் வினவுவதும், "நான் ராமானுஜன் வந்திருக்கிறேன்" என்று ராமானுஜர் கூறுவதும் வாடிக்கையாகிவிட்டது.

ராமானுஜர் சளைத்து விடவில்லை. வேறு ஒரு குருவை தேடுவோம் என்று பாதை மாறவும் விரும்பவில்லை. இறைவன் எப்படி ஒருவனோ அப்படி எண்ணுவது, செயல்படுத்துவது என்று எல்லாமே உத்தம மாந்தர்களிடம் - ஏகாக்ரமமாய், ஒன்றாகவே இருக்கும்.

ராமானுஜரும் அயராமல் நடந்தார். பதினெட்டு தடவை அவரை, நம்பி அலையவிட்டார் என்கிறார்கள். இந்தக் கணக்குகூடக் குறைய

இருக்கலாம். ஆனால், அலையவிட்டது உண்மை. அலைய விடுபவரா குருநாதர்? சீடராய் சேர்க்கவே இந்த பாடுபடுத்தினால், இவர் எப்படி நல்லதொரு ஞானக்கல்வி அளித்து சீடனை கடவுளோடு சேர்ப்பார்? இல்லை இப்படி ஒரு குருவைத் தேடும் சீடன்தான் கடைத்தேற முடியுமா?

அறியாமை செறிந்த நமக்குள் இதுபோல ஆற்றாமை மிகுந்த கேள்விகளுக்கு மட்டும் பஞ்சமேயில்லை. ஆனால், உண்மை வேறு. இறுதியாக ராமானுஜரை, நம்பி சீடனாக சேர்த்துக் கொண்டார். அதற்கு உகந்த காரணமும் இருந்தது. வழக்கம்போல "யார் வந்திருப்பது?" என்று நம்பி கேட்டபோது, "அடியேன் ராமானுஜன் வந்திருக்கிறேன்" என்றார்.

நான் ராமானுஜன் என்பதில் அகந்தை இருந்தது. அது அகந்தை என்றே தெரியாது என்றால், அறியாமை இருந்தது. அறியாமையை நீக்குவதுதானே குருவின் கடமை? அந்த அறியாமையை ஒரே தடவையில் ராமானுஜனை அழைத்து, 'நான் என்பவன் எனக்குத் தேவையில்லை' என்று காட்டமாக கூறியிருந்தால், ராமானுஜரும் அப்போதே திருத்திக்கொண்டு சேர்ந்திருப்பார். ஆனால், அந்த சம்பவமும் வரலாற்றுப் பிரபலமாகி காலகாலத்துக்கும் சிந்திக்க வைக்கும் ஒன்றாக ஆகியிருக்காது.

அவர் இன்று ஜகத்குரு. அன்றோ மாணவன்தானே? வெறும் மாணவன் எப்படி ஜகத்குருவாக முடியும். நம்பியிடம் நூற்றுக்கணக்கான சீடர்கள் இருந்தனர். ஆனால், ராமானுஜரைத்தானே உலகத்துக்கு தெரிந்திருக்கிறது.

காரணம்?

அவர் வெறும் மாணவனில்லை. 'தன்னையும் அறியாத அறியாமைக்குள் சூழ்ந்துவிட்டிருப்பினும், குருவை அடையாமல் விடப்போவதில்லை' என்னும் வைராக்கியம் அவரிடம் மட்டுமே இருந்தது. அந்த வைராக்யம் உலகத்துக்கு தெரிய வேண்டும் என்று விரும்பியே, நம்பியும் நடையாய் நடக்கவிட்டார். அதை ராமானுஜரும் உணரும் வரை நடக்கவிட்டவர், உணர்ந்துவிட்ட நொடி ஆட்கொண்டார். அதன்பின் அவர் குருவுக்கே குருவாகி கோபுரமேறி 'ஓம் நமோ நாராயணா' எனும் அஷ்டாக்ஷர மந்திரத்தை உலகம் உய்யச் சொன்னதும், அதைக்கேட்டு இந்த உலகம் வியந்ததும் வேறு விஷயங்கள்.

நல்ல குருவை சரண்புகுதல் என்பது அத்தனை பெரியது என்பதற்கு இந்த சம்பவமே ஒரு சாட்சி. சில நல்ல சீடர்கள் குருவருளை திருடிக்கூட

அடைந்திருக்கிறார்கள். ‘என்ன... குருவருளை திருடி அடைவதா - அது எப்படி?’ என்று வியப்பு மேலிடும்.

கபீர்தாசரைப் பற்றி அறிந்தவர்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. அறியாதவர்கள் அவர் குருவருளை திருடி அடைந்ததை தெரிந்துகொள்வது நல்லது!

கங்கை ஆற்றோரம் கிடந்த ஒரு அனாதைக் குழந்தை தான் கபீர்தாசர். இஸ்லாமிய தம்பதிகளால் எடுத்து வளர்க்கப்படுகிறார்.

‘ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்’ என்கிறது சிலப்பதிகாரம். அதாவது நாம் செய்த நன்மை, தீமைகள் வினையாகி நாம் எடுக்கும் பிறவிதோறும் தொடர்ந்து வருமாம்.

வள்ளுவர்கூட வழி மொழிகிறார். ‘ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து’ என்று... அப்படி கபீர்தாசரையும் ஊழ்வினைதான் அனாதை ஆக்கிற்று. இஸ்லாமியராகவும் ஆக்கிற்று. ஒருபடி மேலே போய் ராம பக்தனாகவும் ஆக்குகிறது. ‘ராம் ராம்’ என்று குரல் கேட்டால் போதும், உருகிப் போய் விடுவார். உள்ளுணர்வு சாதி, மதங்களை சருகில் போட்டு கொளுத்திவிடும். தன் பாட்டையில் செல்லும்... கபீரிடமும் சென்றது. ‘ராமா ராமா’ என்று குதித்தார். “பிரயோஜனப்படாது அப்பனே. இறைவன் பூவுலகில் குருநாதர் வடிவில் தான் வந்து ஆட்கொள்கிறான். எனவே, குருநாதரை முதலில் கண்டுபிடி” என்கின்றனர், அவர் நலம் விரும்பிகள்.

அப்போது ராமானந்தர் என்று ஒரு குரு! கங்கைக்கரை ஓரம் குடிலமைத்து சீடர்களோடு வசித்து வந்தார். ஆனால், தேடி வந்த கபீரை அவர் ஏற்க மறுத்துவிட்டார்.

‘நீ ஒரு இஸ்லாமியன்; உன் பாதை வேறு’ என்பது அவர் நியாயம். ஆனால் கபீரால் அதைக்கேட்டு திசைமாற முடியவில்லை. தவித்துப் போகிறார்.

“ஒரே ஒருமுறை குருவாக இருந்து ராமநாமத்தை எனக்கு உபதேசியுங்கள். ஒரே ஒரு முறை உங்கள் திருவடிகளை வணங்கி மகிழ அனுமதியுங்கள். அதுபோதும்” என்கிறார். ஆனாலும் மறுத்து விடுகிறார் ராமானந்தர்; அப்போதுதான் கபீருக்குள் ஒரு குறுக்கு வழி புலனாகிறது. கண்ணன் வெண்ணையைத் திருடித் தின்ற கதை காதில் விழுந்து முன் உதாரணமாகின்றது. மறுநாள் அதிகாலை - விவகாத இருளுக்கு நடுவில் கங்கையில் நீராட வருகிறார் ராமானந்தர். கங்கைக்கரை படிகளில்

இறங்கும்போது படியோடு படியாக ஒரு உடல். இருளில் தெரியாததால் மிதித்து விடுகிறார். மிதித்த வேகத்தில் அதைத் தவறாக உணர்ந்து 'ராமா ராமா' என்கிறார். அந்த உடலுக்குரிய உருவம் எழுந்து நிற்கிறது. அதுதான் கபீர்! "குருவே மன்னியுங்கள். உங்கள் திருவடி தீட்சைக்காகவே படியில் கிடந்தேன். உபதேச மொழிக்காகவே காத்துக் கிடந்தேன். நேராக வந்தபோது நீங்கள் ஏற்கவில்லை. இருளில் கிடக்கும் நான், அந்த இருளையே பயன்படுத்தி, இப்போது என் தேவை இரண்டையும் அடைந்துவிட்டேன். என்னை மிதித்துவிட்ட நொடி, "ராமா ராமா" என்றீர்களே... அது தான் இனி எனக்கான உபதேச மந்திரம்! இதுபோதும். பொன்னையும் பொருளையும் திருடி அடையும் உலகில், என்னை கடைத்தேற்றும் ஒன்றை நேராக அடைய வழியற்ற நிலையில் திருடி அடைந்துள்ளேன். இது தவறு என்றால் எந்த தண்டனையும் ஏற்கச் சித்தமாக உள்ளேன்" என்றாராம்.

ராமானந்தர் ஆடிப் போய்விட்டார். அதன்பின் முதலில் கபீர்தாசருக்குத்தான், அந்த ஸ்ரீராமனும் தன் பட்டாபிஷேகக் கோல தரிசனத்தை அளித்தான். பிறகே குருவான ராமானந்தருக்கு அளித்தான். என்றால், எத்தனை பெரியது இந்த குருபக்தி?

இந்த பக்திக்கு வித்தாக, சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு ஞானியைப் பற்றிச் சிந்திப்பதுதான் இத்தொடர்! அந்த நாளில் நடையாய் நடந்தும், திருடியும் அடைய வேண்டி இருந்த குருவருளை, அதற்கு அவசியமின்றி, தானே நடையாக நடந்தும், தேடி வந்தும் இந்த ஞானி அள்ளி அள்ளி வழங்கியதுதான் விந்தை. அதில் அகன்ற இருளும் பொலிந்த ஒளியும் இன்றைய சமுதாயம் அறிய வேண்டிய அவசியமான அதிசயங்களாகும்.

இம்மட்டில் என் ஞானகுருவாய் இந்த ஞான சூரியன் என்னை அழைத்து ஆசிர்வாதம் செய்தது ஒரு ஆச்சர்ய அமானுஷ்யம்! அதுமட்டுமல்ல... அந்த சந்திரசேகரனின் அருளும் ஒளியும்தான் இனி இந்த சந்திரசேகரம்!

2

ரமானுஜரும், கபீர்தாசரும் குருநாதரைத் தேடி அலைந்ததையும் பின் அவர்களை அடைந்த விதத்தையும் தெரிந்து வைத்திருந்த நான், உரிய ஆன்மிக குருநாதரை வரித்துக் கொள்ளாமல் லௌகீகமாய் வாழ்ந்து வந்த நாளில், என் மனத்துக்குள் ஐயம் போக்கும் ஒரு குருநாதனாய் காஞ்சி மகா பெரியவர் படிமமெடுத்தது என் ஜாதக விசேஷம் என்று கருதுகிறேன்.

ஒவ்வொருவர் மனத்துக்குள்ளேயும் எவ்வளவோ கேள்விகள்.

எல்லாவற்றுக்குமா தெளிவான விடை கிடைத்துவிடுகிறது? அதிலும் நமது ஆன்மிக நெறி, ஆச்சரியமூட்டும் நெறி. ஒன்றான இறைவனுக்கு இங்கே பல தோற்றங்கள். ஒன்றுக்கு ஆறு மார்க்கங்கள். அன்பே வடிவான நமது இறைவனின் கைகளில் சூலாயுதம், சங்கு, சக்கரம், கதை என்று போர் வீரன்போல் ஆயுதங்கள்!

இந்த இறையனார்கள் போக, ரிஷிகள், முனிகள், சித்தர்கள் என்று ஒரு கூட்டம். இதுபோக வேதங்கள், இதிகாசங்கள் புராணங்கள் - அவைகளுக்குள்ளோ ஆயிரமாயிரமாய் பாத்திரங்கள். அதனால் எனக்குள்ளே பலவித கேள்விகள்! இதை நான் யாரிடம் கேட்பேன். முதலில் பெற்றவர்களிடம்தான் கேட்போம். நானும் கேட்டேன். என் தந்தையார் ஒரு கர்மயோகி. வயிற்றுப் பாட்டின் நிமித்தம் அலுவலகம் போவதும், வீடு திரும்பலில் களைத்து உறங்குவதும்தான் அவர் வாழ்க்கை. நடுவில் சில மந்திரங்களைச் சொல்லி, சுவாமி படம் முன் நின்று பூஜைகள் செய்வார். அவ்வளவுதான்!

நான் கேட்ட எந்த ஒரு கேள்விக்கும் ஒரு தெளிவான பதிலைக் கூற, அவருக்கு தெரியவில்லை. இப்படி எல்லாம் கேள்விகள் கேட்கலாம் என்பதேகூட அவருக்கு புதிதாக இருந்தது. ஏனென்றால், அவர் கேள்விகளற்ற ஒரு பயபக்தி உடையவராக மட்டுமே இருந்தார். தாத்தாவுக்கு கோயிலில் பெருமாளின் முன் மணியாட்டி பூஜை செய்வதுதான் உத்தியோகமே.

அவரிடமும் கேட்டேன். இவர் கொஞ்சம்போல பதில் சொன்னார்.

“தாத்தா இந்த பெருமாள் எங்க இருக்கார்?” என்று கேட்டதற்கு, “வைகுண்டத்துல” என்றார்.

“அது எங்க இருக்கு?”

“ஆகாசத்துல.”

“நீ போயிருக்கியா?”

“போகணும்னுதான் தினமும் இங்க மணி அடிக்கறேன்...”

“அப்ப மணி அடிச்சாதான் போக முடியுமா?”

“உனக்கு எதுக்கு இப்ப இந்த கேள்வி?”

“போகட்டும். அவர் எப்படி தைரியமா அஞ்சு தலை பாம்பு மேல படுத்துண்டுருக்கார்...?”

“இதோ பார் இப்படி எல்லாம் கேட்கக்கூடாது... உனக்கு வயசாகும்போது எல்லாம் தானா புரியும். இப்ப சொன்னா புரியாது” என்று வாயை கட்டிவிட்டார்.

நானும் தற்காலிகமாய் அடங்கினேன். ஆனால், மனதுக்குள் பதிலுக்கான தவிப்பு தொடர்ந்தபடியே இருந்தது. பெருமாளிடம் மட்டுமா? சிவபெருமானிடமும்தான்... மற்ற தெய்வங்களிடமும் ஏராளமான கேள்விகள். ஒரு தெளிவின்றி, எனக்கான கேள்விகளுக்கு விடையுமின்றி பக்தி செலுத்துவது என்பது நெருடலாய் இருந்தது.

ஒழுங்கா பெருமாளை சேவி... இல்லன்னா கண்ணைக் குத்திடுவார்...” என்று சற்று மிரட்டலாய் ஒரு பதில் எனக்கு சொல்லப்பட்டபோது, ‘அவர் என்ன ரவுடியா?’ என்றுதான் கேட்கத் தோன்றியது.

போதாக்குறைக்கு பள்ளிக் கூடத்தில் ஜான்சன் என்று ஒரு நண்பன். இவன், ‘இயேசுநாதர்தான் உலகின் ஒரே கடவுள்’ என்றான். அப்துல் கரீம் என்கிற இஸ்லாமிய நண்பனோ அல்லாவே எல்லாம் என்றான்.

அனேகமாக எல்லோருடைய இளமைப் பருவமும் இந்தியாவில் இப்படித்தான் இருந்திருக்க முடியும்.

காலமும் உருண்டது.

ஒருவரிடம்கூட பொட்டில் அடித்த மாதிரியான தெளிவான பதில் இல்லை. பலர் வரையில் பக்தி ஒரு பழக்க வழக்கமாகவே வந்துவிட்டது.

‘நெற்றிக்கு எதற்கு திலகம்? பிராமணனுக்கு மட்டும் எதற்கு பூணல்? பெண் கழுத்தில் மட்டும் ஏன் மாங்கல்யம்? குல தெய்வம் என்று தனியாக ஒன்று எதற்கு? அதற்கு ஏன் நாம் மொட்டை போடுகிறோம்? இந்த காதையும் மூக்கையும் குத்திக் கொள்ளாவிட்டால் என்னாகி விடும்?”

- இப்படி பொதுவான கேள்விகளுக்கு கூட பலருக்கு விடை தெரியவில்லை.

ஆனால், இந்த மாதிரி கேள்விகளுக்கு மட்டுமல்ல... என்னுள் எழும்பியிராத கேள்விகளுக்கும்கூட, ஒருவரிடமிருந்து விடை கிடைக்கத் தொடங்கியது. அதற்கு காரணம், கல்கி வார இதழ் என்றுதான் கூற வேண்டும்.

ஆம்... அதில்தான் எனக்கு நினைவு தெரிந்த நாளிவிருந்து மகா பெரியவரின் ‘தெய்வத்தின் குரல்’ பிரசுரமாகி வருகிறது. அவர் பேசியதில் இருந்து அரைப் பக்கம், கால் பக்கம் என்று ஒரு ஒரமாய் பிரசுரித்து வந்த விஷயம் கண்ணில் பட்டது. அப்பா தவறாமல் கல்கிக்கு சந்தா கட்டிவிடுவார். கடைகளுக்கு வருவதற்கு ஒருநாள் முன்பாகவே தபாலில் வந்துவிடும். அப்பா சொல்லாத பதிலினை, பெரியவர் மூலம் கல்கி சொல்லியது. நானும் கல்கி வந்தவுடன் முதலில் அதையே வாசிக்கலானேன். ஒரு வாரமா? இரு வாரமா?

பல வருடங்கள் - அதாவது, 1970ல் இருந்து 1994 வரை... தெய்வத்தின் குரலால் நான் மெல்ல மெல்லத் தெளிந்தேன். ஆசாரமான வைணவ குடும்பத்தில் பிறந்து விட்டபோதிலும், அந்த மகானிடமே மனது போய்ப்போய் நின்றது. அவரது லாங்வேஜ் எனப்படும் பாஷை மிகமிகப் பிடித்துப்போனதும் ஒரு காரணம்.

அவர் எதைப் பேசி முடித்தாலும் முடிவில் ‘நாராயணா நாராயணா!’ என்றே முடிப்பதால், அவரை வைணவத்துக்கு அன்னியமாகவோ எதிராகவோ கருதவே முடியவில்லை.

இத்தனை தூரம் மனத்தில் நிரம்பி விட்டவரை, நேரில் தரிசிக்கும் வாய்ப்பு தான் ஒரு முறை கூட வாய்க்கவில்லை; தரிசிக்கும் எண்ணமும் பெரியதாக தோன்றவில்லை; லௌகீகமான வாழ்க்கைப் போக்கும் ஒரு காரணம். காலம் இப்படியே போய்விடுமா என்ன?

1993ஆம் வருடம் மார்கழி மாதம் என்பதாக ஞாபகம். குளிர வேண்டிய அந்த மாதத்தில், பெரும் புயலும் மழையும் ஏற்பட்டு ஊரே மழைக் காடாக இருந்த வேளையில், எனக்கும் டைஃபாய்டு காய்ச்சல் ஏற்பட்டது.

இந்த காய்ச்சலை மீறிக்கொண்டு, காஞ்சிபுரம் சென்று மகாபெரியவரை தரிசிக்க வேண்டும் என்று ஒரு எண்ணம் தோன்றியது. ஏன்? எதனால்? என்றெல்லாம் தெரியாது. என் அம்மா மற்றும் மனைவியிடம் கூறவும் அவர்கள் வெறித்தனர். ‘இந்த உடம்போட காஞ்சிபுரத்துக்கா...?’ என்றும் கேட்டு முறைத்தனர். ‘உங்களுக்கு என்ன ஆச்சு... இப்ப போய் பெரியவரை பார்க்கணும்னா என்ன அர்த்தம்?” என்று கேட்டாள் மனைவி.

“என்னமோ தெரியலை... தரிசிக்கணும்னு தோண்றது” என்றேன்.

“உடம்பு குணமாகட்டும். அடுத்த மாதம் போகலாம்” என்றாள் மனைவி!

ஆனால், நான் அதை காதிலேயே வாங்கிக்கொள்ளவில்லை.

“நீங்கள் யாரும் வரவேண்டாம். நான் போகிறேன்” என்று வைராக்யமாய் புறப்பட நான் முயலவும், வேறு வழியில்லாமல் என் அம்மா, மனைவி, மகள் என்று நாங்கள் நான்குபேர் புறப்படத் தயார் ஆனோம்.

எனக்கு ராஜப்பா என்று ஒரு நண்பர். தற்செயலாக என்னைப் பார்க்க வந்தவர், ‘நானும் என் மனைவி உமாவும் கூட வருகிறோம்’ என்றார். நான்குபேர் ஆறு பேராகிவிட்டோம். வெளியிலோ மழை நிற்கவில்லை. அதனால் என்ன என்பது போல, நான் மேற்கொண்ட குரு தரிசன யாத்திரைக்குள் நம்பமாட்டாத அதிசயங்களும் அரங்கேறத் தொடங்கின.

என் வீட்டுக்கு நூறு மீட்டர் தொலைவில் இருந்தது டவுன்பஸ் நிறுத்தம். பஸ் டிரைவர் தப்பித்தவறிகூட நிறுத்தத்தைத் தவிர, வேறு எங்கும் நிறுத்தமாட்டார். அப்படிப்பட்டவர், நான் வாசலுக்கு வந்த நொடி பஸ்ஸை நிறுத்தி ஏற்றிக் கொண்டார்.

திருவள்ளுவர் பஸ் நிலைய வாசலில் இறங்கி, செங்கல்பட்டு செல்லும் பஸ்ஸை பிடிக்கும் எண்ணத்தோடு நடந்தபோது, ஒரு திருவள்ளுவர் பேருந்து எதிரில் வந்தது. அதில் செங்கல்பட்டு செல்லவும் இடம் இருந்தது. ஒரு ஆச்சரியம் போல, ஆறுபேர் ரிசர்வ் செய்துவிட்டு என்ன காரணத்தாலோ வந்திருக்கவில்லை. அந்த இடம் அப்படியே எங்களுக்கு கிடைத்தது.

செங்கல்பட்டில் இறங்கி அங்கிருந்து காஞ்சிபுரம் செல்ல விழைந்தபோது, காஞ்சிமடத்து வேன் வந்திருந்து, ஆச்சரியமளித்தது. மடத்தில் உள்ள நீலகண்டய்யர், நான் குடியிருந்த வீட்டு உரிமையாளருக்கு சம்மந்தி. எனவே, வென்னீர் குளியல் - மருந்து கஷாயம் என்று அவர் பார்த்துக் கொண்டார். அதன் பின் சற்றே ஜுர உடம்போடு பெரியவரைத் தரிசிக்கப் புறப்பட்டேன்.

முதன்முதலாக தரிசிக்கப் போகிறோம். வெறும் கையோடா போவது என்று வெளியே பூக்காரியிடம் பூ கேட்டேன். ஒரு மல்லிகைப் பூ பந்தையே தந்துவிட்டாள்.

என் மனைவி, அம்மா, ராஜப்பா, அவர் மனைவி எல்லாம் குளித்து தயாரானபடி இருக்க, நான் மட்டும் தனியே பெரியவர் அமர்ந்திருக்கும் இடம் நோக்கி, மல்லிகை பந்துடன் சென்றேன்.

சுவரில் சற்று சாய்ந்தபடி, கால்களை நீட்டி அவர் அமர்ந்திருக்க, அருகில் ஒருவர் என்றால் ஒருவர் இல்லை. முன்னால் ஒரு மூங்கில் தடுப்பு. அதை பிடித்தபடிநின்ற நான், பூவை என்ன செய்வது என்று தெரியாமல், அதை விரித்து, நீண்டு கிடக்கும் அவர் கால்களின் மேல் சாத்திவிட்டு நிமிர்ந்தேன். அடுத்த நொடி அந்தக் கால்கள் இப்படியும் அப்படியுமாக அசைந்து நின்றன.

யாருமே இல்லை. நானும் பெரியவரும் மட்டும் தான்...!

பேச விருப்பமாக இருந்தது. ஆனால், அவர் அமர்ந்திருந்த விதம், தோற்றம் தயக்கமளித்தது. மனத்துக்குள் பலவிதமான எண்ணங்களோடு அப்படியே நின்று விட்டேன். ஒரு அரை மணி நேரம் நின்றிருப்பேன். பின், என் மனைவி, மகள் மற்றும் ராஜப்பாவும் உமாவும் வந்திட தரிசனம் முடித்தோம்.

அப்படியே காமாட்சி அம்மன், வரதராஜர் என்று ஒரு ரவுண்டு. மாலை வரவும் செங்கல்பட்டு நோக்கி புறப்பட்டோம். காலை வந்த அதே வேன் செங்கல்பட்டில் எங்களை கொண்டுவிட்டது. முதல் நாள் வந்த அதே பஸ், அதே டிரைவர் - கண்டக்டர் செங்கல்பட்டில்! அடுத்த ஆச்சரியம்போல மதுரையிலும் முதல் நாள் ஏறிய அதே டவுன்பஸ், அதே டிரைவர் - கண்டக்டர். வீட்டு வாசலில் என்றால், வீட்டு வாசலில் இறக்கிவிட்டனர்.

எனக்கு உடல் நலமில்லை என்பதும், நான் ஒரு தரிசனம் மேற்கொள்ளப் போகிறேன் என்பதும் இவர்களுக்கெல்லாம் எப்படித் தெரியும்?

என் அம்மா, மனைவி, ராஜப்பா, உமா எல்லாருமே மிக ஆச்சர்யப்பட்டார்கள். ‘இது முழுக்க முழுக்க பெரியவரின் க்ருபை’ என்றனர். க்ருபையின் உச்சம் என்ன தெரியுமா?

அவர் காலடியில் நின்றிருந்த நிலையில், சொந்தமாக ஒரு வீடில்லாத வேதனையை நான் பிரதிபலித்திருந்தேன். ராஜப்பா தனக்கொரு பிள்ளையில்லாத குறையை பிரதிபலித்திருந்தார்.

அதன்பின் நான் புதுவீடு கட்டி குடியேறினேன். கிரகப் பிரவேசத்தில் ராஜப்பா எனக்கு உதவியாக சாப்பாடு பரிமாறும்போது தகவல் வருகிறது - உமாவுக்கு ஆண் தழந்தை பிறந்திருப்பதாக... ஒரே நாளில் இருவருக்கும் வரம்!

இதை தற்செயல் என்று கூறமுடியுமா?

மிக முக்கியமான ஒரு விஷயம். அந்த காய்ச்சலில் விழுந்தடித்துச் சென்று நான் தரிசித்துவிட்டு வந்த 30ஆம் நாள், மகா பெரியவர் முக்தியடைந்துவிட்டார். 'குணமடைந்த பிறகு செல்வோம்' என்று கருதியிருந்தால், பெரியவர் தரிசனமே கிடைத்திருக்காது!

இதை என்னவென்று சொல்வது?

மனத்துக்குள் குருவாய் கருதி உருகிக் கொண்டிருந்த எனக்கு கல்கி வழியாக விடை தந்தவர் - திருவடி தீட்சை தரவும் விரும்பி, அதற்கான விருப்பத்தை ஏற்படுத்தி பயனிக்க வைத்து அழைத்து அனுக்கிரகம் செய்திருக்கிறார் என்பதையன்றி வேறு எதைச் சொல்ல?

3

தமது மதத்தில் எனக்குப் பிடித்த விஷயம் என்று நான் கருதுவது, ஒருவரை பார்க்கும்போதே அவரைப் பற்றி நாம் சில அடிப்படை விஷயங்களையாவது அறிந்துகொள்ள முடிகிறதே அதைத் தான்...!

அதை என்றால் எதை?

நெற்றித்திலகம், கழுத்துத் தாலி, காலில் மெட்டி, வகிட்டுக் குங்குமம், - இவைகள் ஒருவரின் பக்திச் சார்பை, அதிலும் அவரது மார்க்கம் சைவமா, வைணவமா என்பதைக்கூட பளிச்சென்று நமக்கு புரிய வைத்துவிடும்.

இம்மட்டில் ஆண்களைவிட, பெண்களுக்குத்தான் அவர்களின் தாலி மற்றும் மெட்டியால் பெரும்பாதுகாப்பு ஏற்பட்டு, அவர்களை அது பாதுகாப்பதாகவும் நான் நம்புகிறேன். இவள் மணமானவள் என்பது தெரிந்த மாத்திரத்தில், வாலிப ரசனை வாலைச் சுருட்டிக் கொள்வதும், அவள் தாயாகப் போகிறவள் அல்லது தாயாகிவிட்டவள் என்றுணர்ந்து, அவள் வரையில் ஒரு கட்டுப்பாட்டை உருவாக்கிக் கொள்வதையும் பலரிடம் பார்த்திருக்கிறேன்.

இம்மட்டில் பெண்ணுக்கு குங்குமம், ஆணுக்கு விபூதி, திருமண் என்கிற அடையாளங்களை ஒரு பழக்கமாகவும் வழக்கமாகவும் ஆக்கி அளித்திருக்கிற அந்த ஆன்மிக நெறிப் பட்டின் பின்னாலே, ஒரு பெரும் பொருள் இருக்கிறது.

இதற்கான விடையை நான் எவ்வளவோ பேரிடம் கேட்டிருக்கிறேன். யாரும் நெற்றியில் தரிக்கும் விபூதிக்கோ, இல்லை திருமண்ணுக்கோ

என் நெஞ்சம் நிரம்பும் வண்ணம் ஒரு பதிலைச் சொன்னதில்லை.

கண்ணதாசன் மட்டும் தன் அர்த்தமுள்ள இந்து மதத்தில் ஓரளவு சொன்னார்.

“ஒவ்வொரு முறை விபூதியை தரிக்கும்போதும், ஒவ்வொரு இந்துவும், இந்த உடம்பும் ஒருநாள் ‘இந்த விபூதிச் சாம்பல் போல் ஆகப்போகிறது’ என்பதை உணர்ந்து கொள்கிறான். திருமண்ணோ இந்த உடம்பை மண் தின்னப்போகிறது என்று சொல்லாமல் சொல்கிறது. எனவே, ‘நிரந்தரமில்லாத இந்த வாழ்க்கை வாழும் ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் அர்த்தமுள்ள செயல்பாடுகளுக்கு ஒதுக்கி அடக்கத்துடனும் ஆரவாரம் இல்லாமலும் வாழவேண்டும்’ என்று விபூதி, திருமண்ணுக்கு அவர் சொன்ன பொருள் ஏற்புடையதாக இருந்தது.

பெரியவரோ, இம்மட்டில் வெகு ஆழமான விளக்கத்தை அளித்திருக்கிறார். அதை நான் அறிய நேர்ந்தபோது, என்நெற்றித் திருமண்ணை ஒரு சார்புக்குறியாக மட்டும் நான் கருதவில்லை. நம் சான்றோர்களின் ஆழமான பேரறிவை எண்ணி வியந்து போனேன்.

‘விறகினை அக்னி எரித்து சாம்பலாக்குகிறது. இறுதி அந்த சாம்பலே பஸ்மமாக மிஞ்சுகிறது. அதேபோல ஞானம் என்கிற நெருப்பு மனித வாழ்வின் கர்மங்களை எல்லாம் எரித்து பஸ்மமாக்குகிறது’ என்கிறான் கண்ணன் கீதையில்...

கண்ணனின் கருத்துப்படி பார்த்தால், ஞானத்தின் தோற்றம்தான் பஸ்மம்; அதாவது விபூதி! இதைச் சுட்டிக்காட்டி தன் கருத்தைக் கூற முன் வரும் பெரியவர், வெகு அழகாக அதற்காக அஸ்திவாரமிடுகிறார்.

‘பல வர்ணங்களைக் கொண்ட பொருள்களைக் காண்கிறோம். ஆனால், அவை அவ்வளவும் எரிந்தபின் மாறிவிடுகின்றன. கடைசியில் வெளுத்துப் போய்விடுகின்றன. நாம் சாயம் வெளுத்துப் போய்விட்டது என்கிறோம். சாயம் என்பது வேஷம். வேஷம் போன பின் இருப்பதே மெய். என்றால், மெய்யான ஆத்மாவின் வடிவம் தூய வெண்ணிறம் - வடிவம் கொடுத்தால் அது விபூதி. பொய்யானது இந்த தேகம். இதன் மேல் விபூதியை பூசிக் கொள்கிறோம். ஒரு நாள் இதுவும் எரிந்து, இறுதியில் இந்த வெண்ணிற விபூதியை சார்ந்து நிற்கிறது.

ஆக, விபூதி நாம் யார் என்பதையும், நம் முடிவு எப்படிப்பட்டது என்பதையும் முதலிலேயே சொல்லி விடுகிறது’ என்கிறார்.

அப்படியே திருமண்ணுக்கும் விளக்கம் தருகிறார். வைஷ்ணவர்கள் துளசிச் செடியின் அடி மண்ணைத்தான் திருமண் என்று இட்டுக்கொள்வார்கள். அதை உடம்பின் பன்னிரெண்டு இடங்களில் இட்டுக்கொள்வார்கள். அப்படி இட்டுக் கொள்ளும் போது, விஷ்ணுவின் நாமங்களை (பெயரை) கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, மதுசூதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷ்கேச, பத்மநாப, தாமோதர என்று சொல்லிச் சொல்லி இட்டுக்கொள்வார்கள்.

இப்படி நாமங்களைச் சொல்லி இட்டுக் கொண்டது தான் பின்னாளில் 'நாமம் போடுவது' என்றாகிவிட்டது என்கிறார்.

என்ன ஒரு நேர்த்தியன வியக்கியானம்! பெரியவரின் இந்தக் கருத்தை தெய்வத்தின் குரல் வாயிலாக அறிந்த பிறகு விபூதி திருமண்னை பார்க்கும்போதெல்லாம் அவர் சொன்ன 'சாயம் வெளுத்துவிட்டது' உதாரணமும், நாமம் சொல்லிப் போட்டது 'நாமம் போடுவது' என்றாகிவிட்டதும் நினைவுக்கு வரும்.

அடுத்து பெரியவரின் விளக்கத்தில், விநாயகரையும் சரஸ்வதியையும், நான் விளங்கிக் கொண்டதை கூறியாக வேண்டும்.

சின்ன குழந்தையாக இருக்கும்போதே நமக்கு மிக அணுக்கமாகி விடுகின்ற தெய்வங்கள் இந்த இருவர்தான். 'ஆனை உம்மாச்சி' என்று விநாயகப் பெருமானை நமக்கு நம் பெற்றோர்கள் அறிமுகம் செய்து வைப்பார்கள். யானை முகத்துடன் கூடிய அந்த தோற்றமே நம்மையும் வெகுவாக கவர்ந்து விடும்.

அடுத்து இவருக்குத்தானே ஆலமரத்தடி, அரசமரத்தடி, ஆற்றங்கரை என்று எங்கு பார்த்தாலும் இடம்? இதில் பிள்ளையார் சதுர்த்தி வந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். களிமண்ணை எடுத்து வைத்து பிள்ளையார் பிடிக்க பாடாய்ப்பட்டு, ஆனால் எப்படியோ கிட்டத்தட்ட ஒரு வடிவத்தை உருவாக்கிப் பிடித்துவிடுவேன்.

அத்தனை சிரமப்பட்டு பிடித்த பிள்ளையாருக்குத்தான் பிறகு பூஜைகள். அதிலும், பிள்ளைகளுக்கு மிகப் பிடித்த கொழுக்கட்டை, அவல், பொரி, வெல்லம் வகையறாக்கள்!

எனவே, பிள்ளைகளின் மனம் கவர்ந்த தெய்வம் யாரென்றால் பிள்ளையார்தான் முன் நிற்பார். பரீட்சை எழுதும்போது பிள்ளையார் சுழி என்று பேப்பரின் தலையில் ஒரு சுழி சுழித்த பிறகே பாடங்களுக்கும் விடை ஆரம்பமாகும்.

இப்படி பால்ய பிராயத்தில் மனம் நிரம்பிய தெய்வமாக திகழும் பிள்ளையாருக்கு எதனால் யானைத் தலை? அடுத்து அவர் ஏன் தொந்தியும் தொப்பையுமாக இருக்கிறார் என்றெல்லாமும் கேள்விகள் எழுமே? இதற்கு புராண ரீதியாக எவர் சொன்ன பதிலும் கவரவில்லை. பெரியவர் சொன்ன பதில் மட்டும் பசை போட்டு ஒட்டிக் கொண்டது.

விநாயக மூர்த்தியிடம் சின்னச்சின்ன விஷயங்களிலும் கூட நிறைய தத்துவங்கள் இருக்கின்றன.

இவருக்கு தேங்காய் உடைப்பது எதற்காக?

விக்னேசுவரர் தம் தந்தையான ஈசுவரனைப் பார்த்து, 'உன் சிரசையே எனக்கு பலி கொடு' என்று கேட்டுவிட்டாராம். எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்தது எதுவோ, அதை தியாகம் செய்தால்தான், கணபதிக்கு ப்ரீதி உண்டாகிறது. அப்படி தியாகம் பண்ணுவதற்கு நம்மை தயார் படுத்தத்தான், ஈசுவரன் தன்னைப் போலவே மூன்று கண்களை உடைய தேங்காயைப் படைத்தானாம். அதை நாம் பிள்ளையாருக்கு உடைக்கும்போது, அவர் கோரிக்கையும் நிறைவேறுகிறது. அடுத்து, தேங்காய் ஓடு நான் எனும் அகங்காரத்தை குறிக்கும். பக்தியின் பேராலே அதை உடைத்து நொறுக்கும்போது, உள்ளே அமிர்த ரசமாக, இளநீர் வெளிப்படுகிறது!' என்று தேங்காய் உடைப்பதற்கு சூட்சும காரணத்தைக் கூறும் பெரியவர், பிள்ளையாரின் ரூபத்துக்கு தரும் விளக்கம்தான் அற்புதமானது.

'கணபதியை காட்டிலும் சரீரத்தில் பருமனான ஸ்வாமி வேறு யாரும் இல்லை. சிரசு யானையின் தலை. பெரிய வயிறு பெரிய உடம்பு. அவருக்கு ஸ்தூல காயர் என்றும் பெயர் உண்டு. மலை போல் இருக்கிறார். ஆனாலும் அவர் சின்னக்குழந்தை! சரி, குழந்தைக்கு எது அழகு? நன்றாக சாப்பிடுவதுதான். 'கொழுக் மொழுக்'கென்று இருக்க வேண்டும். அதனால்தான் அவரும் அப்படி இருக்கிறார்.

இப்படிப்பட்டவருக்கு மிகச்சிறிய மூஞ்சூறுதான் வாகனம். அந்த மூஞ்சூறால் இத்தனை கனமானதை தாங்க முடியுமா? என்று கேட்கலாம். ஆனால், அது தாங்கப் போய்தானே அது வாகனமானது. எப்படி?

தன்னை தாங்குபவர்களுக்கு, அவர் பாரமில்லாமல் இலேசாகிவிடுகிறாராம். அதை இப்படியும் சொல்லலாம். கணபதியை மனத்தில் வைத்தால் மனது லேசாகிவிடும்!"

இப்படி தோற்றம், வாகனத்துக்கு எளிய விளக்கத்தை வாழ்வியல்

தன்மைகளோடு பொருத்திக் கூறும் பெரியவர், அந்த யானை முகத்துக்கு விளக்கம் தருகிறார்.

ஒவ்வோர் பிராணிக்கும், அதன் ஒரு அங்கத்தால் சிறப்பு உண்டு. ஆட்டுக்கு நெற்றி, மயிலுக்கு தோகை, மானுக்கு வால்... இந்த வரிசையில் யானைக்கு சிறப்பு அதன் நந்தத்தில். அதனால்தான் பிள்ளையார், இந்த தந்தத்தை ஒடித்து மகாபாரதம் எழுதினார். இன்னொரு சமயம் அந்தத் தந்தத்தாலேயே அசுரன் ஒருவனை கொன்றார்.

இப்படி தன் தந்தத்தை ஆயுதமாக, பேனாவாக ஆக்கிக் காட்டியவர். இப்படிப் பட்டவரை எத்தனை முறை பார்த்தாலும் நமக்கும் அலுப்பு தட்டுவதில்லை.

ஆகாய சந்திரன், சமுத்திரம், யானை இதையெல்லாம் அனுப்பு தட்டுவதில்லையே... இவரைப் பார்த்தால் மட்டும் எப்படித் தட்டும்?

பார்க்க பார்க்க பார்த்துக்கொண்டே இருக்கத் தோன்றும். மனது நிரம்பும் - ஆனாலும் பாரமாகாமல் லேசாகிவிடும். இப்படிப்பட்டவருக்கு எதிரில் நின்று நாம் தோப்புக்கரணம் போடுகிறோமே... அதற்கு யார் காரணம் தெரியுமா? மஹாவிஷ்ணுதான்!

இதை ஒரு விளையாட்டுக் கதையாக கூறுகிறார் பெரியவர். ஒரு முறை மஹாவிஷ்ணுவை பார்க்க வந்த மருமகப் பிள்ளையான பிள்ளையார், விஷ்ணுவின் கையில் இருந்த சக்கராயுதத்தை பார்த்து பரவசமாகி, அதை எடுத்துக்கொண்டு விளையாடத் தொடங்கிவிட்டாராம்.

ஆயுதங்களுக்கெல்லாம் ஆயுதமான சக்கராயுதம், பிள்ளையாருக்கு விளையாட்டுப் பொருள் எனும்போது, பிள்ளையார் எத்தனை பெரிய சக்தி வாய்ந்தவர் என்றும் கருத வேண்டியுள்ளது. எத்தனை குழந்தை மனம் என்றும் எண்ண வேண்டியுள்ளது.

மகாவிஷ்ணு, அதை திரும்பப் பெற கெஞ்சிப் பார்க்கிறார். அசுரர்களை ஓட ஓட விரட்டும் அந்த ஆயுதம், பிள்ளைச் சாமி என்பதால் அதுவும் சேர்ந்து விளையாடுகிறது. அதட்டிப் பிடுங்கவும் விஷ்ணுவுக்கு மனம் வரவில்லை. இறுதியில் பிள்ளையார், சக்கரத்தை தன் வாயில் போட்டுக்கொண்டு 'எங்கே எடுத்துக்கோ பார்க்கலாம்' என்று துள்ளிக் குதிக்கிறாராம்.

மகாவிஷ்ணுக்கு உடனே ஒரு உபாயம் தோன்றியதாம். கண்ணனாக

அவர் செய்யாத குறும்பா? குறும்புக்கு இலக்கணம் படைத்த விஷ்ணு, விநாயகரின் குறும்பையும் விநயமாக அணுக முடிவு செய்கிறார்.

விநாயகரை கலகலவென்று சிரிக்க வைத்துவிட்டால் போதும். வாயிலிருந்து சக்கரம் வெளியே விழுந்து விடும். அதற்கான தன் காதுகளைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து எழுந்து கெஞ்சுவதுபோல பாவிக்கவும், பிள்ளையார் கலகலவென்று சிரித்தாராம். சக்கரமும் உருண்டு கீழே விழுந்திட விஷ்ணு எடுத்துக் கொண்டாராம்.

தோர்பி கர்ணம் என்று இதற்குப் பெயர். தோர்பி என்றால் கைகள் - கர்ணம் என்றால் காது.

'கைகளால் காதைப் பிடித்துப் போட்டதால் தோர் பிகரணமாயிற்று. அதுவே தோப்புக்கரணமாகிவிட்டது' என்று பிள்ளையாருக்கு தோப்புக்கரணம் போடுவதன் பின்புலத்தில், பெரியவர் சொன்ன இந்த கதையில் விஷ்ணுவே விநாயகருக்கு கட்டுப்படுவது, உடன் விளையாடுவது என்பதெல்லாம் மானுடபாவனைகள்! சூட்சுமப் பொருள் விநாயகர் ப்ரணவ ஸ்வரூபி. 'ஓம்' என்றும் எழுத்தின் வடிவம். இந்த ஓம் எனும் ஒலியில் இருந்தே, இன்று நாம் பேசும் பேச்சுக்களும் எழுத்துகளும் உருவாயின. தோப்புக் கரணம் போடும்போது, நமக்குள் இருக்கும் அந்த கல்வி, ஞானம் பிள்ளையார் சிரித்த மாதிரி கலகலவென்றாகி மகிழ்ச்சி தருமளவு, ஒரு மலர்ச்சி ஏற்படும் என்பதுதான். இங்கே நாம்தான் விஷ்ணு. அதாவது, அந்த பரமாத்மா வேறு நாம் வேறு இல்லை. அவனில் இருந்து வந்த நாம், நம்முள் இருக்கும் அவன் என்று இதைக் கொள்ள வேண்டும். சக்கரம் சுழலக் கூடியது. காலமும் சுழலக் கூடியது; நில்லாதது. எனவே, சக்கரம் காலம் என்று நாம் பொருள் கொண்டு, இந்த கதைக்குள் புகுந்தால் வியப்பு மேலிடும்.

பேருண்மைகளை தத்துவமாக எழுதி வைத்தால், அதை என்றாவது எவராவது திருத்தியும், மாற்றியும் எழுதிவிட சாத்தியம் அதிகம். கதையாக்கி விட்டால், எவரும் உட்புகுந்து திரித்திட இயலாது.

எனவேதான், நமக்கான பேருண்மைகள் இப்படி கதைச் சம்பவங்களாக ஒளித்து வைக்கப்பட்டன. அதை பெரியவர் போன்றவர்கள், துளியும் தன்னை மையப்படுத்திய மேதைத் தன்மையின்றி, யதார்த்தமாயும் எளிதாகவும் கூறிடும் போது, புரியவேண்டிய அவ்வளவு பேருக்கும் எளிதாகப் புரிந்துவிடுகிறதே!

இப்படித்தான் எனக்கும் விபூதி புரிந்தது; திருமண் புரிந்தது;

விநாயகப்பெருமானும் புரிந்தார்; தோப்புக் கரணமும் புரிந்தது.

அடுத்து பெரிய அளவில் புரிந்த வள், அந்தக் கலைவாணி என்கிற சரஸ்வதி!

4

பூஜைகளில் மிக பிரபலமான ஒரு பூஜை இருக்க முடியும் என்றால், அது சரஸ்வதி பூஜையாகத் தான் இருக்கும். பள்ளிக்கூடம் பக்கமே தலைவைத்துப் படுக்காதவன்கூட, இந்த பூஜையை வருஷத்தில் ஒருநாள் வெகு விமர்சையாக கொண்டாடுவதைப் பார்த்திருக்கிறேன்.

இந்த நாளில் குப்பைகள் அகற்றப்பட்டு, ஒரு புதுப்பொலிவை உருவாக்கிக் கொண்டு, அவரவரும் அவரவர் தொழிலுக்கு பிரதானமான ஆயுதங்களையே அந்த சரஸ்வதி யாக கருதிக்கொண்டு சந்தனம், குங்குமம் இட்டு பூஜித்து வரும் ஒரு அரிய தொழில் வணக்கச் செயல்பாடு, இந்த உலகிலேயே இந்தியாவைத் தவிர, வேறு எங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

சரஸ்வதிக்கு இத்தனைக்கும் கோயில்கள் அதிகம் இல்லை; தமிழ்நாட்டில் கூத்தனூர், ஆந்திராவில் பாஸர், வார்கல் என்று ஒரு சிலதான்! ஆனால், எழுதும் பேனாவும், எழுதப்படும் தாளும் சரஸ்வதியாக பார்க்கப்படுகிறது.

புத்தகங்களை மிதிப்பதோ, பேனா பென்சிலை காலால் எடுக்க முற்படுவதோ, பெரும் பாவமாக கருதப்பட்டு, அந்தத் தவறை நான் சிறு வயதில் செய்தபோது, காலிலேயே அடித்திருக்கிறாள் அம்மா.

கூடவே, இப்படி எல்லாம் செய்தால் படிப்பு வராது. படிப்பு வராவிட்டால், தற்குறியாகி விடுவாய். அதன்பின் வாழ்க்கையில் அநேக இடங்களில் தலைகுனிய வேண்டிவரும்' என்று, அம்மா அன்று சொன்னபோது பெரிதாக புரியவேயில்லை. அது ஒரு மிகையான கருத்தாகத்தான் தோன்றியது.

ஆனால், மொழி தெரியாத ஒரு ஊரில் - நான் எத்தனை பெரிய எழுத்தாளனாக இருந்தபோதும், என்னை தற்குறியாக உணர்ந்தபோது அம்மா சொன்னது அஸ்திரம்போல் நின்றது.

நான், என் மனைவி, மகள் மூவரும் ராஜஸ்தான் வரை சென்று வந்தோம். அங்கே, சில இடங்களுக்கு பஸ்ஸில் பயணிக்க வேண்டி இருந்தது.

ஆங்கிலம் தெரிந்தவர்களே அங்கு அவ்வளவாக இல்லை. ஊமை பாஷை பேசி சிரமப்பட்டபோதுதான், பிறமொழியறிவு என்பதும் எத்தனை முக்கியம் என்பது புரிந்தது.

என் மகள் ஹிந்தி படித்திருந்த காரணத்தால், அவள் உதவியால் தப்பிக்க நேர்ந்தது. இப்போதுகூட, தமிழில்தானே நான் ஒரு எழுத்தாளன்?

தமிழ் பேசுபவர்கள் என்ன ஒரு எட்டு கோடி பேர் இருப்பார்களா? உலக மக்கள் தொகையோ 700 கோடி! நம் பாஷை பேசுபவர்கள் உலக மக்கள் தொகையில் ஒரு சத விகிதத்தவர்தான். இந்த ஒரு சதவிகிதத்திலும் அவ்வளவு பேரும் படித்தவர்களாக இருக்க வாய்ப்பில்லை. இதிலும் பாதிபேர்தான் தேறுவார்கள். அதாவது நான்கு கோடி பேர்! இவர்களிடம் மட்டுமே என் ஜம்பம் செல்லுபடியாகும் எனும்போது, உலகப் பொதுமொழி ஒன்றின் அறிவு நமக்கு எத்தனை இன்றியமையாதது என்பது புலனாகிறது.

இந்த மொழி, ஞானம், கல்வி எல்லாவற்றுக்கும் அதிதேவதைதான் சரஸ்வதி! இவளைப் பற்றிய பெரியவரின் வியாக்கியானம் என் மனத்தில் பசைபோட்டு ஒட்டிக் கொண்ட ஒன்று.

‘சரஸ்வதி பூனைஜயானது சரத் காலத்தில் வருகிறது. சரத் காலத்தில் நிகழ்வதாலேயே இதற்கு சாரதா நவராத்திரி என்று பெயர்.

காஷ்மீரத்தில்தான் இவளுக்கான வழிபாடு பெரிதாக உள்ளது. அதனால் அங்கே ஒரு சாரதா பீடமே உண்டு. சரஸ்வதி வெள்ளை புடைவை உடுத்தி, சிரசிலும் சந்திர பிறையை அணிந்து, வீணையும் ஏடுடைய கையுமாக இருப்பவள்.

காஷ்மீரமும் பனியால் போர்த்தப்பட்டு வெண்ணிற மயத்தில் உள்ளது. தென்னகத்தில் காஞ்சிபுரம்தான் தென்னக காஷ்மீரம். இங்கே காமாட்சிதான் சரஸ்வதியாக சேவை சாதிக்கிறாள். அதனால் தான், காஞ்சி கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிற்று. பல்கலைகழகங்கள் எல்லாம் இங்கு உருவாகி சேவை செய்தன.

வடக்குக்கும் தெற்குக்கும் எப்போதும் நெருக்கமான பல தொடர்புகள் உண்டு.

அங்கொரு மதுரா - இங்கொரு மதுரை; அங்கொரு பாடலிபுத்திரம் - இங்கே திருப்பாதிரிபுலியூர், அங்கொரு காசி - இங்கே ஒரு தென்காசி, அங்கொரு காஷ்மீரம் - இங்கே காஞ்சி.

இப்படி பல ஒன்றுபட்ட தன்மை கொண்ட வடக்கிலும் தெற்கிலும் சரத்காலமான புரட்டாசி மாத காலத்தில்தான், ஒரே மாதிரி சீதோஷ்ண நிலை நிலவுகிறதாம். மற்ற பருவங்களில் கேரளாவில் மழை என்றால் இங்கு வெயில் வாட்டும். டெல்லியில் குளிர் வாட்டும்போது தமிழ் நாட்டில் அதன் சுவடே இருக்காது. மாறுபட்ட பருவங்கள் பல கொண்டதுதான் நம் நாடு. ஆனால், சரத் காலத்தில் உச்சியாகிய காஷ்மீரில் இருந்து பாதமாகிய கன்னியாகுமரி வரை பெரும்பாலும் ஒரே மாதிரியான சீதோஷ்ண நிலை!

குறிப்பாக, காலைப் பொழுதும், மாலைப்பொழுதும் கலகலவென்று இருக்கும். மப்பும் மந்தாரமும் இருந்து மனத்தில் ஒரு மந்தம் தோன்றாது.

இப்படி ஒரு காலம்தான் தியானிக்க, பூஜிக்க ஏற்ற காலம்! அப்படி ஒரு காலத்தில் வாழ்க்கைக்கு ஆதாரமான ஞானம், கல்வி இரண்டுக்கும் அதி தேவதையானவளுக்கு நாம் விழா எடுக்கிறோம்.

இவள் நமக்கு தரும் கல்வி, வெறும் ஏட்டுக் கல்வி மட்டுமல்ல. நான் யார் என்னும் கேள்விக்குப் பின்னால் உள்ள பிறப்பின் ரகசியங்களை, பிரபஞ்ச உண்மைகளை அறியும் ஞானக் கல்வியும் கூட!

பெரியவர் இப்படி சரஸ்வதிக்கான விளக்கத்தில் காஷ்மீர் தொட்டு காஞ்சி வரை விவரிக்கும்போது, அதில்தான் எத்தனை அரிய தகவல்கள்!

சரஸ்வதி பற்றி சொல்லும்போது, தட்சிணாமூர்த்தியையும் விட்டுவிடாமல் ‘இருவருமே வெள்ளைவெளேரென்று இருக்கிறார்கள்’ என்கிறார்.

வெண்ணிறம் ஏழு வர்ணங்களில் சேராது; பரம நிர்மலமான சுத்த சத்வத்தை குறிப்பது. இதனுள் ஒளி ஊடுருவும்போது இது ஸ்படிகமாகிறது.

அதனால்தான் சரஸ்வதி, தட்சிணாமூர்த்தி இருவர் கரத்திலும் ஸ்படிக மாலை இருக்கிறதாம்!

தலையிலும் பிறை... அதாவது சந்திர கலை! எது வளருகிறதோ அதுதான் கலை. வித்தைக்கும் முடிவில்லை. அப்போது வளர்ச்சிதானே? அதுதான் குறியீடாக இருவர் விரத்திலும் காணப்படுகிறது.

சரஸ்வதியே இன்னமும் படித்துக் கொண்டுதான் இருக்கிறாளாம். எவ்வளவு படித்தாலும் படித்தது கைமண் அளவாகவே இருக்கிறதாம்.

இந்தப் படிப்பு, அடக்கத்தை பணிவை, தராவிட்டால் அவ்வளவு தான்.

‘கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்

நற்றாள் தொழா அர் எனின்’ -

எனும் வள்ளுவரின் வாக்கு கூட, ‘பரமேஸ்வரனை பாத பூஜை பண்ணச் சொல்லாத படிப்பாலே ஒரு பயனும் இல்லை’ என்கிறதாம்.

சரஸ்வதியை தொட்டு இப்படி கொட்டிக் குவித்திருக்கிறார் பெரியவர். இதை எல்லாம் வாசித்துவிட்டு சரஸ்வதியை பார்க்கும்போது, எனக்குள் காஷ்மீரம் விரிகிறது. அங்குள்ள பண்டிதர்கள் தெரிகிறார்கள். சரத் காலம் புரிகிறது. அவளே இன்னமும் படித்தபடி இருக்கிறாள் எனும்போது, நாம் எந்த மூலை என்று மனம் அடங்கி, இன்னமும் கற்றிடும் வேட்கைதான் அதிகரிக்கிறது.

நம் உருவ வழிபாடுதான் எத்தனை பொருளும் ஆழமும் கொண்டிருக்கிறது.

அடேயப்பா...!

பெரியவருக்கு பின் எவ்வளவோ சாது சன்னியாசிகள் வந்து விட்டார்கள். இன்னமும் வரப்போகிறார்கள். இவர்களெல்லாமே நமக்கான குருமார்கள். இவர்களைப் பின்தொடர வேண்டியது நம் கடமை.

ஆனால், இவர்களில் பலரிடம் நமக்கு நிறைய கேள்விகள் எழும்புகின்றன. இவர்களின் சில செயல்பாடுகள் நம்மை சலனப்படுத்துகின்றன. உண்மையில் யார் துறவி என்று ஒரு கேள்வி எழும்பி நின்று மனத்தில் முட்டுகின்றது.

சில துறவிகள் ஆன்மிக பில்கேட்ஸாகவே உள்ளனர். கோடிகள் அவர்களிடம் சாதாரணமாக புழங்குகின்றன. பாத பூஜைக்கு பல ஆயிரங்கள் என்று கட்டணம்.

இவ்வேளையில், ‘யார் துறவி? எது துறவு?’ என்கிற கேள்விக்கு இலக்கணமாக, பெரியவர் திகழ்ந்த ஒரு அரிய சம்பவம் நினைவுக்கு வருகிறது.

பெரியவர் அறுபது வயதை தொட்டிருந்த சமயம். 1968ம் வருடம் என்று எண்ணுகிறேன். பக்தர்கள் அவருக்கு தங்க கிரீடம் சூட்டி கௌரவிக்க எண்ணினார்கள்.

ஆந்திர மாநிலம், விஜயவாடாவில் பெரியவரின் இந்த வைபவத்தை ஒட்டி ஒரு தங்க கிரீடமும், இரண்டு லட்ச ரூபாய் காணிக்கையும் வழங்க தீர்மானித்திருந்தனர்.

இதுபற்றிய தகவல் பெரியவரை அணுகவுமே, அதற்கானவசூலை தடுத்துவிட்டார் பெரியவர். அவ்வேளையில் அவர் சொன்னதுதான் யார் துறவி - எது துறவு என்பதற்கு இலக்கணம்!

“ஸ்தாபன பலம் என்று ஒன்று மிதமிஞ்சி ஏற்பட்டு விட்டாலே, அதன் அதிபதியானவன் ஆத்ம பலம் சம்பாதிக்க சிரமப்பட வேண்டியதில்லை என்னும் ஆபத்து ஏற்பட்டுவிடுகிறது. சன்னியாசி என்பவனை, ஒரு உடைமையுமில்லாத ஏகாங்கியாக, அவன் தன் ஊர் என்று சொல்லிக் கொள்வதற்குக்கூட, ஒரு இடம் இருக்க வேண்டாமென்று, சதா ஊர் ஊராக சஞ்சாரம் பண்ணும்படிதான் சாஸ்திரம் கூறியுள்ளது.

இருந்தும், சமூகத்துக்கு வழிகாட்ட ஒரு அமைப்பு தேவைப்பட்டு அதுதான் மடம் என்றானது. இதை ஒரு தவிர்க்க முடியாத தீமை (Necessary evil) என்றுதான் கூற வேண்டும்.

தவிர்க்க முடியாத இந்தத் தீமையை நன்மையாக மாற்றிக்காட்டும் கடமையே சன்னியாசியின் கடமை. இந்தக் கடமையின்போது, அவனது ஆன்ம தபோ பலத்தைவிட, பணத்தின் பலம் பெரிதாகி விடாமல் அவன் பார்த்துக் கொள்ள வேண்டும்.

காஞ்சிமடம் அவசியச் செலவுக்கே கஷ்டப்பட்ட காலம் உண்டு. ஆனால் சந்திரமௌலீஸ்வரர் கருணையாலே அந்த கஷ்டம் நீங்கியது. இந்த மாதிரி கஷ்டங்களை ஈஸ்வர சோதனையாகவே கருதினேன். உத்தமமாய் பார்த்துக்கொள்வது அவன் தான்; பணமல்ல.

எனவே, எப்போதும் Nil Balanceலேயே மடம் இருக்கும்படி ஜாக்ரதையாக நிர்வகித்து வருகிறேன். இன்று இரண்டு லட்சம் என்று சர்ப்ளஸ்ஸில் போகப் பார்த்தது. இதற்கு ‘ப்ளஸ்’ கூடாது என்று கருதுகிறேன். ஸ்வாமிவாரு தடுத்து விட்டாரே என வருத்தப்பட வேண்டாம். பணத்தை வாங்கிக்கொண்டு, நான் பண்ணுவது ஆசீர்வாதமாக இருக்காது. அதற்கான பணமே வேண்டாம் என்று கூறவில்லை. நெருக்கடி ஏற்படும்போது, உங்களிடம்தான் பிட்சை கேட்டு நிற்பேன். தேவைக்குத்தான் பணம். சன்னியாசிக்கு பணத்தைவிட ஆத்மபலம்தான் பெரும் பணம்...!’ - இப்படிச் சொன்ன பெரியவர், அதன்பின் என்ன செய்தார் தெரியுமா?

5

விஜயவாடா அன்பர்களிடம், 'தேவைப்படும்போது பணத்தை வாங்கிக் கொள்கிறேன்' என்றார் பெரியவர். ஆனால், அவர்கள் செய்து வைத்திருந்த தங்கக் கிரீடத்தை அப்படித் தட்டிக்கழிக்க முடியவில்லை. அந்தக் கிரீடத்தை தன் சஷ்டியப்த பூர்த்திக்கான ஒரு கௌரவமாக கருதி, அதை அவர் ஏற்றுக்கொள்ள சம்மதித்து விட்டார்.

இது ஒரு ஆச்சரியமான விஷயம்தான். பணத்தை வேண்டாமென்று மறுத்த இந்த உத்தமத்துறவி, பொன்னுக்கு மட்டும் எப்படி சம்மதித்தார்? ஒருவேளை தங்கத்தின்பாலான பற்றுதல் இவரையும் விடவில்லையோ என்றுதான் நம்மை எண்ணவைக்கும்.

ஆனால், அடுத்தடுத்து நடந்த சம்பவங்கள், பொருளும் பொன்னும் அவருக்கு ஒன்றே என்பதை நிரூபிப்பது போல் அமைந்துவிட்டன.

'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர் ஞானியர்' என்பது சான்றோர் வாக்கு.

அதாவது, தங்கள் கைவசம் உள்ள பிச்சைப் பாத்திரமாகிய திருவோட்டைப் போன்றதுதான் தங்கமும். தங்கம் என்பதற்காக மயங்கிவிடுவதோ, இல்லை அது ஒரு உலகப் பணம் என்று கருதி, பாளம் பாளமாக அடுக்கி வைத்துக் கொள்வதெல்லாம் பேராசையின் விளைவுகள்.

பேராசை எல்லாம் பெரியவரிடம் ஏது?

ஓராசையைக் கூட அவரிடம் தேடினாலும் பார்க்க முடியாதே? அன்பர்கள் செய்து தந்த அந்த தங்க கிரீடத்தை அவர் தன் பொருட்டு ஏற்கவில்லை. அதை சூட்ட வைதீக பெரியவர்கள் தயாரான போது, அவர்களை சற்று தடுத்து நிறுத்திவிட்டு, தன் முன் இருந்த ருத்ராட்ச மாலை ஒன்றை எடுத்து, சிரசின் மேல் வேகமாக தரித்துக் கொண்டார் பெரியவர். அதன்பின் அவர்களை கிரீடத்தை வைக்கப் பணித்தார். அந்த தங்க கிரீடமும், சிரசின் மேல் உள்ள ருத்ராட்ச மாலை மேல் ஜம்மென்று அமர்ந்து கொண்டது.

அதாவது கிரீடம் அவருக்கல்ல;

சிவாம்சமான ருத்ராட்சத்துக்கு...!

சொல்லாமலே எல்லோருக்கும் புரிந்துவிட்டது. அந்த கிரீடம் அவர்

சிரசின் மேல்தான் இருந்தது. ஆனால், அவர் மேனி மேல் படவேயில்லை. அதன்பின் அவர் பேசியதுதான் சிலிர்க்க வைக்கும் விஷயமாகும்.

தினந்தோறும் பக்தர்கள் வந்து எனக்கு தேங்காய் பழம் காணிக்கை செலுத்துகின்றனர். ஏராளமான புஷ்ப மாலைகள் துளசி, வில்வம் என்று சமர்ப்பணம் செய்கின்றனர். இதுபோக, பண்டிதர்கள் புகழ் மொழிகளை தலை குளிரக்குளிர மாலையாகவே போடுகிறார்கள். கவிஞர்களும் பாமாலை சூட்டுகின்றனர். இதெல்லாம் போதாதென்று கனகாபிஷேகம், தங்கக் கிரீடம் என்று தங்கள் அன்பை என்மேல் பொழிகிறார்கள்.

இவற்றை எல்லாம் பெற, எனக்கு என்ன யோக்யதை இருக்கிறது என்று எனக்கு நானே கேட்டுக்கொண்டேன். துறவி என்றால், எல்லாவற்றையும் துறந்தால்தானே அவன் துறவி?

துறவி என்று சொல்லிக்கொண்டு, இவைகளை எல்லாம் ஏற்றுக்கொள்வது எந்த வகையில் சரி? இந்த கேள்விக்கு எனக்கு விடை கிடைத்தது. இங்கே என் முன் வைக்கப்படும் எதுவும், எனக்கானதே அல்ல. சங்கரர் என்று எனக்கொரு சன்யாசப் பெயர் இருக்கிறது பாருங்கள்... அதுதான் காரணம்!

இந்த சங்கர நாமம், ஆதிசங்கர பகவத் பாதாளின் தங்க புண்ணிய நாமமாயிற்றே? அந்த ஒன்றுக்காகத்தான் இத்தனை மரியாதைகள்!

அவர் எப்படிப்பட்டவர்? ஸ்ருதிகள் எல்லாம், ஸ்மிருதிகள் எல்லாம், புராணங்கள் எல்லாம் அவருக்குள்ளே அடக்கம். சகல ஜீவராசிகளிடமும் பாய்கிற கருணை முழுதும் அவருக்குள் அடக்கம். அப்படிப்பட்டவரின் வழியில் அவர் பெயரை கொண்டிருப்பதற்காகவே, எனக்கு கனகாபிஷேகம் நடக்கிறது. தங்க கிரீடமும் சூட்டப்படுகிறது.

அவர் பெயரை வைத்துக் கொண்டிருப்பதற்கே இத்தனை பெருமை என்றால், அவர் வகுத்து தந்த வழியில் நடந்தால் நித்தமும் பொன்மாரியல்லவா பொழியும்?

பெரியவரின் இந்தக் கேள்விதான் என்னை வெகுவாக யோசிக்க வைத்தது.

அவர், சங்கரர் வழியில் தான் நடந்து, தானும் சங்கரராக ஆகிவிட்டதுபோல் பொருள் தரும்படியாக, எங்கேயும் ஒரு

வார்த்தைகூட பேசவில்லை. ஆனால், சங்கரர் வழியில் அவர் நாளெல்லாம் நடந்ததை இந்த உலகம் நன்கு அறியும்.

ஒருவேளை, தான் நடப்பதை தன் வாயால் கூறுவது சரியல்ல என்கிற பண்பாட்டில் அவர் கூறாமல் விட்டிருக்கலாம். ஆனால், அவரிடம்தான் எத்தனை தன்னடக்கம் - ஜாக்கிரதை உணர்ச்சி!

இப்படி தனக்கான மரியாதை மதிப்பு ஆதிசங்கரரை உத்தேசித்தே என்று கூறியவர், அடுத்து சொர்ணமாகிய தங்கம் பற்றிக் கூறியதுதான் உச்சபட்ச சிறப்புடையதாகும்.

'அறம் பொருள் இன்பம் வீடு' என்று மனித வாழ்க்கைப் பயன்களாக நான்கு உள்ளன. இவற்றைப் புருஷார்த்தங்கள் என்பார்கள். அவற்றில் இப்போது பண்ணுகிற கனகாபிஷேகம் வெறும் பொருளான (அர்த்தமான) தங்கத்தால் மட்டுமே செய்யப்படுவதாக இருக்கிறது.

ஆதிசங்கரர் வழி நடந்தாலோ, நம் மீது தங்கமழை மட்டுமல்ல; தர்மமழை, இன்ப மழை, மோஷ மழை என்று எல்லாமே பெய்துவிடும். நம்மீது மட்டுமல்ல; இந்த உலகில் உள்ள எல்லோரின் மீதும் பொழியும்.

இந்த உலகத்து தங்கம் அத்தனை விசேஷமானதில்லை. ஜென்ம விடுதலைக்கு இது பயன்படாது. ஆனாலும், இது மங்களமான ஒன்று. இருந்தாலும் இது பெரும்பாலும் படாடோபம், பவிஷு, பொறாமை, பேராசை என்கிற உணர்ச்சிகளுக்கும், ஆசையை தூண்டி அனர்த்தம் பண்ணுவதற்கும்தான் பயன்படுகிறது. இருந்தும், இதை உயர்வாக சொல்லக் காரணம், இது தாதுப்பொருளிலே உச்சமாக - கருத்து விடாமல், எப்போதும் ஒளியோடு இருக்கிறது. ஆகையால்தான் மனசில் ஒளியோடு உத்தமமாக திகழ்கின்றவர்களை தங்கமான மனுஷன் என்கிறோம். மனசுக்குள் ஒளிதரும் கருத்துக்களை யாராவது சொன்னால், 'தங்கமான உபதேசம்' என்கிறோம். அவ்வளவு ஏன்? நமக்கு கிடைத்த காலத்தையே பொன்னாகத்தானே கருதச் சொல்கிறோம்.

இதனால்தான், நம் ஜென்ம விடுதலைக்கு பயன்படும் விஷயங்களையும் உயர்வான பொன்னாக கருத வேண்டியிருக்கிறது.

அவ்வகையில்தான் தர்மமும் அர்த்தமும் காமமும் மோஷமும் கூட பொன்னாகி விடுகின்றன. அதாவது, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குமேகூட பொன் போன்றவைதான்.

ஆனால்...' என்று ஒரு இழு இழுக்கிறார் பெரியவர். இந்த 'ஆனாலு'க்கு பிறகு, அவர் சொல்லப் போவதில் தான் பெரும் பொருளும் இருக்கிறது.

'எப்படி இந்த மண்ணில் தோண்டி எடுக்கப்படும் தங்கம், மண்ணோடு மண்ணாக கிடந்தால் பிரயோஜனமில்லையோ, அப்படி இந்த அறம், பொருள், இன்பம், வீடு அதற்கான முடிவை காணாவிட்டால் பிரயோஜனமில்லை.

அதாவது நம்மிடம் பொருள் இருக்கிறது - அது தர்மத்துக்கு பயன்பட்டாலே அந்த பொருள் பொன் போன்றதாகும். அதை நான் சுயநலத்தோடு சேர்ப்பது பாவம்.

அந்தத் தர்மத்தையும் அளவறிந்து செய்ய வேண்டும். இதை உத்தேசித்தே 'ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு' என்றனர். இல்லாவிட்டால், எல்லாம் இழந்து பிச்சை எடுக்கும் நிலை வரலாம்.

எனவே, பொருளாகிய வஸ்து தர்மம் புரியப்படுவதால் அறமாகிறது. அதை அறிவோரும் புரிவோரும் செய்யும்போது தான் அர்த்தம் உண்டாகிறது.

அடுத்து காமம். துறவிகள் சகலத்தாலும் ஒதுக்க வேண்டிய உணர்வு. ஆனால், உலகத்துக்கு தேவைப்படுகிறது. இது இல்லாவிட்டால் மனிதப் பிறப்பு எப்படி தொடர முடியும்? ஆக அதற்காக இது தேவை. ஆனால், இதைக் குடும்ப வாழ்வில் சாஸ்திர பூர்வமாக ஒரு கட்டுப்பாட்டோடு பயன்படுத்தும்போது இந்த காமமும் பொன்னாகி விடுகிறது. இதை ஒரேயடியாக அடக்குவதற்கும், அனுபவித்து அடக்குவதற்கும் வித்தியாசமுண்டு. துறவி இதை ஒரேயடியாக அடக்க வேண்டும். அது கருதியே பால்யகாலம் தொட்டே, துறவு நிலை பூணப்பட்டு உடம்பிலும், அது முளையிலேயெ கிள்ளப்படுகிறது. இது துறவிக்கான தர்மம். இதை அவன் மீறினால் பாவம்.

லௌகீகவாசிகளுக்கு இல்லறம் மூலமாக இது பேணப்படுகிறது. பெண்கள் இதை கற்புநெறியோடு ஒழுகியும் ஆண்கள் தங்களை ஸ்ரீராமனாக வரித்துக் கொண்டும் வாழ்ந்திட இது அழகாய் வெளிப்பட்டு, அழகாகவே அடங்கியும் விடுகிறது. பின் மோட்சம் அடைவதும் சுலபம்.

இப்படிப் பார்த்தால் 'அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் பொன்தானே?'

- கேட்கிறார் பெரியவர். என்ன ஒரு ஆழமான பார்வை. என்ன ஒரு ஆனந்தமான விளக்கம். ஒரு தங்கக் கிரீடம், அறம், பொருள், இன்பம், வீட்டுக்கே நமக்கு தங்கமாய் பொருள் கூறிவிட்டதே...?!

இப்படி போகிற போக்கில், பெரிய வர் கூறிய கருத்துக்களில் சத்தியமும் உண்மையும் ஜொலிக்கின்றன. இப்படிப்பட்டவர் எங்கேயும் தன்னை ஒரு சத்தியத் துறவியாகவோ, பெரும் ஞானியாகவோ, தன் வாயால் கூறிக் கொண்டதேயில்லை!

ஆனாலும் என்ன... இவரின் தவசீலம், நம் போன்ற அறிவுள்ள மனிதர்களை மட்டுமல்ல ஓரறிவு, ஈரறிவு உயிர்களையும் கவர்ந்து இழுத்தது என்பதுதான் ஆச்சரியமான விஷயம். அது ஒரு அதிசயமான சம்பவமும்கூட!

ஒருமுறை, தம் யாத்திரையில் ஒரு கிராமத்தில் பெரியவர் தங்க நேர்ந்தது. அங்கே மடத்துக்கு சொந்தமான நிலத்தில் அந்த வருடம் அமோகமாக கடலை விளைந்திருந்தது. குத்தகைதாரர் அவ்வளவையும் அறுவடை செய்து விற்றும் விட்டார். பெரியவரின் தரிசனத்தின்போது, மகிழ்வோடு அதை குறிப்பிட்டார். அப்போது அவருக்கு படைப்பதற்காக எல்லாவிதமான பழங்களுடனும், முந்திரி, கற்கண்டு போன்ற பதார்த்தங்களுடனும் பலர் காத்துக் கொண்டிருக்க, அவைகளை ஏறெடுத்தும் பாராமல், அந்த நிலத்தில் நன்கு விளைந்ததாக சொன்ன கடலையில் ஒரு கைப்பிடியை ஆசையாகக் கேட்டார் பெரியவர்.

குத்தகை விவசாயி ஆடிப்போய் விட்டார்.

இப்படிக் கேட்பார் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

அதேசமயம், அவ்வளவையும் விற்றுவிட்டதால் கைவசமும் கடலையில்லை. இது என்ன சோதனை என்று அவர் தவித்தாலும், அவருக்குள் ஒரு உபாயம் தோன்றியது. 'இதோ போய் கொண்டு வருகிறேன்' என்று ஓடினார். திரும்பி வரும்போது, ஒரு கைப்பிடி என்ன பல கைப்பிடி கடலை அவரிடம்! அதில் ஒன்றை எடுத்து பெரியவர் பார்த்தார். அந்த ஒன்றில் ஒரு ஓரமாய் எலி கொரித்தது போன்ற அறிகுறி. உடனேயே கேட்டார் பெரியவர்: "இது பறிச்சதா? கொரிச்சதா?" என்று.

6

றித்ததா, கொறித்ததா?' என்று பெரியவர் கேட்ட கேள்வியில் இலக்கிய

பயம் மட்டுமில்லை. இதயத்தின் நயமும் இருந்தது என்பது போகப்போக விளங்கத் தொடங்கியது. கடலையை முறத்தில் வைத்து எடுத்து வந்த அந்த நபர், பெரியவர் முன் திணறியபடி நின்றார். பின் அந்த கடலையை வயலில் உள்ள எலி வளைகளில் இருந்து எடுத்து வந்ததை மிகுந்த பயத்துடன் கூறினார்.

பெரியவர் முகத்தில் மெல்லிய சலனம்.

ஒரு துறவிக்கு ஆசையே கூடாது. அது அற்ப கடலைப் பயிர் மீதுதான் என்றாலும், அதிலும் சில சமயங்களில் இதுபோல சோதனைகள் ஏற்பட்டு விடுகின்றன.

எலி ஒரு பிராணி வளைகளில் கடலைகளை சேமித்து வைத்துக் கொண்டு, அறுவடைக்குப் பிறகான நாட்களில், அது அதைச் சாப்பிட்டே உயிர் வாழ்ந்தாக வேண்டும். வயலுக்கு சொந்தக்காரனுக்கு வேண்டுமானால், அது எலியுடைய கள்ளத்தனமாக இருக்கலாம். அதற்காக எலிகளுக்கு பாஷாணம் வைத்து கொல்லவும் முற்படலாம். ஆனால், அன்பே வடிவான துறவி, எலியை ஒரு கள்ளப் பிராணியாகவா கருதுவார்? அதிலும், எலி எனப்படுவது கணபதியாகிய பிள்ளையாரின் வாகனம். அவரை வணங்கும்போது, நம் வணக்கம் எலிக்கும் சேர்த்துத்தான் செல்கிறது. இப்படி, வணங்கவேண்டிய ஒரு ஜீவனின் சேமிப்பில் இருந்து எடுத்து வந்திருந்த கடலையை பெரியவரால் சாப்பிட முடியவில்லை. மாறாக அந்த மனிதரிடம்,

“இதை எந்த வளையில் இருந்து எடுத்துண்டு வந்தீங்க? அந்த இடம் ஞாபகம் இருக்கா?” என்றுதான் கேட்டார். அவரும் ஆமோதித்தார். அடுத்த சில நிமிடங்களில், ஒரு முறத்தில் அந்த கடலையோடும் இன்னொரு முறத்தில் வெல்லப் பொரியோடும் அந்த இடத்துக்கு பெரியவரே போய் நின்றதுதான் ஆச்சரியம்.

வளை துவாரத்துக்கு முன்னாலே, அங்கிருந்து எடுத்ததோடு கொண்டு வந்திருந்த வெல்லப்பொரியையும் வைத்துவிட்டு, மன உருக்கமுடன் அவர் பிரார்த்தனை செய்யவும், உள்ளிருக்கும் எலிகள் வெளியே தைரியமாய் வந்து, பெரியவர் படைத்த விருந்தை அனுபவிக்கத் தொடங்கின!

சூழ்ந்து நின்ற நிலையில் பார்த்தவர்களுக்கெல்லாம் ஒரே பரவசம். மெய்சிலிர்ப்பு!

‘மனிதனுக்கு அன்பும் கருணையும்தான் பிரதானம். துறவிக்கோ அது

கட்டாயம் - அது இருந்துவிட்டால் ஒருயிர்க்குக் கூட அது புரியும்' என்கிற செய்தியை, அன்றைய சம்பவம் சொல்லாமல் சொல்லிவிட்டதே!

இந்தச் சம்பவத்தை கேள்விப்பட்ட நான், இதை ஒரு மிஸ்ட்ரியாக கருதுவதா, இல்லை மிக சகஜமான ஹிஸ்டரியாக எடுத்துக் கொள்வதா என்பதில் சற்று குழம்பிப் போனேன்.

பெரியவரைத் தவிர, எவராலும் இப்படி ஒரு அதிசயத்தை நிகழ்த்த முடியாது என்றும் நம்பினேன். இப்படி ஒரு கருணையை ஒரு தெரு நாயிடமும் அவர் காட்டிய சம்பவம் ஒன்றையும், இதைத் தொடர்ந்து நான் அறிய நேரிட்டது.

துறவிகள் வருடத்துக்கு ஒருமுறை, ஒரு நான்கு மாத காலம் சாதுர்மாஸ்ய விரதம் எனும் விரதத்தை அனுஷ்டிப்பதண்டு. என்னதான் அது பொன்னாகவே இருந்தாலும், அதை துலக்கத் துலக்கத்தான் அதன் பிரகாசம்அதிகரிக்கும்.

துறவிகள் விஷயத்தில் இப்படிப்பட்ட விரதங்களும் அப்படித்தான்! மகா பெரியவரும் ஒரு கிராமத்தில் தங்கி, இந்த விரதத்தை மேற்கொண்டார்கள். இதனால் தவசீலமானது அந்த கிராமத்தைச் சுற்றிலும் பரவிடும். அதன் விளைவுகளை காலத்தால்தான் நாம் உணர முடியும்.

எவ்வளவோ பெரிய அறிஞர்களும், ஞானிகளும் மின் விளக்குக்குக்கூட விதியில்லாத கிராமப்புறங்களில்தான் பிறந்து வளர்ந்திருக்கிறார்கள். அவர்களின் பிறப்புக்கு பின்னாலே, துறவியர்கள் மேற்கொள்ளும் இப்படிப்பட்ட தவசீலங்கள் Thava Seelam பெரிதும் காரணங்களாய் உள்ளன.

பெரியவர் அந்த கிராமத்தில் விரதமிருந்த சமயம், தினப்படி பூஜைகள் மற்றும் சம்பிரதாய சடங்குகளும் குறைவின்றி நடந்தன. முடிவில் மடத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அன்று பங்கேற்றவர்களுக்கும் மடத்திலேயே போஜனம் அளிக்கப்படும். அதை பிரசாதமாக கருதி உண்பது சான்றோர் வழக்கம்.

ஊருக்குப் பொதுவான தர்மத்தால் வந்த அன்னம் அது. மந்திரம் சேர்ந்து சாப்பிடக் கிடைப்பது ஒரு விசேஷம். அதைச் சாப்பிடப் போய், ஒரு துளி ரத்தம் அதனால் நமக்குள் பெருகினாலும் அது போதும். உடம்பால் இன்றைய வாழ்க்கை முறையில் நமக்கு ஏற்படும் தோஷங்கள் அடிபட்டுப் போய்விடும்.

இந்த அன்னத்துக்காக ஒரு தெருநாய் கூட தவமிருந்தது தான் விந்தை! தினமும் மதியம் எல்லோரும் சாப்பிட்ட உடன் எடுத்து எறியப்படும் எச்சில் இலைகளைத் தேடிச் சென்று, அந்த நாய் சாப்பிடத் தொடங்கிவிடும். இலையைப் போடச் செல்லும்போதே பாய்ந்துவரும். குலைக்கும். அதன் பசி அதற்கு!

இந்த சப்தம் தினமும் பெரியவர் காதிலும் விழுந்தது. அதன் பசிக்குரல், அவர் மனத்தை உருக்கிவிட்டதாம். அப்போது, ஒரு தையல் இலையில் அவர் சாப்பிட ஒரு கைப்பிடி அவலோ, இல்லை உப்பில்லாத தயிரன்னமோ அவருக்கும் அளிக்கப்படுவது வழக்கம். தனக்கு தரப்பட்ட அந்த இலைப் பிரசாதத்தை, அப்படியே குலைக்கும் நாய்க்கு வைக்கச் சொல்லிவிட்டார் பெரியவர். அதற்கும் சோறு வைக்கச் சொல்லாமல், தன் சோற்றையே அவர் தரச் சொன்னதன் பின்னே, பல நுட்பமான விஷயங்கள் ஒளிந்துள்ளன.

நாயின் குலைப்பு பசி உணர்வை பெரியவருக்கு உணர்த்துகிறது. இதை வெல்வது கடினம். இந்த பாழாய்ப் போன பசி, எச்சில் இலை என்று கூட பார்க்காமல் நாயைத் தூண்டுகிறது.

இதுதான் மனிதர்களையும் ஆட்டிப் படைக்கிறது. இதனால்தான் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் போன்ற பொதுவுடைமைச் சிந்தனையாளர்கள், ‘ஒரு சாண் வயிறே இல்லாட்டா - இந்த உலகத்தில் ஏது கலாட்டா?’ என்று பாடவும் காரணமாகிறது.

இதை வெற்றி கொள்ளாமல், துறவை வெற்றி கொள்வதும் கடினம் என்பதுதான், அவர் உணர்ந்த, உணர்த்த விரும்பிய உண்மை.

பெரியவர், தன் இலையையே தரவும், ஆடிப்போன மடத்து ஊழியர்கள், அதன் பின் நாய்க்கு முதலில் உணவு வைத்துவிட்டு, பிறகுதான் போஜனத்தை தொடங்கினர்.

அதன்பின், பெரியவர் முன் இலை வைக்கும்போது நாய் குலைக்கவில்லை. அந்த ஒரு நாயின் பசிக்கு வழி செய்தாகிவிட்டது. ஆனால், உலகத்தில் கோடி கோடி உயிர்கள். ஒரு உயிரும் உணவில்லை என்று வருந்தக்கூடாதே...?

இந்தப் பசியின் அருமையை பெரிதும் உணர்ந்த தலைவர்களில் ஒருவர்தான் எம்.ஜி.ஆர். அவருக்கும் பெரியவருக்கும் இந்த பசி விஷயத்தில் ஒரே எண்ணம் தான்!

எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்த சமயம் - முதல்வராக பொறுப்பேற்பதற்கு முதல் நாள் ஒரு சம்பவம்! அப்போது மகா பெரியவர், மகாராஷ்டிர மாநிலம் சதாராவில் தங்கியிருந்தார். இதே சாதுர்மாஸ்ய விரதம்தான். எம்.ஜி.ஆரை வாழ்த்தி, ஆசிகூற விரும்பினார் பெரியவர். அதன் நிமித்தம் ஒரு பொன்னாடையுடன் காமாட்சியம்மன் பிரசாதத்தை வரவழைத்து ஆசீர்வாதத்துடன், அதை வைணவ சீலரான முக்கூர் லஷ்மி நரசிம்மாச்சாரியார் வசம் ஒப்படைத்து, "இதை மடத்து ஆசீர்வாதமாக முதல்வரிடம் சேர்ப்பித்து விடு" என்று கூறி அனுப்பிவித்தார்.

முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சாரியாரும் ராமாவரம் தோட்டத்துக்கு வந்து காத்திருந்து, அந்த பிரசாதத்தை எம்.ஜி.ஆர். வசம் சேர்ப்பித்தார். பெரும் ஜனத்திரளுக்கு நடுவில் பிரசாதத்தை உரிய முறையில் சேர்க்க முடியுமா என்று சந்தேகம் இருந்தது. ஆனால், பெரியவர் கருணை அங்கே பரந்தாமன் எனும் அன்பர் மூலம் வழிநடத்தி பிரசாதத்தையும் சேர்த்துவிட்டது.

அவ்வேளையில், எம்.ஜி.ஆர் அவர்கள் லஷ்மி நரசிம்மாச்சாரியாரிடம் கூறியது ஒன்றுதான்; "மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நான் ஆட்சி செய்வேன்" என்று மட்டும் பெரியவரிடம் கூறி, என் பணிவான நமஸ்காரங்களையும் கூறிவிடுங்கள் என்றார்.

லஷ்மி நரசிம்மாச்சாரியாரும் மகிழ்வுடன் விடை பெற்றுக் கொண்டார். மறுநாள் எம்.ஜி.ஆர். பெரியவர் அணிவித்த சால்வையை அணிந்து கொண்ட பிறகே பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். சதாராவிலிருந்து பெரியவர் புரிந்த ஆசிகளும், கருணையும், எம்.ஜி.ஆருக்குள் இயல்பாகவே இருந்த உதாரகுணமும் ஒன்றிணைந்தன. சத்துணவுத் திட்டம் எனும் மனிதநேய அரசியல் மொட் விழ்ந்தது.

காமராஜர் விதைத்தது; பெரியவர் கருணையாலே எம்.ஜி.ஆரால் பெரிதும் போஷிக்கப்பட்டது. எலியிடம் தொடங்கி, நாயிடம் தொடர்ந்து நாட்டில் வந்து முடிந்து விட்டது பெரியவரின் கருணை.

பசிக்கொடுமைக்கு பெரியவர் விடுதலை காண விரும்பியதால்தான், 'பிடி அரிசித் திட்டம்' என்கிற ஒரு திட்டத்தையே கொண்டு வந்தார்.

தினமும் ஒரு கைப்பிடி அரிசியை பிறருக்காக என்று ஒவ்வொரு வீட்டிலும் எடுத்து வைத்து, அதை மடத்தைச் சார்ந்தவர்கள் வரும்போது தரவேண்டும். வீட்டுக்கு வீடு சேரும் இந்த அரிசியால், ஊருக்குள்

ஒருவர்கூட பட்டினியின்றி இருக்க முடியுமே?

எப்பேர்ப்பட்ட உன்னதமான திட்டம்!

பெரியவர் இருக்கும் வரை பெரிதும் பேணப்பட்ட இந்த திட்டத்தை, இப்போது நினைவில்தான் வைத்திருக்கிறோம்; பெருமளவு செயலில் இல்லை. இந்தப் பட்டினி உணர்வு மட்டும் எப்படித்தான் பெரியவருக்கு தெரியுமோ?

ஒரு புலவர், தன் குடும்பத்தவருடன் செட்டி நாட்டுப் பகுதியிலிருந்து பயணிக்கும்போது, வழியில் எங்குமே சாப்பிடக் கிடைக்கவில்லை. பசியோ குடலைப் பிடுங்கித் தின்கிறது. நேரமோ நள்ளிரவைத் தாண்டிவிட்டது. அப்போது, புதுக்கோட்டை அருகே ஒரு ஊரில் மகாபெரியவர் தங்கி இருக்கும் அறிவிப்பு அவர் கண்களில் படுகிறது.

உடனே காரை அங்கு விடச் சொல்கிறார். குடும்பத்தவர்களோ, 'நள்ளிரவாகி விட்ட நிலையில், பெரியவர் தங்கி இருக்கும் இடத்துக்குப் போய், அவரை சிரமப்படுத்துவது சரியில்லை' என்கின்றனர்.

"நாம் சிரமப்படுத்த வேண்டாம். காலை அவரை தரிசித்துவிட்டு செல்வோம். இந்தப் பட்டினி அவருக்கான விரதமாக இருக்கட்டும்" என்கிறார் புலவர். காரும் அந்த ஊரை நெருங்கி விட்ட நிலையில், மணி ஒன்று!

ஊர் எல்லையிலேயே ஒரு பிராமணர் காத்திருந்து, வழிமறித்து நிறுத்தி, 'நீங்கள் தானே புலவர்?' என்று கேட்கிறார். புலவருக்கோ பெரும் வியப்பு...!

7

அந்த நள்ளிரவில் புலவரின் காரை வழிமறித்து, "நீங்கள்தானே புலவர்?" என்று அந்த பிராம்மணர் கேட்டபோது, அந்த புலவருக்கு பெரும் வியப்பு. ஏனென்றால், அவர் அங்கு பிரவேசம் செய்திருப்பதே எதிர்பாராத விதம்.

'நான் வந்தபடி இருக்கிறேன்' என்று கூற, இன்று போல கைபேசி வசதிகளும் இல்லாத காலம் அது. அப்படி இருக்க, இந்த பிராம்மணருக்கு தன் வருகை எப்படித் தெரிந்திருக்க முடியும் என்கிற கேள்வி, அந்த புலவருக்கு மட்டுமல்ல; புலவர் குடும்பத்தவர்க்கும் சேர்ந்தே ஏற்பட்டுவிட்டது.

அதைத் தொடர்ந்து நடந்தவைகளும் ஆச்சர்யமூட்டும் அனுபவங்கள்தான். அந்த பிராமணர், அவரை பெரியவர் தங்கியிருக்கும் மடத்துக்கு அழைத்துப் போய், கைகால் கழுவி வரச் செய்து பின் அமர்வித்து தையல் இலை போட்டு, அதில் அரிசி உப்புமா, பிட்லே என்று சுடச்சுட பரிமாறியபோது புலவர் குடும்பம் சிலிர்த்துப் போனது. சாப்பிட்டு முடித்த கையோடு, பெரியவர் காத்திருப்பதாக கூறி அவர்களை அழைத்துச் சென்று நிறுத்தியபோது பெரியவரும் விழித்திருந்தார்.

புலவரும் அவர் குடும்பத்தவரும் அந்த சாப்பாட்டையும் எதிர்பார்க்கவில்லை - அந்த தரிசனத்தையும் எதிர் பார்க்கவில்லை. புலவருக்கு ஆனந்தக் கண்ணீரே வந்துவிட்டது.

“இப்போது நடந்த அவ்வளவும் எங்கள் பாக்கியம். நாங்கள் துளியும் எதிர்பாராதது. எங்கள் வருகையும் சரி; பசியும் சரி; உங்களுக்கு எப்படித் தெரியும் என்றே தெரியவில்லை” என்றார் புலவர். அதற்கெல்லாம் எந்த பதிலையும் கூறவில்லை பெரியவர். ஒரு புன்னகைதான் பதில்.

“சரி நாங்கள் இப்போதே தஞ்சாவூர் புறப்படுகிறோம்” என்று புலவர் கூறவும், “படுத்து உறங்கிவிட்டு காலையில் போய்க்கொள்ளலாம்” என்று உறுதியாக கூறிவிட்டார் பெரியவர்.

படுக்கச் சென்ற இடத்தில் சூடாக பால் வேறு!

புலவர் கூட வந்தவர்களில் கைக்குழந்தை ஒன்றும் அடக்கம். அதற்கு பால்தானே சரியான உணவு!

புலவர், பெரியவரின் கருணையையும் உதவியையும் எண்ணி நெகிழ்ந்து போனார்.

இந்தப் புலவர் யாரோ அல்ல. அந்த நாளில் புகழ் பெற்று விளங்கிய ஏ.கே. வேலன் என்பவர்தான் இவர். திராவிட இயக்கத் தொடர்போடு ஹிந்தி எதிர்ப்பு, விலை வாசி உயர்வு என்று பல போராட்டங்களில் கலந்து கொண்டவர். ஆன்மிகத்தில் நிறைய கேள்விகளை கொண்டிருந்தவர்.

இவரிடம் பெரியவர் எந்த உபன்யாசமும் செய்யவில்லை. அவர் போன வழியையும் தவறென்றோ சரியென்றோ கூறவில்லை. பெரியவர் மேல் புலவருக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்தது. இச்சம்பவத்துக்குப் பிறகு அது பக்தியாய் மாறிவிட்டது.

உண்மைான தவசிக்கு மாற்றுக் கருத்து உடையவர்களும் சரி; மதித்து பின் தொடர்பவர்களும் சரி, ஒன்று தான்.

இன்றும் காஞ்சி மடத்துக்கு வெளியே ஈ.வெ.ரா. பெரியாரின் சிலை உள்ளது. தொடக்கத்தில் அங்கே சிலை நிறுவ அந்த இயக்கத்தவர்கள் முனைந்தபோது, பெரிய அளவில் எதிர்ப்பு கிளம்பியது. அது ஒரு வம்புக்கு வரும் செயல். இதனால் கலவரம் மூளும் என்றெல்லாம் பலரும் பயந்தார்கள். ஆனால், பெரியவர் அவர்களை சமாதானம் செய்து, அவர்கள் விருப்பப்படி நடந்து கொள்ளட்டும் என்று கூறிவிட்டாராம். அதற்கு அவர் சொன்ன காரணம் தான் உன்னதமானது.

“எதிர்கருத்து உடையவர்கள், தங்கள் கருத்தை வலியுறுத்தத்தான் அந்த சிலையை அங்கே நிறுவுறுகிறார்கள். அது ஜனநாயக உரிமை. அந்த சிலையை பார்க்கும் போதெல்லாம் எனக்கும் ஒரு உத்வேகம் ஏற்படும். இத்தனை கோயில்களும் பௌராணிகர்களும் இருந்தே, இப்படி எதிர்க்கருத்து ஏற்படுகிறதென்றால், இதெல்லாம் ஏற்படாத அளவுக்கு ஆன்மிக ஞானத்தையும் அதற்கான தெளிவையும் உருவாக்கவும், அதை வழிநடத்தவுமான கடமை நமக்கு நிறைய இருக்கிறது என்பதைத்தான் அந்த சிலை வாயிலாக நான் உணர்கிறேன்!” என்றாராம். என்ன ஒரு அற்புதமான பார்வை? என்ன ஒரு தெளிவான அணுகுமுறை!

பெரியவரின் இந்த கண்ணியமான அணுகுமுறை, அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களையே வியக்க வைத்ததாகவும் நான் அறிந்தேன்.

இன்று ஆன்மிக வழிநடப்பதாக கூறிக்கொள்ளும் பல சன்னியாசிகள் மேல் நிறையவே குற்றச்சாட்டுகள். போலீஸ் அந்த சன்னியாசிகளை பிடித்து உள்ளே போடுவதும், அவர்கள் ஜாமினில் வருவதும் சகஜமாக உள்ளது தன்னை சன்னியாசியாக கூறிக்கொண்ட ஒருவர், பெரும் குற்றவாளிகள் கூட பெற்றிராத அளவு நீண்ட கால ஜெயில் தண்டனை பெற்று ஜெயிலிலேயே இறந்தும் போய்விட்டார்.

நம் சமயத்துக்கு ஏன் இப்படி ஒரு சோதனை என்ற வருத்தம் என்னுள் எழாமல் இல்லை. ஒரு சிறு ஆறுதல் போல, எல்லா சமயங்களிலும் இப்படிப்பட்டவர்கள் இருந்து, அந்த சமயத்துக்கே அவப்பெயர் ஏற்படுத்துவதையும் காணமுடிகிறது.

ஆனால், ஒரு சமயவாதி - குறிப்பாக சன்னியாசி, மக்களை வழிநடத்தும் கடமை உடையவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு, பெரியவர் இலக்கணமே வகுத்து வைத்திருக்கிறார் என்பதுதான் பேருண்மை.

இந்த உண்மையை வெகுஜனங்களோடு, இந்த சமயத்தை வழிநடத்துவதாக கூறிக்கொள்பவர்களும் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும்.

வம்பு வழக்கினையும், போலீஸ் கைதையும், அந்த நாளில் அதாவது நூற்று ஐம்பது வருடங்களுக்கு முன்பே காஞ்சி மடமும் சந்தித்துள்ளது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

அந்த சம்பவத்தை அன்பர் ரா. கணபதி அவர்களின் 'கருணைக் காஞ்சி கனகதாரை' என்னும் நூல் வாயிலாக நான் அறிய நேர்ந்தபோது, பேராச்சரியமும், கூடவே பல அரிய செய்திகளையும் உணர்ந்து கொண்டேன்.

இத்தொடரை வாசிப்பவர்கள், அறிய வேண்டி, சுருக்கமாய் அந்த வரலாற்றுச் சம்பவத்தை அன்பர் கணபதி அவர்களை பிரார்த்தித்துக்கொண்டு, இத்தொடரிலும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஸ்ரீமடம் கைதான அந்தக் கதை, ஆச்சரியமூட்டுவதாகும்.

இது 1843-44களில் நடந்த சம்பவம்!

பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்று திருவானைக்காவல். இதில் குடிகொண்டிருப்பவள் அகிலாண்டேஸ்வரி. இவளது அனுக்கிரகத்துக்கு கவிராஜ காளமேகமே பெரும் சாட்சி.

இவளது அணிகளில் காதுத்தாடங்கம் என்பது ஒரு முக்கியமான அணி. திருக்கடவூரில் அபிராமி பட்டன் அமாவாசை அன்று நிலவுவரும் என்று தன்னை மறந்து சொல்லிவிட, அந்த பட்டனின் - பக்தனின், வாக்கு பொய்யாகிவிடாதிருக்க, சரபோஜி மன்னன் முன்னாலே, அந்த அபிராமி தன் தாடங்கத்தை கழற்றித்தான் வானில் வீசி எறிந்தாள். அதுவே முழு நிலவாகி ஜொலித்து அபிராமி பட்டரை காப்பாற்றியது.

தாடங்கத்துக்கு பின்னாலே இப்படி ஒரு சம்பவம் உண்டு. இந்த தாடங்கங்கள் அகிலாண்டேஸ்வரிக்கும் மிக பிரசித்தி. காரணம் ஆதிசங்கர பகவத் பாதள்தான் முதலில் இவளுக்கு தாடங்கம் சாற்றி, அவளின் பேரெழிலை பிறர்காணச் செய்தவர்.

அதன்பிறகு அந்த தாடங்கம் தேய்ந்து போகும்போதோ, இல்லை பழசாகிப் போகும்போதோ புதிய ஒன்றை செய்து தருவது வழக்கம்.

1843லும் அப்படிச் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டு, அதை ஸ்ரீமடம்

செய்து தந்தபோது, திருச்சியைச் சேர்ந்த ஒரு அன்பர், அம்பாளுக்கு அணி செய்யும் உரிமை தனக்கே உரியது என்று கோர்ட்டுக்கே போய்விட்டார். ஸ்ரீமடத்து உரிமையை அவருக்கு விட்டுத் தருவதில் கௌரவம் பார்த்த ஸ்ரீமடமும், தன் உரிமையை நிலைநாட்ட வக்கீல் வைத்து கோர்ட்டில் பதில் வழக்காடியது. வழக்கென்று வந்தால், அது என்ன அவ்வளவு சுலபத்தில் முடியுமா? கீழ் கோர்ட், மேல் கோர்ட் என்று சென்ற அது, வழியாக முடிந்து மடத்துப்பக்கம் தீர்ப்பாகியது.

இதற்கு எத்தனை காலம் ஆனது என்று தேதி வாரியாக யாருக்கும் சொல்லத் தெரியவில்லை. ஏனென்றால் இன்று போல காலண்டர், கடிகாரம், ரிஸ்ட் வாட்ச், நாளிதழ்கள் என்று அன்று எதுவும் கிடையாது. கோயிலில் நடக்கும் விழாக்களை வைத்தும், தெருவில் தமுக்கு போடுபவன் செய்தி சொல்வதற்கு முன் தமிழ் வருஷ தேதி சொல்லி, செய்தி சொல்வதை வைத்தும்தான், அன்று வெகுஜனங்கள் நாள் கிழமைகளை தெரிந்து வந்தார்கள்.

ஆகையாலே, இந்த கேஸ் எவ்வளவு காலம் நடந்தது என்பதை அன்று சொன்ன விதம் மிக அலாதியானது. அதாவது, ஸ்ரீமடம் திருவானைக்காவலுக்கு போய் டேரா போட்டு அமர்ந்து பிறகுதான் தாடங்கத்தை சாத்தியது. அன்று சந்திர மௌலீஸ்வர பூஜையின்போது பிழியப்பட்ட எலுமிச்சம்பழத்தை வீசி எறிந்ததில், விழுந்த விதைகளில் சில எலுமிச்சை மரமாக முளைத்து, பின் பூவிட்டு பிஞ்சு விட்டு காய்த்து திரும்பவும் சந்திர மௌளிஸ்வர பூஜைக்கே வந்து சேர்ந்ததாம். அதன்பிறகே, மடமும் அங்கிருந்து கிளம்பியதாம்.

என்றால் எவ்வளவு காலம்?

ஒரு எலுமிச்சம் பழ விதையானது, மரமாகிப் பழம் தரும் அளவிலான காலம். அதாவது சுமாராக நான்கில் இருந்து ஐந்து வருடங்கள்!

இவ்வளவு நீண்ட காலம் வழக்கு நடத்தியதால், ஸ்ரீமடத்துக்கு நிறைய செலவு ஆகி கணக்கு பார்த்தபோது, ஸ்ரீமடம் கடனில் மூழ்கியிருந்ததாம்.

ஒரு தாடங்கச் சண்டையால் கடன் வந்ததை எண்ணி, அப்போதைய ஸ்வாமிகள் மிகவும் வருந்தினாராம். எப்படித் தெரியுமா? ‘பேசாமல் நான்தான் அணிவிப்பேன் என்ற அந்த நபருக்கே உரிமையை தந்திருக்கலாம்.

அம்பாளுக்கு யார் செய்தால் என்ன?

ஸ்ரீமடத்து உரிமை என்று கர்வப்பட்டதற்கு பலன், கடன். ஒரு மடாதிபதியான எனக்கு இது புரியாமல் போய் விட்டதே. 'ச்சே!" என்று தன்னை மிக நொந்து கொண் டாராம் ஸ்வாமிகள். இது தான் உண்மையான துறவியின் லட்சணம். இந்த மாதிரியான சத்யவிசாரமே துறவிகளையும் மேம்படுத்தும்.

இங்கே எங்கேயும் ஸ்வாமிகள் அம்பாளைப் பார்த்து, உனக்கு செய்யப்போய் நான் கடனாளி ஆகிவிட்டேனே என்று சராசரியாக நினைக்கவோ, ஸ்ரீமடத்துக்கு பொருள் வேண்டும் என்றும் பிரார்த்திக்கவோ இல்லை.

தான் இந்த உண்மையை உணர வேண்டும் என்றே வழக்கு, நீண்டு ஸ்ரீமடத்துக்கு கடனும் நேரிட்டது என்பது தான் அவர் புரிந்துகொண்ட உண்மை.

அதே சமயம் இந்த கடனில் இருந்து விடுபட, அப்போது ஸ்வாமிகளுக்கு அடுத்த பட்டத்தில் இருந்த இளையவர் ஒரு திட்டம் போட்டார். அப்போது தஞ்சாவூருக்கு சரபோஜியின் பிள்ளைதான் ராஜாவாக இருந்தார். அவரிடம் போய் உதவி கேட்டார். இப்படி ராஜாவிடம் உதவி கேட்கப் போவதை பெரியவரிடம் கூறவில்லை. இளையவரின் எண்ணமே அப்போது வேறாக இருந்தது. ராஜாவின் உதவியோடு ஸ்ரீமடத்தின் கடனை நீக்கி, பழையபடி மடத்தை நிமிர்த்தி விட்டால், அது பெரியவருக்கும் மகிழ்ச்சியையும் புது தெம்பையும் தரும் என்று எண்ணியே, ராஜாவிடம் போய் உதவி கேட்டார்.

ஆனால், கொஞ்சமும் எதிர்பார்க்காத விதத்தில், சபோஜியின் பிள்ளையோ, "தன்னால் உதவமுடியாது. உதவிடும் நிலையிலும் நானில்லை" என்று கூறிவிட்டார். இதனால், இளையவருக்கு பெரிதும் ஏமாற்றமாகிவிட்டது. தனக்கு ஏற்பட்ட தோல்வியை பெரியவரிடம் கூறி வருத்தப்படவும் செய்தார். ஆனால், அதன்பின் நடந்தது அற்புதம்... அது?

8

மடத்தின் கடனை அடைக்க வேண்டும் என்கிற பிரயாசை, அன்றைய இளையவரை, தஞ்சாவூர் சென்று சரபோஜியின் பிள்ளையான சிவாஜியை பார்த்து உதவியை கேட்கச் செய்தது. ஆனால், அவரோ 'தனக்கு வசதிப்படாது. தன் நிர்வாகமே சிரமத்தில் இருக்கிறது' என்பதுபோல கூறி அனுப்பிவிட்டார்.

இளையவர் இதை கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. பெரும் ஏமாற்றமாகிவிட்டது.

கிட்டத்தட்ட இடிந்த கோயிலை கட்டுவதற்காக டொனேஷன் கேட்டு, ஒருவரிடம் செல்ல, அவர் மறுதலித்துப் பேசும்போது, நமக்கு ஏற்படுமே அப்படி ஒரு ஏமாற்றம்தான் இது!

நமக்கு இது தாங்கும். சில நாட்களில் சரியாகிவிடும். ஆனால், இளையவர் போன்ற பீடாதிபதிகளை, இந்த மாதிரியான ஏமாற்றங்கள் பெரிதாகவே பாதிக்கும். 'நாமே நேரில் போயும் காரியம் பலிதமாகவில்லையே...? என்றால், இந்த மடத்துக்கும், சங்கரர் வழி நடக்கும் சன்னியாசியான தமக்கும் மதிப்பில்லையா?

ஒருவேளை பொருள் கேட்டு, தான் செல்லாதிருந்தால் மதிக்கப்பட்டிருப்பேனா? நேரில் சென்றது பிழையோ?' இப்படி இளையவருக்குள் ஏராளமான கேள்விகள்!

மனபாரம் தாளாமல் பெரியவரிடம் அதை இறக்கவும், பெரியவர் அதற்கு சொன்ன பதிலில், அவரது முதிர்ச்சியும் தவசீலமும் தெரிந்தது.

"போகட்டும் விடு... மடத்தை நாம் நடத்துவதாக கருதுவதே தவறு! அந்த சந்திரமௌலியும், காமாட்சியுமல்லவா வழிநடத்துகிறார்கள். எனவே, இதை அவளிடம் விட்டுவிட்டு, நாம் நம் கடமையைச் செய்வோம். இதற்கு மேல் இது குறித்து கவலைப்படுவது நமக்கு அழகல்ல. அது நமக்கு தெளிவில்லை என்றாகிவிடும்" என்றாராம்.

இளையவர் துறவுக்குப் புதியவர். அதே சமயம் வயதில் இளையவர். இதனால் லௌகீகமாய் காம்யார்த்தமாய் யோசித்து செயல்பட்டுவிட்டார். பெரியவரும் அதற்காக அவரை கோபிக்காமல் ஆற்றுப்படுத்தினார். அப்படிச் செயல்படும்போது, தம் அனுபவத்தையும் அதில் காட்டினார்.

உச்சபட்சமாக அவர் சொன்னது, 'இந்த மடத்தை நாம் எங்கே வழி நடத்துகிறோம்? அந்த சந்திரமௌலியும் காமாட்சியுமல்லவா வழிநடத்துகிறார்கள்!' என்றதுதான்!

இது ஒருவித சரணாகதி...

இதுதான் உண்மையில் நான் என்கிற பற்றறுத்த நிலைப்பாடு.

இதுவே உத்தமத்துறவியின் லட்சணம். (இன்று இப்படியா உள்ளது?)

நமது பெரியவர் வரையிலும்கூட இப்படி ஒரு விஷயம் நடைபெற்றது. அதை சிந்தித்துவிட்டு, பிறகு, சென்ற நூற்றாண்டு விஷயத்துக்கு செல்வது உசிதம் என்று படுகிறது. ஏனென்றால், இந்த இடத்தை விட்டுவிட்டால், இப்போது சொல்லப்போகும் விஷயத்தைச் சொல்ல, ஒரு சரியான இடம் கிடைக்காமல் போகலாம்.

ஒரு கிராமத்தில் பெரியவர் முகாமிட்டிருந்த சமயம். துடைத்துப் போட்ட மாதிரி, எல்லா உணவுப் பொருட்களும் தீர்ந்துவிட்டிருந்தன. காரியதரிசியும், பரிசாரகரும் (சமையல் செய்பவர்) பெரியவரிடம் வந்து தெரிவித்தனர்.

“இன்று இரவுப் பொழுதை எப்படியாவது கடத்தி விடலாம். நாளைக்கு மடத்தில் தம்பிடிகூட அரிசி பருப்பில்லை” என்ற அவர்கள் குரலில் பெரும் வருத்தம்.

ஆனால், பெரியவர் அதைக் கேட்டு வருத்தப்படவில்லை.

‘அப்படியா?’ என்று, மற்ற விஷயங்களைச் சொல்லும் போது கேட்டுக் கொள்வதுபோலதான் கேட்டுக்கொண்டாராம்!

அவர்களுக்கோ, ‘என்ன இப்படி இருக்கிறார். காஞ்சிபுரத்துக்கோ, இல்லை பெரியவர் சொன்னால், செய்ய தயாராக உள்ள தனவான்களுக்கோ, தகவல் அனுப்பினால் அல்லவா, இந்த சிக்கலில் இருந்து மீள முடியும்’ என்று

நன்றாகக் கவனியுங்கள். இவர்களும் அம்பாள் பார்த்துக் கொள்வாள் என்று நினைக்கவில்லை. நினைக்கவும் முடியாது. ஏனென்றால், இது விஞ்ஞான காலம். அற்புதங்கள் எல்லாம் கதை கட்டுரைகளில்தான் சாத்தியம் என்கிற அளவுக்கே நம் நம்பிக்கையின் வீர்யம் உள்ளது.

ஆனால், பெரியவரோ, “காமாட்சி பார்த்துக்கொள்வாள் கவலையை விடு” என்று கூறிவிட்டு, தியானத்தில் உட்கார்ந்துவிட்டாராம்.

அவர்களால் பெரியவரிடம் போய் மல்லுக்கு நிற்க முடியவில்லை. பதட்டத்தோடு பொழுதும் விடிந்தது. அதிசயம் போல, ஒரு வண்டி நிறைய அரிசி, பருப்பு, காய் கறிகள், பழம் என்று வந்து இறங்கியது. ‘யார் அனுப்பினார்கள் இதை?’ என்ற கேள்விக்குக் கிடைத்த விடையில்தான், அற்புதங்கள் இந்த நாளிலும் நடக்க முடியும் என்பதற்கான விஷயம் உள்ளது.

பக்கத்து கிராமத்தில் ஒரு திருமணம் நடக்க இருந்தது. அந்த திருமண

விருந்துக்கான உணவுப் பொருட்கள்தான் அவை எல்லாம். ஆனால், கடைசி நிமிடத்தில் மாப்பிள்ளைப் பையனுக்கு அம்மை போட்டதில் கல்யாணம் செய்ய முடியாத நிலை.

வாங்கிவிட்ட அவ்வளவையும் என்ன செய்வது? என்று யோசித்தபோது, மடம் வந்து முகாமிட்டிருப்பது, அந்தத் திருமண வீட்டைச் சேர்ந்த பெரியவருக்கு தெரிய வந்தது. மடத்தில் தினமும் அன்னபோஷணம் நடப்பதை தெரிந்து வைத்திருந்த அவர், இதை மடத்துக்கு கொடுத்துவிடுவோம். வீணாகாமல் நல்ல விதமாய் பயன்படும் என்று கருதி, வண்டியோடு அவ்வளவு சரக்கையும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்.

மூட்டையில் அரிசி, கூடைகூடையாக காய்கறி, பழங்கள், பருப்பு, எண்ணெய் என்று சகலமும் வந்து இறங்கியதைப் பார்த்த காரியதரிசியும் பரிசாரகரும் திகைத்துப்போய், பெரியவரிடம் கூறவும் சிரித்த பெரியவர், “காமாட்சி பாத்துப்பானப்போ உனக்கு என் மேலகூட கோபம் வந்துருக்கும். ஆனால், இப்ப என்ன சொல்றே?” என்று கேட்டாராம். அவர்களால் பதிலுக்கு என்ன சொல்ல முடியும், சிலிர்ப்பதைத் தவிர...!

ஒரு விஷயத்தில் குழப்பமே இல்லாமல், நூறு சதவிகிதம் நம்புவது என்பதில் தான் அற்புதங்கள் நிகழ்கின்றன.

இந்த வகை நம்பிக்கையைத்தான், ‘நம்பினார் கெடுவதில்லை. நான்கு மறைதீர்ப்பு’ என்றனர் சான்றோர்.

நம் வாழ்வில் நாமும் அநேக விஷயங்களை நம்பத்தான் செய்கிறோம். ஆனால், அந்த நம்பிக்கையோடு கூடவே ஒரு மெல்லிய நூலளவுக்காவது. இது ஒரு வேளை நடக்காமல் போய்விட்டால் என்கிற ஒரு விஷயம் ஓடியபடியேதான் உள்ளது.

இன்றைய வாழ்க்கை முறையும் நமக்கு நம்பச் சொல்லித்தருவதைவிட, சந்தேகப்பட சொல்லித் தருவதே அதிகம்.

நம் கண் முன்னால் நம்பி ஜெயித்தவர்களைவிட, தோற்றவர்கள் எண்ணிக்கை மிக அதிகம். நமக்கு தைரியமளித்து ஊக்கப்படுத்துகிறவர்களைவிட ‘பார்த்து, கவனம்’ என்கிறவர்கள் அதிகம்.

நம்பிக்கை குறித்து ஒரு கதை உண்டு.

கைலாயத்தில் பார்வதி தேவிக்கே அம்மட்டில் ஓர் ஆச்சரியக் குழப்பம்.

பரமேஸ்வரனிடம் பூலோகத்தை காட்டி, “பிரபோ... ஏன், பூவுலகில் மகிழ்வாக இருப்பவர்களைவிட துக்கப்படுகிறவர்கள் அதிகம் உள்ளனர்? ஒரு பக்தனாவது நான் பூரண திருப்தியோடு இருக்கிறேன். உன்னிடம் கேட்க ஒன்று மில்லை என்று கூறுவதே இல்லையே.. ஏன்?

உங்கள் சன்னிதியிலும் சரி; எனது சன்னிதியிலும் சரி; கதறி அழுது அதைக் கொடு, இதைக்கொடு என்று கேட்கிறவர்களாகவே ஏன் எல்லோரும் உள்ளனர்?” என்று, எதுவும் தெரியாத ஒரு குடும்பப் பெண் போல கேட்டாளாம்.

அப்படியே, “அனைவரையும் ரட்சிக்கும் கங்கை பாய்கின்ற பூவுலகில், அதில் நீராடியும் மக்கள் இப்படி பாவிகளாக மாயையை விட்டு விலகாதவர்களாக இருப்பது சரியா?” என்றும் கேட்டாளாம்.

அதற்கு வார்த்தையில் பதில் கூறுவதைவிட, நிதர்சனமாய் உணர்த்திவிடுவது மேல் என்று, பார்வதி தேவியோடு பூவுலகில் பிரசன்னமாகிவிட்டார் பரமேஸ்வரன்.

அதுவும் எப்படி?

அப்படி இப்படி அசைய முடியாத தொண்டுகிழமாக! அருகில் கிழவியாக பார்வதி.

இருவரும் கங்கைக் கரைக்கு சிறிது முன்னால் இருந்தனர். பரமேஸ்வரன் தரையில் சுருண்டு படுத்திருக்க, பார்வதி கங்கைக்கு போவோர் வருவோரை எல்லாம் பார்த்து, “ஐயா, என் கணவர் மிக வயதானவர், அவரால் நடக்க முடியவில்லை. தயவு செய்து அவரை சுமந்து வந்து கங்கைக்கரையில் விடுங்கள். அதற்காக நீங்கள் கேட்கும் பொன்னைத் தருகிறேன்” என்கிறாள்.

பொன் கிடைக்கிறது என்றவுடன் பலர் முன் வந்தனர். அப்படி வந்தவர்களிடம் அவர்கள் திகைக்கும்படியாக ஒரு விஷயத்தை கூறினாள் பார்வதி.

“ஐயா... நான் ஒரு உண்மையை கூறி விட வேண்டும். பொன்னுக்காக நீங்கள் இவரைச் சுமப்பதற்கு நன்றி. அதே சமயம் இவரைத் தீண்டுவோரை, இவர் செய்த பாவங்கள் பற்றிக்கொண்டு விடும் என்பது, இவர் பெற்றிருக்கும் வரம். அதையும் தெரிந்துகொள்ளுங்கள். வேண்டுமானால், அதற்குத் தனியாக நான் பொன் தருகிறேன்” என்றாளாம். கிட்டே வந்தவர்கள், ‘இது நல்ல கதையாக இருக்கிறதே’

என்று திரும்பிவிட்டனராம். காலையிலிருந்து, மாலை வரை ஒருவர் கூட உதவ முன் வரவில்லை. அந்திசாயும் நேரம். ஒருவன் முன் வந்தான். அவன் பார்வதி கூறியதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

பரமேஸ்வரனைச் சுமந்து வந்து கங்கை கரையிலும் விட்டு, பொன் தர வந்த பார்வதியிடமும், "வேண்டாம்" என்கிறான்.

பார்வதி "ஏன் வேண்டாம் என்கிறாய்?" என்று கேட்கிறாள்.

"தாயே... நான் என் பாவங்களை எல்லாம் நீக்கிக் கொள்ளவே, கங்கைக்கு வந்துள்ளேன். வழியில் இவரைச் சுமக்க நேர்ந்தது என் பாக்கியம். என் பல பாவச்செயல்களுக்கான ஒரு பரிகாரம் அது. அதே சமயம் அவரது பாவங்கள் என்னைப் பற்றியிருக்கும். அதனால் பாதகமில்லை. இவருக்கும் சேர்த்து நான் கங்கையில் மூழ்கும் போது, அது போய்விடுமே...? கங்கை இருக்கும்போது எனக்கென்ன கவலை?" என்று திருப்பிக் கேட்டானாம்.

பார்வதிக்கும் புரிந்தது, பல ஆயிரம் பேரில் ஒருவனிம்தான் பூரணமான நம்பிக்கை இருந்திருக்கிறது. மற்றவர்களிடம் அது இல்லை. அதனாலேயே உலகம் முழுக்க தேவைக்குரல், அழுகை, வலிகளின் முனங்கல்... என்று!

நம்பிக்கை என்பது எப்படிப்பட்டது என்பதை உணர்த்தும் இந்தக் கதை, கட்டுக்கதையாகவே இருந்து விட்டு போகட்டும். ஆனால், அதனுள் பிரகாசிப்பது ஒரு மறுக்க முடியாத சத்தியமல்லவா? இப்படி ஒரு நம்பிக்கைதான் பெரியவரிடம் இருந்தது. அந்த நாளில் அன்றைய பெரியவரிடமும் இருந்தது.

சரி... திரும்பவும் பெரியவர், இளையவர், தஞ்சை சரபோஜி சிவாஜி இவர்களிடம் செல்வோமா?

அன்றைய பெரியவர், இளையவருக்கு ஆறுதல் கூறி திருவானைக்காவலை விட்டுப் புறப்பட்டார். மடத்து பரிவாரம் மிகப்பெரியது. யானை, குதிரை, காளை, ஒட்டகம் என்று அதன் கூட்டமும் பெரிதும் காட்சிக்குரியது.

அவ்வளவு பேருடன் கும்பகோணம் சென்று முகாமிடத் தீர்மானித்தார் பெரியவர். வழியில் இடையிடும் தஞ்சாவூரைத் தீண்டக் கூடாது. கோவிலடி வழியாக போய் விடலாம் என்று தீர்மானித்துச் சென்றபோது, திபுதிபுவென்று சரபோஜியின் சிப்பாய்கள் வந்து சுற்றி வளைத்து

விட்டனர்.

“நாங்கள் கும்பகோணம் செல்கிறோம்” என்று கூறியதை காதிலேயே வாங்காமல், “உங்கள் அவ்வளவு பேரையும் மடக்கி கைது செய்து அழைத்துவர உத்தரவு” என்றபோது, இளையவரிடம் கோபம்.

பெரியவரோ தன் முதிர்ச்சிக்கே உரிய சுபாவத்தோடு, ‘இதுவும் அம்பாள் சித்தம்’ என்றாராம்!

ஆனால்...?

9

பெரியவரானவர் அந்த போலீஸ்காரர்களின் ஆக்கிரமிப்பை ‘இதுவும் அம்பாள் செயலே!’ என்று ஞானருசியோடு பார்க்க, இளையவருக்கு மட்டும் கோபமான கோபம் வந்தது.

“உங்கள் சரபோஜி, எதற்காக எங்களை இப்படி சுற்றி வளைத்து பிடிக்கிறார்? இந்த தஞ்சாவூர் நகரத்துக்குள்ளேயே கால்பட்டுவிடக் கூடாது என்று ஒதுங்கிச் சென்று கொண்டிருக்கிறோம். ஏன் இப்படி வைதீகமானவர்களை சிரமப்படுத்துகிறீர்கள்?” என்று கேட்டதற்கு சிப்பாய்களிடம் பதிலில்லை.

மாறாக ‘நடங்கள்’ என்கிற உத்தரவு வேறு...

இதில் பெரியவரின் மேனாவைச் (பல்லக்கு) சுற்றி மட்டுமே ஏழெட்டு போலீஸ்காரர்கள்!

அதேபோல இளையவருக்கும்...!

மேனாவுக்குள் இருக்கும் இளையவர் மனத்திலோ, சரபோஜி ராஜாவை நினைத்து மிகவே மனம் கொதித்தபடி இருந்தது. ‘உதவி செய்ய முடியாது என்று சொன்னவர், உபத்திரவம் எதற்கு செய்கிறார்?’ என்கிற கேள்வி வேறு...

ஆனால், நடந்ததே வேறு...

ஊருக்குள் செல்லச் செல்லத் தான் அது புரிந்தது. வைதீக பிராம்மணர்கள் பூர்ணகும்பத்துடன் காத்திருக்க, வழியெங்கும் தண்ணிர் தெளித்து கோலமும் போடப்பட்டிருந்தது.

அதாவது, ராஜ வரவேற்பு!

இப்படிக் கூடவா ஒரு ராஜா இருப்பார்?

அதற்கு சரபோஜி ராஜாவான சிவாஜி மஹாராஜா மிக பணிவாக பதில் கூறினார்.

“ஸ்வாமிஜி! முதலில் என்னை மன்னித்துவிடுங்கள். உங்களால் நான் மிக மிக தன்யனாகியுள்ளேன். நீங்கள் உதவி கேட்டு வந்தபோது, நான் அதை சாதாரணமாய் எடுத்துக்கொண்டு உதவ மறுத்துவிட்டேன். அதற்காக இப்போது எவ்வளவு சந்தோஷப்படுகிறேன் தெரியுமா?” என்று திருப்பிக் கேள்வி கேட்டார்.

“உங்கள் பேச்சு, செயல் எல்லாமே புரியாத புதிராகவே உள்ளதே?” என்றார் பெரியவர்.

“உண்மைதான்... உங்களிடம் முடியாது என்று நான் சொல்லப்போக, அந்த அம்பாளுக்கே என் மேல் கோபமான கோபம் வந்துவிட்டது. இரவு என் சொப்பனத்தில் தோன்றியவள், ‘என் குழந்தைகளை இப்படி ஏமாற்றி அனுப்பிவிட்டாயே - இதற்கா நான் உனக்கு திரவியங்களை தந்திருக்கிறேன்?’ என்றும் கேட்டாள். உடம்பெல்லாம் வியர்த்திட தூக்கம் கலைந்து எழுந்து அமர்ந்தேன். ஒருபுறம் இப்படி கோபத்துக்கு ஆளாகிவிட்டோமே என்ற வருத்தம் ஏற்பட்டாலும், மறுபுறம் அவள் தரிசனம் கிடைத்ததை நான் என்னவென்று சொல்வேன்?

உங்களுக்கு கருணை செய்ய உத்தேசித்தவள், போனால் போகிறது என்று எனக்கும் கருணை செய்துவிட்டாள். இது எத்தனை பெரிய பாக்கியம்?” என்று கேட்கவும், பெரிய வருக்கும் சரி; இளையவருக்கும் சரி, அப்படியே மனது குளிர்ந்து, கண்களிலும் ஆனந்தக்கண்ணிர் வந்து தேங்கிவிட்டது.

அப்புறமென்ன?

தர்பார்தான்... தங்கம், வெள்ளி என்று வாரி இறைத்ததோடு, மடத்து பணிகளுக்கான உப பொருட்களாக கூடாரத்திலே இருந்து வலம்புரிச் சங்கு தங்க வட்டில், வெள்ளிப்பாத்திரங்கள் என்று பரிசாகக் குவித்துவிட்டார்.

இது போக, தஞ்சை ராஜ வீதியில் யானை மேலேறிக்கொண்டு நகர்வலம் வேறு. இந்த நகர்வலத்தின் பொருட்டு, பெரியவர் யானை மேல் ஏற சிரமப்பட்டபோது, சிவாஜி மஹாராஜாவே முன் வந்து தன் தோளைத் தந்து, அதில் பெரியவர் கால் பதிய யானை மேல்

ஏறிக்கொள்ள, சிவாஜி மஹாராஜாவிடம் ஒரே பூரிப்பு!

இறுதியில் கூட்டிக்கழித்து பார்த்தபோது, மடத்துக் கடன்கள் அவ்வளவும் நீங்கி ஐயாயிரத்துக்கும் மேலாக பொற்காசுகள் மீதமிருந்தன.

‘அந்த காமாட்சிக்குதான் என்ன ஒரு கருணை?’ இளையவர் மனது நெகிழ்ந்து விட்டது. அதுவே, ‘அவள் இருக்கிறாள். இனி நமக்கென்ன கவலை’ என்று, தொடர்ந்து மடத்துப் பணிகளை வெகு உற்சாகமாக செய்யவும் காரணமாகிவிட்டது. இங்கேதான் கடவுள் எனப்படும் காமாட்சியோ, மீனாட்சியோ, இல்லை, ஈஸ்வரனோ, மஹாவிஷ்ணுவோ ஏன் ஊரார் அவ்வளவு பேரும் பார்க்க பிரத்யட்சமாவதில்லை என்னும் கேள்விக்கு விடையும் உள்ளது.

இந்த விடை நேரிடையானது கிடையாது. அதை சூட்சுமமாகத்தான் புரிந்து கொள்ள வேண்டும். இளையவருக்கு உற்சாகம் மிகுதியகிவிட்ட நிலையில், பெரியவரை காமாட்சி தன் திருவடிகளில் சேர்த்துக்கொண்டாள். அதைத் தொடர்ந்து, அடுத்த பட்டத்துக்குரியவர் வந்து சேர்ந்தார். இவர் அப்படியே இளையவர் வழியில் சென்று நாடி வருபவர்களுக்கெல்லாம் வாரி வழங்கும் வள்ளலாகிவிட்டார்.

“நான் ஒரு வேத பிராம்மணன்” என்று ஒருவன் எதிரில் வந்து நின்று கண்களைக் கசக்கினாலே போதும். “இந்தா பிடி” என்று அவருக்கு தங்கக் காசில் இருந்து, ரூபாய் வரை தரவும் திரும்பவும் மடம் கடனில் வந்து விழப் பார்த்தது.

இதைப் பார்த்த முன்னாள் இளையவரும், இப்போதைய பெரியவருமானவர் திரும்ப கவலைப்படத் தொடங்கி, ஒரு குறுக்கு வழியை கண்டுபிடித்தார். அதன்படி, அவர் சிவாஜி மஹாராஜாவிடம் தன் மடத்துக்கு காவலுக்கு ஒரு பத்து சிப்பாய்கள் தினப்படிக்கே வேண்டும் என்று கேட்க, சிப்பாய்களும் வந்து இளையவரின் முகாமுக்குள் சுற்றி வளைத்து நின்று விட்டனர்! போலீஸைப் பார்த்தால், இளையவரிடம் பொய்களை கூறி பொருளுதவி கேட்டு வருபவர்கள் குறைந்து விடுவார்கள். மடம் கடனில் சிக்காது என்பது பெரியவரது எண்ணம்.

ஆனால், சிப்பாய்கள் வந்து நிற்கவும், இளையவர் நித்ய பூஜையைக்கூட செய்யாமல் பந்த் நடத்தத் தொடங்கிவிட்டார். அதாவது, நித்யபூஜை எதையும் செய்யாதபடி, ஒரு மவுனயுத்தம் தொடங்கிவிட்டது.

அதன்பின் பெரியவர் வந்து, “இப்படி இருந்தால் மடம் கடனில் சிக்கிவிடும். இதை படாதபாடுபட்டு சிவாஜி மஹாராஜா உதவியாலே மீட்டு வைத்திருக்கிறேன்” என்று கூறவும்தான், இளையவர் சமாதானமானார். போலீஸாரும் வாபசாகினர். அதேசமயம், புதிதாக பொறுப்பேற்ற இளையவருக்குள் புதுப்புது எண்ணங்கள்.

‘மடத்துக்கென்று நிரந்தர வருவாய் வந்தபடியே இருந்தால்... வாரி வழங்குவது குறித்தோ, இல்லை... மற்ற செலவுகள் குறித்தோ கவலை கொள்ளத் தேவையில்லை அல்லவா?’

- ஒரு தேர்ந்த நிர்வாகியைப்போல் யோசித்தவர், மடத்தில் மீதமிருக்கும் பொன்னைக் கொண்டு, நிலம் வாங்கி தத்தகைக்கு விட்டால், மடத்துக்கு அதன்மூலம் வருடம் தவறாமல் வருமானமும் தான்யங்களும்கூட கிடைத்துவிடும் என நினைத்து, பொன்னை மூட்டையாக கட்டி எடுத்துக்கொண்டு, தனியே ஒரு குதிரைமேல் ஏறிக்கொண்ட, தஞ்சாவூர் பக்கத்தில் உள்ள கபிஸ்தலம் என்கிற ஊருக்கு பயணமாகிவிட்டார்! அவருக்கு அப்போது கைகொடுத்து உதவி செய்தவர் கபிஸ்தலத்து மூப்பனார்தான்! இப்போதைய மூப்பனார் அல்ல - இவர் முன்னோர்கள்).

அப்போது கும்பகோணத்துக்கு வடகிழக்கில் அணைக்குடி என்கிற கிராமம் இருந்தது. அந்த ஊரைச் சேர்ந்த மிராசுதாரான அணைக்குடி பிள்ளை என்பவரிடம் மூப்பனார் அழைத்துச் சென்றார். மிராசுதாருக்கு இளையவரின் அக்கறை மற்றும் அவரது தெய்வீகம் மிகவே பிடித்துவிட்டது.

இளையவர் கொடுத்த பொன்னை பதினேழாயிரம் ரூபாயாக மாற்றி எடுத்துக் கொண்டு, பதிலுக்கு தன் வசம் கும்பகோணத்துக்கு இரண்டே மைல் தொலைவில் இருந்த கருப்பூரில் உள்ள நாற்பது வேலி (270 ஏக்கர்) நிலத்தை சாசனம் செய்து கொடுத்தார். அத்தனை பெரிய இடம் பல லட்ச ரூபாய்க்கு போகும். ஆனால், மிராசுதாருக்கு மடத்துக்கு உதவ வேண்டும் என்பது எண்ணம்!

ஒரு மடத்து நிர்வாகம் என்பதுகூட இப்படி செலவுக்கும் கடனுக்கும் இடையில் சிக்கி தெய்வாதீனமாக மீட்டெடுக்கப்பட்டு, அதன் காரணமாக நிரந்தர வருமானம் என்பது ஒரு பொதுவான அமைப்புக்கு தேவை என்கிற எதார்த்தத்தில் வந்து நின்றுவிட்டது. இனி நாம் நம் மகா பெரியவரிடம் வருவோம்.

இந்த சம்பவங்களை எல்லாம் சொன்ன அவர், மடத்து நிர்வாகம் பற்றி

சொன்ன கருத்துதான் இங்கே மிக முக்கியம்.

‘மடத்துக்கு பணபலம் அதிகம் கூடவே கூடாது என்கிற கட்சிதான் நான்! இந்த பலத்தை பெருக்குவதில் கவனம் சென்றால் தபஸ், தியானம் போன்ற ஆத்ம விசாரங்களில் எப்படி இறங்க முடியும்?

இம்மட்டில் சகலத்தையும் அம்பாள் செயலாக கருதிய முந்தைய பெரியவரின் நம்பிக்கையும், செயல்பாடுமே சரியானதாகும். அவளிடம் சகலத்தையும் விட்டு விட்டு, மடாதிபதிக்கு உண்டான கடமைகளில் இருந்து துளியும் விலகக்கூடாது. விலகி, வருவாய் பற்றி சிந்தித்தால், ஆத்ம விசாரம் தூரச் சென்றுவிடும். அம்பாளும் தூரச் சென்று விடுவாள்.

அவள் மேல் எண்ணம் இல்லாததால் தானே, நிலம் வாங்குவது, அதன்மூலம் வருவாய் காண்பது என்று புத்தி போகிறது? என்னதான் நல்ல எண்ணத்தோடு, நல்லவை அனைத்தும் பொருளாதாரப் பற்றாக்குறையால் ஷீணித்து விடக்கூடாது என்று கருதி, இதுபோல செயல்பட ஒரு தனித்துணிவும் பார்வையும் வேண்டும். அது அன்றைய இளையவரிடம் இருந்தது.

‘அவர் அன்று வாங்கிப்போட்ட இடத்து வருவாய் தான். இன்று மடத்துக்கும் பெரிய வருவாய்’ என்று கூறிடும் பெரியவர் ‘கலியில் பக்தியை வளர்க்க முயற்சிக்கும்போது, இதுபோன்ற சில சமரசங்களுக்கும் இடம் கொடுக்க வேண்டியுள்ளது. ஆனால், சமரசமே வாழ்வாக மாறிவிடாதபடி, நிர்வகிப்பதில்தான் மடத்தின் அருட்பிரகாசம் இருக்கிறது’ என்கிறார். இதை, தான் வழி நடத்தும் மடத்துக்காக மட்டும் கூறவில்லை. இது எல்லோருக்குமான பொதுக் கருத்து.

பணம் சம்பாதிப்பது; பின் காப்பாற்றிக்கொள்ள பாடாய்ப்படுவது என்பதிலேயே, இன்று பலர் வாழ்க்கை சென்று விடுகிறது. இங்கே அருளைச் சம்பாதிப்பது என்பது சுறுகாய்போல ஏதோ இருக்கிறது. அவ்வளவுதான்!

பொருளைவிட இந்த அருள் என்ன அத்தனை பெரிதா? எந்த வகையில்...?

பெரியவர் வாழ்விலேயே ஒரு மகத்தான சம்பவம். அது பொருளைத் துச்சமாக்கி, அருளை ஒரு மலைபோல எல்லோருக்கும் காட்டிற்று. அது...?

10

அருளை மலைபோல காட்டின அந்த சம்பவம் ஒரு அற்புதம். குறிப்பாக என் வரையில் அது மிகுந்த உற்சாகத்தையும் ஒரு புது தெம்பையுமே தந்தது. அந்த சம்பவத்துக்குள் செல்வதற்கு முன், கேள்விக்குரிய சில விஷயங்களைப் பற்றி, இங்கே சிந்திப்பது அவசியம் என்று தோன்றுகிறது.

இத்தொடரின் முதல் அத்தியாயத்திலேயே, என் ஆன்மிகத் தேடல்களுக்கும், குழப்பங்களுக்கும் விடையை பளிச்சென்று அளித்தவர் மகா பெரியவர் என்று குறிப்பிட்டிருந்தேன். எனக்கு மட்டுமல்ல; ஆன்மிக நெறிப்பாடு உடைய அவ்வளவு பேருக்குமே, ஒரு தீராத குழப்பம் அல்லது சலனம் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் நிரந்தரமாக இருந்தே வருகிறது.

அது, பாவ, புண்ணியங்களைப் பற்றியது. சிறு வயதில் இருந்தே பாவம் செய்தால் நரகம் என்றும், புண்ணியம் செய்தால் சொர்க்கம் என்றும் சொல்லியே வளர்க்கப்பட்டவர்கள்தான் நாம் எல்லோருமே.

இந்தப் பாவங்களிலும் கூட, கிரேடுகள் இருந்து தொலைப்பது ஒரு ஆச்சரியமான விஷயம். அதாவது, மன்னிக்கக்கூடிய பாவம், மன்னிக்க முடியாத பாவம், பிராய சித்தம் செய்தால் விலகி விடக்கூடிய பாவம், அனுபவித்து மட்டுமே தீர்க்க முடிந்த பாவம் என்று அதில் பிரிவுகள். புண்ணியத்திலும் கூட இப்படி பல பிரிவுகள் இருக்கின்றன. புண்ணியப் பிரிவுகள் பற்றிய கேள்வியோ சிந்தனையோ நமக்கு அத்தனை பெரியது இல்லை. அதுவே ஒரு சந்தோஷமான விஷயம்.

ஆனால், துன்பமாகிய பாவம் என்பது அப்படிபட்டது அல்லவே. இந்தப் பாவமாகிய வினையானது, ஏழ் பிறப்பும் தொடரும் என்கிறது ஒரு அறநூல். சமணர்களின் நூலான சிலப்பதிகாரமே கூட 'வினைகள் விடாது - அது உறுத்து வந்து ஊட்டும்' என்று மிரட்டுகிறது. அதனாலேயே, திருட்டுப்பழிக்கு ஆளாகி, கோவலன் கொல்லவும் படுகிறான்.

எனவே, ஒரு விஷயம் எல்லோருக்குமே பளிச்சென்று புரிகிறது. தப்பு செய்துவிட்டு தப்பிக்கவே முடியாது என்பதுதான் அது. கடவுளை துப்புரவாக மறுக்கும் நாத்திகர்கள் பலரிடம்கூட, இந்த நம்பிக்கை ஓரளவுக்கு இருக்கவே செய்கிறது.

சொல்லப்போனால், இந்த நம்பிக்கையும், இது சார்ந்த பயமும்தான் ஒட்டுமொத்தமாய், இந்த மனித சமுதாயத்தை ஒரு கட்டுப்பாட்டில்

வைத்திருக்கிறது. இந்திய நாட்டு மக்கள் தொகை நூறு கோடியை எப்போதோ கடந்துவிட்டது. ஆனால், இங்கே போலீஸ்காரர்களை எடுத்துக்கொண்டால், அதில் ஒரு சதவிகிதம் கூட இருக்கமாட்டார்கள்.

இவர்களா, நூறு கோடிப் பேரையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்? சுயமாக ஒரு தர்ம சிந்தனையும், அச்சமும் கட்டுப்பாடும், பொது ஜனங்களிடம் இல்லாமல் போனால், இந்த நாடு என்னாகும்? நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது.

நான் விஷயத்துக்கு வருகிறேன். இந்த பாவம் பற்றின பயமும், எனக்கு வாழ்க்கை அமைந்த விதமும் குறித்து எனக்குள் நிறையவே கேள்விகள் உண்டு. நான் ஆசைப்பட்ட பல விஷயங்கள் எனக்கு கிடைக்கவேயில்லை. என் ஜாதகத்தை அலசிய ஒரு தேர்ந்த ஜோதிடரும் "உங்களுக்கு அது கிடைக்காது. காரணம் உங்கள் பூர்வ புண்ணிய ஸ்தானம்தான்" என்றார். அவரிடம் என் விவாதம் தொடர்ந்தது.

"பூர்வபுண்ணிய ஸ்தானமென்றால்?"

"உங்கள் பூர்வ ஜன்மத்தில் நீங்கள் எவ்வாறு இருந்தீர்கள் என்பதை சொல்லும் கட்டத்துக்கான பேர் அது?"

"அடேயப்பா. அதை வைத்து நான் எவ்வாறு இருந் தேன் என்று கூறமுடியுமா?"

"தாராளமாக... நல்ல ஜோதிட ஞானமும் கணக்கு போடும் சாதுர்யமும் ஒரு ஜோதிடருக்கு இருந்துவிட்டால் பிரித்து மேய்ந்துவிடலாம்."

"நீங்கள் எப்படி?"

"இம்மட்டில் என்னால் பிரித்து மேய முடியாவிட்டாலும், நிச்சயம் ஓரளவுக்கு சரியாக் கூற என்னால் முடியும்."

"சரி; என் வரையில் உங்கள் பதில்?"

"உங்கள் புண்ணிய பலத்துக்கு நீங்கள் ஆசைப்படுவதை ஈடேற்றும் சக்தி கிடையாது."

"முயற்சித்தால் முடியாததே, இந்த உலகில் கிடையாது என்கிறார்களே?"

"ஆமாம்... கிடையாது தான்..."

"நானும் இடையறாது முயன்று, என் விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டால் என்ன செய்வீர்கள்?"

“நான் செய்ய என்ன இருக்கிறது? அப்படியெல்லாம் இடையறாது முயன்று வெற்றி பெறும் ஒரு ஜாதகம் உங்கள் ஜாதகமில்லை.”

“இப்படி நீங்கள் சொன்னதற்காகவே நான் செய்து காட்டுகிறேன்.”

“மகிழ்ச்சி - உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.”

- ஜோதிடரிடம் விவாதம் முடிந்தது. ஆனால், நான் முயன்றும் என் ஆசை ஈடேறவில்லை. ஒரு பத்து ஆண்டு அனுபவத்துக்குப் பின், திரும்பவும் ஜோதிடரை சந்தித்த போது, முன்போல சவால் விடாமல் பேசினேன். “முன்பு நீங்கள் சொன்னதே சரி. நான் முயன்றும் முடியவில்லை. என் முயற்சிகள் வீணானதே மிச்சம்” என்றேன். அவர் சிரித்தார்.

“எனக்கு மிகவும் வருத்தமாக உள்ளது. மனித முயற்சிக்கு விதி இருந்தால் மட்டுமே, வெற்றி என்பதை ஜீரணிக்கவே கஷ்டமாக உள்ளது. ஆனால், இடது சார்பு சிந்தனையாளர்கள், ‘முயற்சி செய் - செய்து கொண்டே இரு - ஒருநாள் வெற்றி பெற்றே தீருவாய்’ என்கிறார்கள். அவர்கள் கூறும் சொற்களில் ஒரு நம்பிக்கை இருக்கிறது. ஆனால், முயற்சித்தாலும் விதி இருந்தாலே வெற்றி எனும் போது சோர்வு வந்து கவ்வுகிறது. உலகின் மிகப்பெரிய அரிய உயிரினமான மனிதனால், நிலவுக்கு, செவ்வாய் கிரகத்துக்குமே செல்லமுடிந்த மனிதனால், ஒரு தீப்பெட்டி அளவிலான செல்ஃபோன் மூலம், உலகின் எந்த மூலையில் இருப்பவரோடும் தொடர்புகொள்ள முடிந்த மனிதனால், ஒரு விஷயத்தில் தீர்க்கமாய் முயன்று வெற்றி பெற முடியாமல் போவது என்பது எந்த வகையில் சேர்த்தி...?” என்று திரும்பிக் கேட்டேன்.

“இப்போதும் கூறுகிறேன். முயற்சித்தால் வெற்றி நிச்சயம். வெற்றி அடைந்தவர்கள் பின்னாலே, அவர்களின் இடையறாத முயற்சி இருக்கவே செய்கிறது. ஆனால், அது எல்லா விஷயத்துக்கும் பொருந்தவே பொருந்தாது. ஒவ்வொருவருக்கும் ஒரு அளவு இருக்கிறது. அதற்கு கூடவும் கூடாது. குறையவும் குறையாது. யாருக்கு எவ்வளவு என்பதை, அவர் பிறந்த நேரமும் பூர்வபுண்ணிய ஸ்தானமும் கூறிவிடுகிறது.

ஒரு எந்திரம் வாங்கினால், அதன் உட்பாகங்களை வரைந்து அதற்கெல்லாம் பெயரிட்டு ஒரு மேனுவல் தருவார்கள். ஓர் ஊர் என்றாலோ, நாடு என்றாலோ அது இப்படித்தான் இருக்கும் என்று ஒரு வரைபடம் உண்டு. அதேபோன்றதுதான் ஒரு மனிதனின் ஜாதகமும், அதற்கு மிஞ்சி எதுவும் இல்லை” என்றார்.

அவர் பேச்சில் லாஜிக்கும் இருந்தது. கொஞ்சம் மேஜிக்கும் இருந்தது. எனக்கும் அனுபவப்பாடு ஏற்பட்டுவிட்டதால், கேள்வி மட்டுமே உள் எழும்பி மிஞ்சி நின்றது.

நமக்கு ஒன்று கிடைக்கிறது என்றாலும் அதற்கு காரணம் வினைப்பாடு - இல்லாவிட்டாலும் வினைப்பாடே காரணம் என்றால், நாம் பேசாமல் இருந்து விடலாமே... நடப்பதுதானே நடக்கப் போகிறது. எதற்கு மண்டையை போட்டு உடைத்துக்கொண்டு, உன்னையே நீ அறிவாய் என்றும், மனத்துக்கு ஒரு மந்திரச்சாவி என்று புத்தகங்களைப் படித்துக்கொண்டு அல்லாட வேண்டும் என்கிற கேள்வியே மிஞ்சி நின்றது.

ஆனால், இடதுசார்பாளர்கள் இப்படி கேள்வி கேட்டுக்கொள்ளாமல், ‘இன்றில்லை என்றால் நாளை, நாளை இல்லாவிட்டால் நாளை மறுநாள், நாம் அடைய நினைப்பதை அடைந்துவிடுவோம்’ என்று ஓடுபவர்கள் போல எனக்கு தெரிந்தார்கள்.

நடக்கிறதோ, நடக்கவில்லையோ, அப்படி நம்பி வாழ்வதில் ஒரு சுகம் இருப்பதுபோலகூட தோன்றியது.

என்னடா பெரியவர் வாழ்வில் நிகழ்ந்த அருள் பலம் மிக்க விஷயம் பற்றித் தொடங்கிவிட்டு, திசைமாறி எங்கெங்கோ போகிறேனோ என்று நினைக்கத் தோன்றுகிறதா?

நிச்சயமாக இல்லை. இந்த கேள்விகளுக்கும், அந்த அருள் பலத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. இங்கிருந்து அங்கே சென்றாலே, அதன் பரிமாணமும் விளங்கும்.

மீண்டும் கேள்விக்கு வருகிறேன்.

பாவபுண்ணியங்களே, நாம் பிறப்பு எடுக்கவும் நன்மை தீமைகளை அனுபவிக்கவும் காரணம் என்கிற ஜோதிட கருத்தை, பெரியவரும் வழி மொழிந்ததோடு, ஒரு அரிய வழு உதாரணத்தோடு ஒருவருக்கு புரியவும் வைத்தார்.

அவர் ஒரு வெளிநாட்டவர் - பெரியவரை சந்தித்துப் பேசியபோது, அவரிடம் சில பல கேள்விகள்.

“ஏன் உங்கள் தெய்வங்கள் திரிசூலம், வேல், சங்கு சக்கரம் என்று ஆயுதங்களைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. கடவுள் என்பவர், மிக அன்பானவராயிற்றே - அவருக்கு எதற்கு இப்படிப்பட்ட ஆயுதங்கள்?”

என்பது. அவரது முதல் கேள்வி.

“ஆயுதங்கள் இருப்பதால் கடவுளிடம் அன்பில்லை என்று யார் சொன்னது? அன்பும் கருணையும் மிகுதியானாலும் இப்படியிருக்கச் செய்யும்” என்றார் பெரியவர். பின் அவரே, “நாட்டைக் காத்திடும் ராணுவ வீரர்கள் துப்பாக்கியோடு இருப்பது நாட்டைக் காக்கவா? இல்லை அழிக்கவா?” என்று கேட்கவும், அந்த வெள்ளைக்காரருக்கும் புரியத் தொடங்கியது.

இந்திரா சௌந்தர்ராஜன் 0 81

“மனிதனின் பாவ புண்ணியம் என்பது தொடர்ந்து வரும் என்பதை எப்படி ஏற்பது? நாங்கள் கடவுளிடம் பாவ மன்னிப்பு கேட்டு விடுகிறோம். அவரும் மன்னித்து விடுவதால், இந்த கருத்தை ஏற்க நெருடலாக உள்ளது” என்றார் அவர்.

சிரித்த பெரியவர், பக்கத்தில் இருக்கும் ஒரு பிரசவ ஆஸ்பத்திரிக்குச் சென்று, அன்று பிறந்திருக்கும் குழந்தைகளை பார்த்துவிட்டு வரச்சொன்னார். அவரும் சென்று பார்த்துவிட்டு வந்தார். ஒரு குழந்தை நல்ல சிகப்பு, ஒரு குழந்தை கறுப்பு. ஒரு குழந்தை பணக்காரக் குழந்தை, ஒன்று ஏழைக்குழந்தை; ஒன்றுக்கு தலையில் நிறைய முடி - ஒன்று வழுக்கை, ஒன்று சவலை - ஒன்று புஷ்டி!

மொத்தத்தில் கடவுளின் படைப்பான, கடவுளுக்குமான குழந்தைகளிலேயே இப்படி ஏகப்பட்ட ஏற்றத் தாழ்வுகள்! ஏன் இப்படி?

11

அந்த வெளிநாட்டுக்காரரிடம், குழந்தைகளிடம் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளுக்கு எது காரணமாக இருக்க முடியும் என்கிற ஒரு கேள்வியை பெரியவர் முன்வைத்தார்.

அவரால் பளிச்சென்று ஒரு பதிலைச் சொல்ல முடியவில்லை. ஆனால், பெரியவர் தொடர்ந்தார்:

“கடவுள்தான் மிக மிக அன்பானவராயிற்றே? கருணைதானே அவரிடம் பிரதானம்...! நம் பாவங்களுக்கு அவரிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு விட்ட நிலையில், நமக்கு பிறக்கும் பிள்ளைகளிடம் எந்த ஊனமும் கோளாறும் இருக்கக்கூடாதுதானே? ஆனால் இருக்கிறதே?

என்றால், கடவுள் நம்மை எல்லாம் படைக்கவில்லையா - இல்லை

அவருக்கு கருணை உள்ளது. அவர் அன்பானவர் என்று நாம் கருதிக் கொண்டிருப்பது பொய்யா?”

- பெரியவர் கேட்ட இந்தக் கேள்விக்கும், அவரால் பதிலேதும் கூறமுடியவில்லை. சில விஷயங்களை உணர்த்த இப்படிப் பேச வேண்டியிருக்கிறது. அன்று பெரியவர் பேசியதும், அதன்பிறகு, அவருக்கு உணர்த்த வேண்டியதை உணர்த்திவிட்டது.

‘என்றால் இந்த ஏற்றத்தாழ்வுகளுக்கு யார்தான் காரணம்?’ கேள்வி மட்டும் அப்படியே இருந்தது. பெரியவரே பதிலை விரிவாக சொல்லத் தொடங்கினார்.

“கடவுள் கருணையே வடிவானவர் என்பதில் நாம் சந்தேகமே கொள்ளக் கூடாது. இந்த பிரபஞ்சம் எத்தனை பெரியது? இதை அழகாய் சுற்றச் செய்து, சூரிய சந்திரர்களை கொண்டு இரவு பகலை நிர்ணயம் செய்து, காற்று, நீர், நெருப்பு என்று பூதங்களைக் கொண்டு மண்ணின் மேல் பயிர்களை உருவாக்கி - அதைக் கொண்டு உயிர்கள் வாழ, எல்லா ஏற்பாட்டையும் செய்தவனை கருணையில்லாதவன் என்றால், நமக்கு கருணைக்கு அர்த்தமே தெரியவில்லை என்றாகிவிடும். கூடவே இப்படித்தான் வாழவேண்டும் என்று வழிகாட்ட வேதங்களை படைத்து, அதை உபதேசிக்க ரிஷிகளை, முனிவர்களை அனுப்பி வைத்து, மனித வாழ்வை வகைப்படுத்தி ருசிப்படுத்தியதும் கடவுள்தானே?

ஆனால், நாம் எங்கே வேதத்தில் சொன்னபடி நடக்கிறோம். ஒரு பாவமும் நான் செய்யவில்லை என்று ஒருவரால் கூற முடியுமா? இல்லை இந்த மண்ணில்தான் பாவம் செய்யாமல் வாழ்ந்துவிட முடியுமா?

நம் பாவமும் புண்ணியமுமே, நம்மை இந்த மண்ணில் சம்பந்தத்தோடு வைத்துள்ளது. முற்றாக துறந்தாலே மோட்சம். அப்படித் துறக்க முடிந்தவனையே துறவி என்கிறோம். முடியாத வரை, நல்லதை அனுபவிக்கவும் சரி, தீயதை அனுபவிக்கவும் சரி; அதற்கேற்ப ஜென்மாக்களை எடுத்தே தீரவேண்டியுள்ளது. அதுவே ஏற்றத் தாழ்வுகளுக்கு காரணம். கடவுள் அல்ல.”

அந்த விளக்கத்தில் அசைக்கமுடியாத ஒரு லாஜிக் இருந்தது. அது, அந்த வெளிநாட்டவரை மட்டுமல்ல; என்னையும் கட்டிப்போட்டது.

ஆகக்கூடி, இந்த பிறப்பில் இன்னாருக்கு மகனாய், இன்ன ஊரில் பிறந்து, இன்ன மொழி பேசி, இன்ன தொழில் செய்து, இன்னாரை மணந்து, இத்தனை பிள்ளைகள் பெற்று என் வாழ்க்கை தொடர்வதன்

பின்னாலே, எனக்கான கர்மமே விதியாகி, கடமையைச் செய்து கொண்டிருக்கிறது என்பது தெரிந்துவிட்டது.

அந்த விதியாகிய கர்மத்துக்குள், நான் அனுபவித்துத் தீர்க்க வேண்டிய தீவினைகள் என்று ஒன்று உள்ளதல்லவா? அது மட்டும் கம்பீரமாய் என்னைப் பார்த்து 'அனுபவித்துத் தீர்ப்பதை தவிர, உனக்கு வேறு வழியே இல்லை' என்பது போல் பார்த்தது.

அது என்ன தீவினை என்பதையும் கூறி விடுகிறேன். பிறந்த நாள் முதலே என்னோடு நட்புக் கொண்டிருக்கும் அந்தத் தீவினை 'தீராத வயிற்றுவலி', நினைவு தெரிந்த நாள் முதலாக, அது என்னோடு நிழல் போல இருந்து வருகிறது. மருத்துவர்கள் அதற்கு அல்சர் என்று பெயர் சூட்டியுள்ளனர். உணர்ச்சி வசப்படும்போது, உணவுகளில் மாற்றம் ஏற்படும்போது, சமயங்களில் கிளைமேட் மாற்றத்தின் போதும் கூட, அது தன் வேலையை காட்டத் தொடங்கிவிடும். அதற்கென்று உள்ள மாத்திரையை போட்டுக்கொண்டால், மாத்திரையின் வீரியம் உள்ளவரை அடங்கிக் கிடக்கும். அதற்குப் பின் ஈரத்துணியை பிழிகிற மாதிரி என்னை பிழியத் தொடங்கிவிடும்.

எனக்கு வயிற்றுவலி மட்டுமா தீவினை? எவ்வளவோ உள்ளது? எல்லாவற்றையும் அம்பலத்தில் சொல்ல முடியாது. எண்ணிக் கண்ணீர்தான் விடமுடியும்... நான் மட்டும்தானா இப்படி?

இந்த உலகில் கோடானுகோடி பேர் இப்படித்தான் இருக்கின்றனர். எவ்வளவு முயன்றும், எத்தனை போராடியும் அகலாத துன்பங்களுக்கும் ஒரு அளவே இல்லை.

என் உறவினர் ஒருவரது குடும்பத்தில், வாழ்க்கைப்பட்டு செல்லும் பெண்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்ததே இல்லை. அவர்களுக்கென்று குரங்கும் கோட்டானும் கணவனாகி விடுவதுதான் காரணம்!

என் நண்பர் ஒருவரது பரம்பரையில் சொந்தவீடு என்றே ஒன்றை கண்டதில்லை. இன்னொருவருக்கோ பிள்ளைப் பேற்றுக்கே வழியின்றிப் போய்விட்டது.

இதெல்லாம்கூட பரவாயில்லை! உலகம் மெச்சக் கூடிய அளவுக்கு புகழையும் பொருளையும் பெற முடிந்த திறமைசாலி ஒருவருக்கு, அவருக்கான வாய்ப்பே வாய்க்கவில்லை. அவர் உழைப்பை யார் யாரோ சுரண்டி அனுபவிக்கும் கொடுமை...

இங்கே நான் வரிசைப்படுத்தியிருப்பது மிக சொற்பம் உதாரணத்துக்குத்தான் இந்த சில விஷயங்கள். தங்களுக்கான இந்த குந்தகத்துக்கு அல்லது வேதனைக்கு அல்லது தாழ்ச்சிக்கு கர்மம்தான் காரணம் என்பது தெரிந்துவிட்டது. அதை அனுபவிக்கும் அதே சமயம், அதிலிருந்து விடுதலை பெற்று ஒரு அர்த்தமுள்ள - ஆசைப்பட்ட, வாழ்வை கொஞ்சமாவது வாழ வழியே இல்லையா? இதுவே என் பிரதான கேள்வியாக இருந்தது.

‘அந்த கர்ம வேதனைகளை அறிவு பூர்வமாக புரிந்து ஒப்புக்கொண்டு, பின் அது தீர, அல்லது அதை அடக்க அதற்கு பரிகாரம் காண முடியாதா? இல்லை கூடாதா?’ – இது என் அடுத்த கேள்வி.

இந்தக் கேள்விகளுக்குத்தான் பெரியவரின் வாழ்வில், அவர் நிகழ்த்திய ஒரு அசாதாரணச் செயல்பாட்டால் எனக்கு விடை கிடைத்தது. அந்த விடை நூறு தன்னம்பிக்கை நூல்கள் தராத ஒரு நம்பிக்கையை எனக்கு அளித்தது. அதன்பிறகு எனக்கு பல விடைகள் கிடைத்தன.

எல்லா தீவினைக்கும் தகுந்த பரிகாரம் உண்டு என்பது அதில் ஒரு விடை. ஆனால், பரிகாரத்தை தெரிந்து சரியாக செய்ய வேண்டும். தலைவலிக்கு வயிற்று வலி மாத்திரை சாப்பிடுவது சரியான தீர்வல்ல. அந்த சரியான பரிகாரம் தெரிவதற்கும் அருள்பலம் வேண்டும். எனவே, எந்த நிலையிலும் அருளுக்கு எதிரான நிலையை நாம் நினைத்துக்கூட பார்க்கக் கூடாது. பொறுமை, உறுதி, சகிப்புத் தன்மை என்று எல்லாமே வேண்டும்.

குறிப்பாக, துன்பம் சார்ந்த விஷயங்களில் ரமண மகரிஷியின் மனோபாவம் வேண்டும். அவர்தான் வலியை மிக விரும்புபவர்! ‘எப்போதும் இனிப்பை சாப்பிட்டுக் கொண்டு, மெத்தையில் படுத்து எழுந்திருக்கும் சுகமான ஒரு வாழ்வையே இந்த உடம்பு விரும்புகிறது. இதற்கு கசப்பை பழக்க வேண்டும். வலியை பழக்க வேண்டும். எந்தக் காரணத்துக்காக வலி வந்தாலும் சரி, அதை சந்தோஷத்தோடு அனுபவிக்க வேண்டும்’ என்றவர் அவர். அவருக்கான புற்றுநோய் சிகிச்சையின்போது, மருந்துகளால் வலியை குறைக்க மருத்துவர்கள் முயன்றபோது, ‘விட்டுத்தள்ளு... நன்றாக வலிக்கட்டும். எப்படி எல்லாம் வலிக்கும். எவ்வளவு தூரம் வலிக்கும் என்பது இந்த துறவிக்கு தெரிய வேண்டும்’ என்று கூறினாராம்.

என்ன ஒரு மனத்துணிவு - என்ன ஒரு மனத்தெளிவு!

இந்த ரமண பாவனைக்கு நானும் மிக முயன்று வருறேன்.

ஏமாற்றங்களை, சந்தோஷமாக ஏற்க இப்போது பழகி வருகிறேன். அவமானங்களையும் அப்படியே ஏற்று, பதிலுக்கு பிரதிபலிப்பதில்லை. ‘ஜீரணம்... ஜீரணம்’ என்று அவைகளை ஜீரணம் செய்கிறேன். மறந்தும் பிறர் துன்பப்பட எந்த விதத்திலும் காரணமாக இருப்பதில்லை. அதிகம் ரயில் பயணம் புரிபவன் நான். அபூர்வமாகத்தான் லோயர் பர்த் கிடைக்கும். ஆனால், அதை ஒரு பாட்டியோ தாத்தாவோ கேட்குமுன்பே கொடுத்துவிடுகிறேன். வருடம் தவறாமல் வலியை விரும்பி சென்னையில் இருந்து திருப்பதிக்கு நடந்தே செல்கிறேன். இதெல்லாம் சொல்ப உதாரணங்கள்.

என்னுள் ஏற்பட்ட இந்த மாற்றங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கு பெரியவரின் வாழ்வில், அவர் மூலம் கிட்டிய அருள் பலம் மிகுந்த அந்த சம்பவமே காரணம். பீடிகை போதும்; அந்த சம்பவத்துக்கு வந்துவிடுகிறேன்.

கல்கத்தாவில் ஒரு சேட்ஜி! மிக நல்ல மனிதர். -- சத்காரியங்களுக்கு மனதார உதவுபவர். பெரிய பரோப்காரி - நல்ல செல்வந்தரும்கூட! ஆனால், இவருக்கு இந்த உலகமே இதுநாள்வரை கண்டிராத ஒரு அபூர்வமான வியாதி. சோற்றுக்கே இல்லாத பிச்சைக்காரன்கூட இவர் முன், பெரும் அருளாளன்.

அந்த வியாதியைச் சொன்னால், ஆச்சரியமாயிருக்கும். உயிர்குடிக்கும் புற்றுநோய் தெரியும்; எய்ட்ஸ் பற்றியும் தெரியும். ஆனால், இந்த நோய் ஒரு வினோதம், பெரும் விபரீதம்!

அதாவது, இவரால் வாயால் மென்று சாப்பிட முடியாது. நாவுக்கு சுவை தெரியாது - தொண்டையால் விழுங்க முடியாது. அந்த பாகங்கள் இருப்பதே, அவர் உயிர் வாழக் காரணமான சுவாச கதிக்கு மட்டும்தான்.

இப்படி ஒரு வியாதியை கேள்விப்பட்டிருப்பீர்களா? சரி, சாப்பிடாமல், எப்படி உயிர் வாழ முடிந்தது?

அங்கேதான் நம் மருத்துவ விஞ்ஞானம், ஒரு குறுக்கு வழியை கண்டுபிடித்து இவரைக் காப்பாற்றியது. அதைச் செய்ததுகூட ஒரு அமெரிக்க மருத்துவர்தான். -

வயிற்றில் துளை போட்டு - துளை போட்ட பாகத்தில் ஒரு செயற்கை வாயை வைத்து, அதன் வழியாக ஆகாரத்தையும் நீரையும் தராசில் அளந்து பார்த்து அளித்துவிட வேண்டும். சமயங்களில் ஒரு புனலை வைத்து கரைத்து ஊற்றும் கொடுமைகூட உண்டு.

எந்த மருத்துவராலும் இவர் வியாதிக்கு மருந்து காண முடியவில்லை. லட்சத்தில் ஒருவருக்கு இப்படி இருக்கும் என்ற கூறக்கூட இடமில்லாத விநோதக் கோளாறு. என்றால், எத்தனை மோசமான கர்ம வினை இருவருடையது?

இந்த வினையையே நம் பெரியவர் விரட்டி அடித்தார். அவர் சொன்ன ஒரு பரிகாரம் இந்த சேட்ஜியை முழுமையான மனிதனாக்கியது. அதை அறிந்து, அமெரிக்க டாக்டர்களும் அதிசயித்துப் போயினர். அந்தப் பரிகாரம்?

12

அந்த கல்கத்தா சேட்ஜிக்கு, பெரியவர் சொன்ன பரிகாரம் என்பது மேலோட்டமாக பார்த்திட ஒரு பெரிய விஷயம்போல தெரியாது. ஆனால், நடைமுறையில் அதைச் செய்திட உண்மையில் இறையருள் நிறையவே வேண்டும்.

நம் மதத்தின் தனிப்பெரும் சிறப்புக்குரியவை, முதலில் வேதங்களே! அதைத் தொடர்ந்து இந்த மண்ணில் வந்தவை இதிகாச புராணங்கள். இதிகாசங்கள் என்றாலே, ராமாயணமும், மகாபாரதமும் வந்துவிடும்.

புராணம் என்று வரும்போது ஒரு பட்டியலே உள்ளது. அந்த வகையில், “பிரம்ம புராணம், பத்மபுராணம், விஷ்ணு புராணம், சிவ புராணம், லிங்க புராணம், கருட புராணம், நாரத புராணம், பாகவத புராணம், அக்னி புராணம், ஸ்கந்த புராணம், பவிஷ்ய புராணம், பிரம்ம வைவர்த்த புராணம், மார்க்கண்டேய புராணம், வாமன புராணம், வராக புராணம், மச்ச புராணம், கூர்ம புராணம், பிரம்மாண்ட புராணம்’ என்று பதினெட்டு புராணங்களோடு வாயு புராணத்தையும் சேர்த்தால், 19 புராணங்கள் வருகிறது.

பெரியவர் அந்த சேட்ஜிக்கு சொன்ன பரிகாரம் இதுதான். மேலே கண்டவற்றில், நான்கு வேதங்கள் மற்றும் இரண்டு இதிகாசங்களையும் விட்டுவிட்டு, மீதமுள்ள அவ்வளவு புராணங்களையும் மூலத்தில் உள்ளது உள்ளபடி துளியும் பிசகின்றி, நூலாக அச்சிட்டு அதை இந்த பாரத தேசம் முழுக்க உள்ள வேத பண்டிதர்களுக்கும், விரும்பிக் கேட்பவர்களுக்கும் இலவசமாக வழங்க வேண்டும். சேட்ஜியால் செய்ய முடியுமா? என்று கேட்டார். சேட்ஜியே உப்புச் சப்பில்லாத ஒரு வாழ்வை வாழ்ந்தபடி இருக்கிறார். எனவே, மறுபேச்சே பேசாமல் அந்த பரிகாரத்துக்கு தயாராகிவிட்டார்.

ஆனால், பதினெட்டு புராணங்களையும் மூலத்தில் உள்ளது உள்ளபடி துளியும் மாறாமல், அச்சிட வேண்டும் என்று பெரியவர் அடிக்கோடிட்டுவிட்டபடியால், அதை தேடிக் கண்டுபிடிப்பதே ஒரு பாடாக இருந்தது. அதற்காக ஒரு அலுவலகம் அமைத்து, அதில் வேத பண்டிதர்களை நியமித்து, அவர்களுக்கு உரிய சன்மானமும் மரியாதையும் தந்து, ஒரு அரசியல் கட்சித் தலைவர் ஒரு இயக்கத்தை நடத்துவதுபோலவே நடத்த வேண்டியிருந்தது.

தோராயமாக சில லட்ச ரூபாய் செலவாகும் என்று கணிக்கப்பட்ட விஷயம், பல லட்சங்களை விழுங்கியது. ஒவ்வொரு புராணத்தையும் தேடிப்பிடித்து அச்சேற்றி புரூஃப் திருத்தி, பின் உரிய முறையில் புத்தகமாக்கி, அதை பாதுகாப்பாக வைத்துவிட்டு, அடுத்த புராணம் என்று செயல்பட வேண்டியிருந்தது.

இவ்வாறு செய்வதால், அவருக்கு குணமாகிவிடும் என்கிற உறுதியை பெரியவர் தரவில்லை. சொல்லப் போனால், இந்த பரிகாரத்தைக்கூட, எடுத்த எடுப்பில் கூறிவிடவில்லை. ஒருமுறைக்கு பலமுறை அந்த சேட்ஜி சார்பில் ராஜகோபால சர்மா என்னும் உபன்யாச சிரோன்மணி ஒருவர், முயற்சி செய்தபிறகே அவர் கூறியிருந்தார். இதைக் கூற காரணம் உண்டு.

ஒரு நம்பிக்கை அடிப்படையில், பெரியவர் சொன்னதை செய்ய, அதைவிட கூடுதலான நம்பிக்கை செய்பவரிடம் வேண்டும். அடுத்து அந்த நம்பிக்கை துளியும் குறையாதபடி நீடிக்கவும் வேண்டும். ஏனென்றால், பெரியவர் சொன்ன இந்த பரிகாரப்படி பதினேழு புராணங்களைத் தேடிப்பிடித்து, அச்சேற்றிவிட்ட நிலையில், பதினெட்டு ஒன்றே பாக்கி என்றிருக்கும் நிலையில், அந்த சேட்ஜியிடம் எந்த குணப்பாடும் இல்லை. சொல்லப் போனால் குணமாவதற்கான அறிகுறிகள் கூட கண்ணில் வில்லை.

ஆனால், பணமோ கரைந்தபடி உள்ளது. சொல்லப் போனால், சேட்ஜி சம்பாதித்ததை எல்லாம் கரைத்து விட்டார் என்று கூட கூறலாம்தான். ஆனால், சேட்ஜியோ துளியும் நம்பிக்கை குன்றாமல் பதினெட்டாவதையும் வெளியிட்டு முடித்தார். பதினெட்டாவதாக ஸ்ரீஸ்கந்த புராணத்தை அச்சடிக்கத் தொடங்கும்போதே அவரிடம் ஒரு மாற்றம். தாகம் எடுக்க ஆரம்பித்தது. அச்சடித்து முடிக்கும்போது சாப்பிடவே தொடங்கிவிட்டார். நாக்குக்கு ருசி உணர்வு வந்து அவரது மர்மநோய் இனி என்னால் உன்னை ஒன்றும் செய்ய முடியாது என்பதுபோல நீங்கியே விட்டது

சேட்ஜியின் மனநிலை எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். அதன் பிறகு, அவர் பெரியவரை எப்படி எல்லாம் கொண்டாடி மகிழ்ந்திருப்பார் என்று கூறத் தேவையே இல்லை. இந்த விஷயத்தில் பெரியவர் சொன்ன பதில்தான் சிகரம்.

‘இந்த அதிசயத்தை நான் செய்யவில்லை. அப்படிச் சொன்னால் தவறு. பதினெட்டு புராணங்களுக்குள்ளும் சப்த ரூபமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் நம் ரிஷிகளும் முனிவர்களும் இறை அம்சங்களுமே இதைச் செய்தன. சேட்ஜியின் கர்ம வினைக்கு இணையான பரிகாரமாக, நான் இதை எண்ணிடக் காரணம் கூட, நமது ரிஷிகளும் முனிவர்களுமே...” என்று, அவருக்கு வந்த வந்தனங்களை எல்லாம், அப்படியே ரிஷிகளுக்கும் முனிவர்களுக்கும் சமர்ப்பணமாகும்படி செய்துவிட்டார்.

இதை அறிந்தபோது, எனக்குள் பெரும் நம்பிக்கை ஒளி ஏற்பட்டது. ‘விதியை மதியாலெல்லாம் வெல்ல முடியாது என்பது உண்மையாயினும், அந்த மதிக்குள் விதியை ஏற்றுக்கொள்ளும் தெளிவை, திட சித்தியை நாம் பெற்றாலே கூட போதுமே. அதுதான் பகவான் ரமணரின் அனுபவம். வலியை விரும்பு - வலியே வலிமை போன்றவை... இவ்வேளையில், சிறு வயதில் நான் பார்க்க என் அத்தை ஒரு நோட்டில், ‘சாதுஜன ப்ரியா ஸ்ரீராமா - ராமராஜ்ய விட்டலா ஜெயராமா. ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம் - ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்...’ என்று எழுதிய ஸ்லோகங்கள் நினைவுக்கு வருகின்றன.

அத்தையின் இல்வாழ்க்கை தொடக்கம், அத்தனை இனியதாயில்லை. கர்மத்தைவிட வேறு எதை காரணமாக கூற முடியும்? மருந்தாக அத்தை எடுத்துக் கொண்டது அந்த ஸ்லோகத்தைத்தான். அத்தை, இன்று பேரன் பேத்திகளுடன் வாழ்ந்து வருகிறார். அந்த ஸ்லோகம் அத்தையின் கர்மத்தை கொஞ்சம் கொஞ்சமாய் கரைத்துக் குறைத்தது.

நான் பார்க்க பலர் ஸ்ரீராமஜெயம் எழுதக் காண்கிறேன். சிவபுராணம், ஹனுமன் சாலீசா என்று சிறு சிறு புத்தகங்களை அச்சிட்டு, அனைவருக்கும் கொடுக்கக் காண்கிறேன் - எல்லாவற்றுக்கும் மூலம் பெரியவர் சொன்ன இந்த பரிகாரமே!

உலக மருத்துவர்களெல்லாம் கைவிட்டு விட்ட வியாதிக்கே, மருந்தாக நமது அற நூல்கள் இருக்கிறதென்றால், இதை வைத்துக்கொண்டு, நாம் கர்மத்தில் உழல்வதும் இதை அறியாமல் இருப்பதும் எத்தனை

அறியாமை?

ஒன்றை மட்டும் இமயத்தின் உச்சியில் நின்று கொண்டு சொல்வதுபோல் சொல்வேன். மந்திரங்களால் நிரம்பியிருக்கும் மனங்களுக்கு பெரிய துன்பம் வரவே வராது. 'நான் சொல்லவா... ஒரு பெரிய கனபாடிகள் புற்று நோயால் அவதிப்படுவதை...' என்று உடனே வரிந்து கட்டிக் கொண்டு பதில் சொன்னால், அவர்களுக்கு எனது பதில் இது தான்:

ஒரு புத்தகத்தை வாங்குவது, வீட்டு அலமாரியில் வைப்பதற்காக அல்ல. வாசிப்பதற்காக! அதேபோல மந்திரங்களை நாம் அன்றாடம் கூறுவது என்பதும் வாய்ப்பாட்டு ஒப்பிப்பதுபோல் இருக்கக்கூடாது. துளியாவது அதன் பொருளை உணர்ந்துகொண்டு, உருக்கத்தோடு சொல்ல வேண்டும். அதேபோல ராமஜெயம் என்று எழுதும்போது, ராம காவியம் மனத்துக்குள் ஓட வேண்டும். ஹனுமனின் சாகசங்களை நம் சாகசம்போல லயித்து அனுபவிக்க வேண்டும்.

திரும்பத் திரும்ப ஒரே விஷயத்தைச் சொல்வதும் எழுதுவதும் எந்த வகை பக்தி? மாறிக்கொண்டேயிருக்கும் உலகில், மாறாதது மாற்றம் ஒன்றே என்றும், உலகில் அந்த திரும்பத் திரும்பச் சொல்லப்படும் ஒரு மந்திரம் அல்லது ஒரு சப்தத்தால் என்ன பெரிதாக ஏற்பட்டு விடும் என்று, அறிவுபூர்வமாக உணர்ச்சி பூர்வமாக கேட்பதில் உள்ள வேகத்தை அடக்கி, மனத்தை அதன் போக்குக்குப் போய்விடாதபடி, வளைத்துத் திருப்பி திரும்பத் திரும்பச் சொல்; திரும்பத் திரும்ப எழுது என்றும் இந்த அற்புதத்துக்குள் சிரமப்பட்டு முயல வேண்டும்.

நல்ல விதியமைப்பு கொஞ்சமாவது இருந்தாலே, இதில் நம்பிக்கை ஏற்படும். கோயிலுக்கு செல்வதை நித்ய பரிகாரம் என்று சான்றோர்கள் கூறுவார்கள். பசுவுக்கு அகத்திக் கீரை தருவதை சிறந்த பரிகாரம் என்பார்கள். ஏழைப்பெண்களின் திருமணத்துக்கு உதவுவதை, பசி என்று நம் காது பட கூறுபவர்களுக்கு அன்னமிடுவதை, தாகம் என்று தவிப்பவர்களுக்கு தண்ணீர் தருவதை அன்றாட பரிகாரங்கள் என்பார்கள்.

இவற்றுக்கு நடுவில், இறை நாமங்களை ஜபிப்பது, எழுதுவது என்பதெல்லாம் விளக்கை பளிச்சென்று துலக்க முற்படுவது போன்றது. நான் இம்மட்டில் ஒரு நாளைக்கு 108 என்ற கணக்கெடுத்து இறை நாமத்தை எழுதி வருகிறேன். அழுத்தமாய் கர்மம் கரைவதையும் உணர்கிறேன். அதேசமயம், அது வேண்டும் இது வேண்டும் என்கிற

ஆசைகளோடெல்லாம் இதை செய்வதில்லை. அப்படி ஆசைப்பட்டாலே, இந்தச் செயல்பாட்டை நாம் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்பதே உண்மை. பல் துலக்குவது, குளிப்பதுபோல இதை ஒரு நித்ய கடமையாக முதலில் செய்ய வேண்டும். பின் நெகிழ்வோடு செய்ய வேண்டும். நெகிழ்வோடு செய்திட லயிப்பு மிக முக்கியம். ஸ்ரீராமஜயம் எழுத எழுத அது காலப்போக்கில் தானாய் ஏற்பட்டது. ஒருநாள் ஸ்ரீசிவசங்கர் பாபா மூலமாய் ராமநாமத்துக்கு அற்புதமான பொருள் விளக்கமும் கிடைத்தது.

'ராமா ராமா ராமா என்று சொல்வது எதிரொலிக்கும் போது மரா மரா மரா என்று ஒலிக்கும். மரா என்றால் மரித்துப் போவது... அதாவது இதைச் சொல்லும் நான் மரித்துப் போவது... அதாவது என் உயிர் போவதல்ல - என்னுள் இருக்கும் அறியாமையாகிய நான், அகந்தையாகிய நான், மரித்துப்போவதே அது!

'நாம் எதை தீவிரமாக எண்ணுகிறோமோ அதுவாக ஆகிவிடுவோம்' என்பது உலகம் முழுக்க ஒப்புக்கொள்ளப் பட்ட ஒரு ப்ரமாணம்.

இங்கேயும் ராம நாமம் நம் நானை கொல்கிறது. வெல்கிறது. இது முதல் ஜயம். அடுத்து ராமஜயம் மட்டுமே வழக்கில் உள்ளது. சிவ ஜயம், முருக ஜயம், கிருஷ்ண ஜயம் என்றில்லை. ஏன் இல்லை என்றால், ராம ஜயம் என்பதன் உள்ளார்ந்த பொருள்தான் காரணம்.

ராம ஜயம் என்றால் தர்மத்துக்கு ஜயம் என்று பொருள். ராமன் வேறு தர்மம் வேறில்லையல்லவா? ஆகவே, ராமஜயம் என்று எழுதும் நாம் மறைமுகமாக தர்மத்துக்கு ஜயம் உண்டாகட்டும் என்றே எழுதுகிறோம்.

அதாவது, முதலில் அது நமக்குள் இருக்கும் நான் எனும் அகந்தை அறியாமையை கொல்கிறது - அடுத்து தர்மத்துக்கும் ஜயம் உண்டாகட்டும் என்கிறது. அடுத்து முருகனின் பீஜாட்சர மந்திரமான 'குமரா'வுக்குள்ளும் ஒளிந்திருந்து, அந்த பீஜாட்சரத்தைச் சொன்ன பலனையும் தருகிறது. மிக மேலாக அஷ்டாஷரமான நாராயணாவில் உள்ள 'ரா'வன்னாவும், பஞ்சாட்சரத்தில் – 'நமசிவாய'வில் உள்ள 'ம'வன்னாவும் சேர்ந்து அஷ்டாக்ஷர பஞ்சாக்ஷர கலப்பாக, அதாவது, சிவ விஷ்ணு சேர்க்கையாக இருக்கிறது. மொத்தத்தில் நானை அழித்து தர்மத்துக்கு ஜயமுண்டாக்கி, சிவ, விஷ்ணு, முருக நாமங்களை சொன்ன பலன்களை உள்ளடக்கி, சாப்பாட்டு ராமர்களாகிய நம்மை எல்லாம் ஆத்மராமனாக ஆக்குவது ராமநாமம்' என்கிறார் அவர். என்ன ஒரு நுட்பம்!

இந்த நாமம் குறித்து மட்டுமல்ல; புராணங்கள் குறித்தும், பெரியவர் கூறும் கருத்தும் மனத்துக்குள் ஆழமாய்ப் பதிவதாகவே உள்ளது.

மிகச்சிறிய ஒன்றை ஒரு பூதக்கண்ணாடி பெரியதாக காட்டுகிறது. அதுபோலவே, வேதத்தில் சொன்ன நல்ல பல விஷயங்களை, கதைகள் மூலம் பெரிது பண்ணிக் காட்டுவதே புராணம்' என்று புராணங்களுக்கு அவர் விளக்கமளிக்கிறார்.

"ஒன்றை சுருக்கமாகச் சொன்னால் அது மனத்தில் பதியாமல் போய்விடலாம். அதையே சுவாரஸ்யமான கதையாக விஸ்தாரமாகச் சொல்லும்போது, நன்றாக மனத்தில் பதியும்' என்று புராணக்கதைகளின் நோக்கத்தை கூறுகிறார் பெரியவர்.

இதெல்லாமே அருமருந்து!

இந்த மருந்தை வைத்துக்கொண்டு, நாம் கர்மத்தை எண்ணி எதற்குக் கலங்க வேண்டும்? எனக்கும் இப்போது விதி பயமெல்லாம் இல்லை. அதேசமயம் இந்தப் பரிகாரங்களை அல்லது பரிகாரத்தை உள்ளடக்கிய பக்திமயமான வாழ்வில், ராமநாமத்தையோ, விஷ்ணு சஹஸ்ரநாமத்தையோ, ருத்ரத்தையோ விடாமல் ஜபித்து கர்ம சிரத்தையாக இருக்கும்போது, அதற்குப் பரிசாக தெய்வமும் வீடு தேடி வந்து, கருணை காட்டுகிறது. அப்படி ஒரு சம்பவம்...!

13

ரா ஜாஜி அவர்கள் முதல்வராக இருந்த சமயம், பூகோள ரீதியாக ஒரு பெரும் வறட்சியை நம்நாடு சந்திக்க நேர்ந்தது. வறட்சி என்றால் சாதாரண வறட்சி அல்ல... ஜனங்கள் எப்படி உயிர் வாழ்வார்களோ என்று அஞ்சும் அளவிலான வறட்சி. இதுபோன்ற வறட்சியும் இயற்கை சார்ந்ததே... இது ஒன்றும் நடந்துவிடக்கூடாத, நடக்க முடியாத ஒன்றல்ல.

புராணங்களிலேயே, பல அரசர்களின் காலத்தில் வறட்சி வந்த விவரங்கள் காணக்கிடைக்கின்றன. விதர்ப்ப நாட்டை ரோமபாதன் ஆட்சி செய்த சமயம் வறட்சி ஏற்பட்டது. அப்போது அதைப் போக்க என்ன வழி என்று அவனும் ஆலோசனை நிகழ்த்தினானாம். அப்போது அவனுக்கு ஓர் ஆலோசனை கூறினர். அதாவது ரிஷ்யசிருங்கர் என்று ஒருவர் அப்போது இருந்தார். மஹாதபஸ்வி மட்டுமல்ல; அவர் இருக்கும் இடத்தில் அதர்மம் என்று ஒன்று இருந்தால் அது அடங்கிவிடும்.

Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

அருளும் ஏற்படும். அதர்மம் ஒழிந்து அருள் பெருகினால் போதுமே, அங்கே சுபிட்சம் வந்தாக வேண்டுமே?

சுபிட்சம் வந்தாக வேண்டுமென்றால், மழையும் வந்தாக வேண்டும். மொத்தத்தில் ரிஷ்யசிருங்கர் வந்தால் மழை கட்டாயம் வந்துவிடும். எனவே, அவரை அழைத்து வந்தால் இந்த வறட்சியை வென்றுவிடலாம் என்று ஆலோசனை சொல்லப்பட்டது. அதன்படி, ருஷ்யசிருங்கர் வர, மழையும் பெய்து அன்று விதர்ப்ப நாடு வறட்சியிலிருந்து மீண்டது.

இது ஒரு புராணச் செய்தி.

இதன் பிறகும் அநேக ராஜாக்களின் அரசாங்கத்தை, இந்த மழை ஆட்டிப் படைத்திருப்பதற்கு நிறைய சான்று உண்டு. இதை உத்தேசித்தே அரசன் என்பவன் தன் பிரதானிகளிடம், 'மாதம் மும்மாரி பொழிகிறதா?' என்று கேட்கும் ஒரு வழக்கமே உருவாகியது. அப்படி பொழிந்தால், அந்த அரசன் நீதியோடு அரசாட்சி புரிந்து வருகிறான் என்று பொருள். மொத்தத்தில் மழைதான் ராஜாக்களுக்கான 'குட் கான்டக்ட் சர்டிபிகேட்!"

இது ராஜாக்கள் காலத்துக்கு சரி...

ஆனால், ஜனநாயகத்தில், ராஜாக்களை வைத்து மட்டுமல்ல; ஜனங்களின் ஒழுக்கத்தையும் தர்ம நியாயப் பற்றையும் வைத்தே வருணனின் கருணை தீர்மானம் ஆகிறது. ஜனத்தொகை பெருக்கம், விஞ்ஞான வசதி, இயற்கையை நசுக்கும் போக்கு, சுயநலம், அரசியலாரிடமும் ஊழல்... என்று ஒன்றுக்கு பலவான தீயவைகள் அதிகரிக்கும்போது, வானம் தான் முதலில் பாதிப்புக்கு உள்ளாகிறது. உண்டு இல்லை என்று காய்ச்சி எடுக்கத் தொடங்கிவிடுகிறது. இந்த கருத்தை ஒரு பிற்போக்கான கருத்து என்போர் உண்டு. மழை பொழியவும் சரி, பொழியாமல் போகவும் சரி, காற்றின் போக்கு தட்பவெப்பநிலை போன்ற இயற்கை சார்ந்த விஷயங்களே காரணம். பூமியின் சுழற்சியில் அம்மட்டில் சில சமயங்கள் வறள்வதும் சரி, மழை அதிக அளவில் பொழிந்து வெள்ளம் திரள்வதும் சரி, முழுக்க முழுக்க இயற்கைச் செயல்பாடு. இதை மனித மனங்களோடு சம்பந்தப்படுத்துவது என்பது, மகா மகா மூடத்தனம் என்று பகுத்தறிவு வாதம் புரிகின்றவர்கள், அன்றும் இருந்தார்கள்; இன்றும் இருக்கிறார்கள்.

ஆனால், நமது தர்மமோ அறநெறிகளோ, அரசன் தமது நியாயத்தோடு நடப்பதோடு மக்களும் ஒழுக்கமாக வாழ வேண்டும். அப்படி

வாழ்ந்தாலே மாதம் மும்மாரி என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறது.

ராஜாஜி ஆட்சிக்காலத்திலும் வறண்டபோது, மிகுந்த இறை நம்பிக்கையும் நேர்மையும் உடைய ராஜாஜி, இது குறித்து மிகவும் கவலைப்பட்டார். அப்போது வருணஜெபம் செய்தால் மழை பொழியும் என்று சட்டசபையிலேயே பேசப்பட்டது. அதற்கு எதிரான கருத்துகளும் பேசப்பட்டதாக தகவல்.

ஆனால், ராஜாஜி இறைவழிபாட்டை நம்பினார். அதிலும் இறங்கினார். மறுநாளே ஒரு பெரும் மழை பெய்யவும் நம்பிக்கை வலுவானது. ஆனால், அன்று இருந்த வறட்சிக்கு, ஒரு மழை எல்லாம் ஒரு மூலைக்குத் தான். ஆறுகளில் வெள்ளம் பாய்ந்து, ஏரி-குளங்கள் நிரம்ப வேண்டும் என்றால் பருவ காலம் முழுக்க தவறாமல் மழை பொழிய வேண்டும். அவ்வேளையில் பெரியவரிடமும் இது குறித்து ஆலோசனை கேட்கப்பட்டபோது, 'பாரதம் படிப்பது - குறிப்பாக விராட பர்வதம் படிப்பது மிகுந்த நன்மையைத் தரும்' என்றாராம்.

உடனேயே, அன்றைய வேத வித்தகரான வழுத்தூர் ராஜகோபாலசர்மா என்னும் அன்பர், தன் இல்லத்திலேயே பாரதம் படிக்கத் தொடங்கிவிட்டார். பாரதம் பதினெட்டு பருவங்கள் கொண்டது. அதை முழுவதுமாய் வாசித்து முடிக்க பல ஆண்டுகள் ஆகும். ஞாயிற்றுக்கிழமைதோறும் அன்பர்கள் ஒன்றுதிரள வாசிக்கும் செயலும் தொடங்கியது.

கூடவே, சர்மாஜி ஒரு சங்கல்பமும் செய்துகொண்டார்.

விஷ்ணு சஹஸ்ரநாமத்தையும் 18000 முறை பாராயணம் செய்துவிடுவது என்பதே அது!

நன்றாக கவனியுங்கள். ஒருமுறை அல்ல, இருமுறை அல்ல..... 18000 முறை இதுபோக பாரதத்தின் பதினெட்டு பருவங்கள் எல்லாமே தேச நலனுக்காக... மழை வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல; தர்மம் வாழ வேண்டும் - நீதி, நியாயம் விளங்க வேண்டும். வருங்காலம் மக்களுக்கு சிறப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் ஒரே நோக்கம்.

சரி, மழை பெய்ததா - வறட்சி நீங்கியதா என்கிற கேள்வியும் எழுகிறதல்லவா? அது எப்படி நீங்காமல் இருக்கும்? அன்று தர்ம தேவனாக ரிஷ்ய ஸ்ருங்கர் இருந்து தீர்த்தார் என்றால், இன்று பெரியவர்தானே அந்த இடத்தில் இருப்பவர். அவரே வழிகாட்டியபிறகு,

வருணன்தான் வழிக்கு வராமல் போவானா? வானமும் பொழிந்து, பூமியும் மலர்ந்தது!

சர்மாஜியின் மகாபாரத வாசிப்பும் தொடர்ந்தது. நான்காவது வருடம் அது பதினெட்டாவது பருவத்தை அடைந்தது. இடையில் எவ்வளவோ தடங்கல்கள் வரப் பார்த்தது - பொருளாதார சிரமங்கள் ஏற்பட்டன. ஆனால், அவ்வளவையும் மீறி, ஞாயிறுதோறும், பக்தி சிரத்தையுடன் தம் படித்து, சர்மாஜி கடந்துவிட்டார்.

விஷ்ணுசஹஸ்ரநாம பாராயணமும் 18000 என்கிற அந்த அளவை நெருங்க ஆரம்பித்தது. இது ஒரு சாதாரண விஷயமல்ல. மிகப்பெரும் செயல்!

கல்கத்தா சேட்ஜி பதினெட்டு புராணத்தை வெளியிட்டு, மகா பெரிய வியாதியில் இருந்தே, விடுதலை பெற்றுக்கொண்டார். என்றால், இந்தச் செயலுக்கு எத்தனை பெரிய அனுகிரகம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

கடவுள் நம்பிக்கையே இல்லாத நாத்திகன்கூட இப்படி ஒரு எத்தனத்தை கேள்விகேட்க யோசிப்பான். ஏனென்றால், இதன்பின்னால் அப்படி ஒரு நம்பிக்கை - அப்படி ஒரு முயற்சி ஒளிந்து கிடைக்கிறது. இதன் உச்சக்கட்டம்தான் நாம் அறிய வேண்டிய முக்கிய விஷயமாகும்.

பன்னிரெண்டு கோடி முறை ராம நாமம் ஜெபித்தவருக்கு ஹனுமனின் தரிசனம் வாய்க்குமாம். பதினெட்டு கோடி முறை ஜெபித்தவருக்கு ராம தரிசனம் சித்தியாகுமாம். இது அனுமானமாய் சொல்லப்படுவதல்ல... நடந்திருக்கிறது. ராம தரிசனமும், ஹனும தரிசனமும் வாய்க்கப் பெற்றவர்கள் இருந்திருக்கிறார்கள்.

என்றால், இந்த 18000த்துக்கு அந்த ராமன் நேரில் வரவேண்டுமே...?

வந்தான் - பெரியவர் வடிவில்!

சர்மாஜி பதினெட்டாயிரத்தை நெருங்கிய சமயம், பெரியவர் சென்னையில் வந்து முகாமிட்டிருந்தார் சர்மாஜியும் அவரை சந்தித்து, தனது பாரத வாசிப்பையும், சஹஸ்ரநாமம் 18000த்தை தொட இருப்பதையும் கூறினார். பெரியவர் பூரித்துப்போனார். அந்த பதினெட்டாயிரக் கணக்கு, இங்கே என் எதிரிலேயே பூர்த்தியாகலாமா என்று கேட்டார். சர்மாஜிக்கும் பழம் நழுவி பாலில் விழுந்தது போலானது. அன்பர்களோடு கூடி, அங்கேயே பாராயணம் செய்து

பூர்த்தி செய்தார். பெரியவரும் அன்றைய நிகழ்வில் பூர்ண கும்ப கலசத்தை, தன் கரம் தொட்டு ஆசீர்வதித்து தரவும் அது வினியோகமாயிற்று.

பாராயணம் புரிந்தவர்களுக்கு மடத்திலேயே பிரசாத போஜனம். சொல்லி வைத்த மாதிரி ஆனந்தம் ஆனந்தம் என்று வானமும் குதூகலித்தது. நனைந்து கொண்டுதான் போனார்கள்.

சர்மாஜியும் வீட்டை அடைந்தார்.

அதுவரை நடந்த பாராயணங்கள் எல்லாம் ஒரு லக்ஷ்மி நாராயணர் படத்தின் முன்தான் நடந்தது. நிறைவு பெரியவர் முன் நிகழ்ந்துவிட்டிருந்தது. அந்த நினைவுகளோடு அந்தப் படத்தை பார்த்து வணங்கினார்.

உள்ளே ஒரு சிறு நெருடல்.

இறுதிப் பாராயணத்தில் இந்த படம் இருந்திருக்கலாமோ? இவர் இடத்தில் பெரியவரே இருந்துவிட்டார். இருந்தாலும் சற்று நிரடியது. அந்த உச்சக்கட்டமும் னிதான் வேலை செய்தது.

மடத்து சிப்பந்தி ஒருவர் வந்து சர்மாஜியிடம், “பெரியவர் உங்காத்துக்கு வரப் போறதா தகவல் சொல்லி விட்டார்” என்றார்.

சர்மாஜி, பாதாதி கேசம் சிலிர்த்துப் போனார். ‘என் வீட்டுக்கா... அவர் பாதம் இங்கே படப்போகிறதா? நான் எவ்வளவு புண்ணியசாலியா?’ - அவருக்குள் கேள்விகள் ஓடத் தொடங்கிவிட்டன.

சர்மாஜி வீடு மைலாப்பூரில்... வழியில் நாகேஸ்வர ராவ் பூங்கா, லஸ் கார்னர், கற்பகாம்பாள் நகர், விவேகானந்தர் கல்லூரி தெரு வழியாகத்தான் வந்தாக வேண்டும். விஷயம் பரவி ஜனங்களும் அவரை தரிசனம் செய்யத் தயாராகிவிட்டனர்.

சர்மாஜி என்ன செய்தார் தெரியுமா?

அந்த லக்ஷ்மி நாராயணர் படத்தை வீட்டு வாசலில் ஒரு மேஜை போட்டு, அதன்மேல் வைத்து மாலை போட்டு ஒரு விளக்கையும் ஏற்றி வைத்துவிட்டார்.

அதேசமயம், பெரியவரின் இந்த வருகை தெரிந்து, நாத்திகவாதிகளும் தங்கள் எதிர்ப்புணர்வை காட்டும் விதமாய், கறுப்புக் கொடி மற்றும் தங்கள் வாதங்களுடன் நிற்பதாக தகவல்.

பெரியவரும் புறப்பட்டுவிட்டார்.

இந்த நாத்திகவாதிகள் பார்வையில் படாமல், அவரை அழைத்துச் செல்ல முயன்றவர்களை தவிர்த்தவர், ‘ஒளி பவனா துறவி - இம்மாதிரி இடங்களில் ஒளிர்பவனல்லவா துறவி’ என்பதுபோலவும், ‘வாழ்த்தும் வசவும் எனக்கு சமமானதே’ என்பதை உணர்த்துவதுபோலவும், அதே வழியில் அவைகளை ஏற்றுக் கொண்டபடியே, சர்மாஜி வீட்டு வாசலுக்கும் வந்து சேர்ந்தார்.

காத்திருந்தது அந்த லக்ஷ்மிநாராயணர் உருவப்படம்!

அதை நோக்கி நின்றார் பெரியவரும். சர்மாஜியின் உறுத்தலுக்கு விடைபோன்ற அந்த வேளையில்...

14

வாசலில் லக்ஷ்மி நாராயணர் படத்தை வைத்துக் கொண்டு சர்மாஜி காத்திருக்க, பெரியவரும் வந்து சேர்ந்தார். உடனே சர்மாஜி பெரியவரை உபசரிக்கத் தொடங்கினார். படத்துக்கு பக்கத்திலேயே ஒரு பலகை போடப்பட அதில் பெரியவரும் ஏறி அமர்ந்தார்.

ஒன்று வைகுண்டபதியின் வரிவடிவத் தோற்றம்!

இன்னொன்று அவனுடைய மானுட ஞானத் தோற்றம்!

சர்மாஜியும் தம் குடும்பத்தோடு பெரியவரையும் படத்தையும் சுற்றிவந்து கீழே விழுந்து வணங்கிச் சேவித்தார்.

நான்கு ஆண்டுகாலம் அவர் செய்த உபன்யாசத் தவத்துக்கு வரமானது வீட்டு வாசல் தேடி வந்துவிட்டது. பெரியவரும் சுற்றி நிற்பவர்களை எல்லாம் விலகச் சொல்லிவிட்டு சர்மாஜியின் வீட்டை ஒரு பார்வை பார்த்தார்.

எளிமையான ஓட்டுக்கூரை வீடு!

“இந்த வீட்டில் வாழ்ந்து கொண்டுதான் இதை நீ சாதித்தாயா?” என்று கேட்டு ஆசீர்வதித்தார்.

அதன்பின் வெகு சீக்கிரத்தில் அந்த வீடு, தன் முதுமைக்குரிய பலவீனங்களைப் போக்கிக்கொண்டு பலமானதாக மாறி, அதன்பின் பல நல்ல காரியங்களும் அந்த விட்டில் அடுத்தடுத்து நடந்தன.

அதுமட்டுமல்ல; பத்ரிநாத், கேதார்நாத் என்று சர்மாஜி யாத்திரை சென்று வரவும் வாய்ப்பு உருவாகியது. பெரியவரே ஒரு ஸ்படிக மாலையை அணிவித்து அனுப்பி வைத்தார்.

மொத்தத்தில் சர்மாஜியின் கடைத்தேற்றத்துக்கு எதுவெல்லாம் தேவையோ, அதுவெல்லாம் நிகழத் தொடங்கியது.

அவ்வளவுக்கும் ஒரு ஆரம்பம்தான் காரணம்.

ஊரும் உலகும் வாழ்ந்திட, பாரதம் படிப்பது என்கிற அந்த சுயநலமில்லாத ஆரம்பம், படிப்படியாக சர்மாஜியை அவர் குடும்பத்தையே சுத்திகரித்து நமக்கும் ஒரு நல்ல உதாரணமாக மாறிவிட்டது.

பதினெட்டு புராணங்கள் ஒரு சேட்ஜி வாழ்வில் மறு மலர்ச்சி புரிந்தது என்றால், மகாபாரதம் சர்மாஜி வாழ்வில் அவரை தெய்விக அனுபவங்களுக்கு ஆட்படுத்தி ஞானியாக்கியது.

பின்னாலே, கண்களைத் திறந்துவிட்ட ஒரு குருநாதராய் நம் பெரியவர்!

இது நவராத்திரி காலம்!

உலகம் முழுக்க எவ்வளவோ திரு நாட்கள் - திருவிழாக்கள்! ஆனாலும் அவ்வளவும் ஒரு நாளோடு, அதிக பட்சம் மூன்று நாளோடு (பொங்கல்) முடிந்து விடுகிறது.

ஆனால், இந்த நவராத்திரிக்கு மட்டும் ஒன்பதுடன் ஒன்று என்று பத்துநாள் திருவிழா. தசாராவாக இதை ஒரு பகுதியினர் கொண்டாட, நாமோ இங்கே நவராத்திரியாக கொண்டாடி மகிழ்கிறோம். ஆனால், உண்மையில் இதை 'நவராத்திரம்' என்றே குறிப்பிட வேண்டும். வழக்கில் மாறிவிட்டது. சிவராத்திரி சிவனுக்கு என்பதால், நவராத்திரி தேவிக்கு என்று மாறிவிட்டது. ஆனால், எதனால் இப்படி ஒன்பது நாட்கள் என்பதன் பின்னால்தான் மிகப்பெரும் சூட்சுமம் ஒளிந்திருக்கிறது.

தேவி பாகவதம் கூறும் புராணச் செய்திகளின்படி மஹாளய அமாவாசையை ஒட்டிய கிருஷ்ணபட்ச நாளில், அந்த ஆதிசக்தியானவள் மும்மூர்த்திகளாலும் முப்பத்து முக்கோடி தேவர்களாலும் தோற்றுவிக்கப்படுகிறாள். பின் அவள் காலடியில் தேவர்கள் தங்கள் ஆயுதங்களை எல்லாம் போட்டுவிட்டு துதிக்கின்றனர். இதுவே ஆயுத பூஜை எனப்படுகிறது.

அப்போது அவள் பதினெட்டு கரங்களோடு அஷ்டா தசபுஜ மஹாலகஷ்மியாக காட்சி தருகிறாள். அதாவது பதினெட்டு கரங்கள் - என்றால் ஒன்பது உருவார்த்தங்கள். அந்த ஒன்பதும் தேவிக்குள் ஒன்றி, அவள் ஒன்றாக காட்சி தருகிறாள் என்பது அடிப்படை.

பின் மறுதினம் தொடங்குகிறது நவராத்திரத்தின் முதல் தினம். அன்று தொடங்கி, ஒன்பது தினங்களும் அவளது உருவார்த்தங்கள் ஒவ்வொன்றாக வெளிப்பட்டு, மகிஷன் எனும் அசுரனின் அவ்வளவு சக்தியையும் ஒவ்வொன்றாக சம்காரம் செய்துமுடிக்க, இறுதி நாளில் தேவி மகிஷனை சம்காரம் செய்கிறாள். அந்த வெற்றியைத்தான் விஜயதசமியாக கொண்டாடுகிறோம்.

இது புராணச் செய்தி!

ஒரே கேள்வியில் இதை புறந்தள்ளலாம்.

‘சர்வலோக நாயகியான ஆதிசக்திக்கு மகிஷனை அழிக்க ஒன்பது நாட்களா?’ என்பதுதான் அந்த ஒரே கேள்வி.

ஆனால், நவராத்திரிச் சிறப்பே அவள் அப்படி ஒன்பது தினம் எடுத்து ஒன்பது சக்தியாக வெளிப்படுவதில்தான் உள்ளது.

மனித வாழ்வை கவனித்தால், நம் வாழ்வும் ஒன்பதாகிய கிரகங்களால் வழிநடத்தப்படுவதை அறியலாம். அந்த ஒன்பதும் ஒன்பது விதம். இதை ரசமாக நவரசம் என்போம்.

ஆர்ப்பாட்டமாக வாழ்பவன் தொடங்கி அமைதியாக தவம் செய்பவன் வரை, அவரவரிடமும் ஏதாவது ஒரு ரசம்தான் விளங்கிக்கொண்டிருக்கும்.

இந்த ஒன்பதும் நம் வசமில்லை. அதன் வசமே நாம் இருக்கிறோம். இதில் அவரவர் பிறந்த வேளைக்கும், நட்சத்திர கதிக்கும் ஏற்ப, ஒன்று பலமாய் ஒன்று பலவீனமாய் என்று இருப்பதே வாழ்க்கைப்பாடு.

ஒன்பதும் பலமாய் உடைத்தவர்கள் ஒருவர் கூட இல்லை. எனவே, மனித வாழ்வானது சிரகாதிபதிகளின் டியில் நம் பாவ புண்ணிய கர்மங்களுக்கு ஏற்பவும், நம் மூதாதையர் கர்மங்களுக்கு ஏற்பவுமே நடக்கிறது.

இதை மறுப்பவர்கள் உண்டு. அவர்கள் மறுப்பதால், இந்த உண்மை பொய்யாகிவிடப் போவதில்லை. மறுப்பாளர்களிடமும் இந்த ரசங்களில்

அல்லது இந்த குணங்களில் அல்லது இந்த கோள்களில் ஒன்றுதான் செயலாற்றுகிறது.

இந்த ஒன்பது சக்தியைத்தான் நவசக்தி என்றும் குறிப்பிடுகிறோம்.

இந்த நவசக்தியைத்தான், அந்த ஆதிசக்தி, மகிஷனை அழிக்க புறப்பட்ட சாக்கில், மனித சமூகத்துக்கு வாரி வழங்க ஒன்பது நாள் கணக்கெடுத்துக் கொள்கிறாள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சக்தியை அனுப்பி அருளாசியால் வையத்தையும் நிரப்புகிறாள்.

இந்த ஒன்பது நாட்களோடு கூடிய பத்து நாட்களுமே, வீடு கோயிலாகிவிடுகிறது. வெறும் கோயிலாக மட்டுமின்றி, கலைக்கோயிலாகவே ஆகிவிடுகிறது. அதில், ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமான ரசனை வெளிப்படுகிறது.

அடுத்து அந்த கொலுக்கோயில் முன் அமர்ந்து பாடுகிறோம் - ஆடுகிறோம். இதனால் இயல் இசை வளர்கிறது.

அது மட்டுமா? தெருவையே அழைக்கிறோம்.

ஒற்றுமை துளிர்க்கிறது. கொடுப்பதும் பெறுவதும் தழைக்கிறது. நம் பிள்ளைகள் இந்த அரிய செயலை கண்டு வளர்கிறார்கள். ஒவ்வொரு நாளும் நவதானியங்களில் ஒன்று சுண்டலாக செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இதில்தான் மகத்தான பரிகாரச் செயலும் ஒளிந்திருக்கிறது.

மொத்தத்தில் நவராத்திரி நாட்களை துளியும் கடவுள் நம்பிக்கையே இல்லாத ஒருவராலும், அனர்த்தமாகக் கருத முடியாது. எத்தனை நாகரிக முதிர்வும் சமுதாய நோக்கும் இருந்திருந்தால், இப்படி ஒரு விழா வடிவம் கொள்ள முடியும் என்று எண்ணிப் பார்க்கிறேன். மலைத்துப் போகிறது மனது.

இந்த பத்து நாட்களும் நம் வீட்டுப் பெண்கள் அதிகாலை கண்விழித்து தலைமுழுகி, கொலுவில் அமர்ந்து தேவி பாகவதம் படித்து, பின் மாலை நேர கொண்டாட்டத்துக்கு தயாராகி, வருகிறவர்களை எல்லாம் வரவேற்று, உபசரித்து ஒரு தெய்விக கொண்டாட்டத்தை நிகழ்த்தி, தங்களையும் தேவதைகளாக்கி நம்மையும் தேவர்களாக்கிவிடுகிறார்கள்.

அவ்வளவு தவறுகளும் அனாசாரங்களும், டி.வி. சீரியல், சினிமா, ஊர்

அரட்டை என்கிற அவ்வளவும் அமுங்கி அடங்கி, அம்பாளின் மகிமை மட்டுமே சிந்திக்கப்படுகிறது.

இதனால், இதற்கு நிகரான ஒரு திருநாளை காணவே முடியாது. இப்படிப்பட்ட நாளின் சிறப்பை பெரியவரும் தன் பாணியில் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்.

அதுமட்டுமல்ல...

இந்த நவராத்திரத்தின் பலாபலத்தை ஒரு ஏழைப் பெண்ணுக்கு விளங்கவும் வைக்கிறார். தரித்திரமென்றால், அப்படி ஒரு தரித்திரம் மிக்க வாழ்வு அப்பெண்ணுக்கு - அவளுக்கு வாய்த்த கணவனும் ஒரு குடிகாரன்!

அவள் எப்போதோ செய்த சிறு புண்ணியம்தான். பெரியவரை அவள் காணும்படி செய்கிறது. அவள் அப்படி அவரை கண்ட நேரம் நவராத்திரகாலமும் தொடங்க இருக்கிறது.

பெரியவரும் அவளை நவராத்திரத்தில் கலக்க வைக்கிறார். அதன் பின்...?

15

நவராத்திரியும் கொலுவும் மேல்தட்டு மக்களுக்காக என்று சில காலம் இருந்தது. குச்சு வீட்டுக்கு வுக்கும் சம்பந்தமில்லாதபடி, ஒரு இடைவெளியும் இருந்தது. அதற்கு சில வலுவான காரணங்களும் இருந்தன.

கொலு வைக்க முதலில் ஒரு பெரிய ஹால் வேண்டும். அதாவது இடம். அடுத்து, தினசரி வருகிறவர்களுக்கு வெற்றிலை-பாக்கு வைத்து தருவதோடு, சுண்டல் விநியோகம் இதில் முக்கியம். இது போக, தினசரி லலிதா சஹஸ்ரநாம பாராயணம், நைவேத்யம், பாகவதம் படிப்பது என்கிற கட்டங்கள் வேறு. இதை எல்லாம் ஒருவரால் செய்ய முடியாது. ஒரு குடும்பத்தில் எல்லோரும் ஒத்துழைத்தால் மட்டுமே இது சாத்தியம்.

அன்றாடம் வேலைக்கு போனால்தான் வீட்டில் அடுப்பெரிய முடியும் என்பவர்களுக்கு துளியும் சாத்தியமில்லை என்கிற ஒரு நிலையை, இது உருவாக்கிவிட்டது தன்னால் தான் கொலு வைக்க முடியவில்லை - யாராவது வைத்திருக்கும் கொலுவுக்காவது போய் வணங்கி வரலாம் என்பதற்கும் சாதி, ஏழ்மை என்கிற குறுக்கீடுகள்.

மொத்தத்தில், மிகுந்த பொருட் செறிவுள்ள நவராத்திரி என்பது மேல் தட்டு மக்களுக்காக மட்டுமே என்று இருந்த ஒரு நிலையில்தான், பெரியவர் ஒரு ஏழைப்பெண் மூலம், 'அது அனைவருக்குமானது. மனம் பக்தியோடு விரும்ப வேண்டியதே முக்கியம்' என்பதை உலகத்துக்கு உணர்த்தினார்.

ஒரு குடிகார கணவனோடு அல்லாடிய அந்த பெண்ணும், வரிசையில் நின்று பெரியவரை சந்தித்தபோது அவள் கண்களில் அப்படி ஒரு சோகம். மனமும் தற்கொலை செய்து கொண்டுவிடும் எண்ணத்தில் எல்லாம் இருந்தது.

இவ்வேளையில்தான் பெரியவர் அவள் அவலத்தை, அவள் கூறாமலே புரிந்துகொண்டார்.

இந்த நாட்டில் பெண்களின் வாழ்வு என்பதே ஒரு சூதாட்டம் போலத்தான் இருக்கிறது.நல்ல கணவன் என்னும் தாயம் எல்லோருக்கும் விழுந்து விடுவதில்லை. அவளாலும் சுயமாக ஒரு மனம் நிறைந்த கணவனை தேர்வு செய்ய வாழ்வின் வழிமுறைகளில் இடமில்லை. இது என்ன கொடுமை அல்லது சோதனை என்பதுதான் அவளுக்குள் இருந்த கேள்வி.

அதற்கு பெரியவர் சொன்ன பதில், அவளுக்கு மட்டும் சொல்லப்பட்டதல்ல; அது ஒட்டுமொத்த பெண்கள் சமூகத்துக்கும் சேர்த்துதான்...

'நம்ம சமூகத்துல வீட்டுப் பொண்ணு கண்ணுல கண்ணீர் வரக்கூடாதுன்னு சொல்வா. அதுக்கு உண்மையான அர்த்தம், அவ சந்தோஷமா புருஷனோட பிள்ளை குட்டிகள்னு வாழனுங்கறது மட்டுமில்லை. அப்படி அவ வாழற மாதிரி, அந்த வீட்டு ஆண்மக்கள் நடந்துக்கணும். எந்த பெண்ணை ஒரு ஆண் மகன் அழ வெச்சாலும் சரி; அதுக்கான பதில் விளைவு, அவன் சகோதரி மூலமாவோ இல்லை; அவன் பெத்தெடுக்கப் போற பெண் மூலமாவோ வந்தே தீரும்.

அம்மா, அக்கா, தங்கைகள் மேல பாசமா ஒரு பவ்யத்தோட இருக்கறது பெருசேயில்லை. எல்லாப் பெண்கள் கிட்டயும் இந்தப் பாசமும் பவ்யமும் இருக்கணும். சாபங்கள் பெண் சாபத்துக்கு வேகம் அதிகம். ஆகையால, அந்த சாபத்துக்கு ஆளாகாம வாழறதுதான் உத்தமமான ஆண்மை' என்று, ஆண்மைக்கு பொருள் கூறிய பெரியவர், எங்காவது ஒரு பெண் கண்ணீர் சிந்துகிறாள் என்றால், அதற்கு பின்னாலே நிச்சயம் அவளது வினைப்பாடு மட்டுமல்ல; அவளது குடும்பத்து ஆண்களின்

வினைப்பாடுகளும் இருக்கும் என்று கூறியதுதான் இதில் முக்கியம்.

இதனால்தான் நம் சமூகத்தில் பல பெண்களின் திருமண வாழ்க்கை என்பது அமைந்தால்தான் உண்டு, இல்லாவிட்டால் சாகும் வரை சுருதி பேதத்தோட வாழ வேண்டி வந்துவிடுகிறது. அதனால் பாதகமில்லை. எப்பேர்பட்ட அழுக்கையும், தோய்க்கிற விதமாக தோய்த்தால் நீக்கி விட முடியும் என்னும்போது, இந்த வினைப்பாடுகளை எண்ணி அஞ்சத் தேவையில்லை.

மனித வாழ்க்கை என்பதே ஒரு மாயா விளையாட்டுதானே? ஒருவருக்கு பிடித்த விஷயம் இன்னொருவருக்கு பிடிக்காமல் போகிறது; ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வித ரசனை. எல்லாமே மாயையால்தானே?

அப்படி இருக்க, இங்கே பாவமே செய்யாமல், புண்ணியம் மட்டுமே செய்தபடி வாழ்ந்துவிட எத்தனை பேரால் முடியும்? தெரிந்தும் தெரியாமலும், அறிந்தும் அறியாமலும், புரிந்தும் புரியாமலும் தவறுகள் செய்வதும், பின் வருந்தித் திருந்துவதும்தானே, மனிதர்களின் வழக்கமாக உள்ளது.

தவறுகளிலேயே மூழ்கிவிடக்கூடாது. அறச்செயல்களையும் அவர்கள் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான், திருநாள் கொண்டாட்டங்கள் வருகின்றன. மகாமகம், கும்பமேளா என்று நடப்பதெல்லாமே பாவமூட்டையின் கனத்தை குறைப்பதற்குதானே?

அதெல்லாம் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வரும் விசேஷங்கள். வருடாவருடமே ஒரு ப்யூரிஃபயரை, ஒரு ரெக்டிஃபிகேஷனை, ஒரு ப்ரிவென்ஷனை செய்து கொள்ளத்தான் நவராத்திரமே வகுக்கப்பட்டது.

விஷ்ணுவுக்கும், ஈஸ்வரனுக்கும், மற்றுமுள்ள முருகன், கணபதி போன்றோருக்கெல்லாம் ஒன்றிரண்டு நாள்தான் இம்மட்டில் கணக்கு. அம்பாள் தாய்மை கொண்டவளல்லவா? அதனால்தான், வஞ்சனை இல்லாமல் மனித வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்கும் ஒன்பது ரசங்களுக்கும் ஆதாரமான ஒன்பது சக்தியை வாரி வழங்கி, தன் பிள்ளைகளை ரட்சிக்க ஒன்பது நாட்களுக்கு நவராத்திரியை நமக்கு கொடுத்துவிட்டாள்.

இப்படிப்பட்ட நவராத்திரியை அந்த ஏழைப்பெண்ணும் கொண்டாடச் சொல்கிறார் பெரியவர்.

‘பெருசா கொலு வைக்கணும்னு அவசியமில்லை. பக்தியோட நாலு பொம்மை போதும். ஒரு பலகை மேல கோலம் போட்டு, அந்த பொம்மைகளை வெச்சு தினசரி விளக்கேத்தி உருக்கமா வழிபடு. சிரமப்பட்டாவது தினசரி ஒரு தானியத்துல சுண்டல் பண்ணிடு. அதை உன் கையால எல்லோருக்கும் விநியோகம் செய்.

கொண்டக்கடலை சுண்டல் தரும்போது, குரு பகவானோட அனுக்ரஹத்தை உடம்பானது உறிஞ்சிக்கற ஆற்றல் ஏற்படறது. பாசிப்பயறுல சுண்டல் தரும்போதும் இதேமாதிரி நடக்கறது. கிரகங்களோட ஆற்றல் மத்தவாளுக்கு கிடைக்க நாம காரணமா இருக்கறதால, கிரகங்களோட கருணை நம் வரைல அதிகரிக்கறது.

நம்ம ஜாதகப்படி க்ஷீணமா ஒரு கிரகம் இருந்தா, அது மருந்து சாப்பிட்ட உடம்பாட்டம் பலமடையறது. உடம்பு ஆரோக்கியமானாலே, மனசும் ஆகித்தானே தீரணும்?

இப்படி ஒன்பது நாள், ஒன்பது சக்தியை நாம ஏற்படுத்தறோம். நமக்குள்ளேயும் ஏற்படுத்திக்கறோம்’ - என்று அவர் கூற, அந்த பெண்ணும் தன்னால் முடிந்த விதத்தில் நவராத்திரியை கொண்டாட, அனுக்ரஹம் என்னும் அருள் அவள் வரையில் துளித்துளியாக சேரத் தொடங்கியது. மூன்று மாதங்களில் அவள் வாழ்வில் பெரிய மாற்றம். அவள் கணவனுக்கு உடல் நலம் பாதித்தது. டாக்டர்கள் எப்படியோ காப்பாற்றிவிட்டனர். கூடவே, இனி ஒரு வேளை குடித்தாலும் உயிர் போய்விடும் என்று செய்த எச்சரிக்கை, அவனை குடியின் பக்கமே போகவிடாதபடி தடுத்தது. குடி நிற்கவும் புத்தியும் தெளிவாகியது. நல்ல நேரம் வந்துவிட்டால், அது எல்லா சாகசங்களையும் செய்யத் தொடங்கிவிடும்.

குடிகார கணவன் திருந்தவுமே நல்ல வேலையும் கிடைத்துவிட்டது. அந்தப் பெண்ணும் நவராத்திரியின் அற்புதத்தை புரிந்துகொண்டாள். பெரியவரையும் தன் கொலுவில் ஒரு கடவுளாக சேர்த்துக் கொண்டாள்.

கல்கத்தா சேட்ஜியின் பதினெட்டு புராண நூல் வெளியீடு மட்டுமே பரிகாரமல்ல; நவராத்திரி நாளின் சுண்டல் விநியோகம் கூட ஒரு பரிகாரம் சார்ந்த செயல் என்பது பெரியவரால் விளங்கியது.

உடனேயே அரசமரத்தை சுற்றிவிட்டு அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்து பிள்ளை வந்துவிட்டதா என்று பரிசோதிப்பதுபோல, இந்த விஷயத்தில் பரிசோதனைகள் கூடாது.

ஆத்மார்த்தமாகவும் உருக்கமாகவும் செய்ய வேண்டியது, பின் ஆசையோடும் ஏமாற்றுவதற்காக செய்கின்ற ஒன்றாகவும் மாறி பரிகாரத்துக்குப் பதில் பெரும் பாவத்தை தந்துவிடும்.

‘இந்த நவராத்திரியின்போது நாம் குழந்தைகளாகிவிடவேண்டும். ஏனென்றால் குழந்தைகளுக்குத்தான் கோபமோ தாபமோ நிலையானது கிடையாது. உணர்ச்சிகள் வேரூன்றாமல் நாமும் குழந்தையாக மாறி, பக்தி புரியவேண்டும்.

உபநிஷதமும் ‘குழந்தையாய் இரு’ என்கிறது- என்னும் பெரியவர், அம்பாளின் முப்பெரும் அம்சங்கள் குறித்து சொன்னதையும் கேட்போம்.

“சாஷாத் பராசக்தியை காத்யாயனியாகவும், மகாலக்ஷ்மியை பார்கவியாகவும், நாம் குழந்தைகளாக்கி, அந்த பாவத்திலேயே வழிபட்டால் நமக்கும் குழந்தைத் தன்மை சாஷாத்கரித்துவிடும். இந்த நாளில் வாட்டர் ஃப்ரூப் என்று சொல்வது போல், நாம் காம ஃப்ரூப், சோக ஃப்ரூப் என்று எல்லாமாக சாந்தமாக ஆவோம்.

குழந்தை ரூபத்தில் இருந்தாலும் ஞானப் பாலூட்டும் ஸ்ரீ மாதாவாக இருக்கிற தேவி நமக்கு இந்த அனுகிரகத்தை செய்வாள்.

குழந்தையாக வந்த காத்யாயனியை தமிழ்நாட்டு கிராம ஜனங்கள் கூட நீண்ட காலமாக வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்பது என் யூகம். காத்தாயி என்கிற சொல் தான் காத்யாயனி என்று நினைக்கிறேன்.

பட்டாரிகை என்று பெரிய வித்யோபாசகர்கள் குறிப்பிடும் அம்பாளைத்தான், நம் கிராம மக்கள் பிடாரி என்று பூஜிக்கிறார்கள். பழைய செப்பேடுகளில் பட்டாரிகா மான்யம் என்பதுதான் பிடாரி மான்யம் என்று திருத்திக் குறிப்பிடப்பட்டது.

இவ்வாறே, கிராம ஜனங்களும் கூட சரஸ்வதியை நீண்ட காலமாக வழிபட்டிருக்கிறார்கள். பேச்சாயி, பேச்சாயி என்று சொல்கிற கிராம தேவதை பேச்சுக்கு ஆயியான வாக்தேவி சரஸ்வதியைத்தான் குறிப்பிடுகிறது.

கிராமத்து ஜனங்களை அம்பாள் புறக்கணித்துவிடவில்லை. அவர்களுக்கு ஏற்ப, போய் அவர்களிடம் அமர்ந்து அருள்பாலிக்கிறாள்.” - என்று அம்பாளுக்கும் துர்காலக்ஷ்மி சரஸ்வதிக்கும் பெரியவர் கூறிய விளக்கமாகட்டும், அவர் காட்டிய வழியாகட்டும் அவரை ஜகத்குரு என்று சொல்வது எவ்வளவு சரியான பதம் என்று எண்ணி நெகிழ

வைக்கிறது.

பிடாரி, பேச்சாயி, காத்தாயியை, தன் கருணையால், யார் என்று அறிந்து சொன்ன பெரியவர், சைவ வைணவ பேதத்துக்கும் சரியான பாதை காட்டியிருக்கிறார். அது...?

16

சைவ வைணவ பேதம். நினைக்கவே சங்கடம் தரும் ஒரு விஷயம் இது பிறப்பால் நான் வைணவன். என் முன்னோர்கள் வீர வைணவர்கள். பெருமையாக, மறந்தும் புறம் தொழமாட்டோம் என்பவர்கள் - என்றவர்கள்! இந்த வைணவர்களின் சின்னம்தான் திருமண் எனப்படும் நாமம்!

நாமம்தான் கலியுகத்தில் மிக உயர்ந்தது. ஒவ்வொரு யுகத்திலும் ஒரு ஜீவன், முக்தியை அடைய யாகம், ஹோமம், அபிஷேகம், ஆராதனை, அர்ச்சனை என்கிற வழிமுறைகளை பின்பற்ற வேண்டி இருந்தது. இதில் கலி யுகத்தில் அவ்வளவெல்லாம் கஷ்டப்படத் தேவையில்லை.

இறை நாமத்தை ஜபித்தே எளிதாக முக்தியை அடைந்து விடலாம் என்கிறது புராணம். சப்தமாக உள்ள இந்த நாமத்துக்கு ஒரு வடிவம் கொடுத்தால், அதுதான் நாம் நெற்றியில் அணியும் நாமமாகும்.

இந்த நாமத்தின் விளக்கம் மிக நேர்த்தியானது. இரு வெண்கோடுகளும் அந்த திருமாலின் திருவடிகள். நடுவில் உள்ள சிவந்த ஸ்ரீ சூரணம் அந்த மகாலக்ஷ்மிதேவி, இவர்கள் இருவரையும் நம் சென்னியில் வைதுத சதாசர்வ காலமும் தியானிக்க வேண்டும் என்பதை ஒட்டியே, நெற்றியில் நாமம் தரிக்கும் வழக்கம் தோன்றியது.

இது அப்படியே விபூதிக்கும் பொருந்தும். விஷ்ணுவானவர் காத்து ரட்சிப்பவர் - அவர் பெயரிலேயே 'விஷ்' என்னும் அருளாசிகள் உள்ளன. நாம் காக்கப்பட வேண்டும் என்றால், காக்க முடிந்தவரின் காலடிகளைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதானே சரி?

எனவே, காக்க வேண்டி காக்க முடிந்தவன் திருவடிகளை நெற்றியில் புறத்தே பற்றி அகத்தே சிந்தித்தோம். ஈஸ்வரன் அழித்து ரட்சிப்பவர் ராணுவ வீரனைப் போன்றவர். ஒரு ராணுவ வீரன் தன் நாட்டு மக்களைக் காப்பதற்காக எல்லையில் எதிரிகளுக்கு சிம்மசொப்பனமாய் நிற்பவன். இப்படி ஒருவன் இல்லாவிட்டால் உள்நாட்டிலும் நிம்மதி போய் விடும். அப்படிப்பட்ட ஈஸ்வரன் அழித்துக் காக்கிறவராகிறார்.

அழிப்பதில் எரிப்பது என்பதே உச்சம். எரிப்பதன் முடிவு சாம்பல். அதுதான் விபூதி. எனவே, ஈஸ்வரனாய் பெயருக் குள்ளேயே WARஐ கொண்டவருக்கு சாம்பல் சரியான பொருத்தமே.

அப்படியே பிரம்மாவை படைப்புக் கடவுள் என்பதிலும், ஒரு பெயர்ப்பொருத்தம் இருப்பதை உணர முடிகிறது. "ப்ர" என்றால் "பெரிய" என்றும் ஒரு பொருள். மா என்றாலும் பெரிய என்று பொருள் கொள்ளலாம். அப்படியே அம்மா என்கலாம். அதாவது, பெரிய அம்மா. நம்மைப் படைத்தவன் அம்மா. அந்த அம்மாவை, அம்மாவுக்கு அம்மாவை, அவள் வாழும் உலகை படைத்தவன் அம்மாவுக்கெல்லாம் அம்மாவான பெரியம்மாவான பிரம்மாதானே?

பெரியம்மாவே பிரம்மா!

இந்த பெயர்க்காரண வியப்பு ஒரு ருசியான விஷயம். ஆனால், என் நோக்கம் இப்போது, அது பற்றியதல்ல. நாமத்தில் தொடங்கி எங்கெங்கோ கிளைகள் விரிந்து விட்டன. இந்த நாமத்தில் ஈர்ப்புக்குரியது வடகலை நாமம் என்றால், திவ்யமானது தென்கலை நாமம். இந்த இரு நாமங்களையும் கொண்டது என் குடும்பம். நான் கைத்தலம் பற்றிய மனைவி தென்கலை வழிவந்தவள். இந்த இரு நாமத்தவர்க்கும் இடையிலேயே நான் பெரியவன் - எனக்கு பிறகே நீ என்கிற ஒரு மெல்லிய ஊடலும் உண்டு.

ஆனாலும், இருவரிடையேயும் ஏகாக்ரமாய் சர்வம் விஷ்ணு மயம் என்பதே கொள்கையாய், அதில் மட்டும் பிணக்கேயில்லாத ஒற்றுமை உண்டு. இதனால் சிவனோ முருகனோ பிள்ளையாரோ அய்யனாரோ - யாராக இருந்தாலும் வேண்டத் தேவையற்றவர்களே!

இதேபோல, சைவத்திலும் ஒரு பிரிவினர், சிவ பிரானை அல்லாது பிற தெய்வத்தை கண்ணால் பார்ப்பதைக் கூட தவிர்ப்பார்கள்?

ஒரு கோணத்தில் மட்டும் இந்த வீர வைணவ பாவனையும் சரி, சீர சைவ பாவனையும் சரி; உத்தமமான விஷயங்கள். எப்படி இஸ்லாமியர்களுக்கு ஒரு அல்லாவோ, கிறித்தவர்களுக்கு ஒரு ஏசுவோ, அப்படி வைணவர்களுக்கு திருமால், சைவர்களுக்கு சிவம்.

'ஒன்றில் இரு - அதில் ஒன்றி இரு - அதுவே நன்றென்றிரு' என்பது சான்றோர் வாக்கு. இதன்படி ஒன்றில் கரைந்து ஒன்றிப்போய் இருப்பதே நன்றாயிருப்பதாகும். இது கிட்டத்தட்ட ஒரு பாதையில் ஒரே வேகத்தில் அப்படி இப்படி திரும்பாமல், அங்கும் இங்குமாய்

அலையாமல் பயணிப்பது போன்றது.

இப்படிப்போனால், இலக்கையும் சீக்கிரமாய் எளிதாய் அடைந்துவிட முடியும். நல்ல விஷயம்தான் எப்போது தீயதாகிறதென்றால், 'என் பாதை தான் டூ பெஸ்ட், மற்றதெல்லாம் வேஸ்ட்' என்கிற பேத உணர்ச்சிக்கு ஆளாகும்போது தீயதாகிறது.

இந்த பேத உணர்வோடு சிவாலயம் பக்கமே இருவர்களும், விஷ்ணு ஆலயம் பக்கமே அவர்களும் வராமல் போவதும், இரு பக்கமும் பொதுமையோடு இருப்பவர்களை ஏளனமாய்ப் பார்ப்பதும் ஒன்றில் ஒன்றாய் ஒன்றிவிட்டதற்கு அழகேயில்லை. இது அப்பட்டமான சராசரி மானுட பாவனை! ஒரு இந்தியன் இந்தியாதான் ஒசத்தி என்றும் ஒரு அமெரிக்கன் அமெரிக்காதான் ஒசத்தி என்றும் கூறிக்கொள்வது போன்றது.

இந்த பேத உணர்ச்சி அல்லது வேற்றுமை உணர்ச்சி, என்னிடம் எப்போதுமே இல்லாமல் இருந்ததுதான் வியப்புக்குரிய ஒரு விஷயம். இதற்கு நாம் வளருமிடம் - நம் சுற்றம் போன்றவை காரணமாகின்றன. சேலத்தில் வாழவேண்டிய சூழலில், அங்கே ஒன்றின் ஆதிக்கத்துக்கு இடமில்லாத வாழ்க்கை முறை. வைகுண்ட ஏகாதசிக்கு நிகராக, ஆருத்ரா தரிசனமும் அங்கே கொண்டாடப்பட்டது.

ஆனால், என் பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகள் ஸ்ரீரங்கம், அஹோபிலம் என்று வளர்ந்ததால், பொதுமைக்கு அவர்களுக்கு வாய்ப்பில்லாது போய்விட்டது. எனவே, அவர்கள் வீர வைணவ உணர்வை அதிகம் எதிலொலிப்பார்கள். போனால் போகிறது என்று சமயபுரம் மாரியம்மன் குங்குமத்தையும் விபூதியையும் மிக தற்காலிகமாக இட்டுக்கொள்வார்கள்.

விலகி இருந்து வளர நேரிட்ட என்னுள், சிவமும் குடிபுகுந்து என்னைக் கொண்டு அது தன்னை நிறையவே வெளிப்படுத்திக்கொண்டது.

அதே சமயம், நான் அந்த பெருமாளின் பாலும் பேரன்பும் பெரும் பக்தியும் கொண்டிருக்கிறேன். வருடம் தவறாது திருமலைக்கு சென்னையிலிருந்து நடந்தே போகிறேன். அதுவும் விரத தீட்சையோடு...

என் கதைகளில் சிவமயமும் உண்டு, கிருஷ்ண தந்திரமும் உண்டு. எங்கே என் கண்ணனுமுண்டு. மரகதலிங்கமும் உண்டு.

நான் அடிப்படையில் இலக்கியவாதியாதலால் பிறந்த நாட்டால்

இந்துவானதால், பிறந்த பிறப்பால் வைணவனானதால், எனக்குள் நாடு காரணமாக நம் மதாபிமானமும், பிறப்பின் அடிப்படையில் குலாபிமானமும், இலக்கிய நோக்கில் பொதுமையும் என்று முத்தன்மை என்னிடம் உருவானது. எனவே, ஒரு இந்துவாக நம் மதத்தின் ஆறு வழிமுறைகளையுமே போற்ற கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து இலக்கிய நோக்கில் என்னை ஈர்த்த சிவத்தை போற்றுகிறேன். குலாபிமானம் என்னை வைணவனாக வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் நிச்சயம் பலர் இருக்கக்கூடும். ஆனால், என் போன்றோர் சில சமயம், இந்த வீர வைணவ, சைவர்களிடம் காயம் படவும் நேரிட்டது. அப்போதெல்லாம் மனம் கலங்கும். இவர்கள் கூறுவது தான் சரியோ. நாம் தவறோ என்றும் தோன்றும்.

இவ்வேளையில் என் குழப்பதை நீக்கி, ஹரியும் சிவனும் ஒன்று என்பதை அழுத்தமாய் எனக்கு புரிவித்தவர் பெரியவர்தான். வேறு எவரிடம் இருந்தும் இம்மட்டில் ஒரு தெளிவான கருத்தை நான் காணவில்லை.

இத்தனைக்கும் பெரியவர் ஒரு அத்வைதி. சைவச் சார்பு அவர் பிறப்பாலேயே வந்தது. அதுவே ஒசத்தி என்று அவர் ஒங்கிச் சொன்னால் அதை மறுக்க முடியாது. ஆனால், அத்வைதியானாலும் அவரது பொதுமைப்பார்வை அற்புதம். இதோ அவரின் உபதேசம்.

‘புராணங்களைப் பார்த்தால் சிவனிடம் விஷ்ணு தோற்றுப்போனதாக சில இடங்களில் தெரியும். அதேபோல் சிவன் விஷ்ணுவிடம் தோற்றுப்போனதாகவும் சில கட்டங்கள் உண்டு. அது மட்டுமா? அவர் இவரை பூஜித்தார்; இவர் அவரைப் பூஜித்தார் என்றும் சம்பவங்கள்.

ராமாயணத்தில் ராமர் சிவதனுசுவை முறித்து, பெரும் வெற்றியாளனாகக் காட்சி தருகிறார். இதே ராமராகிய விஷ்ணு, ஒருமுறை சிவபூஜை செய்யும்போது, ஒரு பூ குறையவும் தன் கண்ணைப் பிடுங்கி அதை மலராய் கருதி அர்ச்சித்தார் என்கிறது திருவீழிமிழலைப்புராணம்.

பின் சிவன் பிரம்மாவின் தலையை கிள்ளப்போய், பிரம்மஹத்திக்கு ஆளாகி விஷ்ணுவை பூஜித்து, தோஷம் நீக்கிக் கொண்டார் என்கிறது திருக்கண்டியூர் ஐதீகம்.

சிவனும் விஷ்ணுவும் ஒன்றுதான் என சொல்லிக் கொண்டே, இப்படி

ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டனர் என்றால் எப்படி? இடிக்கிறதே... என்று கேட்கலாம்.

ராமன் முறித்த சிவதனுசைப் பற்றிச் சொன்னேன் அல்லவா? இந்தக் கதையை ராமனுக்கே சொன்னவர் பரசுராமர்தான். 'சீதையை மணக்க சிவதனுசை நீ உடைத்து விட்டாய்; எங்கே என்னுடைய இந்த விஷ்ணு தனுசை உடை பார்க்கலாம்' என்கிறார் ஒரு இடத்தில்...

இந்த பரசுராமர் யார் - விஷ்ணு அவதாரம்! இவர் சண்டைக்கு அழைத்த ராமரும் விஷ்ணு அவதாரம். அதாவது விஷ்ணுவே விஷ்ணுவை சண்டைக்கு அழைக்கிறார்.

வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

சிவதனுசை உடைத்த இதே ராமர்தான் ராமேஸ்வரத்தில் சிவனுக்கு பூஜை செய்கிறார்.

மொத்தத்தில் பார்த்தால், ஜனங்களுக்கு பக்தி உண்டாக்க பகவானே வழிகாட்டுகிறார். எப்படி? தாமே பக்தனாக இருந்து வழிகாட்டுகிறார். இதனால்தான் சில இடங்களில் சிவன் பக்தராக இருந்து விஷ்ணுவை பூஜிக்கிறார். விஷ்ணு பக்தனாக இருந்து சிவனைப் பூஜிக்கிறார்.

பேயாழ்வாரும் தன் பாடல் மூலம்

'தாழ்சடையும் - நீண்முடியும்;

ஒண்மழுவும் - சக்கரமும்

சூழ் அரவும் - பொன் நாணும்

தோன்றுமால் - சூழும்

திரண்டருவி பாயும் திருமலை மேல்

எந்தைக்கு

இரண்டுருவும்

ஒன்றாய் இசைந்து'

என்று பெருமாளை ஹரிஹரனாகத்தான் பார்க்கின்றார்.

'ஒட்டுமொத்தமாய் அரியும் சிவனும் ஒண்ணு; அரியாதவன் வாயில் மண்ணு' என்று குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்துள்ளோம். இந்த

வாக்கு பல ஆயிரம் வருடங்களாக சொல்லப்பட்டு வருகிறது. ‘குடிசைக்கு சில வருஷம், செங்கல் வீட்டுக்கு பல வருஷம், பாறாங்கல்லில் கட்டப்பட்ட வீட்டுக்கோ பல ஆயிரம் வருஷம் பலம்’ என்பார்கள். உள்பலம் இல்லாத வார்த்தைகளும், கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும். ஆனால், இந்த சொலவடை நிற்கிறது என்றால், இதன் ஸ்திரத்தால் தானே?

17

பெரியவரின் சைவ-வைணவச் சமநோக்குக்கு அவர் காட்டும் உதாரணங்களும் - வியாக்யானங்களும் ‘அடேயப்பா என்ன ஒரு பார்வை - என்ன ஒரு நேர்மை. - என்ன ஒரு நடுவு நிலை’ என்று வியப்பையே ஏற்படுத்துகிறது.

‘எல்லா தேவதேவியர்களுக்குள்ளும் ஒரே பரமாத்மா தான் இருக்கிறான்’ - இது பொதுவான கருத்து. இதை ‘ஒன்றே குலமென்று பாடுவோம் - ஒருவனே தேவனென்று போற்றுவோம்’ என்னும் கருத்தோடும், பிற மதங்களின் இறைக் கொள்கைகளோடும், இணைத்து ஏற்கவும் முடிகிறது.

இதையும் சொல்லிக்கொண்டு சிவன் - விஷ்ணு - பிரம்மா என்று மும்மூர்த்திகள் என அந்த ஒன்றை மூன்றாக்குவதும், அதைத் தொடர்ந்து சக்தி - சரஸ்வதி - லக்ஷ்மி என்று அது விரிவாவதெல்லாமும் எதனால்?

குறிப்பாக சிவம் - விஷ்ணு என்று இருபெரும் அணி போல், இந்த ஒன்றை இரண்டாக்கி, இதில் ஒன்று பெரியது மற்றது அதற்கு அடங்கியது என்பதுபோல் பேசுவதெல்லாம் எந்த வகையில் சரி?

இதற்கு பெரியவரின் பதில் மிக இதமாக இதோ...

‘சிவனும் விஷ்ணுவும் கொஞ்சம்கூட வேறு வேறில்லை. ஆனாலும் இரண்டையும் வழிபடுகிறபோது, கொஞ்சம் பிரித்து பக்தி செய்தால், அதிலும் ஒரு ரசம் இருக்கத்தான் செய்கிறது. பலவாகப் பிரிந்தும் ஒற்றுமையுடன் இருப்பதுதான் நம் மதத்தின் சாரம் (Unity in Diversity).

இப்படியே சிவன் - விஷ்ணு என்கிற இரண்டு மூர்த்திகளையும் வழிபடுகிறபோதும், அவை ஒன்றே என்ற உணர்ச்சி இருந்தாலும், ஒவ்வொரு மூர்த்தியை ஒவ்வொரு தத்துவத்துக்கு ரூபமாக வைத்துக்கொண்டு பக்தி செய்வதில் ஒரு ருசி இருக்கத்தான் செய்கிறது.

இப்படிச் செய்யும் போது, சிவத்தை ஏக வஸ்துவான ஞானமாக பாவிக்கலாம். அந்த ஏக வஸ்துவை பல விதமாகக் காட்டி ஜகத்தை நடத்தும் சக்தியாக விஷ்ணுவை பாவிக்கலாம். அதாவது, சிவத்தை பரப்பிரம்மமாகவும், விஷ்ணுவை பராசக்தியாகவும் வைத்துக் கொள்ளலாம்.

இருக்கிற ஒன்றை இல்லாத பலவாக காட்டுகிற சக்தியே, அம்பாள் அல்லது விஷ்ணு. இதனால் ஜகம் முழுவதுமே விஷ்ணுரூபம்!

விஸ்வம் விஷ்ணு என்றுதானே சஹஸ்ரநாமமே ஆரம்பமாகிறது? உலக பரிபாலனமும் விஷ்ணுவுக்கே உரியது. அதனாலேயே உலகத்தில் இருக்கிற ஆனந்தங்களை உணர்ச்சிகளை எல்லாம் தெய்விகமாக்குகிற பக்தி மார்க்கமும் விஷ்ணு சம்பந்தமாகவே அதிகம் உள்ளது. ஹரிகதை, ஹரிநநாம சங்கீர்த்தனம் என்று கூறுவதுபோல் ஹரகதை ஹரகீர்த்தனம் சொல்லப்படுவதில்லை.

கதை, பாட்டு இதெல்லாம் விஷ்ணுவிடமே அதிகம். பாகவதர் என்றால் பகவானைச் சேர்ந்தவர் என்றே அர்த்தமாயினும், பொதுவாக பாகவதர், பாகவதம் என்றெல்லாம் சொன்னால் விஷ்ணுபக்தர், விஷ்ணுவின் கதை என்றே எடுத்துக்கொள்கிறோம்.

பிரபஞ்ச சௌகரியங்களை எல்லாம் வைத்து, பூஜை, பக்தி, பஜனை, கதை என்பதெல்லாமே விஷ்ணு சம்பந்தமாயிருக்கிறது.

இதை விட்டு இதற்கு ஆதாரமான சாந்தத்தில் திளைக்கும்போது, சிவசம்பந்தம் அதிகம் தோன்றுகிறது. சிவஞானம், சிவயோகம் என்று சொல்கிற மாதிரி விஷ்ணு ஞானம், விஷ்ணு யோகம் என்பன காணப்படவில்லை.

பலவாக இருக்கிற உலகனைத்தும் விஷ்ணு என்பதால், ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத் என்ற வாக்கு தோன்றியது. பலவாக காண்பது போனால், ‘ஸர்வம்’ போய்விடும். அப்புறம் ஏகம்தான் இருக்கும்.

ஏகம் இருக்கும்போது ஸர்வத்துக்கு இடம் ஏது? இந்த ஏகத்தை அனுபவிக்கிறவனைத் தவிர, ஜகம் என்றும் ஒன்று தனியாக இல்லை. ஜகமும் அடிப்பட்டு போய் விடுகிறது. சிவம் ஒன்றே எஞ்சி நிற்கிறது. இதனால் தான் ‘சிவமயம்’ என்கிறார்கள்.

VIBGYOR என்கிற ஏழு நிறங்களில் கறுப்பும் வெளுப்புமில்லை. இங்கே வெள்ளை சிவன், கரிய திருமால் ஆகிய இருவருமே பிரபஞ்ச

வர்ணங்களில், அதாவது லௌகீகத்தில் சேராதவர்கள்தான்.

எதை எரித்தாலும் முதலில் அது கறுப்பு ஆகிறது. ஆனால், அப்போதும் எரிபட்ட வஸ்துவுக்கு நிறம் மாறினாலும் ரூபம் அப்படியே இருக்கும். நியூஸ் பேப்பரைகூட கொளுத்திவிட்டு பார்த்தால், அது கறுப்பானாலும் அந்த கறுப்புக்குள் அதிக கறுப்பாக எழுத்துக்கள் தெரியும். ஒரு துணிக்கும் இது பொருந்தும். எரிந்த இந்த நிலைதான் சர்வம் விஷ்ணு மயம் ஜகத்! எல்லாம் இருப்பதுபோல, இருந்தாலும் லௌகீகமாக இல்லாமல் தெய்விகமாக பக்தி ரூபத்தில் இருக்கின்றன.

யோகத்திலும் ஞானத்திலும் மேலும் ஆன்மாவைப் புடம்போட்டால் அதுவும் நீற்றுப்போய் பஸ்பமாகிவிடும். எரிகிற வஸ்துக்கள் கறுப்பானாலும், கடைசி வரை எரித்தால் முடிவில் வெள்ளை வெளேரென்று நீராகின்றன.

இதுதான் சிவமயம்!”

- பெரியவரின் இந்த சிவம் - விஷ்ணு குறித்த சிந்தனை என்னை வெகுவாக சிந்திக்க வைத்தது. என்னை மட்டுமா?

இதை வாசிக்கும் யாருக்குத்தான் சிந்தனைகள் தோன்றாது.

அவரின் வியாக்யானம் தொடர்கிறது. எப்படித் தெரியுமா? ‘அரனை மறவாதே - திருமாலுக்கு அடிமை செய்’ என்று!

‘எரிந்த மரம் கரியாகிறது. அந்தக் கரியும் முதிர்ந்தால் வைரமாகிறது. உலகம் இருந்தபோதிலும் அதன் மாயை விஷ்ணுமயமாக தெரிகிறபோது, நம் அஞ்ஞானம் கரியாகிப்போன நிலையில் இருக்கிறோம். திருமாலும் கரிமாலாக இருக்கிறார் - கரி வைரமாகிற நிலைக்கு பரமேஸ்வரன் வந்து விடுகிறார்.

கரியும் வைரமும் வேறு வேறா? - கேட்கிறார் பெரியவர். அப்படியே மஹாவிஷ்ணுவின் கறுப்பும் சிவனின் வெளுப்பும் இந்த உலக வண்ணங்களில் சேருவதேயில்லை. கலர் வந்தாலே பொய் வந்துவிட்டதாகத்தான் பொருள். இந்த இரண்டும் பொய்யோடு சேர்ந்ததுமில்லை; சேரப்போவதுமில்லை. வெண்மைக்கு விபூதி. கருமைக்கு விஷ்ணுமய உலகின் மண் திருமண்ணாகிவிட்டது. இதை எல்லாம் கசடற உணர்ந்த காரணத்தால் தான், ‘பிறை தங்கு சடையானை வலத்தே வைத்து...’ என்று ஆழ்வாரும், ‘குடமாடியை (கோபிகா கிருஷ்ணனை) இடத்தேகொண்டு’ என்று சைவத்திரு

முறைகளும் பாடுகின்றன.

அவ்வைப் பாட்டியும் ஒரு படி மேலே போய், “அரனை மறவாதே, திருமாலுக்கு அடிமை செய்’ என்கிறாள்.

தமிழகத்தில் இம்மட்டில் சமரசபாவம் புரிந்த எல்லோரிடமும் இருந்தே வந்துள்ளது. அதனாலேயே 27 நட்சத்திரங்களில் சிவனுக்குரிய ஆதிரை, விஷ்ணுவுக்குரிய ஓணம் இரண்டுக்கும் மட்டும் திரு சேர்த்து திருவாதிரை, திருவோணம் என்று சொல்கிறோம்” என்று விரியும் பெரியவரின் திருவாக்கு, அடுத்தடுத்து பல பரிமாணங்களைக் காட்டுகிறது.

“மஹாவிஷ்ணுவானவர் திருபுவன சக்ரவர்த்தி. சிவனோ பிச்சாண்டி. இருவருடைய சொத்துக்களை கொஞ்சம் கணக்கெடுப்போம்.

சிவனிடம் சாம்பல், எருக்கம்பூ தும்பைப்பூ, ஊமத்தை, மண்டை ஓடு, யானைத்தோல், பாம்பு. இவைதான் உள்ளன. இது எதுவுமே விலைபோகாதவையும்கூட.

மஹாவிஷ்ணுவிடமோ கிரீட குண்டலம், முக்தாஹாரம், பட்டுப் பீதாம்பரம், கௌஸ்துப மணி, இத்யாதிகள்... இவற்றுக்கோ விலையை நிர்ணயமே செய்ய முடியாது.

இதிலிருந்து சந்தோஷத்துக்கு விஷ்ணு, வைராக்கியத்துக்கு சிவன் என்பது புரியவருகிறது. இதை ஒட்டியே காலை எழுந்தவுடன் ‘ஹரி நாராயண ஹரி நாராயண’ என்கிறோம். பொழுது நன்றாக சந்தோஷமாக செல்ல வேண்டுமே?

மாலையில் ‘சிவசிவ’ என்கிறோம். என்ன பொருத்தமான வழிகாட்டல் பாருங்கள். பகல் முழுக்க சந்தோஷமாக வாழ, நாராயணன். இரவில் ஒடுங்கி அமைதியாய் தூங்க, சிவன். அண்டம் பிண்டம் இரண்டும் ஒரே சரக்கானதால் உலக நடப்புக்கும் நம் அக உணர்வுகளுக்கும் சம்பந்தம் இருக்கிறது.

காலையில் பஞ்சகச்சம் உடுத்தி, சந்தியாவந்தனம் செய்த ஒருவர், பகலில் சூட் போட்டுக்கொண்டு ஆபீஸுக்கு போகிறார். இது காரியத்துக்கு ஏற்ப போடும் வேஷம். இங்கேயும் ஒன்றான பரமாத்மாதான் விஷ்ணுவாக காரியமாற்றும்போதும் சிவமாக காரியமுடிக்கும் போதும் செயலாற்றுகிறது.”

இப்படி சிவ - விஷ்ணுவின் பேத - அபேத சிறப்புக்களை பாமரனுக்கும்

புரியும் வண்ணம் கூறும் பெரியவர், இதை உணராமல், ‘என் ஸ்வாமியே பெரியவர்’ என்று உன்மத்தமாக சிந்தித்த ஒருவரைப் பற்றியும், அவருக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தையும் சொல்லும்போது, சிரிப்போடு சிந்தனையையும் கட்டுப்படுத்த முடியவில்லை.

- அது ஒரு திருப்பாற்கடல் கதை!

18

திருப்பாற்கடல் கதையை பார்ப்போமா?

விஷ்ணுவின் ஆதிசேஷப் படுக்கை கிடக்கும் இடம் தான் திருப்பாற்கடல். ‘பாற்கடலில் பெருமான் பள்ளி கொண்டான்’ என்று பாட்டே உண்டே? இந்த பாற்கடல் பெயரில் காஞ்சிபுரத்தில் இருந்து வேலூருக்கு செல்லும் வழியில் ஒரு ஊரே இருக்கிறது.

இந்த ஊரில் வாஸ்தவத்தில் தொடக்கத்தில் ஒரு பெருமாள்கூட இருந்ததில்லை. இது தெரியாத நிலையில், ஒரு வீர வைணவர் ஊர்ப்பேரைக் கேள்விப்பட்டு அப்பட்டமான ஒரு வைணவத் தலம் என்று கருதிக்கொண்டு, இந்த ஊருக்கும் வருகிறார்.

இவரிடம் ஒரு வழக்கம். விஷ்ணு தரிசனம் செய்யாமல், ஆகாரம் உண்ணமாட்டார். அப்படி ஒரு சங்கல்பம்.

அன்றைக்கு திருப்பாற்கடல் என்னும் ஊருக்கு, நல்ல பசியோடு வந்தவர் பெருமாளைச் சேவித்து விட்டு, பின் ஆகாரம் புசிப்போம் என்றவராக ஊருக்குள் இருந்த ஒரே கோயிலுக்குள் நுழைந்து விட்டார்.

உள்ளே போனால் எதிரே லிங்க ரூபம்! அதைப் பார்த்தமாத்திரத்தில் வெளியே ஒடிவந்துவிட்டார். மனத்துக்குள் ‘இது என்ன திருப்பாற்கடலுக்குள் ஈஸ்வர சன்னதி’ என்கிற குழப்பம் - கூடவே வயிற்றுப்பசி வேறு.

ஈஸ்வரனை விஷ்ணுவாக கருதி வழிபடும் மன விசாலமும், முதிர்ச்சியும் அவரிடம் இருந்த போலத் தெரியவில்லை. அப்போது ஒரு பெரியவர் அவர் எதிரில் வந்து, “என்ன ஸ்வாமி பெருமாளை சேவிக்க வந்திருக்கிறீர்களா?” என்று கேட்கவும், “இந்த பிரயோஜனமில்லாத ஊரில் எங்கே ஐயா விஷ்ணு கோயில் உள்ளது?” என்று கோபமாக திருப்பிக் கேட்டிருக்கிறார் இவர்.

“இந்தக் கோயில், பெருமாள் கோயில் இல்லாமல் வேறு என்னவாம்?”

என்று பெரியவரும் திருப்பிக் கேட்க, அந்த வைணவரிடம் கோபம் பீறிட்டது.

“நான் உள்ளே போய் பார்த்துவிட்டு வந்துதான் சொல்கிறேன். இது ஈஸ்வரன் கோயில். புரியாமல் பேசாதீர்கள்.”

“அப்படியா... நான் பெருமாளை அல்லவா, தினமும் பார்த்து, சேவித்தும் வருகிறேன். எங்கே உள்ளே ஈஸ்வரனைக் காட்டுங்கள் பார்க்கலாம்” என்று அந்த பெரியவர், வீர வைணவரிடம் சண்டைக்கே போய் விட்டார்.

சண்டைபோடவும் கூட்டமும் கூடிவிட்டது. பிறகு எல்லோருமாக சேர்ந்து ‘உள்ளே போய் பார்த்தால், உண்மை தெரிந்துவிடப்போகிறது’ என்று உள்ளே சென்றனர்.

ஆனால், விஷ்ணு பக்தரான வைணவரோ, “நான் இனி உள்ளே வரமாட்டேன்” என்று பிடிவாதம் பிடித்தார்.

“வந்தால்தான் உண்மை எது? பொய் எது? என்று தெரிந்துகொள்ள முடியும்” என்று பெரியவர் அழுத்தமாகப் பேசி, அந்த வைணவரை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார். உள்ளே சென்று பார்க்கவும் சுமாரான வெளிச்சத்தில் சிவலிங்கம் போல தெரிந்தது. கற்பூர வெளிச்சத்தில் பார்க்கவும் கீழே உள்ள மேடை ஆவுடையார் போலவும் - மேலே நிற்கும் பெருமாளின் தோற்றம் லிங்கமாகவும் தெரிந்த விபரம் வைணவருக்கும் புரிய வந்தது.

வைணவரிடமும், “அடடா... சரியாக கவனிக்காமல் நாம் ஏமாந்து விட்டோமே” என்கிற ஒரு அசுயை. அப்படியே தன்னோடு சண்டை போட்ட பெரியவரைத் தேடினால் அவரைக் காணவில்லை. அவர் சன்னிதிக்குள் மாயமாக மறைந்துவிட்டிருந்தார்.

பெருமாளே கிழவராக வந்து, தனக்கு உணர்த்த வேண்டியதை உணர்த்தியதை அந்த வைணவரும் பிறகு ரிந்து கொண்டார். இதுதான் திருப்பாற்கடல் கதை!

இந்த கதையை தன் ‘தெய்வத்தின் குரல்’ மூலம் நமக்கெல்லாமும் சொல்வதன் மூலம் மகாபெரியவர் உணர்த்த விரும்புவது ஒன்றைத்தான். துவேஷம் வேண்டாம். அதனுள் பெரிய அளவில் அறியாமை இருக்கிறது. பக்தி என்பது அறிவு சார்ந்ததாக, அன்பு சார்ந்ததாக ஞானம் சார்ந்ததாக இருக்க வேண்டும். அதனுள் ஒருக்காலும் சிறுமை

இருக்கவே கூடாது.

எனக்கு வியப்பளிப்பது ஒரு விஷயம் தான். பெரியவர் ஒரு அத்வைதி. ஆதிசங்கரர் வழிவந்தவர். தன் மடத்திலும் அணுக்கமும் சந்திரமௌளீஸ்வரருக்கே பூஜையும் புரிபவர். தான் செல்லும் வழியே சிறந்த வழி என்றும், சிவமே எக்காலும் உயர்ந்தது என்றும் அவர் பேசினால், அதை யாரும் தவறாகக் கருதப் போவதில்லை. ஆனாலும் தான் தெளிந்த தெய்வீகமே பெரிது என்பது போன்ற அவரது பாரபட்சம் இல்லாத அணுகுமுறைதான் அப்பழுக்கற்ற ஞானி என்று அவரை உணர வைக்கிறது.

அடுத்து ஆன்மிகம் தொடர்பான சந்தேகங்கள் சிலர் வரையில் மனத்துக்குள் எழும்பிடும்போது, அதை அவர் உள்ளப்பாங்கு அறிந்து அதற்கேற்ப போக்க வேண்டும்.

அதனை என் வாழ்நாளில் மிகுதியும் கண்டது மகா பெரியவரிடமும், முக்கூர் லட்சுமி நரசிம்மாச்சாரியரிடமும் தான். இவர்களுக்கு இடையேயும் பாரபட்சமற்ற ஒரு பக்தி பாவம் இருந்தது.

முக்கூர் ஒரு வைணவக் கடல்! பள்ளிப் பிராயத்திலேயே என்னை ஆட்கொண்ட பெருந்தகை அவர் 1977ஆம் வருடம் என்று எண்ணுகிறேன். சேலம் நகரில், 'இந்து சமய மன்றம்' எனும் ஒரு அமைப்பில் சில காலம் செயலாளனாக இருக்க நேரிட்டது.

எங்கள் அமைப்பில் அவ்வளவு பேருமே திருமணமாகாத இளைஞர்கள். எங்களிடம் எப்போதும் ஒரு விறுவிறுப்பும் சுறுசுறுப்பும் இருந்தது. மாதம் தவறாமல் ஆன்மிக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வோம். அதில் கண்ணதாசனில் தொடங்கி புலவர் திலகம் கீரன் வரை பங்குபெறாதவர்களே இல்லை எனலாம்.

அவ்வேளையில்தான் என் தாய்மாமாவின் மிக நெருங்கிய நண்பராய் திருமுக்கூர் அவர்கள் எனக்கும் அறிமுகமாகி, ஒரு மாதகாலம் மார்கழியில் திருப்பாவையும் பாகவதமும் சொற்பொழிவாக அருளினார்.

அவரது அழுத்தமான கருத்துக்களும், சொல்லாற்றலும் பெரும் கூட்டத்தை கூட்டிவிட்டது. அந்த மார்கழி மாதத்தை வாழ்நாளில் மறக்கமுடியாது.

அவரோடு அவரது தர்மபத்தினியாரும் தங்கி இருந்தார். திருமுக்கூர் ஆசார சீலர் ஆனதால் மனைவி கையாலன்றி வெளியே

உண்ணமாட்டார்.

இதுகுறித்து நான் கேட்டேன். “இப்படி நடந்து கொள்வதுதான் ஆசாரமா? இதில் மற்றவர்கள் சமைப்பது எல்லாம் ஒரு மாற்றுக்குறைவு என்கிற ஒரு எண்ணம் ஒளிந்திருக்கிறதே. சுகாதாரமாக யார் சமைத்துத் தந்தாலும் சாப்பிடுவதில் தவறு இல்லைதானே?” என்று அவரிடம் கேட்டேன். இந்த கேள்விக்கு அவர் சொன்ன பதில்தான், ஆசாரம் என்றால் என்ன என்பதற்கான தெளிவை எனக்குள் ஏற்படுத்தியது.

‘ஆசாரம் என்பதற்கு ஆண்டவனின் சாரம் என்றும் பொருள் கொள்ளலாம். பெரிய சாரம் - அதாவது அரிதான ஒழுகு முறை அல்லது வழி நடப்பது என்று பொருள் கொள்ளலாம்.

அப்படி நடப்பதில் நிறைய நுட்பங்கள் இருக்கின்றன. மனைவி கையால் உண்பதற்கும், பிறர் கையால் உண்பதற்கும் இடையே நீங்கள் சுகாதரத்தை அடிப்படையாக வைத்து பார்த்தீர்கள். இங்கே அதுவல்ல விஷயம். மனைவி என்பவள் கணவனின் சுகதுக்கங்களில் பங்கு உடையவள். அவர்கள் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்பவர்கள் இவர்கள் பிரிந்து வாழ்வதுதான் தவறு - பாபம்!

இப்படி கட்டுப்பாடுடைய மனைவி கையால் உண்பதற்கும் பிறர் கையால் (அது அக்கம்பக்கம் ஹோட்டல் என்று எதுவாக வேண்டுமானால் இருக்கலாம்) சாப்பிடுவதற்கும் வேற்றுமை உள்ளது.

நம் பசியை போக்குபவர் யாராக இருந்தாலும் அவர்கள் தெய்வத்துக்கு சமம். அப்படிப்பட்டவரின் நன்றிக்கு நம் உரியவராகிவிடுகிறோம். அவருக்கு நம் வாழ்நாளில் பதில் நன்றியை காட்டாவிட்டால் அது பாவம். ஆனால், அவர்களுக்கு அது புண்ணியம். சாப்பிட்டதற்கு நாம் பணம் தரலாம். அது அரிசி பருப்புக்கு சரியாக இருக்கும். அவர்கள் காட்டிய அன்புக்கு? என்னைப் போல் ஊருக்கு ஊர் போய் கதை சொல்லும் ஒரு உபன்யாசகன், தன் வாழ்நாளில் இப்படி பல பேர் கையால் சாப்பிட நேரிட்டு அவர்களுக்கு கடமைப் பட்டவர்களாக மாறும் ஒரு அமைப்பு இதனாலே உருவாகிவிடுகிறது. ஆனால், என் போன்றவர்களின் வாழ்க்கை நோக்கமோ இப்பிறப்பில் நம்மால் முடிந்த நன்மைகளைச் செய்து, இதுபோன்ற நன்றிக்கடன்களில் சிக்கிக்கொள்ளாமல், பிறப்பை முடித்துக் கொள்ள வேண்டும் என்பது தான்.

அதனால்தான் கட்டுப்பாடுள்ள மனைவி மட்டும் போதும். புதுகட்டுப்பாடுகளுக்கு ஆளாக வேண்டாம் என்று, அதை ஒரு ஆசார

அனுஷ்டானமாகக் கொண்டுள்ளேன். இப்படி ஒவ்வொரு அனுஷ்டானம் பின்னாலும் ஒருவரது லௌகீக கோணத்துக்கு அப்பாற்பட்ட ஒரு பெரும்பொருள் உள்ளே இருக்கிறது. இதைத் தவறாக கருதி மலிவாகப் பொருள் கொள்ளவும் இடம் இருக்கிறது.

பிறர் கையால் உண்ணும்போது அவருக்கு நன்றிக் கடன்படுவது மட்டும் நிகழ்வதில்லை. அந்த கை வழியாக அவர்களின் குணநலன்களும் நமக்குள் புகும் வாய்ப்பும் உள்ளது. இப்படி நான் சொல்வதை அனுபவத்தால்தான் உணர முடியும்.

ஒரு சன்னியாசி ஒரு வீட்டில் சாப்பிட சென்றார். அன்று அந்த வீட்டுப் பெண்ணுக்கு உடல்நலமில்லை. எனவே பக்கத்து வீட்டுப்பெண் வந்து சமைத்து பரிமாறினாள். இறுதியாக வெள்ளிக்கிண்ணத்தில் பாயசம் சாப்பிட்டார். சாப்பிட்டுவிட்டு அந்த வெள்ளிக்கிண்ணத்தை சன்னியாசியே தன்னோடு வைத்துக் கொண்டுவிட்டார்.

மறுநாள்தான் அவருக்கு அந்த தவறே புரிந்தது. முற்றும் துறந்த நான் ஒரு வெள்ளிக்கிண்ணத்தின் மேல் ஆசைப்பட்டுவிட்டேனே... சே! என்ன ஒரு பேதமை என்று அவர் குழம்பவும்தான் - அவருக்கு சமைத்துப்போட்ட பெண்மணிக்கு திருட்டு குணம் இருப்பது தெரியவந்தது. அவர் கையால் சாப்பிடப் போய் அது சன்னியாசியையும் தொற்றிக் கொண்டது.

இப்படி சாப்பிடுவதற்கு பின்னால் நிறைய சங்கதிகள் உள்ளன. மேலோட்டமாக பார்த்து நம் விருப்பத்துக்கும் வசதிக்கும் கருத்து கூறக்கூடாது, என்று அவர் கூறவும் தான் எனக்கும் பல உண்மைகள் புரிந்தன.

இன்றைய வேகமான வாழ்க்கைப் போக்கும், பணம் சம்பாதிக்கும் நடைமுறைகளும் நம்மை பகுத்தறிவோடு கேள்வி கேட்க வைக்கின்றன. ஆனால், பகுத்தறிவுள்ள சூட்சுமமான பதில்களும் உள்ளன என்பது ஏனோ நமக்குத் தெரிவதில்லை.

காரணம், எல்லோருக்கும் கேள்வி கேட்கத் தெரிந்திருக்கிறது. சரியான விடையை சிலராலேயே சொல்ல முடிகிறது. அம்மட்டில் பெரியவர், வரும் காலத்தில் நாம் கேட்கப்போகும் கேள்விகளையும் முன்பே உணர்ந்து, நமக்கு தெளிவான பதிலினைக் கூறியிருக்கிறார்.

இன்றைய வாழ்வில் மனத்தில் ஏற்படும் சந்தேகங்களுக்கு தெள்ளத் தெளிவாகவும், நாம் குயுக்தியாக பதில் கேள்வி கேட்காதபடிக்கும் ஒரு பதிலை பெரியவரிடமும், பின் முக்கூர் அவர்களிடமும் அனுபவித்ததை பகிர்ந்து கொண்டேன்.

ஒரு ஆச்சரியம்போல், இதுவரை கேட்டதைவிட, இனி அதிகமாகவே வரும் நாளில் கேள்விகள் தோன்றும் என்பதை உணர்ந்து, அவைகளுக்கும் சேர்த்து பெரியவர் பதிலளித்துவிட்டு போயிருப்பதுதான் உன்னதம்.

சொல்ப தினங்களே குறைந்த ஒரு நூற்றாண்டு வாழ்க்கை! அதில் இளம் பிராயமான இருபது இருபத்தைந்து ஆண்டுகளை, அவர் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள எடுத்துக்கொண்ட காலமாக நாம் கருதிக் கொள்ளலாம். மீதமுள்ள 75 வருட காலமும் அதன் ஒவ்வொரு நாளும் சமுதாயத்துக்கே அர்ப்பணமானதை என்னவென்று சொல்வது?

துறவி என்பவன் அனைத்தையும் துறந்தவன். அப்படித் துறந்தவனுக்கு ஒரே இடத்து வாழ்வென்பதும் தவறு. எனவே, ஒரு இடத்தில் சில நாட்களுக்கு மேல் தங்கக் கூடாது. தங்கினாலும் கதவுகள் இல்லாத மனையில் கிடந்து, ஊர் விட்டு ஊர் போய்க்கொண்டே இருக்க வேண்டும் என்னும் இலக்கணத்துக்கு ஏற்ப, இந்த பாரத தேசம் முழுக்க அவர் சென்ற ஊர்கள்தான் எத்தனை... எத்தனை?

இன்று சிலர் மேல்நாட்டு பக்தர்களை குறிவைத்து, தங்கள் துறவுக்கோலத்தையே ஒரு முதலீடாகப் போட்டு, குளிர்ந்த ஊர்களில் ஆஸ்ரமங்கள் அமைத்து அவர்கள் தீட்சைகள் பெற ஒவ்வொன்றுக்கும் ஒரு கட்டணம் என்று வசூலிக்கிறார்களே... இவர்களா துறவிகள்?

பெரியவர் உண்மைத் துறவியாக வாழ்ந்தது மட்டுமின்றி, வாழ்நாளெல்லாம் அவர் உபதேசித்ததை என்னவென்று சொல்வது? அந்த உபதேசங்களை எல்லாம் தொகுத்து, ‘தெய்வத்தின் குரல்’ எனும் பொருத்தமான தலைப்பில் பாகம் பாகமாக வெளியிட்டு, அவர் என்றும் இந்த சமுதாயத்தோடு எழுத்துவடிவில் வாழ்ந்திட வழி செய்தவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இந்துக்களுக்கெல்லாம் எப்படி இதிகாசங்கள் இரண்டும் - அதனுள் உள்ள கீதையும் எவ்வளவு உயர்ந்தவையோ, அந்த வரிசையில் தெய்வத்தின் குரலையும் சேர்க்க வேண்டும். இன்றைக்கு பகுத்தறிவு வாதம் புரிபவர்கள், முழு மனத்தோடு துளியும் நியாயம் தவறாத அணுகுமுறையோடு தெய்வத்தின் குரலை வாசிக்க முனைந்தால்,

அவர்கள் தெளிவான ஆன்மீகத்துக்கு மாறுவது மட்டுமல்ல; தவறான சிந்தனைகளால் காலத்தை வீணடித்துவிட்டோமே என்று நிச்சயம் வருந்தவும் செய்வார்கள்.

என்னுள்ளும் அதுதான் பல ரசவாதங்களைச் செய்தது. நெடுநாட்களாகவே எனக்குள்ளே சில கேள்விகள்.

‘இறந்தபின் நாம் என்னாகிறோம்?’ ‘பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப பிறப்பெடுக்கிறோம் என்றும், பாவம் செய்தால் நரகத்தில் எண்ணெய்ச் சட்டியில் பொரித்தெடுக்கப்படுகிறோம் என்றும் நம்மைச் சார்ந்த பெரியவர்கள் கூறுவது உண்மையா? இல்லை இவர்கள் வழிவழியாக ரிலே ரேசில் டார்ச்சை கைமாற்றுவது போல ஒருவர் சொன்னதை அப்படியே சொல்லிக்கொண்டே போகிறார்களா?’

- இப்படி ஒரு கேள்வியும் சந்தேகமும் இருந்தபடியே இருந்தது. பாவ, புண்ணியங்களுக்கேற்ப பிறப் பெடுக்கிறோம் என்பதை நம் மதத்தை தவிர, மற்ற மதங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு மதம் பாவத்துக்கு தண்டனை உண்டு என்கிறது. மறுபிறப்பு பற்றி எதையும் சொல்லவில்லை. இன்னொரு மதமோ, மன்னிப்பு கேட்டால் மன்னிக்கப்பட்டு விடுகிறோம் என்கிறது.

பௌத்தமும் சமணமும் ஒரு வண்ணமிகு வாழ்க்கையையே மறுக்கிறது. கலைகளில் திளைப்பது, உலக இன்பங்களை ஆழ்ந்து அனுபவிப்பது (பின் எதற்கு அது?), பிள்ளைக்குட்டி, பாச பந்தம் போன்றவைகளில் உழல்வதை ஒரு சிறையாகக் கருதி, பசி பசிக்கு ஏதோ சாப்பிட்டு, பிறர்க்கு எந்த கிளர்ச்சியையும் ஏற்படுத்தாத மொட்டைத் தலை தோற்றத்தோடு, தியானம், யோகம் என்று தன்னையறியச் சொல்கிறது. அதனாலேயே அது பெரும் வளர்ச்சியை காண முடியாமல் போய் விட்டதோ, என்றும் எண்ணத் தோன்றுகிறது.

எனக்கு இதில் குழப்பம் என்னவென்றால், நம் மதம் பிரதானமாக பின்பற்றப்படுவது நமது பாரதநாட்டில் மட்டும்தான். நம் நாட்டு மக்கள் தொகையோ கிட்டத்தட்ட 110 கோடிகள். உலக மக்கள் தொகையில் நூறு சதவிகிதமாகக் கொண்டால், நம் நாட்டில் வாழும் இந்துக்கள் மட்டுமே ஒரு 70 கோடி பேர்தான் இருப்பார்கள். அதாவது, உலக அளவில் வெறும் பத்து சதவிகிதம்.

பத்து சதவிகிதம் பேர் நம்பும் ஒரு விஷயம்தான், உலகிலேயே உன்னதமானது என்று எதை வைத்து தீர்மானிப்பது? இந்த பத்து சதவிகிதம் பேர் கொண்டுள்ள கருத்துக்களை எதன் அடிப்படையில்

ஏற்பது? நிறைய முரண்களுடன் பட்டுக் கத்தரித்தாற்போல் ஒரு பதில் கூற ஆள் இல்லாததால்தான், நம் மதத்தை தாய் மதமாக கொண்டவர்களில் பலர் நாத்திகம் பேசுகின்றனரோ?

எனக்குத் தெரிந்து இஸ்லாமியர்களிலும் கிறிஸ்தவர்களிலும் நாத்தழும்பேற நாத்திகம் பேசுபவர்களை நான் பார்த்ததில்லை. ஆனால், சிலர் நிச்சயம் இருக்கக்கூடும். அதை மறுக்கவில்லை.

இப்படி எனக்குள்ளே கேள்விகள்.... கேள்விகள் கேள்விகள்...

இதற்கான பதில்கள் ஆணித்தரமாக எந்தவொரு ஆன்மீக கூட்டத்திலும் கிடைத்ததில்லை. அந்த நாளில் புலவர் திலகம் கீரன் அவர்கள் வில்லிபாரதத்தை பிரித்து மேய்வார். அந்தக் கதையை மிக ரசமாகச் சொல்வார். ஏற்ற இறக்கங்கள் மிக நன்றாக இருக்கும். அவர் அற்புதமான கதை சொல்லி... அடுத்து கிருபானந்த வாரியார்! வாரியார் சுவாமிகளும் அற்புதமான கதை சொல்லி. சில தத்துவங்களை வெகு எளிமையாக சொல்வதில் வித்தகர். இலக்கிய நயம் உள்ள பேச்சுக்கு சொந்தக்காரர். கடவுள் இருப்பதை நிரூபிக்க முடியுமா? என்றோ, அவரைக் கண்ணால் காட்ட முடியுமா? என்றோ, நாம் கேட்டால் ஒப்புக்கொள்ளும் விதமாக, ‘ஒரு நாற்காலி இருக்கிறது, ஒரு மாட்டு வண்டி இருக்கிறது, ஒரு சட்டி பானை இருக்கிறது - இதை எல்லாம் செய்ய ஒருவன் இருக்கும்போது, உன்னையும் என்னையும் இந்த உலகையும் செய்ய ஒருவன் இருந்து தானே தீர வேண்டும்’ என்று திருப்பிக் கேட்டு திகைக்க வைப்பார்.

சரி, கண்ணில் காட்டுங்கள் என்றால், காற்றை நாம் பார்க்க முடியவில்லை - அதனால் அது இல்லை என்றாகிவிடுமா? - அவனை உணரலாம். உணர்வின் உச்சத்துக்கு சென்றால் காணவும் இயலும் என்பார்.

இந்த பதில்களை மறுப்பதற்கில்லை.

அதேசமயம், இது எம்மதத்தவர்க்கும் பொருந்தும் அல்லவா? ஆனால், அந்த கடவுள் நம் மதம் வலியுறுத்தும் ஆதிபராசக்தியா? இல்லை வைணவர்கள் கூறும் மகா விஷ்ணுவா? சைவர்கள் போற்றும் சிவபெருமானா? இஸ்லாமியர்களின் அல்லாவா? கிறித்தவர்களின் ஏசுவா? அவர் யார் என்று கேள்வி எழுப்பப்படும்போது, அது அவரவர் நம்புவதையும், பின்பற்றுவதையும் பொறுத்ததாகிவிடுகிறது. ஐந்து பூதங்கள் உலகப் பொதுவாக உள்ளது. ஆறாவது பூதமாய் இந்த ஐந்தின் கலப்பில் உருவான மின்சாரமும் உலகப் பொதுவாக உள்ளது.

மண்ணில் மனிதர்களுக்காக விளைவதெல்லாம் உலகப் பொதுவாக உள்ளது.

கடவுளர்கள் மட்டும் எதனால் இத்தனைபேர்? என் கடவுளே பெரியவர் என்று அவரவரும் நம்புவதும் பேசுவதும் அவர்கள் வரையில் சரியாக இருக்கலாம்?

பொதுவில்...?

‘இறந்தபின் என்னாகிறோம்?

மறுபிறப்பு உண்டா இல்லையா?’ என்கிற இரு கேள்விகளில் தொடங்கி, அதற்கான விடையை தேடத் தொடங்கியதில், கடவுளர்களே பலவாகி உலகப் பொதுவாய் ஒரு கடவுள் ஏன் இல்லை என்பதில் வந்து முடிந்திருக்கும் என் சந்தேகமும் குழப்பமும் இதை வாசிப்பவர்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேருக்கு நிச்சயம் இருக்கும் என்பது என் நம்பிக்கை.

மீதமுள்ளவர்கள் இதுகுறித்து, சிந்திக்க அவசியமோ வாய்ப்போ ஏற்படாத ஒரு வாழ்க்கைப்போக்கில் இருக்கக்கூடும்.

சரி; இதற்கெல்லாம் சரியான பதிலை பெரியவர் சொன்னாரா என்று கேட்கலாம். இதற்கான பதில்களை மட்டுமல்ல; எனக்குத் தெரிய, பாரத தேசம் கடந்து உலகின் மற்ற பாகங்களுக்கு சென்றிராத இந்த துறவி, இந்த உலகின் மற்ற பாகங்கள் குறித்தும், அவ்வளவு ஏன்? விண்ணில் இருப்பதாகக் கருதப்படும் ஏனைய கோள்கள் மற்றும் ஆத்மா - பரமாத்மா - ஜீவாத்மா - பிரம்மம் - ஈஸ்வரம் - மோஷம் - நரகம் குறித்தெல்லாமும், தன் தவத்தாலேயே தெளிந்து, அதை உபதேசித்தும் இருப்பதைக் கண்டு பிரமிப்பில் புதைந்துபோனேன்.

என்ன காரணமென்றால்; மருந்திருக்க நோயோடு அவதிப்படுவது எவ்வளவு முட்டாள்தனம்? அதுபோல இப்படி ஒரு துறவியிருக்க, அவரது உபதேசங்களிருக்க அற்ப நாத்திக மயக்கங்களுக்கும், விஞ்ஞான வித்தகங்களுக்கும் நிறைய இடம் கொடுத்து, அவைகளையே பெரிதாக கருதிவிட்ட என் சில காலப்போக்கு என்னை வருத்தியது; உறுத்தியது.

ஆனாலும், உண்மையை தேடிய சத்யத்தை புரிய விரும்பிய நோக்கம் மிக நேர்மையானதாக இருந்தபடியால்தான், பெரியவர் மூலம் தெளிவுற நேர்ந்தது என்பதை உணர்கிறேன்.

ஆம்: ஆழமான உள்ளுணர்வுகள் - மிகத் தீவிரமான உள்ளுணர்வுகள்

மிக சக்தி வாய்ந்தவை. அவைகளின் இலக்கு ஒரு நாள் அடையப் பெற்றே தீரும். இதை வைத்தே 'நீ தீவிரமாக எதை விரும்புகிறாயோ அதை அடைவாய்' என்று உளவியல் அறிஞர்களும் கூறுகின்றனர். அதனால்தான் அமரத்துவத்துக்கு மிகச்சரியாக ஒரு மாதம் முன்னால், தம் நட்சத்திர நாளன்று, அதே உள்ளுணர்வால் என்னை அழைத்து எனக்கு நேத்ர தீட்சையையும், திருவடி தீட்சையையும் ஒருசேர அளித்தார் பெரியவர்.

இன்றளவும் தியானித்து அமர்ந்துவிட்டால், மனத்துன்பம் எதுவாக இருப்பினும் அதற்கொரு தீர்வு அதற்கேற்ப கிடைத்தும் வருகிறது.

சரி, அந்தக் கேள்விகள் - அவற்றுக்கான விடைகளை, வரிசையாக பார்ப்போமா?

20

ஒரு மனிதரை புதிதாக நாம் சந்திக்கையில் அல்லது: அவரோடு நமக்கு யார் மூலமாவது அறிமுகம் ஏற்படுகையில், அவரைப் பற்றிய ஒரு சில தகவல்கள் நமக்கு அளிக்கப்படும். குறிப்பாக, அவர் மிக நல்லவர், சாதுவானவர், நிறைய படித்தவர், பெரிய பரோபகாரி என்கிற செய்திகளோடு, நல்ல பக்திமான் என்பதையும் சேர்த்தே சொல்லக் கேட்டிருப்போம்.

இந்த பக்திமான் என்கிற ஒரு விஷயமே, நமக்கு ஒரு பெரும் நிறைவைத் தந்துவிடும். காரணம் ஒன்றுதான். இறைபக்தி கொண்ட ஒருவரிடம் பாபபுண்ணியம் குறித்த சிந்தனை நிச்சயமாக இருக்கும். அதில் பாவம் என்பது செய்யக்கூடாத வினை - புண்ணியம் என்பது செய்யக் கூடிய ஒரு வினை என்கிற ஒரு தெளிவுமிருக்கும்.

பாவம் செய்ய அஞ்சுபவர்களோடுதான் நம்மாலும் அச்சமின்றி பழகமுடியும். ஆக இந்த பக்தி, ஒரு பரஸ்பர இணக்கத்துக்கு பெரிதும் உதவுவதாக இருக்கிறது.

ஆச்சரியம் என்னவென்றால், இந்த பக்தியை ஒரு கூட்டமே பெரும் பலவீனமாக, மனத்தின் மிகப்பெரும் அச்சமாக எண்ணிக்கொண்டு, இதை ஒதுக்கி வைத்துள்ளதோடு, பக்தி உணர்வுடையவர்களைக் காணும்போதும் இவர்களிடம் ஒரு ஏளனம் தொனிக்கும்.

இந்தக் கூட்டத்தில், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், பேச்சாளர்கள் என்கிற இனத்தாரையும் பார்த்திருக்கிறேன். பக்தியை ஒரு பலவீனமாய்

- பயமாய் காணும் ஒரு போக்கை கண்டிருக்கிறேன். இன்றும் கண்டு வருகிறேன்.

காலமாகிவிட்ட ஒரு பெண் எழுத்தாளரிடம், இது தொடர்பாய் ஒரு முறை நான் விவாதம் செய்யவும் நேர்ந்தது. பிள்ளையார் சுழி போட்டு எதையும் எழுதத் தொடங்கு வதை, அடுத்து அந்த சுழிக்கு கீழே வேங்கடாசலபதி துணை என்றோ, முருகன் துணை என்றோ எழுதுவதை எல்லாம் அவர் சகட்டுமேனிக்கு கிண்டல் செய்தார்.

“நம்ம மக்களுக்கு ஒரு துணை இல்லநாம தனிச்சு நிற்கவே தெரியாது. சின்ன வயசிலேயே, இப்படி சார்ந்து நிற்க நாம் நம் பிள்ளைகளையும் பழக்குகிறோம். கேட்டால் பக்தி என்கிறோம். நாம் பக்தி புரியும் தெய்வமோ ஒரு நகை ஸ்டாண்டாக கிரீட குண்டலத்தோடு குறைந்தது 500 பவுன் நகையோடுதான் நிற்கிறது. அட அதாவது தரையில் நிற்கிறதா? தாமரைப் பூ மேல்தான் அதுவும் நிற்கிறது.

இன்னொன்றோ, வாயில்லாபூச்சியான மாட்டின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறது. இன்னொன்று மயிலின் மேல் (அதற்கு ஏற்கனவே அதன் தோகை ஒரு பெரும் சுமை) அமர்ந்து கொண்டிருக்கிறது. இது உட்கார தரையில் இடமில்லையா? மிருகங்கள் என்றால் தெய்வத்துக்கும் இளப்பமா? என்ன இந்திரா... இதை எல்லாம் எப்படி நம்மால் ஏற்றுக்கொள்ள முடியும்? நீங்களே சொல்லுங்களேன்” என்று என்னிடமும் கேட்டார்.

இது ஒரு அப்பட்டமான நாத்திக வாதம். ஆனால், நாத்திகர்கள் போல நரம்பு முறுக்கேற உணர்வு மிகுதியோடு பேசாமல், ஏளனமும் வருத்தமும் தொனிக்க அவர் என்னிடம் கேட்டார்.

அவர் கேட்ட விதத்தில் நானும் சற்று ஆடித்தான் போனேன். அதற்கு நறுக்கு தெரித்த மாதிரி ஒரு பதிலை, அப்போது கூறமுடியவில்லை. ஆனால், “இதெல்லாமே பிரிண்டிங் மீடியா என்று ஒன்று வந்ததற்கு பின்னால் வந்தவை. இந்த உருவங்களை வரைந்தது சில மனிதர்கள்தான். மனிதர்களிடம் இருந்து தெய்வங்களை வேறுபடுத்தியும் உயர்த்தியும் காட்ட அவர்கள் இப்படி வரைந்துள்ளனர். இதை வைத்து கடவுளை, மனிதர்களை அணுகுவது போல அணுகுவது எனக்கு சரியாக படவில்லை” என்றேன்.

“உங்கள் பதில்லயும் கொஞ்சம் உண்மை இருக்கு ஒப்புக்கறேன். ஆனால், என் வரையில் இங்கே கடவுள், அன்பைக் காட்ட பயன்படுவதை விட, பயம் காட்டவே அதிகம் பயன்படுகிறார்.

அவரால்தான் எல்லாமே படைக்கப்பட்டிருக்கிறது எனும்போது, அவர் யாருக்கு பயந்து கொண்டு அல்லது யாரை பயமுறுத்த இத்தனை ஆயுதங்களோடு காட்சி தருகிறார். 'அன்பேசிவம்' என்னும் சிவத்துக்கு எதற்கு திரிசூலம்?" என்று அடுத்த கேள்வியை கேட்டார். எனக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

"தப்பா எடுத்துக் கொள்ளாதீர்கள். நான் கடவுள் வேண்டும் என விரும்புபவன். ஆனால், நம் கடவுள் நம்பிக்கையில் உள்ள முரண்கள் ஏற்றத்தாழ்வுகள் இப்படி கேட்கவிடுகின்றன. அடுத்து நாம் பார்க்க, தவறு செய்தவன் சந்தோஷமாக வாழ்கிறான். ஒரு பாவமும் அறியாதவன் பாடாய் படுகிறான். கடவுள் என்று ஒருவர் இருந்தால், இப்படி நடக்கவிடுவாரா?" என்றார்.

இந்த மாதிரி கேள்விகள், நம்மில் பலரிடமும் உண்டே? வீட்டுப் பெரியவர்களிடம் இதற்கு விடை கேட்டால், அவர்களுக்கே முதலில் தெளிவாக தெரிந்தால் தானே?

பொத்தாம்பொதுவாக, "கடவுளையே கேள்வி கேட்கற அளவுக்கு நீ பெரியவனாயிட்டியா? இதெல்லாம் பெரும் குற்றமாகி, பாவமாகி, அப்புறம் அதை அனுபவிக்க வேண்டி வரும்" என்று அவர்கள் வாயடைக்கப் பார்க்கின்றனர். ஆனால், பெரியவர் இதற்கு வெகு அழகான - தெளிவான பதிலை கூறிவிட்டுப் போனதை, நான் 'தெய்வத்தின் குரலில்' வாசித்தபோது என் உள்ளம் பூரித்துப் போனது.

எது 'பக்தி? என்ற கேள்விக்கு இதோ பெரியவரின் தெளிவான, திடமான, இதமான பதில்.

"ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு இருக்கிறது. பௌதிக விஞ்ஞானம் முழுவதும் இந்த காரணம் மற்றும் விளைவு (cause & effect) பற்றிய விதிகளைக் குறித்தேயாகும். மாற்ற முடியாத இந்த விதிகளாலேயே உலகம் ஒழுங்குடன் இயங்குகிறது. ஏதோ ஒரு பேரறிவு அல்லது பெரும் சக்தி இருப்பதால்தான், இப்படிப்பட்ட விதிகள் உண்டாகி, அவைகள் எல்லாம் ஒழுங்காக இணைந்து உலக வாழ்வும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

காரணமில்லாமல் காரியமில்லை என்பதுதான் பௌதிக விஞ்ஞானத்தில் கோட்பாடு. என்றால், நாம் பிறக்க ஒரு காரணம் - நாம் காரியமாற்ற ஒரு காரணம் இருந்துதானே தீரவேண்டும்?

நல்லது செய்தால் நல்லதையும், தீயது செய்தால் பதிலுக்கு தீயதையும்

அடைவதும் இந்த காரணகாரிய அடிப்படையால் தானே?

இந்த காரணத்தையும் காரியத்தையும் செய்கிற அந்த பேரறிவை அல்லது பெருஞ்சக்தியை ஈஸ்வரன் பகவான், ஸ்வாமி, கடவுள், பரமாத்மா என்று பல பெயர்களில் அழைக்கிறோம்.

இப்படி அழைக்கும் மனது, சதா இயங்கிக்கொண்டே இருக்கின்ற ஒன்று. இது நல்லதோடு கெட்டதையும் நினைக்கத்தான் செய்யும். புண்ணியத்தோடு பாபத்தையும் செய்துகொண்டே இருக்கும். பாபத்துக்கு விளைவான கஷ்டங்களை மனதும் பெரியதாக கருதும். புண்ணிய விளைவான சந்தோஷத்தையோ சாதாரணமாக எடுத்துக் கொள்ளும்.

இந்த கஷ்டத்தின்போது, வலி தாங்காமல் போகும்போது, அதைப் போக்கிக் கொள்ள உருவானதே பிரார்த்தனை. இது ஒரு வித மனோபாவம்.

இதுதான் பக்தியாகிறது”

பக்திக்கு இப்படி விஞ்ஞானத்தைத் தொட்டு, உளவியல் பூர்வமாக ஒரு பதிலைக் கூறும் பெரியவர் தொடர்கிறார்:

“எப்போது - பார்த்தாலும் காரியம் செய்து கொண்டிருப்பது நமக்கு இயல்பாகிவிட்டது. உடம்பால் காரியம் செய்யாத போதும், வாக்கால் பேசி காரியம் செய்யாத போதும், மனதானது சதா எதையாவது நினைத்தபடியே தான் இருக்கிறது. இதுவும் காரியம்தான். இந்த காரியம் நின்றால் தான் - அதாவது, மனத்தில் எண்ணங்களே இல்லாமல் போனால்தான், பிரம்ம நிலையை அடைய முடியும்.

ஆனால், அதுதான் முடிய மாட்டேன் என்கிறதே? எதையும் நினைக்காமல் ஒரு வினாடிகூட இருக்க முடியவில்லையே? எதையும் நினைக்காமல் மனத்தை நிறுத்தப் பழக்குவது எப்படி?

இதற்கு ஒரே வழிதான். அதுதான் பக்தி செய்வது. பிரம்மம் ஒரு காரியமுமில்லாதது. நாமோ சதா காரியமாக உள்ள மனம் கொண்டிருக்கிறோம்.

காரியமில்லாத பிரம்மத்தையோ, காரியமில்லாத மனத்தால் மட்டுமே உணரமுடியும். ஆனால், அது முடியவில்லை. பரவாயில்லை. காரியமில்லாத பிரம்மம்தான் இந்த உலகை இயக்குகிற ஈஸ்வரனாக உள்ளது. காரியமே இல்லாத பிரம்மம், நமக்காக காரியமாற்றும்

ஈஸ்வரனாகவும் உள்ளது. இந்த காரியமாக உள்ள ஈஸ்வரனை - சதா காரியமாக உள்ள மனத்தால் சிந்தனை செய்வது எளிது. அதாவது, 'தியானிப்பது, உடம்பால் நமஸ்காரம், பூஜை, வாக்கால் ஸ்தோத்திரம், மனசால் தியானம்' என்று சகல காரியங்களையும் ஈஸ்வரனை உத்தேசித்து செய். ஈஸ்வரன் உன்னை மிக சுலபமாக பிரம்மஞானத்தில் கொண்டு சேர்த்துவிடுவான்.

இந்த ஈஸ்வர சிந்தனைக்கு பெயர்தான் பக்தி.

மனிதன் மனத்தின் இயல்புக்கு ஏற்ப உருவான ஒரு மேலான உணர்வு நிலைதான் பக்தி. இந்த பக்தி உள்ள மனத்தால் இறைவன் கல்யாண குணங்களை, பேரழகை, திருவிளையாடல்களை நாம் எண்ண எண்ண, தியானிக்க தியானிக்க நாமும் அதுவாகவே ஆகும் தன்மை உருவாகிறது.

விஞ்ஞானிகளும் இதைத்தானே கூறுகிறார்கள். நீ எதை தீவிரமாக எண்ணுகிறாயோ, அதுவாகவே ஆகிறாய் என்று"

பக்தி எப்படி பிரம்மத்திடம் நம்மைக் கொண்டு சேர்க்கிறது என்பதை, அவர் விளக்கி முடிக்குமிடத்தில் இறைவனின் கல்யாண குணங்களை, பேரழகை, திருவிளையாடல்களை நாம் எண்ண எண்ண தியானிக்க தியானிக்க நாமும் அதுவாகவே ஆகும். அந்த உளவியல் சார்ந்த உண்மையை நான் கப்பென்று பிடித்துக்கொண்டேன்.

"கடவுளுக்கு எதற்கு இத்தனை அலங்காரம்? எதனால் அதன் கையில் ஆயுதங்கள் - அது அதைக் கொண்டு நானிருக்கிறேன் என்று நம்மை தேற்றுவதும், நம் பயம் போக்குவதும் எதனால் என்பதற்கெல்லாமும் விடை கிடைத்தது.

இந்த மட்டோடு பக்தி குறித்து பெரியவர் முடித்து விடவில்லை. இது பக்திக்கான நுழைவாயில்தான்.

பக்தியில் காரணபக்தி, காரியபக்தி காரணமே இல்லாத பக்தி மற்றும் முக்திக்கு முந்தைய நிலை, நம்மையே நமக்கு தரும் பக்தி என்று அடுக்கடுக்காக அவர் விளக்கிக் கொண்டே போய் விஸ்வரூபம் எடுத்து நிற்கவும் நான் பிரமித்தேன்.

நம் அறிவுதான் எத்தனை அவசரப்படுகிறது. இவ்வளவு விஷயங்கள் இருக்க இதை, உணர முடியாமல் வேகமாக சந்தேகப்படவும், கேள்வி கேட்கவும் மட்டுமே முடிந்த அந்த அவசர அரைவேக்காட்டு நிலைக்காக

நான் பெரிதும் வருத்தப்பட்டேன்.

சரி... அது என்ன காரண பக்தி, காரிய பக்தி, காரணமே இல்லாத பக்தி மற்றும் முக்திக்கு முந்தைய நிலை? பார்ப்போமா...

21

பெரியவரின் பக்தி குறித்த வியாக்யானத்தில், எது பக்தி? என்பதற்கு விளக்கமளிப்பவர், பக்தியை காரண பக்தி, காரணமில்லாத பக்தி, முக்திக்கு முந்தைய பக்தி என்று பலவாறு இனம் பிரித்தும் விளக்குகிறார்.

அதில் எது பக்தி? என்பதற்கான வியாக்யானம் இன்னமும் தொடர்கிறது.

‘ஒரே பேரறிவுதான் இத்தனை பிரபஞ்சங்களாகவும் ஜீவராசிகளாகவும் தோன்றுகிறது. இந்தத் தோற்றத்தை நாம் போக்கிவிட்டுப் பார்த்தால், பேரறிவு மட்டும்தான் எஞ்சி நிற்கும். இந்நிலையில் காரியமே கிடையாது.

காரியம் வேண்டுமானால் - பிரபஞ்சம், ஜீவராசிகள், பஞ்சபூதங்கள் என்றெல்லாம் வேண்டும். இவைகளுக்கான நிர்வாகமும் வேண்டும். இவை எதுவும் இல்லாது போகும்போது, பேரறிவு மட்டுமே மிஞ்சி நிற்கிறது. இந்தப் பேரறிவைத்தான் நம் சான்றோர்கள், ‘பிரம்ம சாஷாத்காரம்’ என்றனர். இந்த பிரம்ம சாஷாத்காரம் பற்றி புரிந்து கொள்ளாமல், இதன் காரியமான பிரபஞ்சத்தையும் ஜீவராசிகளையும் நம் மனது பற்றிக் கொண்டுவிடுகிறது. இதற்குக் காரணம் மாயை! இந்த மாயைதான் ஒன்றான பிரம்மத்தை பலவாறு காட்டுகிறது. அதேசமயம் இந்த மாயா, இந்த பிரபஞ்சத்தை அற்புதமான ஒரு ஒழுங்குக்கு உட்பட்டு இயக்கியும் வருகிறது. யோசித்துப் பாருங்கள். உருண்டையான இந்த பிரபஞ்சம் ஆகாயத்தில் ஆயிரமாயிரம் நட்சத்திரங்கள் மற்றும் கோள்களைப் போல ஒன்றாகும். இந்த ஒன்று நிமிர்ந்து நேராக இல்லாமல், சில டிகிரி சாயுமானத்தோடும் பின் தனக்குத்தானே சுழற்சியோடும் இருப்பது எப்படி? இப்படி சாயுமானத்தோடு கூடிய சுழற்சி இல்லாவிட்டால் - இரவு பகலோ, பருவ காலங்களோ இந்த பிரபஞ்சத்தில் உருவாக வாய்ப்பில்லை. இது நம் சாதாரண அறிவுக்கே புரியும் ஒரு எளிய விஷயம்.

இதை திட்டமிட்டுச் செய்த அந்தப் பேரறிவைத்தான் பிரம்ம

சாஷாத்காரம் என்றும், ஒருபடி இன்னும் மேலே போய் ஈஸ்வரன் என்றும் கூறுகிறோம்.

இத்தனை பெரிய பேரறிவாளனிடம் - அதாவது ஈஸ்வரனிடம் நாம் வைக்கும் நம்பிக்கைக்கும் வியப்புக்கும் பேர்தான் பக்தி. இந்த ஈஸ்வர சிருஷ்டிதான் இந்த பூமி, இதில் உள்ள கோடானுகோடானுகோடி உயிர்கள். அந்த உயிர்களில் ஒரு உயிர்த்துளிதான் நான்; நீங்கள்; நாம்!

நமக்கு ஒரு கஷ்டம் இருக்கிறதென்றால், அதற்கு காரணம் நம் கர்மா. இங்கேதான் காரணமில்லாமல் காரியம் என்பதே இல்லையே என்றால், நம் கஷ்டத்துக்கும் காரணம் நம் கர்மம்தான். அந்த கர்மத்தைச் செய்ததும் நாம் தான். எப்படி இந்த பிரபஞ்சம், வகுக்கப்பட்ட பௌதிக விதிகளின்படி சுற்றிவந்து எல்லாம் நடக்கிறதோ, அதே விதிப்படிதான் நமக்கும் எல்லாம் நடக்கிறது.

ஒரு வேடிக்கை என்னவென்றால், நம் கஷ்டத்துக்குக் காரணம் நாம் என்பதை மறந்து, நாம் இந்த ஈஸ்வரனிடம் அதைப் போக்கச் சொல்லி முறையிடுகிறோம். இங்கே நாம் ஒரு கேள்வியைக் கேட்டுக் கொள்ளத் தவறிவிடுகிறோம்.

இத்தனை பெரிய பிரம்ம சாஷாத்காரத்துக்குக் காரணமான ஈஸ்வரனுக்கு நம் கஷ்டம் தெரியாது! அதை நாம் தெரிவித்தால்தான் அவனுக்குத் தெரியும் என்று எண்ணிப் புலம்புகிறோமே! அதுதான் அந்தத் தவறு.

இந்தத் தவறுடன், நாம் புரியும் பக்தி ஒரு தோஷமுள்ள பக்தி என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், நாம் இப்படி நினைப்பதால், அவனுடைய சாட்சாத்காரத்துக்குள் ஒரு குறை இருப்பதுபோல் ஆகிவிடுகிறது. அதாவது, அவன் வரையில் நாம் தெரிவித்தால்தான் நம் கஷ்டம் தெரியும்; இல்லாவிட்டால் அவனுக்குத் தெரியாது என்றால், அது அவனிடம் குறை இருப்பது போன்றதுதானே?

இது எவ்வளவு பெரிய பேதமை?

ஆனாலும், அவன் நமது இந்தப் பேதமையை மன்னித்து, நம் பிரார்த்தனைகளை ஒன்றும் தெரியாதவன் போல கேட்டுக்கொள்ளத்தான் செய்கிறான்.

இந்த உலகில் நாம் வாழும்வரை - லௌகிக கஷ்டங்கள், ஒன்று மாற்றி ஒன்று வந்தபடியேதான் இருக்கும். இதைப் புரிந்துகொண்டு, ‘நீ எப்படி

விட்டாயோ அப்படியே ஆகட்டும்' என்று சரணாகதி செய்துகொள்வதுதான் உண்மையான பக்தி.

இந்த உலகில், நாம் யார்மேல் அன்பு, பாசம் வைத்தாலும் ஒருநாள் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போய்விடும் நிலை இருக்கிறது அல்லது நாம் அவர்களை விட்டுப் பிரிந்துவிடுகிறோம். இந்த அன்பை ஈஸ்வரன் மேல் வைத்து சரணாகதி செய்துவிட்டால், நமக்குப் பிரிவென்பதே இல்லை. இந்த அன்பு பக்தியாகி, சரணாகதியாகி ஒரு கட்டத்தில் நமக்கு எல்லா ஞானத்தையும் கொண்டு தந்துவிடுகிறது. இதுதான் பக்தி, அசல் பக்தி. அப்பழுக்கில்லாத பக்தி!

இனி, காரணமில்லாத பக்தியைப் பற்றிப் பார்ப்போம். பக்தியின் நோக்கம் முக்தி அடைவது என்பதுதான். ஆனால், இந்த முக்தி பக்தியால் கிடைத்துவிடாது. பக்தி ஒரு படி மேலேற்றி ஞானத்திடம் தள்ளிவிடும். அந்த ஞானம் தான் முக்திக்கான வழியைக் காட்டும்.

சரி, எது முக்தி?

பிறப்பதும் இறப்பதுமாக இல்லாமல், பிறப்பற்றுப் போய், அந்த பரமாத்மாவோடு கலந்துவிடுவதே முக்தி. இதற்கு ஒவ்வொருவருக்கும் அவரவர் மனசும் இல்லாது போக வேண்டும். மனம் என்று ஒன்று இருப்பதால்தான் உலகம் தெரிகிறது. மனைவி, பிள்ளை குட்டி, பாசம், பற்று எல்லாம் அதில் தெரிகிறது. இந்த மனத்தை இல்லாமல் செய்ய வேண்டும்.

பக்தி செய்வது மனத்தால்தான்... பக்தி செய்யும் போது மனசு உருகும்; ஆனந்திக்கும்; பரவசப்படும். இதைத் தீவிரமாக்கும்போது, மனசு அப்படியே ஒடுங்கி ஆத்மா தெரியும். ஆத்மா தெரிந்துவிட்டால், முக்தி கிடைத்து விட்டதாக அர்த்தம்.

ளசிலர் வைகுண்டத்துக்குப் போவதையும், கைலாசத்துக்குப் போவதையும் முக்தி என்பார்கள். அது ஒருவித பாவனை! கொஞ்சம் அதில் தோஷம் உள்ளதென்றால் தவறில்லை. முக்தி என்பது பூலோகத்தில் இருந்து இடம் மாறுவதுபோல் ஒரு அர்த்தம் இதனால் வந்துவிடுகிறது. வைகுண்டம், கைலாசம் என்பதும் இடமல்ல; அது நிலை! வைகுண்டம் என்பது விஷ்ணு நிலை; கைலாசம் என்பது ஈஸ்வர நிலை.

இப்படி நிலை இரண்டாக இருக்கிறது என்பதே நல்ல ஞானமல்ல. இரண்டாக இருந்தாலும், அது ஒன்றே என்று உணர்வதே ஞானம். அந்த

ஒன்றுக்கு நாம் இரண்டு பேர் வைத்துள்ளதாகச் சொல்வதுதான் சரி.

அது ஒன்று! அதை நாம் நம் ஆத்மாவில் உணர்வதே முக்தி. இந்த முக்திக்கு பக்தி ஒரு தொடக்கம். பக்தி இல்லாமல் முக்தியிடம் வர ஏலாது.

பக்தியால் - ஈஸ்வரனை அல்லது விஷ்ணுவை, இல்லை பேரறிவை தியானிக்க தியானிக்கத்தான், மனசு மெல்ல மறைந்து ஆத்மா தெரியும்.

இந்தப் பேரறிவைத் தியானிக்க சுலபமான வழி தான் - விஷ்ணுவாக, ஈஸ்வரனாக எண்ணிக்கொள்வது. வெறுமனே அவர்களை ரூபமாக மனத்துக்குள் எண்ணிக் கொண்டால் ஆயிற்றா? அவர்களின் கருணை, அவர்களின் வீரம், அவர்களின் வாத்சல்யம் இதை எல்லாம் எண்ண வேண்டும். இப்படி எண்ண வேண்டும் என்பதனால்தான் புராணங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அதைச் சொல்ல பௌராணிகர்கள் தோன்றினார்கள். அவர்கள் சொல்லச் சொல்ல, நாம் கேட்கக் கேட்க - நம் மனசுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக விஷ்ணுவும் ஈஸ்வரனும் இல்லை, அந்த சக்தியும் முருகனும் அதுவுமில்லை, அந்த கணபதியும், சூரியனும் நிரம்புவார்கள். இடைவிடாமல் கேட்டு மனம் முழுக்க அவர்களை நிரப்பிவிட்டால் அல்லது அவர்கள் நிரம்பிவிட்டால் மனைவி, மக்கள், வீடு, வாசல், பற்று, பாசம் எல்லாம் விலகிப்போகும்.

இப்போது மனோநாசம் ஏற்பட்டு ஆத்மா தெரியும். இந்த நொடியில் நாமே நம்மை பிரம்மமாக உணர்வோம். இதுதான் மனிதன் கடவுளாகிற நிலைப்பாடு.

மனம் செத்தாலே ஆகமுடியும். ஆனால், சாகாத மனத்தைக் கொண்டு பற்று, பாசத்தோடு வாழ்ந்தபடி எனக்குள்ளேயும் கடவுள் இருக்கிறார்; ஆகையால் கடவுள் வேறு நான் வேறு இல்லை என்று பேசுவது மனசின் மாயா குணத்தின் உச்சம். எப்படி சாப்பிட்டு விட்டதாக நினைத்துக்கொள்வதால் வயிறு நிரம்பி விடாதோ, அப்படித்தான், மனத்தைக் கொண்டு நானும் கடவுள், எனக்குள்ளும் கடவுள் இருக்கிறார் என்று கூறுவதும்!

மனத்தை அடக்கி ஆத்மாவைக் கண்டுவிட்ட நிலை தான் முக்தி. இந்த நிலைவரை சென்றுவிட்டவர்கள் திரும்பப் பிறக்க வாய்ப்பில்லை. ஆனாலும், இது உயிர்நீத்த பின்தான் நடக்க வேண்டும் அல்லது நடக்க முடியும் என்று சிலர் கருதிக்கொண்டிருக்கின்றனர்.

அது தவறான கருத்து.

உயிர் உடம்பை விட்டுப் பிரியாத நிலையில், மனத்தை இல்லாமல் போக்கி தங்கள் ஆத்மாவை அறிந்து கொண்டவர்கள், அதன்பின் இந்த உயிர் உடம்போடு ஒட்டிக் கொண்டிருக்கும் நிலையில், தொடர்ந்து ஈஸ்வர லீலையை எண்ணி வியந்த நிலையில், அப்படியே ரிவர்ஸில் திரும்பி வந்து, தொடக்கத்தில் புரிந்த பக்தியை அப்படியே தொடர்கிறார்களே... அதற்குப் பேர்தான் காரணமில்லாத பக்தி. இப்படிப் பக்தி புரிந்த ஞானியர் பலர் இருந்துள்ளனர்.

முக்தி கிடைத்துவிட்டது. ஆத்மா புலனாகிவிட்டது. இந்த லோக வாழ்க்கையை விட்டொழிக்க வேண்டியதுதானே? ஆனால், அதைவிடப் பெரிது ஈஸ்வர பக்தி என்று பக்தி செலுத்துகிறார்களே... அதற்குப் பேர்தான் காரணமில்லாத பக்தி!

பக்தியின் நோக்கம் முக்தி. இது காரணமுள்ள பக்தி. அந்த முக்தியை அடைந்தபிறகும் பக்தியைத் தொடர்வது காரணமில்லாத பக்தி.

இங்கே சதாசிவ பிரம்மேந்திராளின் பக்தி விளக்கத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். 'சிவமானசீக பூஜா' என்கிற ஸ்தோத்திரத்தில் அவர்,

'மஹ்யம் தேஹி ச பகவன்

மதீயமேவ ஸ்வரூபம் ஆனந்தம்' என்று கூறி பிரார்த்திக்கிறார். இதற்குப் பொருள் என்ன தெரியுமா? 'என்னையே எனக்குக் கொடு' என்பதுதான்!

இதற்குப் பொருளை யோசிப்போம். இப்போது நாம் எல்லோரும் நம் நிஜ ஸ்வரூபத்தை விட்டுவிட்டு வேஷத்தில் இருக்கிறோம். நாம், நமக்கு வேண்டிவர்களைப் பிரிந்தால் தவித்துப்போகிறோம் என்றால், நாம் நம்மையே பிரிய எவ்வளவு தவிக்க வேண்டும்? யோசித்துப் பாருங்கள்.

உண்மையான பக்தன் ஒருவன் பரமேஸ்வரனுக்கு பூஜை செய்ய விரும்புகிறான். அவனுக்குள் ஒரு சந்தேகம்.

'ஈஸ்வரன்தான் இந்த பிரபஞ்சம். அத்தனை பெரியவனது திருவடிகளை எனது உத்தரணி தீர்த்தத்தால் அலம்ப முடியுமா? இது முதல் சந்தேகம். அடுத்து, அந்தத் திருவடிகளை வணங்கலாமென்றால், நீ எல்லாத் திசையிலும் இருக்கிறாய். அதனால், என் காலடியை உனக்குக் காட்டாமல் நான் சேவிக்கவே முடியாதே என்னும் கேள்வி அடுத்த சந்தேகம். சரி, உன்னைப் பிரார்த்திக்கலாம் என்றால், உனக்குத் தெரியாததை நான் கேட்பதாக ஆகிறது. உனக்குத் தெரியாத ஒன்றே இல்லாதபோது, நான் பிரார்த்திக்கவும் முடியாது. பிரார்த்தித்தால் அது

தோஷம்.

இப்படி உன்னை பூஜிக்க எண்ணும்போது, என்னுள் கேள்விகள்... குழப்பங்கள்... இது என் வரையில் குறை! சரி, இந்தக் குறை நீங்க, உன்னைப் பிரார்த்திக்கிறேன். அது சரி, எல்லாமான உன்னிடம் எதைப் பிரார்த்திப்பது? எல்லாமான நீயேதான் நானாகவும் ஆகியிருக்கிறாய் என்று தெரியாமல் என்னை குறைவுபடுத்திக் கொண்டிருக்கிறேனே!

இப்படி நான் உனக்கு வேறாக இருப்பதை, போக்கடி. அதாவது, நான் உன்னிடம் அதைக் கொடு இதைக் கொடு என்று வெளி வஸ்த்துக்கள் எதையும் கேட்கப் போவதில்லை. 'என்னையே எனக்குக் கொடு' என்றே பிரார்த்திக்கிறேன்' என்கிறான் அந்த பக்தன்.

நல்ல பக்தி, இப்படிக் கேள்விகளை எழுப்பி, நம்மையே கேட்கும் ஞானத்தைத்தான் முதலில் தரும்.

- பெரியவரின் பக்தி விளக்கம் இப்படி விஸ்வரூபம் எடுத்துச் சென்றபடியே இருக்கிறது.

22

LORD பெரியவாளின் பக்தி விளக்கங்களைப் பார்த்து வருகிறோம். எது பக்தி என்பதில் தொடங்கி, அந்த பக்தியின் பலவித நிலைப்பாடுகளை துளியும் கருத்து பேதத்துக்கு இடமின்றி கூறிவரும் பெரியவர், ஆதிசங்கர பகவத் பாதர், எதை பக்தி என்று சொன்னார் என்பதையும் குறிப்பிடுகிறார்.

பகவத் பாதரின் சிவானந்த லஹரியில் எது பக்தி என்பதற்கான விளக்கத்தை நாமும் காணலாம். ஒருவரின் பக்தி எப்படி இருக்க வேண்டும் என்றால், அது ஐந்து விதமாய் இருக்கலாமாம். ஒன்று அழிஞ்சில் விதை; அடுத்தது இரும்பு ஊசி; மூன்றாவது பதிவிரதை; நான்கு, மரத்தைப் பற்றிக்கொள்ளும் கொடி; ஐந்தாவது ஓடும் நதி - என்று ஐந்து உதாரணங்களை பகவத் பாதர் அடுக்குகிறார்.

முதல் உதாரணம், அழிஞ்சில் விதை!

அழிஞ்சில் மரம் என்று ஒன்று உண்டு. இதன் விதைகள் மரத்தில் இருந்து உதிர்ந்து கீழே நிலத்தில் விழும். சில மணி நேரத்திலேயே மண்ணோடு மண்ணாக ஆகிவிடாமல், அந்த மரத்தின் அடிப்பாகத்தோடு சென்று ஒட்டிக்கொண்டு அப்படியே அதோடு கலந்தவிடுமாம். நம் பக்தி

பாவமும் இறைவனோடு இப்படிக் கலந்துவிடும் விதமாக இருக்க வேண்டும்.

இரண்டாவது ஊசி. இந்த ஊசி, காந்தத்தை எங்கே கண்டாலும் போய் ஒட்டிக்கொண்டுவிடும். நாமும் இந்த ஊசிபோல இறைவனோடு ஒட்டிக்கொண்டுவிட வேண்டும். மூன்றாவது பதிவிரதை. இவளுக்கு, கணவன்தான் உலகம். கணவன்தான் கடவுள். இவனுக்கு மிஞ்சி எதுவுமே இவள் வரையில் கிடையாது. நான்காவது தாவரக் கொடி வகைகள். இந்தக் கொடி வகைகள் அழகாக அருகில் வளர்ந்திருக்கும் மரத்தைப் பற்றிக்கொண்டு மேலேறத் தொடங்கிவிடும். இது மரத்தைப் பற்றிக்கொள்வதைப் போல், நம் மனம் இறைவனைப் பற்றிக் கொண்டுவிட வேண்டும்.

ஐந்தாவது நதி. நதியின் சங்கமம் சமுத்திரத்தில்! நாமும் அதுபோல ஆண்டவனிடம் பக்திகொண்டு அவனோடு சங்கமித்துவிட வேண்டும்.

இந்த ஐந்து உதாரணங்களிலும் ஓர் ஆச்சரியம் என்னவென்றால், அழிஞ்சில் விதையோ, இல்லை ஊசியோ, அதுவுமில்லை கொடியோ, நதியோ - யோசித்து எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற திராணியற்றவை இவை. யோசிக்கும் திராணி இருந்தும் பதிவிரதை ஆனவள், ‘நான் யோசிக்கத் தயாரில்லை; எனக்கு பதியே எல்லாம்’ என்பவள். ஆக, இங்கே இரு இயற்கையான இயல்புத் தன்மை இருப்பதைப் பார்க்கலாம்.

அழிஞ்சில் விதை, மரத்தோடு ஒட்டிக்கொள்வதன் பின்னே அதன் முனைப்பு அதிகம்; ஊசி காந்தத்தோடு கலப்பதில் காந்தத்தின் முனைப்பு அதிகம்; கொடி படர்வதில் கொடியின் முனைப்பு அதிகம்; நதி, கடலோடு கலப்பதில் நதியின் முனைப்பே அதிகம்.

பதிவிரதைக்கு வருவோம்.

இன்றைக்கு நமது சதிகள் சமத்துவம் பேசி, கணவனை பேர் சொல்லி அழைத்து ஒரு படி மேலே போய், ‘வாடா போடா’வென்று கூட அழைத்து உறவு கொண்டாடி வருகிறார்கள். காரணம், சமத்துவம் என்னும் எண்ணம்! இப்படி மனித புத்தி எண்ணும் என்பது ஆதிசங்கரருக்குத் தெரியாதா என்ன?

ஆனால், அப்படி சிலர் எண்ணினாலும், எண்ணாது பதிபக்தி காட்ட முடிந்த பெண்ணே, இங்கே அவர் வரையில் பக்திக்கு நல்ல உதாரணமாகப் படுகிறாள்.

சொல்லப்போனால், இந்த சதியே மிகச்சிறந்த உதாரணம். மற்றவை இயல்பான தன்மையால் நிகழ்பவை. ஆனால், சதியோ இந்த சமத்துவ சிந்தனை கடந்து, கணவனிடம் அழுக்குகள் தென்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது, அவன்பால் பக்தி செலுத்த வேண்டும், அதுவும் இந்த நாளில்!

இது என்ன சாதாரண விஷயமா?

இப்படி ஐந்து விதமாய் பக்தி புரியலாம். புரிய வேண்டும் என்னும் பகவத் பாதரின் கருத்தை வழிமொழியும் நமது பெரியவர், இப்படி எல்லாம் பக்தி செலுத்த முடியாவிட்டால்கூட பாதகமில்லை.

பொன் வேண்டும் - பொருள் வேண்டும் என்று கேட்டுக் கூட பக்தியைத் தொடங்குங்கள். இது வியாபார பக்தி. பாதகமில்லை. ஒருநாள் இல்லை ஒருநாள், இந்த வியாபார பக்திக்குள்ளும் ஒரு தெளிவு கட்டாயமாக வரும். அப்போது வருத்தமும் வரும்.

அடடே உலகையே எனக்குத் தந்த கடவுளிடம் அற்பமாய், 'அதுவேண்டும் இது வேண்டும்' என்று கேட்டிருக்கிறேனே!

ஆற்றங்கரையோரமாக ஆற்றில் கால் நனைய நிற்கும் ஒருவன் தாகத்தில் தவிக்கத் தொடங்குகிறான். குனிந்து ஒருவாய் அள்ளிக்குடித்தால் தாகம் தீர்ந்துவிடும். ஆனால் அதுகூட தெரியாமல், 'நான் தாகத்தால் தவிக்கிறேன். எனக்குத் தண்ணீர் கொடு' என்று கேட்கிறான். அவனைப் பார்த்து கடவுளுக்கு பரிதாபம் வருமா, கோபம் வருமா?

நாமும் கடவுள் நம்மைப் பார்த்து கோபப்படும்படியாகவே, அவன் அள்ளித் தந்ததை உணராமல், இனிதான் அவன் தரவேண்டும் என்பதுபோல, பக்தி செய்ததெல்லாம்கூட நிச்சயம் போகப் போக சரியாகிவிடும்.

பக்தியே செய்யாமல், அதை ஒரு பலவீனமான முட்டாள்தனமாக கருதிக் கொண்டு அகந்தையோடு இருப்பதைவிட வர்த்தக பக்தி, பேராசை பக்தி என்று பக்தி புரிவது தேவலாம்தான். ஏனென்றால், இது ஒருநாள் தெளிவாகி, அதுவே வேகம் தந்து, விட்டதற்கும் சோத்துப் பிடிப்பதற்கான ஒரு சக்தியைத் தந்துவிடும். ஆனால், பக்தி பற்றிய எண்ணமே இல்லாமல் அகந்தையோடு இருப்பது, மனிதப் பிறப்புக்கு ஆரோக்கியமான ஒன்றே அல்ல!

பக்திக்கு இப்படி நெடிய விளக்கத்தை பெரியவர் தந்துவிட்டாலும், என்னுள் கேள்விகளுக்குப் பஞ்சமில்லை. பிரதானமான ஒரு கேள்வி, இந்துமதத்தில் மட்டும் எதற்கு இத்தனை கடவுளர்கள் என்பதுதான்.

இதற்கு, பெரியவரின் பதில் அசாத்யமாக மிளிர்கிறது.

‘உண்மையில் ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்வாமி இருப்பதாக, விஷயம் தெரிந்த எந்த ஹிந்துவும் எண்ணவில்லை. வைதிக மதம், ஸ்வாமி ஒருவரே என்று கண்டது மட்டுமில்லை. இந்த ஜீவனும்கூட அதே ஸ்வாமிதான் என்று வேறெந்த மதமும் கண்டுபிடிக்காததையும் கண்டுபிடித்திருக்கிறது. எனவே, பிரபஞ்ச வியாபாரத்தை நடத்துகிற மகாசக்தியாக ஒரு ஸ்வாமிதான் இருக்கிறது என்பதில் விஷயமறிந்த எந்த ஹிந்துவுக்கும் சந்தேகமில்லை. ஆனால், அந்த ஸ்வாமி பல ரூபத்தில் வரமுடியும். அப்படிப்பட்ட யோக்யதையும் கருணையும் அதற்கு உண்டு என்று ஒரு ஹிந்து நம்புகிறான்.

ஒரே ஸ்வாமி, நம் தேசத்தின் மகாபுருஷர்களுக்குப் பல ரூபங்களில் தரிசனம் தந்திருக்கிறார். அந்த ரூபங்களுக்குரிய மந்திரம், உபாசனை மார்க்கம் எல்லாவற்றையும், இந்த மகாபுருஷர்கள் நமக்குத் தந்துள்ளனர். இவற்றை முறைப்படி அனுஷ்டித்தால் தான் நாம் அந்த தேவதையின் அனுக்ரகத்தைப் பெற முடியும்.

எந்த தேவதையாக இருந்தாலும் சரி, முடிவில் அது பரமாத்வாவே! தாயைப் போல பகவானைக் காண விரும்புகின்றவனுக்கு அம்பாள் உபாசனை. ஒரே சாந்தத்தில் அமுங்கிப் போக விரும்புகிறவனுக்கு தட்சிணா மூர்த்தி. ஆனந்தமாக ஆடிப்பாடி பக்தி செலுத்த கிருஷ்ண பரமாத்மா என்று வகுத்துள்ளோம்.

இதைத்தான் இஷ்டதேவதா வழிபாடு என்கிறோம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான மன அமைப்பு. அந்த அமைப்புக்கு ஏற்ப, பக்தி செலுத்த உதவுவதுதான் இஷ்ட தேவதா வழிபாடு.

முதலில் நம் மனப்போக்குக்கு ஏற்ப, ஒரு தேவனிடமோ தேவியிடமோ பக்தி உண்டாகிறது. பிறகு, போகப் போக அது மாறி, ‘நமக்கென்று எதற்கு ஒரு மனப்போக்கு?’ என்று விட்டுவிட, அந்த தேவதையே அனுக்ரகம் செய்யும்.

இங்கே முக்கியமான ஒரு விஷயம், அவரவர் மனப்பாங்குக்கு ஏற்ப இஷ்டட தேவதா வழிபாடு செய்யும் போது, மற்றவர்களின் வழிபாட்டுத் தேவதையை தாழ்வாக எண்ணக் கூடாது.

இதில் இன்னொரு சிக்கலும் உள்ளது.நம்மில் இரண்டு தெய்வங்கள் சண்டைபோட்டு, ஒன்றை ஒன்று ஜெயித்ததாக புராணத்தில் சம்பவங்கள் உண்டு.

இதை, சரியான கோணத்தில் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு, 'நஹி நிந்தா நியாயம்' என்று பேர். ஒன்று பலமானது; இன்னொன்று அதைவிட பலம் குன்றியது என்பது இதன் உட்பொருளல்ல.

ஒரு தேவதையை உபாசிப்பவருக்கு, அந்த தேவதையிடம் தீவிரப் பற்று உருவாகிட இதுபோல பௌராணிகர்களால் சொல்லப்பட்டன. இதில் லோகத்தின் மானுட மாயா ரசக்கலப்பு உண்டு. ஒருவகையில் சிறுவர்கள் முன்னால் சில பெரியவர்கள் அவர்களை குஷிப்படுத்துவதற்காக சண்டை போட்டுக்கொண்டு கீழே விழுந்து கைகால்களை உதைத்து விட்டுக் கொள்வார்கள். குழந்தை அதைப் பார்த்து பெரிதாய் சிரித்து மகிழும். இது அந்த அளவிலான ஒரு மனோவியல் சார்ந்த விஷயம்!' என்று பல தெய்வங்களுக்கான காரண காரியங்களை எளிதாகச் சொல்கிறார் பெரியவர்.

அடுத்து, இஷ்டதெய்வம் போலவே குலதெய்வ விஷயம்! இது நமது மதத்தில் ஒரு ஸ்பெஷாலிட்டியான மிக விசேஷமான விஷயம் என்கிறார் பெரியவர்.

இன்று குலதெய்வம் இல்லாத வீடு இல்லை.

இந்தக் குலதெய்வத்துக்குத்தான் முதல் மொட்டை, காதுகுத்தல்... அடுத்து எந்த ஒரு நல்ல காரியமாக இருந்தாலும், குலதெய்வத்தை வேண்டித் தொடங்கும் ஒரு பழக்கவழக்கம்.

கல்யாணப் பத்திரிகையில் கூட குலதெய்வ நமஸ்காரமே முதலில்! அடுத்து, குருவின் துணை. ஒரு குலதெய்வமும், ஒரு குருவும் இல்லாமல் ஒரு ஹிந்துவின் வீடு இல்லை.

ஒன்று கருணைபுரிய, ஒன்று வழிகாட்ட பிசகில்லாமல் நாமும் அதில் நடக்கும்போது, வாழ்விலும் ஒரு நிம்மதி இருக்கத்தான் செய்கிறது.

இதில் கோளாறு வரும்போதுதான், நம் வாழ்விலும் ஏற்ற இறக்கம் வந்து ஆட்டிப் பார்க்கிறது.

இந்த குலதெய்வ தாத்பர்யம் பற்றியும், குருவின் வழி காட்டல் பற்றியும் பெரியவர் மூலமாகவே நாம் தெளிவு பெறுவோம்.

ஏனென்றால், அதில்தான் அவ்வளவு அர்த்தமும் அருளும் உள்ளது. அது...

23

இன்று ஏதாவது ஒரு சிக்கல் என்றால், நாம் நம் ஜாதகத்தை எடுத்துக்கொண்டு முதலில் போய்ப் பார்ப்பது நல்ல ஒரு ஜோசியரைத்தான்! ஜோசியரில் நல்ல ஜோசியர் கெட்ட ஜோசியர் என்று இருக்கிறார்களா என்ன என்று கேட்கலாம். சந்தேகமே வேண்டாம்! இருக்கிறார்கள் என்பதே என் பதிலாகும். எப்படி?

நமக்கு நேரம் நன்றாக இருந்து விதியும் இருந்தால், நன்றாக சரியான ஜோசியரிடம்தான் நாம் போய் நிற்போம். அவரும் நம் கட்டங்களைப் பார்த்து, சரியாக கணக்குப் போட்டு பின்னர் பிசகு எதுவுமில்லாமல் நமக்குத் தீர்வைச் சொல்லுவார்.

நம் நேரத்தில் பிசகு இருக்கும் பட்சத்தில், ஒரு அரை குறை ஜோசியரிடம்தான் போய் மாட்டுவோம். அவரும் அவர் அறிந்ததைக் கூறி, நம்மைத் தவறாக வழிநடத்தி விடுவார். இந்த உலகத்தில் எல்லாமே இரண்டாக இருக்கிறது. இனிப்பென்றால் கசப்பு, நெருப்பென்றால் குளிர், அதேபோல நல்லவிதமாய் ஒருவர் என்றால், தீயவிதமாய் ஒருவர்...

இவர்கள் எப்படி இருக்கலாம் என்றெல்லாம் கேட்க முடியாது. மனித இனம் தோன்றிய நாளில் இருந்தே இது தான் நிலைப்பாடு. இனியும் அது இருந்தே தீரும். ஜோதிடர் களுக்கும் இது பொருந்தும்.

சரி, இந்த ஜோதிடர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் தவறாமல் ஒரு கேள்வியை நம்மிடம் கேட்பார். அதுதான் குலதெய்வம் பற்றியது. ‘உங்கள் குலதெய்வம் எது? அதை நீங்கள் முறையாக வணங்கி வருகிறீர்களா?’ என்பதுதான் அந்தக் கேள்வி. கடவுள் ஒருவரே என்பதுதான் சர்வமத சித்தாந்தம். நம் இந்து மதம்தான். அந்த ஒருவரைப் பலவாக ஆக்கி நாம் பக்தி செய்திட பகிர்ந்து அளித்திருக்கிறது. இது அந்தக் கடவுளை எளிதாக உணரவும், நெருங்கவும் நமக்கும் மிக வசதியாக உள்ளது. நமது தெய்வங்கள் அலங்காரமாக, ஆயுதங்களோடு இருப்பதன் பின்புலம், நம் உளவியல் நிமித்தமே என்பதுதான் நம் கடவுளர்களின் சிறப்பே!

இதனால்தான் கடவுளோடு நாம் மிகவும் நெருங்க முடிகிறது. ‘வாடா

போடா’ எனலாம்... அப்பா அம்மா எனலாம்... நண்பன் எனலாம்... குருவாகவும் கொள்ளலாம். நம் குழந்தையாகவும் கருதி தூக்கி வைத்துக் கொஞ்சலாம்.

அன்பும் பக்தியும் இருந்துவிட்டால் போதும்... யோகியரும் ஞானியரும் காட்டிலும் மேட்டிலும் காலம் காலமாக தவம் செய்தும் அடைய முடியாமல் தவிக்கின்ற அந்தக் கடவுளை, நாம் மிக இலகுவாக நம் அன்றாட வாழ்வில் அடைந்து விடலாம். இதற்காகவே நமக்கே நமக்கு என்று நம் முன்னோர்கள் வீடு வாசல் என்று சொத்து சுகங்களை விட்டுச்செல்வது போல் ஒரு தெய்வத்தையும் விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். அதுதான் குலதெய்வம்!

எந்த தெய்வத்தை வணங்காவிட்டாலும், இந்த தெய்வத்திடம் ஒரு வணக்கம் இருந்தே தீர வேண்டும் என்பது தான் நம் முன்னோர்களுக்கும் எண்ணம். குலதெய்வம் என்று ஒன்று இருந்தாலே, சில சடங்கு சம்பிரதாயங்கள் இருந்தே தீரும். குழந்தை பிறந்தால் அதன் முதல் முடியை காணிக்கையாகத் தருவது. அது போக, பிள்ளைப் பேற்றுக்கும் அறிவு விழிப்புக்கும் தூண்டுதலான காது குத்தல் போன்ற நிகழ்வுகள் குலதெய்வ வழிபாட்டுச் சடங்கை ஒட்டியே இருக்கும்.

சில குடும்பங்களில், குலதெய்வ வழிபாடு என்பதே மறந்து, குலதெய்வம் எதுவென்றே தெரியாத அமைப்பெல்லாம் உண்டு. இதெல்லாமே நம் ஜாதகக் கட்டத்தைப் பார்த்தால் கணக்குப் போட்டு உணர முடியும். ஜாதகத்தில் பூர்வ புண்ணிய ஸ்தானம் என்று ஒரு இடம் உண்டு. அதில் நம் பக்தி, சாபம், திமிர், வியாதி, தரித்திரம் என்று எல்லாம் பளிச்சென்று தெரியும்விதமாக டேரா போட்டிருக்கும். இதை வைத்துத்தான் ஜோதிடரும் கேட்பார்!

என்றால், குலதெய்வ வழிபாட்டோடு பிறதெய்வ வழிபாடுகளை குறைவின்றிச் செய்பவர்கள் எல்லோருமே ஆனந்த வாழ்க்கை வாழ்கிறார்களா? அவர்களுக்கு துன்பமே இல்லையா என்று குயுக்தியாகக் கேட்கக் கூடாது.

ஆக, குலதெய்வத்தை மறவாமல் போற்றி வருபவர்கள் குடும்பங்களில் பெரிய துன்பங்களுக்கு இடமில்லை. பெரிதாக ஏதாவது வந்தாலும், அது நிச்சயம் நீங்கி அந்தக் குடும்பம் ஒரு நல்ல வாழ்க்கையை இந்த மண்ணில் வாழ்ந்து காட்டுகிறது என்பது தான் அடிப்படைச் சிறப்பாகும்.

வீடு, வாசல், நிலம், நீச்சு, நகை, நட்டு இவையெல்லாம் காசிருந்தால் வாங்க முடிந்தவை. கல்வி, பிள்ளைப்பேறு, ஆரோக்கியம், நீண்ட ஆயுள்

இவை எல்லாம் அருள் இருந்தால் மட்டுமே பெற முடிந்தவை ஆகும்.

இந்த பூமியில் ஒரு நல்ல வாழ்வு வாழ்ந்திட இரண்டும் தான் தேவைப்படுகிறது. இதில் பின்னதான அருள் சார்ந்த விஷயம் வந்துவிட்டால், முன்னதாக உள்ள பொருள் சார்ந்த விஷயங்களை நாம் சுலபமாக அடைந்து விடலாம். எனவே, பிரதான தேவையே அருள்தான்! இந்தக் குலதெய்வத்தின் சிறப்பை பெரியவர் உணரச்செய்த சம்பவம் ஒன்று உண்டு.

பெரியவர் ஊர் ஊராகச் சென்று சாதுர்மாஸ்ய ரதம் இருந்துவந்த ஒருநாள் அது. அப்படி ஒரு கிராமத்தில் அவர் தங்கியிருந்தபோது, ஒரு விவசாயி பெரியவரை மிகவும் பிரயாசைப்பட்டு வந்து சந்தித்தார். அவரிடம் துளியும் உற்சாகமில்லை. முகமும் இருளடைந்து போயிருந்தது. வாயைத் திறந்து தன் துன்பங்களைக் கூற அவசியமே இல்லாதபடி, பார்த்த மாத்திரத்தில் அவரின் துன்பம் பெரியவருக்கு விளங்கிவிட்டது. இருந்தும் அந்த விவசாயி,

“சாமி... ஏண்டா உயிரோட இருக்கோம்ன இருக்கு. பேசாம குடும்பத்தோட தற்கொலை பண்ணிக்கலாமான்னு கூட தோணுது. ஒரு மனுஷனுக்கு வாழ்க்கைல போராட்டம் இருக்கும். ஆனா, என் வரைல போராட்டமே வாழ்க்கையா இருக்கு” என்று துயரத்தைச் சொல்லி அழுதார்.

பெரியவர் அவரிடம், “குலதெய்வத்துக்கு ஒழுங்கா பூஜை செய்யறியா?” என்று கேட்டார்.

“குலதெய்வமா... அப்படின்னா?” - திருப்பிக் கேட்டார் அவர்.

“சரிதான்... உங்க குலதெய்வம் எதுன்னே தெரியாதா?”

“ஆமாம் சாமி... வியாபார விஷயமா எங்க முன்னோர்கள் பர்மா போயிட்டாங்க. பல காலம் அங்க இருந்துட்டு திரும்பிவந்த குடும்பம் எங்க குடும்பம். என் பாட்டன்ல ஒருத்தருக்கு கடவுள் நம்பிக்கை இல்லாததால, அவர் பிள்ளைகளும் அவரைப் பார்த்து அப்படியே வந்துட்டாங்க. நாங்கள்ளாம் அந்த வழில வந்தவங்கதான்” என்றார்.

“உன் முன்னோர்கள் யாராவது இப்ப உயிரோட இருக்காங்களா?”

“ஒருத்தர் கிராமத்துல இருக்கார் என் அப்பா வழி பாட்டனார் அவர்.”

“அவர்கிட்ட போய் உங்க குலதெய்வத்தைப் பத்தி கொஞ்சம்

கேட்டுண்டு வா.”

“ஏன் சாமி... அந்த சாமி எதுன்னு தெரிஞ்சு கும்பிட்டாதான் என் பிரச்னை தீருமா?”

“அப்படித்தான் வெச்சுக்கோயேன்...”

“என்ன சாமி நீங்க... ஊர்ல எவ்வளவோ கோயில் இருக்கு. அங்க எல்லாமும் சாமிங்கதான் இருக்கு. அப்ப அதுக்கெல்லாம் சக்தி இல்லையா?”

“நான் அப்படிச் சொல்லவே இல்லையே!”

“அப்ப இந்த சாமில ஒண்ண கும்பிடச் சொல்லாம, குலதெய்வத்த தெரிஞ்சுக்கிட்டு வரச் சொல்றீங்களே!”

“காரணமாத்தான் சொல்றேன். ஓட்டைப் பாத்திரத்துல எவ்வளவு தண்ணி பிடிச்சாலும் நிக்காது. நீ, என்ன மாதிரி எதுவும் வேண்டாம்கற சன்னியாசி இல்லை. வாழ்வாங்கு வாழ விரும்பற குடும்பம்தான். எனக்கு, பாத்திரமே கூட தேவையில்லை. ஆனா, உனக்கு பாத்திரம் தான் பிரதான தேவை. பாத்திரம் இருந்தாத்தானே எதையும் அதுல போட்டு வெக்க முடியும்? அப்படிப்பட்ட பாத்திரம் ஓட்டையா இருந்தா, அதுல எதைப் போட்டாலும் அந்த ஓட்டை வழியா வெளிய போகுமா போகாதா?”

“அப்ப குலதெய்வம்தான் பாத்திரமா... அது தெரியாததால ஓட்டைப் பாத்திரமாயிடிச்சுங்கறீங்களா?”

“நீ, கேள்வி கேட்கநாம உன் குலதெய்வம் எதுங்கறத தெரிஞ்சு அந்தக் குலதெய்வத்தைத் தேடிப்போய் சாஷ்டாங்கமா உடம்பு தரைலபட நமஸ்காரம் பண்ணிட்டு வா. உனக்கு அப்புறமா விளக்கமா சொல்றேன்” என்று அவரை அனுப்பி வைத்தார்.

அவரும் ஒரு பத்து நாள் கழித்து, “சாமி! நீங்க சொன்னதைச் செய்துட்டேன். எங்க குலதெய்வம் பேச்சாயிங்கற ஒரு அம்மன். அதோட கோயில் ஒரு மலை அடிவாரத்துல இடிஞ்சுபோய் கிடந்துச்சு. யாருமே போகாம விட்டதால, கோயிலை புதர் மூடிடுச்சு. நானும் என் மக்களும் போய் புதரை எல்லாம் வெட்டி எறிஞ்சோம். அங்க, ஒரு நடுகல்தான் பேச்சாயி! ஏதோ எங்களால முடிஞ்ச அளவுக்கு அதுமேல பால ஊத்தி அபிஷேகம் செஞ்சு, கற்பூரம் காட்டி கும்பிட்டுட்டு வரேன்” என்றார்.

“சபாஷ்... அந்தக் கோயிலை நல்லபடியா எடுத்துக் கட்டு. தினசரி அங்க விளக்கு எரியும்படியா பார்த்துக்கோ! உன் கஷ்டங்கள் தானா நீங்கிவிடும். பேச்சாயி பூவும் பொட்டுமா ஜொலிச்சா, உன் குடும்பமும் ஜொலிக்கும்” என்றார் பெரியவர்!

“சாமி! நிறைய விளக்கமெல்லாம் சொல்றதா சொன்னீங்களே... எதுவுமே சொல்லலியே?”

“அடுத்த வருஷம் இதே தேதிக்கு வா! அப்ப சொல்றேன். நான் சொன்னதை மறந்துடாதே... பேச்சாயியை விட்டுடாதே!”

அவரும் அவ்வாறே செய்தார். ஒரு வருடமும் ஓடியது. அவரும் பெரியவரைக் காண திரும்ப வந்தார். இந்த முறை அவரிடம் ஒரு செல்வச்செழிப்பு தெரிந்தது. பெரியவரை ஒன்றும் சும்மா பார்க்க வரவில்லை. தட்டு நிறைய பூ, பழம் இவற்றோடு கொஞ்சம் பணம் என்று தான் முன்னால் வந்து நின்றார். பெரியவரும் ஏறிட்டார்.

“சாமி... நான் இப்ப நல்லா இருக்கேன். பேச்சாயி புண்ணியத்துல பிள்ளைகளும் நல்லா இருக்காங்க. இதுக்கு வழிகாட்டின பெரியசாமி நீங்கதான்! ஆனா, எனக்கு விளக்கத்த மட்டும் இன்னும் தராமலே இருக்கீங்க... இந்த அதிசயம் எப்படி நடந்தது?” என்று திரும்ப அவர் கேட்டார். பெரியவரும் திருவாய் மலரத் தொடங்கினார். அது...?

24

ஒரு வருடம் கழித்து திரும்ப வந்த பர்மாக்காரரிடம் ‘குலதெய்வம்’ என்பது குறித்து பெரியவர் சொன்னது மிகவும் கவனமாய் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும்.

“நம் முன்னோர்கள் வணங்கிவந்த தெய்வம்தான் குலதெய்வமாகும். முன்னோர்கள் என்றால், நமக்கு முன்பிறந்த எல்லோருமே முன்னோர்கள்தான். ஆனால் இங்கே முன்னோர்கள் என்றால், நாம் நம் தந்தைவழி பாட்டன் பாட்டிமார்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தந்தைவழி பாட்டன்மார் வரிசையில், மிகப்பெரிய ஒழுங்கு ஒன்று இருப்பதை கூர்ந்து கவனித்தால் உணரலாம். அதுதான் “கோத்திரம்’ என்னும் ஒரு ரிஷியின் வழிவழிப் பாதை.

பிற கோத்திரத்தில் இருந்து பெண்கள் வந்து இந்த வழிவழிப் பாதையில் நம் தாத்தாக்களின் வாழ்க்கைத் துணையாகக் கை பிடித்திருப்பார்கள். எக்காரணம் கொண்டும் ஒரே கோத்திரத்தில் பெண் சம்பந்தம்

ஏற்பட்டிருக்காது. இதனால், ரிஷி பரம்பரையானது சங்கிலிக் கண்ணி போல அறுபடாமல், ஒரே சகோதரத்துவத்தோடு வந்த வண்ணம் இருக்கும். இது ஒரு முக்கியமான ஒழுங்கு சார்ந்த விஷயமாகும்.

அடுத்து, இவர்கள் அவ்வளவு பேருக்குமே நட்சத்திரம் வேறாக, உடலமைப்பு வேறாக, குணப்பாடுகள் வேறாகவும் இருக்கும். அதுதான் இயற்கையும்கூட! ஆனால், கோத்திர வழி மாறாதபடி இவர்கள் நம் குலதெய்வம் என்னும் தெய்வ சான்னியத்தில் கைகூப்பி நின்றிருப்பார்கள். தலைமுடி கொடுத்திருப்பார்கள். காது குத்துவது போன்ற வழிவழிச் செயல்பாடுகளும் நடந்துமிருக்கும்.

இந்த உலகத்தில் ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களுக்கு அவர்கள் போயிருக்கலாம்; போகாமலும் இருக்கலாம். அதற்கு உத்தரவாதமில்லை. ஆனால், குலதெய்வக் கோயிலுக்கு, நாம் பக்தி என்கிற ஒன்றை அறிவதற்கு முன்பே, நம் தாய் தந்தையரால் அங்கு கொண்டு செல்லப்பட்டு, வணங்க வைக்கவும் படுகிறோம். இதன்படி பார்த்தால், குலதெய்வ சன்னிதியில் சென்று நாம் நிற்கும்போது, நம் பரம்பரை வரிசையில் போய் நிற்கிறோம். இந்த வரிசைத் தொடர்பை வேறு எங்காவது, எந்த விதத்திலாவது உருவாக்க முடியுமா?”

- பெரியவர் சொல்லச் சொல்ல, பர்மாக்காரரிடம் பரவசம்!

“அது மட்டுமல்ல. ஒரு மனிதனின் பிறப்புக்குப் பின்னே இப்படியொரு பரம்பரை வரிசை இருப்பதை நினைக்கக்கூட தெரியாமல், அதிகபட்சம் இரு பாட்டன் பாட்டி பேருக்கு மேல் தெரியாமல் அல்லவா நம் வாழ்க்கைப் போக்கு உள்ளது?

ஒரு குடும்பத்தைப் பொருத்தவரையில் அந்த இறை சக்தி குலதெய்வமாக, அவர்களுக்கான ஒரு பெயரில் வெளிப்படுகிறது. இப்படிச் சொல்வதுகூட தவறு. வெளிப்பட, வழிவகை செய்யப்பட்டது! அதுவும் யாரால்? நம் முன்னோர்களால் அவர்கள் யார்? நம்முடைய தொடக்கங்கள்... நாம் யார்? அந்தத் தொடக்கத்தின் தொடர்ச்சி! மொத்தத்தில், நாம் வேறு அவர்கள் வேறு இல்லை.

இந்த வழிவழிப் போக்கில் ஒருவர் மூட்டை மூட்டையாகப் புண்ணியத்தைக் கட்டியிருக்கலாம். இன்னொருவர் பாவமேகூட பண்ணியிருக்கட்டுமே! நாம் அங்கே போய் நின்று நம் பொருட்டு பிரத்யேகமாக வெளிப்படும் அந்த இறைசக்தியைத் தொழும்போது, அவர்களும் பித்ருக்களாக விண்ணில் இருந்து பார்க்கிறார்கள். நாமும் ஆசிர்வதிக்கப்படுகிறோம். இது எத்தனை தூரப் பார்வையோடு,

வடிவமைக்கப்பட்ட ஒரு விஷயம்?”

- பெரியவர் விளக்கி முடிக்க, வந்திருந்த கூட்டம் சிலிர்த்துப் போனது. இந்தக் குலதெய்வ வழிபாட்டில் மிகப்பெரிய நல்ல சமாச்சாரம் ஒன்றும் அடங்கியுள்ளது. சந்தர்ப்ப சூழல்களால் அல்லது பூர்வ கர்மத்தால், அதுவுமல்லாது பல்வேறு காரணங்களால் ஒருவருக்கு பக்தி உணர்வு இல்லாமல் போகிறது என்று வையுங்கள். அதாவது, கண்ணுக்குப் புலப்படாத இந்தக் கடவுளை நாம் நம்பத் தயாரில்லை.

நான் ஒன்றும் முட்டாளில்லை என்று அவர் வீராப்பாய் பேசி, நாத்திகத்தில் நம்பிக்கை ஏற்பட்டு அதிலேயே அவர் போகும் நிலை வந்தாலும் பெரிதாய் தோஷமில்லை. ஏனென்றால், அவர் இவ்வாறு ஒரு நாத்திக நிலைப்பாடு கொள்ளும் முன்பே, இந்தப் பரம்பரை வரிசையில் பெற்றோர்களால் வணங்க வைக்கப்பட்டு ஆசீர்வதிக்கவும் பட்டிருப்பதால், அவர் ஒருநாள் நிச்சயம் மனம் மாறி அருள் தொடர்புக்கு ஆட்படுவார் என்பது தான் இதிலுள்ள மிகச்சிறந்த ஒரு விஷயமாகும்.

இப்படி நம்பிக்கையற்றுப் போனவர், தன் பிள்ளைகளை அழைத்துவர மாட்டாரே! அவர்கள், இதனால் இந்தப் பரம்பரை தொடர்புக்கு ஆட்படாமல் போய் விடுவார்களே என்று ஒரு கேள்வி எழலாம். பெரும்பாலும் ஒரு வழியில், ஒரே கோத்திரத்தில் திருமணங்கள் புரிந்து கொள்ளாமல், முன்னோர் காட்டிய வழியில் போகும் பட்சத்தில், வாழ்வில் நமக்கு பெரிய கஷ்டங்கள் வருவது இல்லை என்பதுதான் இம்மட்டில் புரிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். உடம்புக்கு உணவுப் பொருளால் சக்தி ஏற்படுவது போல், மனதுக்கு இறை அருளால் சக்தி ஏற்படுகிறது.

ஒரு குலதெய்வத்தின் பின்னால், இப்படியான பிரத்யேக சிறப்புகள் நிறையவே உள்ளது. குல தெய்வத்தைப் பக்தியோடு கொண்டாடும்போது, பெரிய தோஷங்களுக்கு இடமில்லாமல் போய் நம் வாழ்வும் சிறப்பாகிறது. பர்மாக் காரர் வரையிலும் அது தான் நிகழ்ந்தது.

எனக்கும் இந்தக் குலதெய்வ விஷயம் மனசுக்குள் பெரும் உற்சாகத்தைத் தந்தது. நான் எங்கள் குலதெய்வக் கோயிலுக்குப் போனபோது என் பார்வையே மாறிப் போனது. அந்தக் கோலில் உள்ள ஒவ்வொரு தூண்களையும் தொடும்போது, என் தாத்தன் தொட்ட தூண்... என் தாத்தன் நின்று மூச்சு விட்ட இடம்... என் முப்பாட்டன், அதற்கும் முற்பட்ட பாட்டன் நடந்து திரிந்த தரைப் பரப்பு... அவர்களைப் பார்த்த பெருமாள் என்னையும் பார்க்கிறார் என்பதா? இல்லை, அவர்கள்

பார்த்த பெருமாளை நான் பார்க்கிறேன் என்பதா?

ஒன்று உறுதி. அந்தப் பெருமாளை வணங்கிய வம்சம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இதுவே எத்தனை பெரிய அனுக்ரகம்! இந்தக் குலதெய்வ விளக்கமும், இதன் பின்புலமும் எனக்குள் நம் முன்னோர்கள் மேல் பெரும் மரியாதையை ஏற்படுத்திற்று.

அடுத்த விஷயம் மறுஜென்மம் பற்றியது.

நான் ஒரு எழுத்தாளனாகத் திகழும் நிலையில், பரபரப்பான போட்டி உலகில் எல்லா களங்களிலும் எழுதும் ஆவல் எனக்கு உண்டு. அம்மட்டில் 1980-90களில் தமிழக பத்திரிகை உலகில் மாத நாவல்களின் தோற்றம் அதிகரித்து கிட்டத்தட்ட பத்து பதினைந்துக்கும் மேல் மாத நாவல்கள் வெளியாகத் தொடங்கின. இதில் சுஜாதா, லக்ஷ்மி, அனுராதா ரமணன் போன்றோர் நிறையவே எழுதினார்கள். இந்த நாவல்களில் குடும்ப நாவல், மர்ம நாவல், துப்பறியும் நாவல் அமானுஷ்ய நாவல் என்று போட்டி காரணமாக பிரிவுகளும் உருவானது.

குடும்ப நாவல் எனும்போது, ஏராளமான குடும்ப நாவல்களை இந்தத் தமிழ்ச் சமூகம் பார்த்துவிட்டது. அடுத்து, வரலாற்று நாவல்கள். இதில் அமரர் கல்கியும், சாண்டில்யனும் போன உயரம் மற்றவர்களால் போக முடியவில்லை.

ராஜராஜ சோழன் காலத்தையொட்டி கதை எழுதும் போது, 'சாம்பார் கொதித்தது. அதில் மிளகாய் அதிகம் இருந்தது' என்றெல்லாம் எழுத முடியாது. ஏனென்றால், அந்த நாளில் காரத்துக்கு மிளகுதான் பயன்பட்டது. மிளகாய், தக்காளி எல்லாம் மேல்நாட்டிலிருந்து ஒரு முன்னூறு ஆண்டுகளில் வந்தவை. எனவே, நுட்பமாய் நிறைய விஷயங்களை உள்வாங்கிக்கொண்டு கவனமாய் எழுத வேண்டும். அதனாலேயே, சரித்திரக் கதைகளை எழுதுவோர் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது.

அதேபோலத்தான் துப்பறியும் கதைகளும், மர்மக் கதைகளும்! விறுவிறு வென்று சஸ்பென்ஸ் கெட்டுவிடாமல், கதை சிட்டாகப் பறக்க வேண்டும்.

வாசக உலகமும், பெரிதான நிலையில் பத்திரிகைகளும் இப்படி துப்பறியும் மர்ம நாவல்களை வெளியிடுவதில் போட்டி போட்டன. இதில், சில குறிப்பிட்ட எழுத்தாளர்கள் பேரும் புகழும் பெற்றனர். அந்த நாளில், பரிசுக்குரிய பல கதைகளை எழுதி வளர்ந்து கொண்டிருந்த

நான், அடுத்தகட்ட வளர்ச்சிக்காக இந்த மாத நாவல்களை எழுத விரும்பி, சில மர்மக் கதைகளையும் எழுதினேன். நல்ல பெயரும் கிடைத்தது.

ஆனால் தனித்த பெயர் ஒன்று கிடைக்க இன்னமும் உழைக்க வேண்டும், வித்தியாசப்பட வேண்டும் என்று தோன்றவே, என்ன செய்யலாம் என்று யோசித்த போதுதான், மனித மனமே ஒரு பெரும் மர்மமான விஷயம் என்பதில் இருந்து, நம் வாழ்வில் இன்றும் புலப்படாத புதிராக மர்மமாய் பல விஷயங்கள் இருப்பது என் கவனத்தில் பதிவானது. உதாரணமாக - ஆவி தொடர்பான விஷயங்கள், மறு ஜென்மம் தொடர்பான விஷயங்கள், இறப்புக்குப் பின் என்னாகிறோம் என்னும் கேள்விகள், நம் வாழ்வை கிரகங்கள் வழி நடத்துகின்றன என்னும் நம்பிக்கை சார்ந்த கருத்துக்கள் என்று என்முன் அநேக கேள்விகள் எழும்பி நின்றன.

கூடவே, இதுபோன்ற விஷயங்கள் எல்லாம் மூடத்தனமானவை என்கிற ஒரு கருத்தும், அதையொட்டிய சிந்தனைகளும் சேர்ந்தே எழும்பியது. இம்மட்டில் யாரிடம் கேட்டாலும், அவர்களால் பளிச்சென்று ஒரு தீர்க்கமான பதிலைக் கூற முடியவில்லை. சிலர் சொன்ன பதிலுக்குள்ளும் பெரும் முரண்பாடு. இதை எதற்கு ஆராய்ந்து கொண்டு? ஆவிகள் இருப்பதாகக் கருதிக்கொண்டு பல திரைப்படங்கள் வந்துள்ளன. பல நாவல்களும் வந்துள்ளன. நாமும் ஓர் ஆவி இருப்பதாக வைத்துக்கொண்டு மிரட்டலாக ஒரு நாவல் எழுதுவோம் என்று விரும்பினாலும், மனம் அதற்கு ஒப்பவில்லை. அப்போதுதான் இந்த மறு பிறவி குறித்தும், உயிர், ஆத்மா குறித்தும் பெரியவர் கருத்து என் கண்களில் பட்டது. அது, பெரும் தெளிவைத் தந்தது. அது...?

25

உயிர் குறித்தும், ஆத்மா குறித்தும், அப்புறம் இந்த மனம் என்பது குறித்தும் நிறையவே சிந்தித்துள்ளேன். இதிலேயே குழப்பம் உண்டு.

உயிர் வேறு - ஆத்மா வேறா என்று...?

எனக்குத் தெரிந்து, உயிர் குறித்தும் மனம் குறித்தும் மிகத் தெளிவாய் மகா பெரியவரைத் தவிர எவரும் சொல்லவில்லை என்றுதான் கூறுவேன்.

இப்போது எனக்கு 55 வயதாகிறது.

இதில் இந்த மாதிரி விசாரங்கள் எல்லாமே மெல்ல ஒரு முப்பது வயதுக்கு மேல்தான் ஏற்படத் தொடங்குகிறது. குறிப்பாக, நண்பர்கள் உறவினர்கள் மரணிக்கும்போது, அந்த நிகழ்வில் பங்கேற்கும்போது, உயிர் குறித்த எண்ணமும், குறிப்பாக நம் உயிரும் ஒருநாள் போய்விடும் என்கிற எண்ணமும் பயமும் படிப்பறிவே இல்லாத ஒரு பாமரனுக்குக் கூட ஏற்பட்டே தீரும். எனக்கு மட்டும் எப்படி ஏற்படாமல் போகும்?

சின்னதாய் ஒரு முள் குத்தியதற்கே முகத்தை அஷ்ட கோணலாக்கிக் கொண்டு, 'அம்மா' என்று வலியை முனங்கலாய் கடத்தும் நம் எதிரில், நமக்கு உற்றவர்களின் உடல் தீயிடப்படும்போது, அந்த உடல் தீயை ஏற்றுக்கொண்டு திகுதிகுவென்று எரியும்போது, அதைப் பார்க்கும் நம் மனதுக்குள் பலவிதமான உணர்வுகள் பற்றி எரியும். குறிப்பாக, நம் உடம்பும் ஒருநாள் எரியத்தானே போகிறது? உயிர் இருக்கும்போது மட்டும் இந்த உடம்பு ஏன் நெருப்பைக் கண்டு பயமாய் பயப்படுகிறது என்றெல்லாம் கேள்விகளாய் கேட்கும்.

மொத்தத்தில் 'உடம்பு-உயிர்-மனது' என்று மூன்று குறித்தும் பல கேள்விகள் நமக்குள் உண்டு. இவற்றை வரிசையாகப் பார்ப்போம். அப்போதுதான் சரியான பதிலை நாம் உணர முடியும்.

முதலில் மனம் பற்றி தெளிவாக நமக்குப் பதில் கூறும் முன், 'தேவர்கள் யார்? அசுரர்கள் யார்?' என்று ஒரு கேள்வி எழுப்புகிறார் பெரியவர்.

இந்த மாய உலகின் ஆசாபாசங்களை நோக்கி, நம்மை இழுத்துச்செல்வது எதுவோ அது அசுரம்! அந்த ஆசாபாசங்களை அடக்கி மனதை எது இல்லாமல் பண்ணுகிறதோ அது தேவம். நம் ஒவ்வொருவருக்குள்ளேயும் இந்த தேவ அசுர யுத்தம், ஒவ்வொரு நொடியும் நடந்து கொண்டே இருக்கிறது.

'நல்ல காரியம் பண்ணு... காமியாய் திரியாதே. கோபம் கொள்ளாதே, கோயிலுக்குப் போ. த்யானம் பண்ணு, தொண்டு பண்ணு' என்று நம் பெரியவர்கள் ஒரு பக்கம் சொன்னபடியே இருக்க, மறுபக்கம் இதையெல்லாம் காதில் வாங்கிக்கொண்டு, இவற்றில் போக முற்பட்டு, ஆனால் முழுவதுமாய் போக முடியாமல் நாம் சறுக்கிச் சறுக்கி விழுகிறோம்.

கூட்டிக் கழித்துப் பார்த்தால், 95 சதவிகிதம் அசுரம் தான் ஜெயிக்கிறது. 5 சதவிகித அளவுக்குத்தான், நாம் நல்ல விஷயங்களைப் பின்பற்றி

எப்போதாவது அதில் ஜெயிக்கிறோம்.

95 சதவிகிதம் அசர சக்தி ஜெயிக்கும்போது, நமக்கு சந்தோஷமே பெரிதாக இல்லை. ஆனால், எப்போதாவது ஜெயிக்கும் தேவசக்தி ஜெயிக்கும்போது, மனது பெரிதாக சந்தோஷப்படுகிறது. இது எத்தனை பெரிய ஆச்சரியமான விஷயம்? மொத்தத்தில், நம் மனது தெரிந்தே நிறைய தவறுகளைச் செய்கிறது. பின், அதிலிருந்து விடுபடவும் முயல்கிறது. இதுவே, நம் வாழ்க்கையாக உள்ளது. இதில் தவறுகளைச் செய்துவிட்டு அதிலேயே இருக்கவிடாமல், நாம் சில நல்லதாவது செய்யக் காரணம் பய உணர்ச்சிதான்!

சரி, இந்த பயம் என்றால் என்ன? நமக்கு ஏதாவது ஆகிவிடுமோ, நாம் செய்யும் தவறுகளால் நரகம் அனுபவிக்க வேண்டிவிடுமோ என்று நம்மைக் குழப்புவதே பயம்தான்! இந்த பயத்தை வெல்லவும், இல்லாமல் போக்கவும்தான் நல்லது செய்ய முயல்கிறோம். ஆனால் நல்லதை தொடர்ந்து செய்ய முடியவில்லை. கநாம, குரோத, மோக, லோப, மாச்சரியங்கள் எப்படியாவது நம்மை வீழ்த்தி ஜெயித்து விடுகின்றன.

மொத்தத்தில் நாம் இருக்கிறோம். நமக்குள் பயமும் இருக்கிறது. ஆக நாம் இரண்டாக உள்ளோம். இந்த நிலைப்பாட்டுக்குப் பேர்தான் த்வைதம்! இந்த பயத்தைப் போக்கடித்து, நாம் மட்டுமே இருப்பதற்குப் பேர்தான் அத்வைதம்! அதாவது, அத்வைதி என்பவனுக்குப் பயமில்லை.

‘எப்போது பயமில்லாமல் போகும்?’

‘ஒரு த்வைதி அத்வைதியாகும்போது, பயமில்லாமல் போகும்!’

‘பயமில்லாமல் போனால்?’

‘பயமில்லாமல் போகும்போதே, மோட்சம் சித்திக்கும்!’

‘மோட்சம்தான் (‘மட்டும்’ என்றால்) - விடுபட்டநிலை. இதைத்தான் வீடுபேறு என்கிறோம். விடுதலை என்கிறோம்.

‘எதிலிருந்து விடுதலை?’

‘சம்சார பந்தத்தில் இருந்து...’

‘இந்த சம்சார பந்தத்தில் எதனால் கட்டுப்பட்டோம்?’

‘கர்மாவினால்’

‘எதனால் கர்மா பண்ணினோம்?’

‘ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகத்தான்...”

‘ஆசை எதனால் உண்டாயிற்று?’

‘மனது என்று ஒன்று இருப்பதால்... இதன் வழியாகத்தான் இந்திரியங்கள் தூண்டப்பட்டு வினை ஏற்படுகிறது. சினிமா பார்ப்பது, வம்பு பேசுவது, கண்டதைத் தின்பது என்று அனேக காரியங்கள்...’

‘அப்படியானால் சம்சார விடுதலை என்பது மனதிடம் இருந்து விடுபட வேண்டும் என்றுதானே ஆகும்?’

‘ஆமாம்! ஆமாம்! ஆமாம்!’

- தேவ அசுரர்களில் ஆரம்பித்து, படிப்படியாக கேள்விகள் எழுப்பி விளக்கம் கொடுத்து, இறுதியாக மனோ விடுதலைதான் முக்தி என்று வந்து முடிக்கும் பெரியவர், மனம் பற்றி இனி கூறப்போவதையும் கூர்ந்து கவனிப்போமா?

‘மனோ விடுதலைதான் முக்தி, மோட்சம் என்றால் ஒரு சந்தேகம் வருகிறது. மனசால்தான் நல்லது கெட்டது என்று சகலத்தையும் அறிகிறோம். அப்படி இருக்க, அதை இல்லாது செய்துவிட்டபின், இந்த முக்தி மோட்சத்தை எதைக்கொண்டு அனுபவிப்பது? அல்லது உணர்வது?’

- இந்தக் கேள்விக்கு பதிலைப் பார்ப்போமா?

‘இந்த மனது இருக்கிறதே, அதற்கு இன்னொன்றைத்தான் தெரியும். இதற்கு, தன்னைத் தெரியாது. மகா சாமர்த்யத்தோடு எதை எதையோ தெரிந்துகொள்கிற அது, தன்னையே தெரியாத ஒரு அசடாகத்தான் இருக்கிறது. இதை யோசித்துப் பார்த்தால் தெளிவாகவே புரியும் இது, நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக்கொண்டல்லவா இருக்கிறது. சந்தோஷத்தில் நிரந்தரமாக இருக்க முடிகிறதா? இல்லை; துக்கத்தில்தான் நிரந்தரமாக இருக்கிறதா? மாறிக்கொண்டே இருக்கிறது... இதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

நாம் யாரையாவது நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அது தோராயமாகத்தான்... துல்லியமாக, யாரும் யாரையும் புரிந்து கொள்ளவே முடியாது.

ஒரு வேடிக்கை என்னவென்றால், இந்த மாறிக்கொண்டே இருக்கும் மனது, தூக்கத்தின்போது, அப்புறம் மயங்கி நாம் விழும்போது

செயல்படாமல் நின்று போகிறது. தூக்கம் கலைந்தவுடன், மூர்ச்சை தெளிந்தபின் திரும்ப ஆரம்பமாகிறது ஆட்டம்.

இதை வைத்துப் பார்க்கும்போது, மனம்தான் நாம் என்றாகிறது. இந்த நாம், உடம்பு தூக்கத்தில் இருக்கும் போது நின்றுபோய் தூக்கம் கலையவும் செயல்படுவதைப் பார்க்கும்போது, பல கேள்விகள் எழுகின்றன. மனம் இயங்காத உடம்பு, அப்போது இயங்கியபடி இருந்ததே அதற்கு எது காரணம் என்பது முதல் கேள்வி. உயிர்தான் காரணம் என்பது பதிலாகிறது. நம் மனம் இயங்கும்போது உயிர் இருக்கிறது. தூங்கும்போதும் உயிர் இருக்கிறது எனும்போது, மனம் வேறு உயிர் வேறு என்றாகிறது. இன்னொரு கேள்வியும் எழுகிறது. உயிர் போன உடம்பில் மனம் வேலை செய்வதில்லை. அந்த மனம் எங்கே போயிற்று? அது உயிரோடு போய்விட்டதாகத்தானே கருத வேண்டி உள்ளது?'

- இப்படி, மனது உயிர் என்று படிப்படியாகக் கேள்வி எழுப்பி, பதிலையும் சொல்லிக்கொண்டு வரும் பெரியவர், இனி சொல்லப்போவதுதான் உச்சம்!

'கர்மாக்களை அனுபவிப்பதற்காக ஜீவன் இன்னொரு பிறப்பு எடுக்கும்போது, புதுப்பிறவியில் அது மறுபடியும் வேலையை ஆரம்பித்து விடுகிறது. புதுப்பிறவி உண்டாகிறது என்னும்போதே, உயிர் தத்துவம் மறுபடி ஒரு உடம்பில் வேலை செய்ய ஆரம்பித்து விடுகிறது. ஒரு உடம்பை விட்டுப்போன உயிர், இன்னொரு உடம்பை எடுத்துக்கொள்கிறது. மனசும் இப்படிப் பண்ணுகிறது. அந்த மனசையும் இந்த உயிர் தத்துவம்தான் தன்னோடு சேர்த்து எடுத்துக்கொண்டு போய் இன்னொரு உடம்பிலிருந்து வேலை செய்ய வைக்கிறது.

மனது வேலை செய்யாத தூக்கம், மூர்ச்சையிலும் உயிர் இருக்கிறது. ஆனால், உயிர் இல்லாத சரீரத்தில் மனது வேலை செய்வதில்லை. இதிலிருந்து, உயிரை ஒட்டியே மனசு வாழ முடியும்; தனியாக அதனால் செயல்பட முடியாது என்பது தெளிவாகிறது.

எனவே, உயிரும் மனசும் ஒன்றோடொன்று தொடர்போடு உள்ளது. அதாவது உயிர் - மனசு என்று இரண்டாக உள்ளது. எது இரண்டாக இருந்தாலும், அது த்வைதம் ஒன்றாவதே அத்வைதம்! 'எப்படி மனதை இல்லாமல் செய்து நாம் ஒன்றாவது?'

'பக்தி செய்து, ஆத்ம விசாரப்பட்டு, மாறிக் கொண்டேயிருக்கும் இந்த மனம் வேண்டாம் என்று, இந்த மனதைக் கொண்டே நினைத்து,

மாயத்திரை போட்டிருக்கும் பகவானிடம் அதை விலக்கும்படி பிரார்த்தித்து தவத்தில் மூழ்கும்போது, மனம் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கி, இறுதியில் முற்றாக இல்லாமல் போய், உயிர் மட்டும் மிஞ்சி இருந்து ஒரு ஆனந்தநிலை உருவாகிறது இதைத்தான் 'பிரம்மானந்தம்' என்கிறோம். இது எப்படி இருக்கும் என்று மனதால் உணர முடியாது. மனம் இல்லாமல் போகும்போதே உணரமுடியும்!'

- இப்படி மனம் தொட்டு ஆரம்பித்து, மறுபிறப்பு பற்றி பெரியவர் சொன்னதும், அது எதனால் ஏற்படுகிறது என்பதும் புரிந்து போனது.

அதுமட்டுமல்ல... இந்த விஷயங்களை சொல்லிக்கொண்டு வரும்போது, 'யாதனா சரீரம்' என்று, ஒரு இடத்தில் சொல்லியிருப்பார். இந்த யாதனா சரீரம்தான் நரகத்துக்குப் போய் எல்லா சித்ரவதைகளையும் அனுபவிக்கும் சரீரமாகும். இப்படிச் சொல்லும்போது சொர்க்கப் நரகம் இருப்பதும் தெரியவருகிறது. சரி, எது யாதனா சரீரம் எதனால் இது ஏற்படுகிறது?

இந்தக் கேள்விக்கான பதிலுக்குள்தான், மறு ஜென்மத்துக்கான விளக்கமும், மண்ணில் உயிர்கள் பிறக்கும் போதே பலவித ஏற்றத் தாழ்வுகளோடு பிறப்பதற்குமான பதில் உள்ளது.

அதை...

26

இது அனேகமாக மண்புழுவில் ஆரம்பித்து டைனோசர் வரை தொடர்கிறது. இடையில் இந்த ஒன்பதைப் பற்றிய அறிவையும், தெளிவையும் கொண்ட உயிரினமாக மனிதன் மட்டுமே இருக்கிறான். அதற்குக் காரணம், அவனுக்கு மட்டும்தான் மனம் என்ற ஒன்று இருக்கிறது. இந்த மனம், அறிவு சார்ந்ததாக உள்ளது. மற்ற உயிர்களுக்கும் அறிவு இல்லாமல் இல்லை. அவற்றின் அறியும் ஆற்றல் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று ஒரு அளவோடு உள்ளது. அந்த அளவே, அவை உயிர் வாழ்ந்து மடிந்திட போதுமானதாகவும் இருக்கிறது.

மனிதன் மட்டுமே ஆறாவதாக ஒரு அறிவை கூடப் பெற்று, தான் மனிதன் என்று அறிந்து கொண்டதோடு, அது எறும்பு, அது காக்கை, அது மண்புழு, அது வானம் என்று சகலத்தையும் குழப்பமின்றி அறிந்து, அவற்றுக்கும் ஒரு பெயர் கொடுத்து விளங்கிக் கொண்டான்.

இதனால் இவன் வரையில் உடல், உயிர், மனம் எனும் முப்பரிமாணம் உருவானது. இந்த முப்பரிமாணத்தையும் அவன் விளங்கிக்கொள்ள முனைந்ததில் பல உண்மைகள் தெளிவாயின.

அதில் ஒன்று, உயிரும் மனமும் உடம்பு சார்ந்தே இயங்கும். அதேசமயம், இந்த உடம்பு உறக்கத்திலாழும் போது மனமும் அடங்கிவிடும். ஆனால், உயிர் இயக்கம் இருக்கும். எனவே உயிர், உடம்பை இயக்கும்போதுதான் மனமும் இயங்கும். அல்லாத நிலையில் உறக்கத்தில் அது கனவு காணலாம். அவ்வளவே!

எனவே, உயிர் சார்ந்ததே மனது.

இந்த உயிர் பிரியும்போது மனமும் பிரிந்து உடல் வெறும் பிண்டமாகி விடுகிறது. உயிர் சார்ந்த இந்த மனது, எண்ணங்களால் சூழப்பட்ட நிலையில் ஒரு நிரம்பிய பானையாகவும், எண்ணங்கள் அற்றுப்போகும்போது காலிப்பானையாகவும் ஆகிறது (இது ஓர் உதாரணமே).

ஒரு யானையைப் பிடிக்க இன்னொரு யானையைப் பயன்படுத்துவது போல, மனதை அடக்க - அது இல்லாமல் ஆக்க, அதையே பயன்படுத்த வேண்டியுள்ளது.

அப்படி மனம் இல்லாமல் போவதை மனோநாசம் என்கிறது சித்தம். இந்த நிலையில் ஒரு பேரின்பம் தோன்றுகிறது. இந்தப் பேரின்பத்துக்குப் பேர்தான் முக்தி மோட்சம், சொர்க்கம், அமைதி என எல்லாம்!

மொத்தத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டுவிட்டது.

நாம் கஷ்டப்பட, அதை எண்ணிப்பார்க்கும் மனம் தான் மூல காரணம். எண்ணிப் பார்த்திடாத கஷ்டத்தில் இருந்தாலும், எண்ணிப் பார்த்திடாத மனம் இருக்குமானால், அந்தக் கஷ்டத்தை நாம் உணரமாட்டோம் இதற்கு உதாரணமாக சதாசிவ பிரம்மேந்திரரின் வாழ்க்கை சம்பவம் ஒன்றைச் சொல்லலாம். சதாசிவ பிரம்மேந்திரர் ஒரு அவதூதர். காவி உடை கூட வேண்டாதவர் தன்னையே மறந்தவர். அப்படிப்பட்டவர், ஒரு நாள் நிர்வாணமாக ஆற்றோரம் நடந்து செல்கிறார். விஸ்ராந்தியான இலக்கில்லாத நடை. அப்போது ஆற்றில் குளித்தபடி இருக்கும் சில பெண்கள், பிரம்மேந்திரரின் நிர்வான கோலத்தைப் பார்த்து, அவரைத் தவறாகப் புரிந்து கொண்டு கூக்குரல் எழுப்புகின்றனர். அதைக் கேட்டுவரும் சிலர் பிரம்மேந்திரர் எதிரில்

சென்று அவரைத் தாக்கத் தொடங்குகின்றனர். அதில் ஒருவர் கோபத்தில் பிரம்மேந்திரரின் ஒரு கையையே வெட்டிவிட ரத்தம் கொட்டுகிறது. கையும் துண்டாகி விழுகிறது. ஆனால், பிரம்மேந்திரர் எந்த வலியும் இன்றி தொடர்ந்து நடந்து சென்றாராம். பிறகே, அவர் மனம் கடந்த மனிதர் என்பது எல்லோருக்கும் புரிந்ததாம்.

இப்படி எல்லாம் உடம்புக்குள் இருக்கும் மனதை ஒருவர் ஜெயிக்க முடியுமா என்று கேட்கலாம். ஜெயித்தவர்கள் எவ்வளவோ பேர் உண்டு. நாம் உப்பு, புளி, காரம் என்று சாப்பிட்டு உடம்பின் அடிமையாகி, மனதையும் உலக விஷயங்களில் இழந்தே பழகிவிட்டதால், நமக்கு இது நம்ப முடியாத ஒன்றாகவும், பிரமிப்பாகவும் தோன்றும்.

மனதை அடக்கத்தான் தியானம், ஜபம், உபவாசம், பஜன் என்று பல வழிமுறைகள். பெரியவர் இப்படி உடல் - மனம் - உயிர் என்று சொல்லிவிடும் போக்கில் தான் இறப்பு குறித்தும், இறப்புக்குப் பின் என்னாகிறோம் என்பது குறித்தும் விவரிக்கிறார். நம் உயிர் உடலைவிட்டுப் பிரிந்த நிலையில் உடம்பு மண்ணாகிறது; இல்லாவிட்டால் சாம்பலாகிறது.

உயிர் என்னாகிறது? இந்த உலகின் மில்லியன் டாலர் கேள்வி இதுதான்!

இந்த உயிரை, இறப்புக்குப் பின் ஆத்மா என்கிறோம். இந்த ஆத்மா, தான் உடலில் வாழ்ந்த நாளில் செய்த பாவபுண்ணியங்களுக்கு ஏற்ப அடுத்த கட்டத்தை அடைகிறது என்பது, ஒரு சமாதானமான பதிலாக, எல்லா மதங்களும் கூறிடும் ஒரு பதிலாக உள்ளது. இதில் பௌத்த மதத்தை விட்டு விடுவோம். சொர்க்கம் நரகம், பாவம், புண்ணியம் குறித்த சிந்தனைகள் எல்லாமே பௌத்தத்தில் வேறாக உள்ளது.

இஸ்லாமிய மதமும், கிறித்தவமும்கூட, ‘தவறு செய்யாதே; பின்னர் தண்டனை அனுபவிக்க நேரிடும்’ என்பதை வலியுறுத்துகின்றன. அந்த தண்டனை எந்த விதத்தில் என்பதில்தான் நம் இந்து மதம் ஒரு பிரத்யேக தெளிவைக் கொண்டுள்ளது.

இறப்புக்குப் பிறகு, நம் பாவங்களுக்கும் புண்ணியங்களுக்கும் ஏற்ப, மறுபிறப்பு - சொர்க்கம் - நரகம் எனும் மூன்று நிலைப்பாடுகளுக்கு நாம் தயாராகிறோம். எப்படி?

பெரியவர் குரல் வழியாகவே அறிவோமே!

“நம் கர்மா மூட்டை சாதாரண தப்புகள் உள்ளதாக இருந்தால், இந்த பூலோகத்தில் மறுஜென்மா எடுப்பதோடு போகும். இதுவே பெரிய கஷ்டம்தான். திரும்பவும் சம்சார பந்தம்! அதனால் திரும்பவும் பயத்துக்குக் காரணமாகிறது. ஆனால், சாதாரண தப்போடு போகாமல் மகா பாவங்களைச் செய்து நாம் மூட்டை கட்டிக் கொண்டிருந்தால், இறந்தபிறகு மறுபடி இந்த பூமியில் இன்னொரு உடம்பு எடுப்பதற்கு முந்தி, இதைவிட அதிக கஷ்டம் தருவதான நரக லோகத்துக்குப் போய், சொல்ல முடியாத அளவுக்கு சித்ரவதைகளை அனுபவிக்க வேண்டும். மனுஷ உடம்பால் இந்தச் சித்ரவதைகளைத் தாங்க முடியாது. உடம்பே நைந்து ஒன்றுமில்லாமல் போய்விடும். அதோடு அந்த உடம்பைத்தான் பூமியிலேயே கழட்டிவிட்டாச்சே! இந்த நிலையில் மகா பாவிகளுக்கு ‘யாதனா சரீரம்’ என்று ஒரு சரீரம் ஏற்படுகிறது.

இந்த யாதனா சரீரத்துக்குள், பூலோகத்துக்குள் உடம்பை விட்டுவிட்டு வந்த ஆத்மா புகுந்துகொள்ள, யாதனா சரீரம் செயல்பட ஆரம்பிக்கும். இந்த யாதனா சரீரம் நரக சித்ரவதைகளால் நைந்து போகாது. ஆனால், மனித சரீரம் போலவே வலியைத் தரும்”

- என்று பெரியவர் கூறிடும்போது ஒரு உண்மை புலனானது. அதற்குமுன் இறப்புக்குப் பின் நாம் என்னாவோம் என்பது குறித்து, இந்த உலக வாழ்வை ஒரு இயற்கைச் செயல்பாடாக - அதாவது மேலே ஒரு கல்லானது எறியப்பட்டால் கீழே அது விழுந்தாக வேண்டும் என்கிறார் போன்ற ஒரு நியதிக்கு உட்பட்ட வாழ்வாக, நம் வாழ்க்கை உள்ளது என்பதே என் எண்ணம்.

அதாவது, நான் விரும்பி இந்தப் பிறப்பெடுக்கவில்லை என்பது தொடங்கி, ஒரு ஆணும் பெண்ணும் ஒன்று சேரப்போய் அதன் வினை வழியில் அந்த ஒன்றிணைந்த விந்து கலப்பில் உடம்பு அமைகிறது. பின் அவர்கள் உறவு ஏற்பட்டு அவர்கள் பேசிய பாஷை தாய் மொழியாகி, பிறந்த இடம் சொந்த ஊராகி, அந்த ஊர் உள்ள நாடு தாய் நாடாகி என்று எல்லாமே ஒன்றைத் தொட்டு ஒன்றாக அமைகிறது. ஒரு இடத்தில் என் விருப்பம், என் தீர்மானத்துக்கு இடமில்லை. இப்படித்தான் ஆடு, மாடு முதல் புழு பூச்சி வரை பிறக்கின்றன. உடம்பு உருவான காரணத்தால் பசி எடுக்கத் தொடங்குகிறது. இங்கே தான் இயக்கம் தொடங்குகிறது. உடம்புக்கு இயக்கம் பசியிடம்; மனதுக்கு இயக்கம் அதை அடக்க முற்படும் செயல்பாடுகளால்!

அப்புறம், முதுமை தானாக வருகிறது. ஆரோக்யமாக இயங்கிய உடம்பே பாகம் பாகமாகச் செயலிழந்து ஒருநாள் உயிர் பிரிந்து

விடுகிறது. இதற்குப் பெயர்தான் வாழ்க்கை!

இந்த வாழ்க்கைக்குள் இந்த பாவ புண்ணிய சிந்தனை எல்லாம், மனிதனைத் தவிர வேறு எந்த உயிருக்கும் இல்லை. மனிதன் மட்டும்தான் இவற்றுக்கு நடுவில் தன்னை அறிந்து, மற்றவற்றையும் அறிந்து கொண்டு வாழ்கிறான் என்பதைக் கடந்து, அவனிடம் வேறு என்ன பெரிய விஷயம் உள்ளது? அவன் பிடியும் அவனிடம் இல்லைதானே? மனித வாழ்வும் மிகமிக இயற்கை சார்ந்த அதன் பிடிக்குள் உள்ள ஒரு விஷயம்தான்! புத்தி இருக்கப் போய்தான் பாவ புண்ணிய சிந்தனை உருவானது. இந்த உலகில் எல்லாமே இரண்டாக இருக்கின்றன. அப்படி இருந்தாலே அதை நாம் புரிந்துகொள்ள முடியும். வாசம் என்றால் நாற்றம்; இனிப்பு என்றால் கசப்பு; குளிர் என்றால் வெப்பம்; அழகு என்றால் அவலட்சணம் இப்படி ஒரு வரிசையில்தான், பாவம் என்றால் புண்ணியம் தோன்றியிருக்க வேண்டும் என்று நான் கருதினேன்.

இதுமட்டுமல்ல... மனம் இல்லாத உயிர்கள், மனம் உள்ள உயிர்கள் என்று இருபிரிவு. அதில் ஒன்றில் நாம்... மற்றபடி இதற்கு மேல் யோசிக்க எதுவுமே இல்லை என்கிற என் எண்ணத்தை பெரியவர் உடைத்தது, 'யாதனா சரீரம்' என்கிற ஒரு விஷயத்தில்! அடுத்து, பூமிக்கு வெளியே ஒரு உலகம் இருப்பதும் அங்கே நம் உயிர்களின் கர்மக் கணக்கு எடை போடப்படுவதும் என்கின்ற அந்த விஷயம்!

மனோ நாசத்தை எப்படி மனம் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் உணர முடியாதோ, அப்படித்தான் இந்த கர்மக் கணக்கை ஒட்டிய நம் அடுத்த நிலைப்பாடுகள். இதை நாம் இறந்து பார்க்காமல் தெரிந்துகொள்ள முடியாது. இறந்துவிட்டாலோ தெரிவிக்க முடியாது. ஆக, உயிரோடு நாம் இருக்கும்போது எப்படிப் பார்த்தாலும் இதைத் தெரிந்துகொள்ள வழி இல்லாததை, எதை வைத்து பெரியவர் போன்றவர்கள் தெரிந்து கொண்டனர்? நாமும் இதை எதை வைத்து நம்புவது?

இந்த இரு பிரதான கேள்விகளும் எனக்கு மட்டுமில்லை; எல்லா பகுத்தறிவாளர்களிடமும் உள்ளது தான். இந்தக் கேள்விக்கும், நமக்கும் ஐயப்பாடின்றி புரியும் விதத்தில் பெரியவர் விடை கூறியதுதான் ஆச்சர்யம்.

அது...?

27

உடம்பிலே உயிர் இருக்கும்போது மனது செயல்படுகிறது. உயிர் போய்விட்டாலோ அதோடு அதுவும் போய்விடுகிறது. உடம்பு, மண்ணோடு மண்ணாகவோ சாம்பலாகவோ ஆகிவிடுகிறது. உயிரோடு போன மனது அதன்பின் என்னவாகிறது? அதைத்தான் ஆத்மா என்கிறோமா? - இப்படிக் கேள்விகள் எழுகின்றன. இதற்கு பெரியவர் வெகு அழகாக தன் பாஷையில் கூறியிருக்கும் பதில் சிந்திக்க வைக்கிறது.

‘நிஜ ஆசாமி ஒருத்தன். அவன் ராஜா வேஷம் போட்டுக் கொள்கிறான். அவன் ஒருவன்தான். ஆனால், வேஷம் போட்டுக் கொண்டதால் அவன் ராஜாவாகவும் பார்க்கப்படுகிறான். பார்க்கப்படுகிறானேயொழிய ராஜாவுக்குரிய அதிகாரம், சுகம், செல்வாக்கு எதுவும் அவனுக்குக் கிடையாது. பின், வேஷத்தையும் அவன் கலைக்கிறான். திரும்ப, அவன் அவனாக ஆகிவிடுகிறான்.

இங்கே அவன்தான் ஆத்மா... அவன் போட்ட ராஜா வேஷம்தான் மனது!

இன்னொரு உதாரணத்தையும் கூற முடியும்.

ஒரு கயிறு பாம்பாகத் தெரிகிறது. கயிறே இல்லை என்றால், இப்படி பாம்பாக தோற்றம் ஏற்பட்டு நாமும் நினைத்துப் பார்த்திருப்போமா? ஆக, கயிறாகிய ஆத்மா இல்லை என்றால் பாம்பாகிய மனக் கற்பனைக்கும் இடமில்லை. இப்படித்தான் ஆத்மாவுக்கு வேறாக அது இருப்பதால் மட்டுமே மனம் உருவாகிறது. உருவாகிறது என்பதும் சரி; உருவாக்கப்படுகிறது என்பதும் சரி; ஒன்றுதான்.

அப்பா அம்மா சேர்க்கையில், விந்து சுரோணிதக் கலப்பில், உயிரியக்க செயல்பாட்டில் நாம் பிண்டமாக உருத்திரள்கிறோம். ஒரு குறித்த கால அளவுக்குப் பின் பிறப்பு எனும் பெயரால் கருப்பையைவிட்டு பூமிக்கு வந்து நம் கால்களால் நிற்கப் பழகுகிறோம்.

இவ்வேளையில் காதில் விழும் சப்தத்தால் மனம் உருவாகிறது. சப்தத்துக்குண்டான மொழி தாய் மொழியாகிறது. கூர்மையாக சிந்தித்துப் பார்த்தால், நாம் உடம்பும் உயிருமாக ஒரு காலிப் பாத்திரம் போல் தான் தொடங்குகிறோம். அந்தப் பாத்திரம், மெல்ல சப்தமாகிய பேச்சால் மனமாகி நிரம்புகிறது.

இப்படி நிரம்பி வழிவதை தடுத்து நிறுத்தி நினைவைக் கட்டிப்போடுவதை, எண்ணங்களே இல்லாதபடி ஆவதை யோகம், தியானம், என்கிறோம். இவற்றால் பிறந்த போது இருந்த அந்த முழுமையான காலிப்பாத்திர நிலையை அடைவதே மனோநாசம். இந்த நிலையில் அழியாத இன்பம் இருக்கிறது.

இதையே பெரியவர், 'மனதை இழப்பதே பெரிய மோட்சம்' என்கிறார். ஆனால், இது அத்தனை சுலபமானதா என்ன? சதாசர்வ காலமும் இந்த மனது ஆசாபாசங்களில் உழன்றுகொண்டே இருந்து உயிர் பிரியும் போதும் பாடாய் படுத்தி எடுத்து விடுகிறதே!

'ஐய்யோ... என் பெண்டு பிள்ளைகளை நிர்க்கதியாக விட்டுவிட்டுப் போகிறேனே... அடடே... சேர்த்து வைத்த எதையும் துளிகூட அனுபவிக்காமல் செத்துப் போகப் போகிறேனே...!' - இப்படி உயிர் பிரியும் முன்வரை மனதால் துடிக்காதவர்கள், தவிக்காதவர்கள் இருக்க முடியுமா? இதைத் தான் மனசிடம் சிக்கிக்கொள்வது என்கிறார் பெரியவர். கொஞ்சம் மாற்றி, ஆன்மா இங்கே மனசிடம் சிக்கிக்கொண்டுவிட்டது எனலாம்.

எப்படி?

தான் புரிந்த கர்மச் செயல்பாடுகள் எண்ணங்களாய் மனதில் பதிவாகிவிட, அதற்கேற்ற போக்கும் நிலைப்பாடும் தானாய் உருவாகி விடுகிறது.

இதைத்தான் நம் தலை எழுத்தை நாமே எழுதிக் கொள்கிறோம் என்றார். இந்தத் தலை எழுத்து என்கிற 'கான்செப்ட்'கூட இந்து மதத்தில் மட்டும் காணப்படும் ஒரு ஆச்சரியமான விஷயம். தலையைத் தட்டியும், நெற்றியைச் சுட்டிக் காட்டியும் 'தலைஎழுத்து' என்று நாம் சொல்வதுகூட மனதின் ஒரு பாவனைதான்.

உண்மையில், தலையான எழுத்தே தலை எழுத்தானது. தலையான எழுத்தென்பது எது? நம் ஒட்டு மொத்த வாழ்வை சுயசரிதையாக எழுதினால் அது மிக விரிவான தலை எழுத்து. ரத்னச் சுருக்கமாக எழுதினால், அதுதான் தலைஎழுத்து. இதைக்கூட நம்மில் சிலர் எப்படிச் சொல்கிறோம் தெரியுமா? 'ஹூம்... என் தலைல அந்த ஆண்டவன் இப்படி எழுதிட்டான். என்ன செய்ய? எழுதினதை மாத்த முடியாதே...' என்று புலம்புகிறார்கள்.

இது முட்டாள்தனமான மனோபாவனை.

அந்த ஆண்டவன்தான் நம் தலை எழுத்தை எழுதுவதாக ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம். இன்றைய மக்கள் தொகை 700 கோடி.

‘இத்தனை பேருக்கு தனித்தனியே மிகமிக வித்யாசமாக யோசித்து யோசித்து எழுத ஒருவரால் முடியுமா?’ என்ன ஒருவர் என்கிறீர்கள்? அவர் கடவுள்...! உலகின் சுப்ரீம் பவர். ‘கடவுள் எதற்கு எழுத வேண்டும்? ஒருவனை அரசனாக, ஒருவனை ஆண்டியாகப் படைத்து அவனுக்கு ஆகப்போவது என்ன?’

‘ஒரு பொழுதுபோக்குக்காக அப்படிச் செய்வதாகவே வைத்துக் கொண்டாலும், எல்லோரையும் பணக்காரர்களாக, பேரழகர்களாக, வியாதியற்றவர்களாக படைத்து விட்டுப் போய்விடலாமே!’

- இப்படி தலையெழுத்தைத் தொட்டு கடவுள் சிந்தனைக்கு ஆளாகி கேள்விகள் முளைத்துக் கொண்டே போகின்றன.

இப்படிக் கேள்வியாகக் கேட்கும்போதே நமக்கு ஒரு உண்மை உள்ளுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக புலனாவதையும் உணரலாம். என்ன அந்த உண்மை? நிச்சயம் கடவுள் இந்த தலையெழுத்து சமாச்சாரத்தை எல்லாம் படைத்து சிரமப்பட மாட்டார் என்பதுதான் அது. ஆக, இந்தத் தலையெழுத்து நம் சிந்தனை!

இது எப்படி உருவாயிற்று என்றால் நம் செயல்பாடுகளால் நாம்தான் உருவாக்கிக் கொண்டோம். எது நம் செயல்பாடு? அன்றாட நம் வாழ்க்கைப்பாடுகளே நம் செயல்பாடுகள்தான். இந்த செயல்பாட்டின் வினைகள்தான் இன்ப துன்பமாக, கசப்பு இனிப்பாக, பாவ புண்ணியமாக என்று இருவிதமாக மாறுகிறது.

இதில் ஒருவரின் பாவ புண்ணிய அளவு, ஊர் உலகத்தவர்க்கு தெரியாமல் போகலாம். ஆனால், அதைச் செய்த அவருக்கு தெரியாமல் போகுமா என்ன? போகவே போகாது. சிறு பிராயத்தில் மாந்தோப்பில் கல்லால் அடித்து மாங்காய் திருடியதையே மறக்காத மனது, ஒரு பெண்ணை யாருக்கும் தெரியாது கற்பழித்து, பின் கொலை செய்து புதைத்து விட்டதை மறந்து விடுமா?

இதைத்தான் ‘தன்னெஞ்சறிவது’ என்றனர்.

தன்னெஞ்சறிவதும் அறிந்ததும் பொய்யாகாது. இந்த அறிந்த சமாச்சாரமே - நினைவாக, அழுத்தமாகப் பதிவாகி விடுகிறது. நினைவு என்பது என்ன? பாஷை தானே! பாஷையின் வடிவம் என்பது என்ன?

எழுத்து தானே! அழியாதது எழுத்து... அழியாத நினைவும் எழுத்தாகி, தலை எழுத்தாகக் கூறப்பட்டது.

இந்தத் தலை எழுத்தை நாம் எழுதிக்கொண்டோம். நாம் எழுதிக் கொண்டது நம்மை வழிநடத்த ஆரம்பிக்கிறது. எப்போது?

மனம் என்ற ஒன்று நாசப்படாமல் ராட்சஸ பலத்தோடு இருக்கும்வரை... ஆக, மனதை வெல்லாமல் - அதை இல்லாது செய்யாமல், பிறப்பு இறப்பில் இருந்து ஒருவன் விடுபடவே முடியாது. பாவ புண்ணியங்களை நினைத்து வருந்துவதால், வருந்தித் திருந்துவதால், அதுவரை செய்த செயல்பாடுகளிடம் இருந்து தப்பிக்க முடியாது. அடுத்து வேண்டுமானால் செய்யாமல் இருக்கலாம்.

தீயாக இருந்தால் சுட்டாக வேண்டும்.

நீராக இருந்தால் தாகம் தீர்க்க வேண்டும்.

காற்றாக இருந்தால் புலனாகாது வீசித் திரிய வேண்டும்.

கண்ணாடியாக இருந்தால் கீழே விழும்போது உடைந்தாக வேண்டும்.

பாவ புண்ணிய உயிராக இருந்ததால், அதற்கான

வினையை அனுபவித்தே ஆக வேண்டும்.

இதற்கு என்ன ஆதாரம்? எதை வைத்து இதை நம்பு வது? பெரியவர் வாழ்விலேயே ஒரு சம்பவம். பலரும் அறிந்த சம்பவம்தான்! இருந்தும் இங்கே ஒருமுறை அதை சிந்தித்தாலே, இதுவரை எழுப்பிய கேள்விகளுக்கான விடையை நாம் குழப்பமின்றி நெருங்கமுடியும்.

ஒரு வெள்ளைக்காரர், பெரியவரைச் சந்திக்கிறார். மனம்விட்டுப் பேசுகிறார்:

‘கடவுள் அன்புமயமானவர். கருணாமூர்த்தி - பரமதயாளன் என்றே எல்லா மதமும் கூறுகிறது. ஆனால், உங்கள் மதம் அப்படிக் கூறினாலும் வாள், திரிசூலம், வேல், சங்கு, சக்கரம் என்று ஆயுத பாணியாக கடவுளை வடிவப்படுத்தியிருப்பது, சொன்ன கருத்துக்கு எதிராக உள்ளதே? என்று கேள்வி எழுப்புகிறார்.

‘அந்த ஆயுதங்கள் அன்பு மயத்தை, கருணையை, தயாபரத்தைப் பாதுகாக்கவே உள்ளவை. தேவ சக்திக்கு எதிராக அசுர சக்தி என்பது எல்லா மதத்திலும்தானே உள்ளது? நாங்கள் அசுரர்கள் என்பதை நீங்கள்

சைத்தான் என்றோ, கெட்ட சக்தி என்றோ தானே குறிப்பிடுகிறீர்கள்? அந்த கெட்ட சக்திகளை, சைத்தானை, அடக்கவும் எதிர்க்கவுமே அந்த ஆயுதங்கள். அவை நமக்கெதிரானது அல்ல” - என்கிறார் பெரியவர்.

‘எங்கள் கடவுள் தன்னிடம் சரணடைபவர்களை மன்னித்து, அவர்களுக்கு தன் மோட்ச சாம்ராஜ்யத்தில் இடம் கொடுத்து விடுகிறார். ஆனால், உங்கள் கடவுள் சொர்க்கம் நரகம் என்று வைத்து தண்டிப்பதாகத் தெரிகிறது. இது கடவுள் செயல் போலில்லையே! ராஜாக்கள் செயல் போலல்லவா உள்ளது?’ என்கிறார் வெள்ளைக்காரர்.

பதிலுக்கு, பெரியவர் திருப்பிக் கேட்கிறார்.

‘எல்லோரையும் கடவுள் மன்னித்து விடுகிறாரா...? எல்லோருமே மோட்சத்துக்குத்தான் போகிறார்களா? நன்றாகத் தெரியுமா உங்களுக்கு?’ என்று திரும்பக் கேட்கிறார் பெரியவர்.

‘ஆம்... அவரிடம் சரணடைந்துவிட்டால் போதும். நமக்கு மோட்சம் உறுதி...!’ என்கிறார் வெள்ளைக்காரர்.

‘சரி... அருகே ஒரு பிரசவ விடுதி உள்ளது. அங்கே போய் இன்று பிறக்கும் குழந்தைகளைப் பார்த்துவிட்டு வாருங்கள். பிறகு, நாம் நம் பேச்சைத் தொடரலாம்’ என்கிறார் பெரியவர்.

அவரும் பிரசவ விடுதி நோக்கிச் செல்கிறார்.

28

அந்த வெள்ளைக்காரர் சென்று நின்ற பிரசவ விடுதியில் அன்று பல குழந்தைகள் பிறந்திருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். ஒன்று கருப்பு... ஒன்று சிவப்பு... ஒன்று மாநிறம்... ஒன்று புஷ்டி, ஒன்று சவலை!

இப்படிப் பிறப்பது இயற்கைதானே? நமக்கும் இது நன்றாகத் தெரியுமே! இதைப்போய் எதற்காக மெனக்கெட்டு கவனித்துவிட்டு வரச்சொன்னார் பெரியவர்? அதையும்தான் பார்ப்போமே!

அந்த வெள்ளைக்காரர் பார்த்துவிட்டு திரும்பி வந்தார். திரும்பவும் இருவரிடையே பேச்சு தொடங்கியது.

“என்ன... பிரசவ விடுதிக்கு போய்ப் பார்த்தீர்களா?”

“பார்த்தேன்... பல குழந்தைகள் பிறந்திருந்தன.”

“எல்லாமே பச்சிளம் குழந்தைகள்தானே?”

“ஆமாம்.”

“அந்தக் குழந்தைகள் அவ்வளவும் ஒன்றுபோல இருந்தனவா?”

“அது எப்படி இருக்க முடியும்? ஒவ்வொரு தாய்க்கும் ஒரு உடல்வாகு. அதற்கேற்பதானே குழந்தைகளும் பிறக்க முடியும்?”

“என்றால், ஒவ்வொரு குழந்தை ஒவ்வொரு விதம்! அப்படித்தானே?”

“ஆம்.”

“உடல் வாகை விட்டுவிடுவோம். அந்தக் குழந்தைகளின் பெற்றோர் அவ்வளவு பேரும் செல்வந்தரா?”

“இல்லை. ஒவ்வொரு பெற்றோர் ஒவ்வொரு விதம். இதில் ஒரு குழந்தை மிகவே சவலை...”

“என்றால், இந்தப் பிள்ளைகள் பிறக்கும்போதே ஏற்றத்தாழ்வுடன்தான் பிறந்துள்ளன. அப்படித்தானே?”

“ஆம்.”

“நாம் வளர வளரத்தான் பாவம் செய்கிறோம். குழந்தைகள் இனிதான் வளரப்போகிறார்கள். பாவம் செய்யாத அவர்களை, அந்தக் கடவுள் படைக்கும் போதே ஏன் சமமாக, ஒரே அழகாக உடல்நலத்தோடு படைக்கவில்லை?”

- பெரியவர் பாய்ன்ட்டைத் தொடவும், வெள்ளைக்காரரிடம் சிந்தனை.

“என்ன யோசிக்கிறீர்கள்? அளவற்ற அருளாளனும், கருணாமூர்த்தியுமான இறைவன், நாம் பாவங்களைச் செய்துவிட்டு மன்னிப்பு கேட்டாலே மன்னித்தும் விடுகின்றவன், அதாவது பாவிகளான நம்மையே மன்னிப்பவன், பிள்ளைகளை மட்டும் எதனால் ஏற்றத் தாழ்வுடன் படைக்க வேண்டும்?”

- அவரிடம் சிந்தனை தொடர்ந்தது.

“இப்படிப் பிறக்கும்போதே ஏற்றத்தாழ்வுடன் படைக்கும் கடவுள், ஒன்று கடவுளாக இருக்க முடியாது இல்லாவிட்டால், இந்தப் படைப்புக்குப்

பின்னாலே கடவுளாலும் குறுக்கிட முடியாத ஏதோ ஒரு சக்தி இருக்க வேண்டும் என்றுகூட இருக்கலாம் அல்லவா?”

“ஆம்... இங்கே அப்படித்தான் நினைக்க வேண்டியுள்ளது. ஆனால், கடவுளால் கூட குறுக்கிட முடியாத ஒரு சக்தி இருக்க முடியுமா என்கிற கேள்வியையும் புறந்தள்ள முடியவில்லை.”

“கடவுள் மீதுள்ள நமது பக்தி அப்படி எண்ண வைக்கிறது. அவரைவிட பெரியவரோ பெரியதோ இல்லை தான். அவர்தான் அண்டசராசரங்களைப் படைத்து, நம்மையும் படைத்து இந்த உலகம் இயக்கம் நடந்தபடி உள்ளது. அவர் அளவற்ற கருணை உடையவர்தான். அவர் மன்னிக்கிறார், ரட்சிக்கிறார் என்பதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. ஆனால், எப்போது எங்கே எப்படி என்று மூன்று கேள்விகள் அதன் பின்னால் ஒளிந்துள்ளன.

முதலில் ஏற்றத்தாழ்வே இல்லாத சமத்துவமான மனிதகுலம் இருந்து, அவர்களுக்கெல்லாமும் அழகான பிள்ளைகள் பிறந்து, பேதமில்லாத பிறப்பாகத்தான் மனித குலத்தின் தோற்றம் இருந்தது. அதன்பின் யுகங்கள் தோன்றின. அந்தந்த யுகத்திற்கென்று தர்மங்கள் மாறின. ஏற்றத்தாழ்வில்லாத மனித குலமும், இதனால் ஏற்றத்தாழ்வுக்கு ஆளானது. ஒரு தாய் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகளே கூட, ஒன்று வீடு வாசலோடு வசதியாக இருக்க, இன்னொன்று பிச்சை எடுக்கும் நிலையை எல்லாம் பார்க்கிறோம். இதற்கெல்லாமும் ஒரு காரணம் இருக்க வேண்டும் அல்லவா? அந்தக் காரணத்துக்குப் பேர்தான் கர்மம்!” - என்கிறார் பெரியவர்.

பல இடங்களில், பல தளங்களில் இது குறித்து அவர் பேசியுள்ளார். அழிவில்லாதது தர்மம் என்றால், அழியக் கூடியது கர்மம். இந்த கர்மத்தை உரித்துப் பார்த்தால், அதற்குள் ‘பாவம், பஞ்சமா பாதகம் மற்றும் அறியாமை, புண்ணியம், தெளிந்த ஞானம்’ என்று எல்லாமே இருக்கும்.

எது இருக்கிறதோ, அதற்கேற்ற ஒரு போக்கும் தானாக உருவாகிவிடும். ஒரு பாவத்தைச் செய்துவிட்டு அதிலிருந்து தப்பிக்க முடியாது. ஒன்று உணர்ந்து திருந்த வேண்டும். திருந்தியபின் பரிகாரம் செய்ய வேண்டும். இதனால், அந்த பாவகர்மா அழியும். நடுவில் புதிய கர்மத்தை உருவாக்கிவிடக் கூடாது.

இதைச் செய்ய அதுவே கால அவகாசத்தையும் இடத்தையும் தேர்ந்தெடுத்துக் கொண்டுவிடும். இதனாலேயே பிறக்கும்போதே

Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

ஏற்றத்தாழ்வுகளுடன் பிறப்பு நடக்கிறது. இந்த பாவமோ புண்ணியமோ, பிறப்பெடுக்கப் போய் செய்ய வேண்டியுள்ளது. பிறப்பே இல்லாவிட்டால், இதற்கும் இடமில்லை. அதற்குதான் சன்னியாசம் வழிகாட்டுகிறது. சன்யாசியாகாமல், பிறப்பு இறப்பில் இருந்து விடுபட முடியாதா என்றால் முடியும். எந்த நிலையில் இருந்தாலும், பற்றற்று கடமையை சரியாகச் செய்து வாழ்வதும்கூட சன்னியாசத்துக்கு இணையானதுதான்!

இந்த பற்றற்ற வாழ்க்கை வாழ துணை புரிபவன் தான் கடவுள். பக்தியாலே, முதலில் நாம் நம்மை அவனிடம் கேட்க வேண்டும். ஏனென்றால், இந்த உலகில் நாம் நம்மை இழந்து நிற்கிறோம். எனவே, நாம் நம்மை மீட்க வேண்டும். பின், இறைவனிடம் சரணாகதி புரியவேண்டும். அவனும் நம்மை ஆட்கொண்டு அருளுவான்.

இதுதான் ஆறறிவு கொண்ட உயிர்களுக்கான போக்கு. இதையே வாழ்க்கை ஒரு விளையாட்டு என்றும், வாழ்க்கை ஒரு அனுபவம் என்றும் மாறுபட்ட கோணங்களில் சொல்வார்கள். அதெல்லாமே, எப்படிப் பார்க்கிறோம், எங்கிருந்து பார்க்கிறோம், எதனை காரணமாகக் கொண்டு பார்க்கிறோம் என்பதைப் பொறுத்து மாறும்.

வானத்துச் சந்திரனை, குழந்தை இன்னதென்றே தெரியாமல் பார்க்கும். ஒரு காதலன், தன் காதலியின் முகமாகப் பார்ப்பான். கவிஞன், அதை மிக அழகானதாகப் பார்ப்பான். விஞ்ஞானி, அது எதனால் ஒளி விடுகிறது? எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று பார்ப்பான். ஒரு சந்திரன், இப்படி பார்க்கப்படுபவர்களுக்கேற்ப பொருள் மாறுபாடு கொள்வதுபோலத்தான், மனித வாழ்வும் அணுகுவதற்கு ஏற்ப அமைகிறது.

- பெரியவரின் வியாக்யானம், ஏறத்தாழ அவரின் நூற்றாண்டு கால வாழ்வில் பல இடங்களில் மேற்கண்டது போல வெளிப்பட்டு மனித சமுதாயத்தை வழிப்படுத்தியுள்ளது. இந்தக் கருத்துகள் எதையும் என்னால் எங்கும் புறந்தள்ள முடியவில்லை. மொத்தத்தில், தெளிவான விடைகளின்றி குழப்பமான அல்லது மேலோட்டமான பதில்களால் அடைபட்டுக் கிடந்த பல கேள்விகளுக்கு, பொட்டில் அடித்தாற்போல் பதில் கிடைத்தது.

இன்று நடந்து கொண்டிருப்பது நவீன விஞ்ஞான யுகம். தாய்மொழி, தாய்நாடு என்கிற எல்லைகள் உடைந்து, உலகம், உலக மொழிகள் என்று ஒவ்வொருவரும் விரிவடையத் தொடங்கிவிட்டோம். ஒரு

தொலைக்காட்சிப் பெட்டியானது உலகை ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் காட்டியபடி உள்ளது.

ஆங்கிலத்தில் Exposure என்று வார்த்தை உண்டு. தமிழில் மிகச்சரியான ஒரு வார்த்தை இதற்கு எனக்கு புலப்படவில்லை. வேண்டுமானால், விரிந்த நோக்கு எனலாம். இந்த விரிந்த நோக்கு என்பது அவரவர் சிந்திக்கும் தன்மைக்கும், வாசிக்கும் புத்தகங்களுக்கும், பழகும் மனிதர்களுக்கும், பார்க்கும் உலகுக்கும் ஏற்பவே இருக்கும். அம்மட்டில் இன்றைய தலைமுறைக்கான Exposure, நமக்கிருந்ததை விட பெரிய அளவிலானது. இந்த Exposureல் நமக்குக் கிடைக்காததே இல்லை. குறிப்பாக, ஆன்மீகத்தில் உள்ள அவ்வளவுமே இன்று ஒருவர் தெரிந்துகொள்ள முனைந்தால் அவருக்கு சுலபமாகவே கிடைத்துவிடும்.

மனிதர்களின் ஜனத்தொகை அதிகரித்து, அதனால் மனித உழைப்பு அதிகரித்து, அதன் பலனாகவே இதெல்லாம் சாத்தியமாகிறது. இது வருங்காலத்தில் இன்னமும் அதிகரிக்கும். ஆனால் இன்றைய வாழ்க்கைமுறை வேகமயமானதாகி, பெரிதும் காசு பணம் சார்ந்ததாக மாறிவிட்டது. அதற்கான தேடலுக்கே மனிதனும் முன்னுரிமை தருகிறான். உண்மையில், அதனால் மன அமைதி பெரிதாகக் கிடைப்பதில்லை. ஆசைதான் அதிகரித்து இன்னும் இன்னும் என்று மனிதனை ஓடவிட்டபடியே உள்ளது.

பல கோடி சொத்து உள்ள ஒருவர், ஒரு மாதம் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்காமல் போனதற்காக, அவரிடம் கடைமட்டத்தில் வேலை பார்க்கும் ஒருவன் அந்த வேலை பறிபோனால் எப்படித் துடிப்பானோ அப்படித் துடித்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

சாகும் வரை - சாப்பிடவும், சந்தோஷமாக வாழவும் உத்தரவாதமாய் பணம் இருந்தும், ஐயோ என்று இவர் பரிதவிக்கிறாரே... இவரே இப்படி பரிதவித்தால் தினக் கூலிகள் எவ்வளவு பரிதவிக்க வேண்டும் என்றெல்லாம் என்னுள் கேள்வி எழும்பியது.

இந்த வாழ்க்கை இப்படி ஒவ்வொருவரையும் கவ்விப் பிடித்து ஆட்டிப்படைக்கிறது. நாமும் ஆடுகிறோம். நம் பிடியில் வாழ்க்கை இல்லை. அதன் பிடியில்தான் நாம் இருக்கிறோம். இதை எல்லாம்தான் ‘மனம்’ என்கிற ஒன்றைப் பற்றிச் சொன்னபோது, பெரிய வரும் விலாவாரியாகவே சொல்லி முடித்தார்.

அதுமட்டுமல்ல; அவரது உலக ஞானம்தான் என்னை

ஆச்சரியப்படுத்தியது. பாலகனாக இருக்கும்போதே சன்னியாசியாகிவிட்டவர், எந்தக் கல்லூரிக்குப்போய், அல்லது எந்த நூலகத்துக்குப்போய் இதை எல்லாம் படித்தார் என்று ஆச்சரியப்படுத்தும்படியானது அவரது உலக அறிவு. உலக அறிவும், உலகப் பார்வையும் கொண்டு ஒரு விஷயத்தை அணுகுவதற்கும், நம் முன்னோர்கள் சொன்னார்கள் நாமும் பின்பற்றுவோம் என்று நமக்கான குறுகிய எல்லைகளோடு ஒரு விஷயத்தை அணுகுவதற்கும் நிறையவே வித்தியாசம் உண்டு.

இந்த உலகம் மிகவே பெரியது. இதன் அத்தனை நாடுகள் ஊர்களுக்கும் நாம் சென்று வர நம் ஆயுளும் போதாது. ஏதோ, நாம் நம்மால் முடிந்த அளவு ஊரைச் சுற்றிவிட்டு, நாமறிந்த அளவிலான விஷய ஞானத்தோடு தான் வாழ்கிறோம்.

தனி ஒரு மனிதனுக்கு இது போதுமானதாக இருந்தாலும், ஒரு சமுதாயத்துக்கு இந்த ஞானம் போதாது! சமுதாயத்துக்கு வழிகாட்டுபவர்களுக்கும் இது போது மானதல்ல. இந்த உண்மை, பெரியவருக்குள் விசவரூபமெடுத்து நிற்கிறது.

அடிப்படையில் அவர் அத்வைதி! சைவ சார்பு கொண்ட சன்யாசி. நமது தமிழ்நாட்டுக்குள் சைவம் பற்றி பிரசாரம் பண்ணிக்கொண்டு காலத்தைக் கடத்திவிடலாம். ஆனால், இந்த சிறிய வட்டத்துக்குள் சிக்கி விட்டவராக பெரியவரைக் கருத முடியவில்லை.

எல்லா மதங்களைப் பற்றிய ஆழமான அறிவும் பெரியவரிடம் கொட்டிக் கிடக்கிறது. விஞ்ஞானமும் ஒன்றும் தூரத்தில் இல்லை. பல நேரங்களில் விஞ்ஞானிகளிடையே தன் விஞ்ஞானத்தால் திகைக்க வைத்த சம்பவங்கள் பல நடந்துள்ளன. வரலாறும் அவருக்குள் பதிவாகியுள்ளது.

இதையெல்லாம் எப்படிக் கற்றார் என்கிற கேள்வி எழாமல் இல்லை. இத்தனைக்கும், மடத்து அனுஷ்டான கடமைகள் கொஞ்ச நஞ்சமல்ல! அதற்கே நேரம் போதாத நிலையில், ஒட்டுமொத்த இந்த உலக ஞானம் அவருக்கு எப்படி சித்தித்தது என்பதே என் வியப்பு. அந்த உலக ஞானத்திவலைகளில் நாமும் இனி கொஞ்சம் மூழ்குவோம்.

29

ஒரு ஆச்சர்யம் என்னவென்றால் – இன்று உயிரோடு உள்ள பிறந்த குழந்தை முதல் நூறாண்டு கடந்தவர் வரை, ஒருவர் கூட

மொழியையோ, மொழி சார்ந்த எழுத்தையோ அல்லது எழுத்துக்காகவோ ஒரு துரும்பைக் கிள்ளிப் போட்டதில்லை. போடத் தேவையில்லை. இந்த பாஷையை, இதற்கான எழுத்துக்களை யார் வடிவமைத்தார்கள் என்பது கூட தெரியாத அளவு அனாதி காலமாய் இவை நமக்குப் பயன்பட்டு வருகின்றன.

ஒரு ரிலே ரேஸ் போல, நம் மூதாதையர்களிடம் இருந்து நாமும், நம்மிடம் இருந்து வருங்கால சமுதாயமும் பெற்றவண்ணம் இந்த மொழியின் பயணம் தொடர்ந்தபடி உள்ளது. இது இல்லாமல், ஒரு மனிதன் வெற்றிகரமாகவும் சந்தோஷமாகவும் வாழவும் முடியாது. இந்த மொழியில் இரண்டு விஷயங்கள் காணப்படுகின்றன. ஒன்று எண்; அடுத்தது எழுத்து.

இன்று செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருக்கிறதா என்று, இங்கிருந்தபடி விண்கலனை அனுப்பி ஆராய்கிறோம். எதை எதையெல்லாமோ கண்டுபிடித்து விட்டோம். ஆனால், புதிதாக ஒரு எண்ணையோ, எழுத்தையோ யாரும் எங்கும் கண்டுபிடிக்கவில்லை. கண்டு பிடிக்கத் தேவையுமில்லை என்னும் அடித்தளத்தில், தொடக்கம் முதலே இந்த எண்ணும் எழுத்தும் பரிபூரண பலத்தோடு இருப்பதை எத்தனை பேர் எண்ணிப் பார்த்திருப்போம்?

இன்னும் சொல்லப் போனால், இது இருக்கப் போய்தான் விஞ்ஞானத்தாலேயே வளர முடிந்தது. இந்த எண்ணோ, எழுத்தோ இல்லையென்று கொள்வோம். ஒரு விஞ்ஞானி தன் சிந்தனைகளுக்கு எதைவைத்து வடிவம் கொடுத்து அவர் கண்டுபிடிப்பும் உலகுக்குக் கிடைத்திருக்கும்? எனவே, மானுட வாழ்வின் எல்லாவிதமான வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் தெளிவுக்கும் பின்னால் உள்ள, இந்த மொழி சார்ந்த எண்ணும் எழுத்தையும்விட ஒன்று இந்த உலகில் பெரிதானதாக இருந்துவிட முடியுமா?

ஒரு வேடிக்கை என்னவென்றால் - இத்தனை பெரிதான ஒன்றை, இத்தனை பலமிக்க ஒன்றை காலகாலமாக மனித சமூகத்துக்கே மருந்தாக இருக்கிற ஒன்றை, இங்கே சிலர், ‘தங்களால்தான் அது வாழ்கிறது. வாழவும் போகிறது’ என்பது போல அது குறித்துப் பேசி, அது அழிந்துவிடப் போகிறது; அழியவிட்டு விடக் கூடாது என்று மார்தட்டி, தொடை தட்டி ஆர்ப்பாட்டம் எல்லாம் பண்ணும்போது சிரிக்காமல் இருக்க முடியவில்லை. ஆனால், மொழியிடம் எந்த தேய்மானமும் இல்லை. அது, கால மாற்றத்திற்கேற்ப தனக்குள் சில பிறமொழிச் சொற்களுக்கு இடம் கொடுத்து, தன் பயணத்தைத்

தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த இடம் கொடுத்தலை. அதற்குள் ஏற்படும் மெல்லிய மாற்றங்களையே, அதற்கான அழிவாக அர்த்தப்படுத்திக்கொண்டு நிஜமான பயத்தோடு மொழி குறித்து கவலைப்படுபவர்களும் இருக்கிறார்கள்.

இதில் பெரியவரின் சிந்தனைகள் வியப்புக்குரியவை மட்டுமல்ல... ஆஹா! அதில்தான் எத்தனை தெளிவு என்று நான் வியந்து போனேன். வேதம் என்பதற்கு, தமிழில் 'மறை' என்று பொருள். யாகத்துக்கு 'வேள்வி' என்று பொருள். வேட்டல் எனும் சொல்லில் இருந்தே வேள்வி வந்தது, எல்லா தர்மங்களுக்கும் வேராக இருப்பது வேதம். எப்படி வேர் வெளியே தெரியாமல் விருட்சங்களைத் தாங்கிப் பிடித்தபடி இருக்கிறதோ அப்படியே வேதங்களும் மானிட வாழ்வை மறைவாக இருந்து தாங்கிப் பிடித்து வழிநடத்துகிறது. இப்படி மறைவாக இருந்து வழி நடத்துவதால்தான், வேதத்தை தமிழில் 'மறை' என்றனர்.

அடுத்து, இது எழுதிப் படிப்பதல்ல... சொல்லிக் கேட்பது... தினமும் உபாசிக்கும்போது சொல்லப்படுவது... அதாவது சப்தமாகவே இது வாழ்ந்து மனதில் பதிந்து உபதேச கதியில் அடுத்தடுத்து காதுகளில் புகுந்து நீடித்து வருவதால், இதற்கு 'எழுதாக் கிளவி' என்றும் பெயர். இப்படி வேதம், வேள்விக்குத் தமிழில் உள்ள பெயர்களை பெரியவர் அர்த்தப்படுத்தி விளக்கும்போது, அவர் தமிழ்மொழி அறிவை வியக்காமல் இருக்க முடியுமா?

பெரியவர் திருவள்ளுவரிடமும் பெரும்பற்று கொண்டிருக்கிறார். அனேகமாக எல்லா குறள்களும், பெரியவருக்குள் அர்த்தப் பொதியாகவே உள்ளன. அதில் ஒரு குறளை பெரியவர் நுணுக்கமாக சுட்டிக் காட்டுகிறார்.

'தென்புலத்தார், தெய்வம், விருந்தொக்கல் தான் – என்றாங்கு

ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

- பித்ருக்கள், தெய்வம், அதிதி, சுற்றத்தார், தான் என்று ஐவரையும் போற்றி மகிழ வேண்டுமாம். இங்கே வள்ளுவர் தென்புலத்தார் என்று திசையை மையமாக வைத்துச் சொல்வது பித்ருக்களை யமனுடைய திசைதான் தெற்கு அந்த திசையில் அவனால் கவர்ந்து செல்லப்பட்டவர்களே நம் மூதாதையர். இவர்களையே பித்ருக்கள் என்கிறோம்.

- வள்ளுவரின் கருத்தை அழகாக உள்வாங்கிப் பிரித்து இந்த ஐவரில்

‘தான்’ எனும் நாம் இறுதியில் வருகிறது. அதாவது, சுயநலம் இறுதியானதாக இருக்க வேண்டுமாம்! இதையே அந்தக் குறள் வலியுறுத்துகிறது.

குறள் சொல்கிற இந்தக் கருத்துப்படிதான் அன்று வயலில் விளையும் நெல் பாகம் பிரிக்கப்பட்டது. விளைந்ததை ஆறு பங்காகப் பிரித்து, ஒரு பங்கை தான் வைத்துக் கொண்டு, மற்றதை வள்ளுவர் சொன்னது போல பித்ருக்கள், தெய்வம், அதிதி, சுற்றத்தார்கள், அரசன் என்று பிரித்துக் கொடுத்து வாழ வேண்டும். அப்படித்தான் வாழ்ந்துள்ளனர். இப்படி வாழ்வதே உண்மையான ‘சோஷலிசம்’. இன்று, அது ஒரு கண்டுபிடிப்பாகப் புதிய கொள்கையாக காட்டப்படுகிறது. நம் முன்னோர்களிடம் இது ஏற்கனவே இருந்துள்ளது என்று ஒரு குறளை வைத்து - என்று, மூன்று பெரும் செய்திகளை (தமிழை, தர்மத்தை, சோஷலிசத்தை) முன் வைக்கிறார் பெரியவர்.

இந்தக் கருத்துக்களையே மறையாகிய வேதமும் கொண்டுள்ளது. எனவே, தமிழ் மறை கருத்துக்கள் வேறு, நான்மறை கருத்துக்கள் வேறு என்று எண்ணத் தேவையில்லை எனும்போது, அவரின் பொதுவான பார்வை மட்டுமல்ல; விரிந்த பார்வையும் வியப்பை அளிக்கிறது.

எழுத்தாகிய மொழியைத் தொடர்ந்து, எண்ணாகிய கணக்கு குறித்து ‘கணக்காயிருக்கணும்’ என்றே அவர் பேசியிருப்பதிலும் ஆழ்ந்த பொருள்!

‘பண விஷயத்தில்தான் நாம் கணக்காயிருக்கிறோமாம். ஒரு பொருளுக்கு நாம் அதற்குரிய விலையை விட நயா பைசா கூட தருவதில்லை என்றால், மிகக் கணக்காக இருப்பதாகத்தானே பொருள்?

ஒரு வேடிக்கை என்னவென்றால், பணத்தைக் கொடுத்து வாங்கும் பொருட்களிடம் நம்மில் பலர் கணக்காக இருப்பதில்லை. மலிவு என்று வாங்கிய பல பொருட்கள், நம் வீட்டில் துளியும் பயன்படாமல் ஒரு நூறாவது தேறும். போகிப் பண்டிகை நாளில் கழித்துக் கட்டத் தோன்றினாலும், நாளை பயன்படக் கூடும் என்று பரண்மேல் நாம் போட்டு வைத்திருக்கும் பொருட்கள் எத்தனை? எத்தனை?

இன்று ஆசாரத்தை தூரப் போட்டுவிட்டு, தேசம் விட்டு தேசம் போயெல்லாம் சம்பாதிக்கிறோம். ஆனால், வேண்டாத பலவற்றை அனர்த்த ஆசை காரணமாக வாங்கிப் போட்டு, அப்படிச் சம்பாதித்த பணம் - அதற்கான காலம் என்று சகலத்தையும் வீணாக்கி விடுகிறோம்.

உண்மையில் ஒரு பொருளை பேரம் பேசி மலிவாக வாங்குவது மட்டும் கணக்கு இல்லை. வாங்கியது நூறு விழுக்காடு பயன்பட்டால்தான் கணக்காயிருப்பதாகப் பொருள். பணம் மட்டுமா? பேசும் பேச்சிலும் கணக்காயிருக்க வேண்டும்.

வளவளவென்று பேசுவதும், ஊதாரித்தனமாக இருப்பதும் ஒன்றுதான். புத்தியில் தீட்சண்யம் இருந்தால் வாக்கில் பிரகாசம் தெரியும். குறையப் பேசி நிறைய புரிய வைக்கவும் முடியும். இதனால்தான் பொருளைக் கொட்டினால் அள்ளிவிடலாம். வார்த்தைகளை அள்ள முடியாது என்றனர். திருவள்ளுவரும் 'யாகாவாராயினும் நாகாக்க' என்கிறார். எனவே, பணத்தில் மட்டுமல்ல; பேச்சிலும் கணக்காக இருப்பது முக்கியம். அடுத்து நாம் செய்கிற செயல்பாடுகளும் ஒரு கணக்கோடு இருக்க வேண்டும்.

கணக்காக இருந்தால், பரம ஏழையால் கூட தர்மம் செய்ய முடியும். இல்லாவிட்டால் கோடீஸ்வரனாலும் முடியாது. நம் தேசத்தில் தண்ணீரைக் கூட சிக்கனமாக செலவழிக்கச் சொல்லியுள்ளனர். தண்ணீர் வரையில் வராத சிக்கனம் மற்றதிலும் வராது போய்விடுமாம்.

இந்த கணக்காய் இருப்பதை வலியுறுத்தும் ஒரு மேல் நாட்டுப் பழமொழி ஆழ்ந்த பொருள் உடையது. பேச்சு வெள்ளி என்றால், மௌனம் தங்கமாம்! (Speech is Silver; silence is Golden) இதனால்தான் நம் மூதாதையர்கள் மௌனத்துக்கு மிக முக்கியத்துவம் தந்து மௌனவிரதம் எல்லாம் அனுஷ்டித்தனர். திருமூலர் கூட 'கணக்கறிந்தார் கல்வி கற்றறிந்தாரே' என்கிறார்.

அவ்வைப் பாட்டியும் இதனால்தான் 'எண்ணுப் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்றாள். முதலில் எண்ணைத்தான் இவளும் வைத்தாள். எனவே, கணக்காக இருப்போம். கணக்கும் ஈசனும் ஒன்றுதான்! எப்படித் தெரியுமா? நியாயத்தில்... கணக்கில்லா விட்டால், நீதி நியாயமே இல்லாமல் அல்லவா போய்விடும்?

- இப்படி பெரியவரின் மொழி பற்றிய, கணக்கு பற்றிய சிந்தனைகள் விரிந்து கொண்டே போகின்றன.

மொழி, கணக்கு மட்டுமல்ல! பிற மதம், விஞ்ஞானம், பூகோளம், சரித்திரம் என்று சகலத்திலும் அவரிடம் இருந்த ஞானம் அசர அடிக்கும். அவை...

30

இந்த ஜனநாயக ஆட்சிமுறை ஒன்றும் நமக்குப் புதிது இல்லை. இங்கே அது ஏற்கெனவே நடைமுறையில் இருந்துள்ளது. அதுவும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே என்றால், அது ஒரு சரித்திரமாகவும், அந்தச் சரித்திரம் இன்று எவ்வளவு பேருக்குத் தெரிந்திருக்கிறது என்பதும் கேள்வியாகிறது.

பள்ளியிலும் கல்லூரியிலும் பாடம் நடத்தும் ஆசிரியர்களில் பலருக்கே கூட தெரியாத அளவுக்குப் பல நுட்பமான விஷயங்கள் இந்தச் சரித்திரத்துக்குள் இருக்கின்றன. பெரியவரைப் பற்றி சிந்தித்து வரும்போது, எதற்கு இப்படி நாடு, ஜனநாயகம், சரித்திரம் என்கிற கேள்விகள் இங்கே சிலருக்கு எழலாம். நமது பெரியவரின் சரித்திர ஞானம் பற்றி சிந்திப்பதற்கு இவையெல்லாம் பற்றி சிந்திக்கத்தான் வேண்டியுள்ளது.

ஒரு சன்னியாசி எப்படி வாழ வேண்டும் என்பதற்கு இலக்கணமாய் வாழ்ந்துவிட்டு, இன்றும் அரூபமாய் வாழ்ந்து கொண்டிருப்பவர் நமது பெரியவர்.

அந்த எப்படி வாழ வேண்டும் என்பதற்குள் பல நூறு விஷயங்கள் அடக்கம். அதில் ஒன்று, ஒரு சன்னியாசி ஒரு குடும்பஸ்தன் போலவோ இல்லை ஒரு வியாபாரி போலவோ ஒரு ஊரிலேயே தங்கிவிடுவது என்பது. இப்படித் தங்கிவிடுவது, தங்கிய விதமாய் அங்கேயே சொத்துக்களை வாங்கிப் போட்டு அங்குள்ளோரோடு இணக்கமாய் இருந்து கொண்டு அதையே தனக்கான பாதுகாப்பாகவும் கருதுவதுதான் காலம் காலமாய் அறிவுடையோர் செயலாக உள்ளது.

இதனாலேயே ஒருவரைப் பற்றிக் கேட்கும்போது ‘உங்க சொந்த ஊர் எது?’ என்கிற ஒரு கேள்வியை நம்மை யும் அறியாமல் கேட்பது வழக்கமாகி விட்டது. இந்த உலகில், எந்த ஊரும் உண்மையில் நமக்குச் சொந்தமில்லை. ஒருவேளை அசுர பணபலத்தால் ஒரு ஊரையே விலைகொடுத்து வாங்க முடிந்தாலும், ஆயுசு உள்ள வரைதான் இது எனக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொள்ள முடியும். கதை முடிந்துவிட்டால் யாராக இருந்தாலும் பாடியாகி, ‘பாடியை எப்ப எடுக்கப் போறாங்க?’ என்கிற கேள்விக்கு இலக்காக ஆவதுதான் காலம் காலமாக நாம் கண்டுவரும் யதார்த்தம். இருந்தாலும், வாழும் நாளில் என் சொந்த ஊர் என்று ஒரு ஊரையே நாம் சொல்லிக் கொள்வதை

இந்த உலகம் அனுமதிக்கிறது. அதில் ஒரு தனித்த அடையாளமும் கிடைத்துவிடுகிறது. இதில் பல கித்தாப்புகள் வேறு.

‘நான் தாமிரபரணி தண்ணி குடிச்சு வளர்ந்தவன்... நான் மல்கோவா மாம்பழமா சாப்பிட்டு வளர்ந்தவன்...’ என்று கூறிக்கொள்வதெல்லாம் அடிஷனலான விஷயங்கள். இந்த சொந்த ஊர் உரிமை, கித்தாப்பு இதெல்லாம் சன்னியாசிக்குக் கிடையாது. கூடாதும் கூட! பெரியவர் இதை அழுத்தமாகக் குறிப்பிடுகிறார்.

சன்னியாசி என்பவர் ஒரு ஊரில் இத்தனை நாள் தான் தங்கியிருக்கலாம். அதற்குமேல் தங்கியிருந்து, அதன் காரணமாக அந்த ஊர்ப்பற்று கூட அவருக்கு ஏற்பட்டு விடுவது என்பது அவரது சன்னியாசத்துக்கு அழகு கிடையாதாம். இதனால், சன்னியாசி என்பவர் ஊர் ஊராகப் போய்க்கொண்டே இருக்க வேண்டும். அதுவும் தன் காலாலே நடந்து... அப்படிப் போகும் போதுதான் ஒரு ஊர் சொந்தம் என்பது போய் நாடே சொந்தம் என்கிற எண்ணம் தோன்றி, அந்த நாடு நன்றாக இருப்பதற்காக. நாட்டிலுள்ள எல்லா உயிர்களும் நன்றாக இருப்பதற்காக இறைவனிடம் சுயநலமின்றி வேண்டிக்கொள்ள முடியும்.

இதை மனதில் கொண்டு, இந்த நாட்டில் அனேகமாக எல்லா ஊர்களுக்கும் போய் அங்கே தங்கி இருந்து தன் தவத்தைத் தொடர்ந்தவர் நம் பெரியவர் என்றால் அது மிகை கிடையாது. இப்படி நாடு முழுக்கப் பயணிக்கும் கட்டுப்பாடு உடையவருக்கு, இந்த நாட்டின் வரலாறு தெரிந்திருக்காவிட்டால் எப்படி? எனவேதான், பெரியவரின் சரித்திர ஞானம் குறித்தும் இங்கே சற்று சிந்திக்கும் ஒரு வாய்ப்பும், அதனால் பல பரவசங்களும் எனக்குள் ஏற்பட்டது.

அதற்கு முன்னதாக பெரியவரின் சன்னியாச வாழ்வின் பல ஒளி மிகுந்த கட்டங்கள், குறிப்பாக என் மனதை நெகிழ்த்திய கட்டங்களையும் நான் இங்கே இப்போதே எண்ணிப் பார்த்து பகிர்ந்துகொண்டு விடுவதும் நல்லது என்று எனக்குப் படுகிறது. ஒரு ஊர் மட்டும் தனக்குச் சொந்தமில்லை என்று ஊர் ஊராகப் போய் உபதேசம் செய்தது ஒரு புறம்; இதற்கு நடுவே தனது காவிக்கும் ருத்ராட்சத்துக்கும் அவர் அளித்த மதிப்பு மரியாதை இருக்கிறதே! அதுதான் மிக உன்னதமான விஷயம்.

தனது யாத்திரையில் அவர் விஜயவாடாவில் தங்கி இருந்த சமயம் என்று கருதுகிறேன். அவரை தரிசனம் பண்ண கூட்டம் கூட்டமாக ஜனங்கள் வந்தார்கள். வந்தது மட்டுமல்ல; சாட்சாத் அந்த பரமேஸ்வரனே அவர் வடிவில் வந்திருப்பதால் அவருக்குப் பெரிய அளவில் மரியாதை

செய்யவும் விரும்பினார்கள்.

இப்படிச் செய்ய விழைவது என்பது, ஒரு நாகரிகமான நன்றி காட்டும் செயல்பாடாகும். அப்படிச் செய்யப்படும் மரியாதையானது உலகமே திரும்பிப் பார்த்து வியக்கும் ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் நினைப் பதில் தவறிருக்க வாய்ப்பில்லை. விஜயவாடாக்காரர்களும் அப்படி நடந்துகொள்ள விரும்பி, தங்களுக்குள் வசூல் செய்து ஒரு தங்க கிரீடத்தையே செய்து பெரியவருக்கு அணிவிப்பது என்று தீர்மானித்து விட்டார்கள்.

ஊர் மக்கள் - தங்க கிரீடம் மட்டுமல்ல; நவரத்ன கிரீடம் கூட சூட்ட விரும்பலாம். ஏனென்றால், அது அவர்கள் பிரியத்தில் செய்யும் செயல். ஆனால் அதை, ஒரு ஊரைக்கூட தனக்குச் சொந்தம் என்று சொல்லக் கூடாது என்று சொல்லும் ஒரு சன்னியாசி ஏற்றுக் கொள்ளலாமா? அதிலும் தங்க கிரீடம் எனும்போது, அது ஒரு ராஜாவின் சிரசின் மேல் இருந்தால் பொருத்தமாக இருக்கும். கம்பீரமும் தரும். சன்னியாசிக்கு எதற்கு அது? மக்கள் எப்படி இதைச் செய்ய லாம்? செய்தாலும் ஒரு சன்னியாசி ஏற்கலாமா? என்று சில கேள்விகள் இங்கே எழக்கூடும்.

எனக்கும் எழுந்தது. ஆனால், இதற்குப் பின்னாலே நுட்பமான பல சங்கதிகள் இருப்பதை நான் பல காலம் கழித்தே தெரிந்து கொண்டேன். தங்கம் என்பது, உலோகங்களில் அரசனைப் போன்றது. அதன் சிறப்பே, வளைந்து கொடுக்கும் அதன் தன்மையோடு கூடிய துளியும் கருக்காத குணப்பாடு தான்! இல்லாவிட்டால், உலகின் பொதுவான பண மதிப்புக்குரியதாக அது ஆக முடியுமா என்ன? காலத்தாலும் தங்கத்தின் மதிப்பு ஏறிக் கொண்டேதான் போகிறது. யோசித்துப் பார்த்தால் வியப்பாகவும் இருக்கிறது. மரம் மட்டையில் இருந்து நாம் கட்டிய வீடு வாசல் வரை, காலம் செல்லச் செல்ல மதிப்பை இழக்கவே செய்கிறது. அதோடு பழைய என்கிற பதமும் சேர்ந்து கொண்டு அதன் தேயுமானத்தைச் சொல்லாமல் சொல்லி விடுகின்றன. ஆனால், மதிப்பு குறையாதபடி என்றும் ஏறு முகமாக இருப்பது என்பது தங்கமும் நிலமும் மட்டும்தான்! அதனாலேயே இன்று பிரம்மாண்டமான தங்க நகைக் கடைகளும், ரியல் எஸ்டேட் புரிபவர்களும் அதிகரித்து விட்டார்கள். நஷ்டம் என்பதற்கு, எந்த நாளிலும் இடமே இல்லாத தொழில்கள்தான் இவை இரண்டும்!

இதில் கூட, இடத்தை விடவும் தங்கத்துக்கே மதிப்பு அதிகம். தங்கத்தை உலகம் முழுக்க சென்று செல்லுபடி ஆக்கலாம். இடத்தை அங்கே இருக்க விரும்புகின்றவர்களுக்கு மட்டும்தான் செல்லுபடி ஆக்க முடியும்.

சுற்றுச் சூழலில் ஒரு சாராயக் கடையோ சுடுகாடோ உருவாகிவிட்டால், என்னதான் பூத்துக் குலுங்கும் இடமாக இருந்தாலும் அந்த இடம் தன் மதிப்பை இழந்துவிடும். ஆனால், பிணத்தின் வாயில் இருக்கும் தங்கப்பல் கூட திருடப்பட்டு பயன்படுத்தப்படுவதை நாம் நடைமுறையில் பார்க்கிறோம்.

கருக்காத குணம், வளைந்து கொடுக்கும் தன்மைக்கு அப்படி ஒரு மதிப்பு! இதனாலேயே இப்படிப்பட்ட குணம் கொண்ட மனிதர்களைக்கூட 'தங்கமான மனிதர்கள்' என்று கூறும் ஒரு வழக்கம் ஏற்பட்டது. இப்படிப்பட்ட தங்கத்தை, கோள்களில் குரு என்னும் கோளோடு சம்மந்தப்படுத்து கின்றனர்.

அதாவது, குருநாதரும் தங்கம் போல எப்போதும் மதிக்கப்பட வேண்டியவர். அவர் மதிப்பு ஒரு போதும் குறைவதேயில்லை என்பது இதன் நுட்பமான உட்பொருள். இப்படி மதிப்புமிக்க தங்கம் குருவாக மட்டுமல்ல; மகாலட்சுமியாகவும் பார்க்கப்படுகிறது. லட்சுமி, மாசற்ற அழகி. செல்வச் செழிப்பின் அடையாளம். இன்பங்களின் உறைவிடம்.

வாழப் பிறந்துவிட்ட மனிதர்களுக்கு இது எப்படி பிடிக்காமல் போகும்? அது மட்டுமா? வைணவ சித்தாந்தப்படி மகாலட்சுமி அந்த மகாவிஷ்ணுவின் மார்பில் இருக்கிறாள். விஷ்ணுவிடம் நாம் நல்வாழ்வுக்குப் பிரார்த்தனை செய்யும்போது அவன் மார்பிலிருந்து காது கொடுத்து கேட்டு, பின் விஷ்ணுவிடம் சொல்லி நம் குறைகளை நீக்குபவளே அவள்தான்.

எனவே, என்வசம் தங்கம் இருக்கிறது என்றால் மகாலட்சுமி இருக்கிறாள். அவள் இருப்பதால் மகாவிஷ்ணுவும் சேர்ந்தே இருக்கிறார். அந்த விஷ்ணுவின் வைகுண்டத்தை, என் பரிசுத்தமான வாழ்வாலும் தவத்தாலும் என்னால் அடைய முடிகிறதோ இல்லையோ, குண்டு மணி தங்கம் என்னிடம் இருக்கும்போது நான் அவரை அடைந்துவிட வழி ஏற்பட்டு விடுகிறது அல்லவா? பிள்ளையார் சிவபார்வதியைச் சுற்றிவந்து உலகைச் சுற்றிவிட்டதாகச் சொன்னது போலவே ஒரு சுருக்கு வழி இது! அடுத்து, இதே தங்கம் குருவாக இருந்து எனக்கு சேதி சொல்லியபடியே இருக்கிறது. 'என்னைப் போல என்றும் எப்போதும் மதிப்போடு இரு! அழுக்குக்கு இடம் கொடுத்து கருத்துவிடாதே! அப்படி ஆனாலும் பாதகமில்லை. தீக்குளித்து உன் ஒளியை மீட்டுக்கொள். நீ தூய்மைக்காக தீக்குளிப்பாயானால், தீயும் உன்னை ஏதும் செய்யாது. சீதையை அதனால் ஏதாவது செய்ய முடிந்ததா? இங்கே ஏதாவது செய்ய முடிந்ததா? (இங்கே தீக்குளிப்பை

சோதனையான கட்டங்களாகக் கருத வேண்டும்)

- இப்படி அது குருவாக இருந்து உபதேசித்தபடியே இருக்கிறது. ஒரு கிராம் தங்கம் இரண்டாயிரம் கடந்துவிட்டது என்று, அதை பணத்தின் மதிப்பில் பார்ப்பது அஞ்ஞானம். உலகையே இன்றும் தன் கைப்பிடிக்குள் வைத்திருக்கும் அதன் குணப்பாட்டை, அது இப்படிச் சொல்லும் செய்திகளை எண்ணிப் பார்ப்பதே பெரும் ஞானம்!

இதனாலேயே புருஷன் பூட்டும் ஒலையான தாலம் என்னும் தாலி உள்ள இடத்தில் தங்கம் இருக்கட்டும் என்று அதை அனுமதித்தனர். புருஷபந்தம், உலக வாழ்வு, கற்பு நெறி எல்லாமே தங்கமாய் அதன் குணப்பாட்டைக் கொண்டிருக்கட்டும் என்றனர்.

கலிகாலக் கொடுமை - குணப்பாட்டில் பார்க்கப்பட வேண்டியது, பணப்பாட்டிலேயே பார்க்கப்பட்டு வருகிறது. இதனாலேயே ஒரு குடும்பப் பெண் கழுத்து, காது, மூக்கு எனும் ஐம்புல ஐங்குண உறுப்புகளில் தங்கத்தை அணிய வற்புறுத்தினர். கேட்கும் விஷயம் தங்கமாகட்டும். பார்ப்பது, உள்வாங்குவது, வெளிவிடுவது, மார்பில் தங்குவது, உடம்பைத் தாங்குவது என்று கால், கழுத்து முதல் தங்கம் தங்க அனுமதித்தனர். ஆணைவிட உயிர்களை உலகுக்குத் தரும் பெண்ணிடம் இதை கட்டாயமாகவும் ஆக்கினர்.

உயர்ந்த சர்வ விஷயங்களிலும் தங்கத்தைச் சேர்த்தனர். கோயில்களில் தங்க விமானம், இறை உருவங்களுக்கு தங்கக் கவசம் என்று அதன் மதிப்பை நிலை நிறுத்தினர். விரல்களில் கூட தங்க மோதிரம் அணியக் காரணம் என்ன தெரியுமா?

தங்கம் உள்ள கை, தப்பாக எதையும் செய்துவிடக்கூடாது. கையைப் பார்க்கும்போதே குருவும் மகாலட்சுமியும், கூடவே மகாவிஷ்ணுவும் நினைவுக்கு வந்து, மாதா பிதாவால் இந்த மண்ணுக்கு வந்த நாம், பின் குரு தெய்வத்தை கையிலேயே கொண்டிருக்கிறோம். இதனால் நாம் இருளுற்றவர்களுக்கு குருவாக இருப்போம், இல்லாதவர்களுக்கு லட்சுமியாக இருந்து உதவுவோம். அதனால் அவர்களைக் காப்பாற்றிய விஷ்ணுவாகவும் ஆகிவிடுகிறோம் என்பதே விரல்களில் மோதிரம் அணிவதின் உட்பொருள்.

ஹை...

ஸ்ரீவிஷ்ணுவாக, இப்படி ஒரு குறுக்கு வழியா?

31

தங்கம் பின்னாலே சிந்திப்பதற்கு இப்படி ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. இத்தனை சிந்தனைக்குரிய விஷயங்களும் தெரியாதவரா நம் பெரியவர்? எனவேதான், அதை ஏற்றுக்கொள்ள அவர் மறுக்கவில்லை. இந்தக் காரணங்கள் நாம் தங்கத்தின் மேல் பொருந்திச் செல்வதாகும். உண்மையான காரணம் - குறிப்பாக, இந்தப் பூவுலகில் தங்கம் ஒளி மிகுந்த தன்மையோடு மந்திர சக்தியை ஆகர்ஷிப்பதாகவும் இருப்பதுதான். அதனாலேயே கோயில் கோபுரங்களுக்கு தங்கம் வேயப்படுகிறது. உள்ளே விக்கிரகங்களுக்கும் கவசம் சாத்தப்படுகிறது. தானத்திலும், தங்கம் தருவது மிக விசேஷமாகக் கருதப்படுகிறது. இதனாலேயே நாம் எதை தானமாகத் தரும்போதும் 'ஹிரண்ய கர்ப - கர்பஸ்தம் ஹேம பீஜம்' என்கிறோம்.

தங்கத்துக்கு இருபது பெயர்கள் அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை பெரியவர் சரளமாகச் சொல்வார். 'ஸ்வர்ணம் - ஸுவர்ணம்-ஸுவர்ணம், கனகம், ஹிரண்யம், ஹேமம், ஹாடகம், தபரீயம், சாதகும்பம், காங்கேயம், பர்மம், கர்புரம், சாபீகரம், ஜாதரூபம், மஹாரஜகம், காஞ்சனம், ருக்மம், கார்த்தஸ்வரம், ஜாம்பூநதம் என்று அஷ்டாதசமாக அதாவது பதினெட்டு பெயர்களைச் சொல்லி 'அஷ்டாபதம்' என்று பத்தொன்பதாவது பெயரையும் சொல்லும் பெரியவர். 'பர்மம்' எனும் பெயரை ஆய்ந்து தனது வரலாற்று அறிவையும் உணர்த்தியுள்ளார். பர்மம்தான் 'பர்மா' என்றானது. சாதாரணமாக பிரம்மதேசம் என்றதே பின்னாளில் பர்மாதேசம் என்றாயிற்று என்போரும் உண்டு. ஆனால், பொன் அங்கே விளைந்த காரணத்தால்தான் அது பர்மம் என்றானதாம்!

அதே போல் வெள்ளையர்கள் இலங்கையை 'ஸெரன்டீப்' (Serendeep) என்பார்கள். திருவல்லிக்கேணி அவர்கள் நாவில் நுழையாதபடி 'ட்ரிப்ளிகேன்' ஆன மாதிரி, ஸ்வர்ணதீபம்தான் ஸெரன்டீப் என்றானது. ஆம்! இலங்கை குபேரனால் நிர்மாணிக்கப்பட்ட பொன்னகரம்! தங்கத் தீவு. சமஸ்கிருத கவிதை நோக்கில் ஸ்வர்ண தீபம் என்கிறோம். இதுதான் ஸெரன்டீப் என்றானது. தங்கத்தைத் தொட்டு பெரியவரிடம் இப்படி தங்கமான விளக்கங்களும் நமக்குக் கிடைத்துள்ளன. அவை எல்லாமே நம்மை வியப்பில் ஆழ்த்துவதை மறுக்க முடியாது.

விஜயவாடா அன்பர்கள் தங்க கிரீடம் செய்து சமர்ப்பிக்க விரும்பிய விஷயத்துக்குள் திரும்ப வருகிறேன். 30.4.1967ம் நாளன்று இன்றைய

பீடாதிபதியான ஜெயேந்திரரின் திருக்கரங்களால் அன்று அந்த கிரீடம் பெரியவருக்கு அணிவிக்கப்பட்டது. ஆனால், அதை பெரியவர் எப்படி அணிந்து கொண்டார் தெரியுமா? சிரசின் மேல் கிரீடத்தை வைக்குமுன், தாம் அவ்வப்போது அணியும் ருத்ராட்சங்களால் ஆன கிரீடத்தை எடுத்து அணிந்து கொண்டு அதன்மேல் இந்த தங்க கிரீடம் அமரும் விதமாகச் செய்தார்.

அதாவது கிரீடம் தனக்கல்ல... ருத்ராட்சமாக விளங்கும் ருத்ரனுக்கு... ஈசனுக்கு! தானொரு துறவி - தனக்கெதற்கு? ஹேமமாகிய தங்கத்தின் மகத்துவமும் உலகம் உணர வேண்டும். தனது துறவும் மாசுபடக் கூடாது என்று அவர் ருத்ராட்சத்தின் மேல் அமரச் செய்த கிரீடம், பிறகு எங்கு சென்றது தெரியுமா? இங்கேதான் பெரியவரின் தூரப் பார்வையும் அவருக்கிருக்கும் வரலாற்று ஞானமும் நம்மைச் சிலிர்க்க வைக்கிறது.

சைவத் திருமுறையாகப் போற்றிக் கொண்டாடும் தேவாரத் திருவாசகமெல்லாம் இன்று நம்வசம் இருக்கிறதென்றால், அதற்குக் காரணம் சோழ தேசத்தை ஜனநாயகமாக ஆண்ட ராஜராஜ சோழன் என்னும் சோழச் சக்கரவர்த்திதான்! அவன்தான் சிதம்பரம் சென்று ‘நால்வர் பெருமக்கள் நேரில் வந்தால் மட்டுமே அந்த அரிய மறைகளை ஒப்புவிப்போம்’ என்று சொன்னதில்லை தீட்சிதர்களிடம் இருந்து, நால்வர் பெருமக்கள் அரூபமாகிவிட்ட நிலையிலும் அவர்களின் செப்புத் திருமேனிகளோடு சென்று அவர்கள் செப்புமேனியோடு வந்திருப்பதை உணர்த்தி, அவற்றை இந்த உலகுக்கு மீட்டுத் தந்தவன். எனவே, அரிய செயல்புரிந்த அவனுக்கே இந்த தங்க கிரீடம் மிகப் பொருத்தமானது என்று உணர்ந்து, அதை ராஜராஜ சோழனின் சிலைக்கு அணிவிக்கச் சொல்லிவிட்டார். அதுவும், தஞ்சையில் நடைபெறும் அந்தச் சக்கரவர்த்தியின் சதயத் திருநாளன்று அணிவிக்கப்பட்டது.

உலகம் போற்றும் அரிய செயலைச் செய்வோர்களை காலம் ஏதோ ஒருவகையில் கௌரவித்தபடியேதான் இருக்கும் என்பதற்கும் இந்தச் சம்பவமே ஒரு சான்றாகவும் ஆகிவிட்டது. இப்படி தங்க கிரீடம் அணிவிக்கும் பக்தர்களின் ஆத்மார்த்தம் போல, பல சமயங்களில் பெரியவருக்கு கனகாபிஷேகமும் நடத்தப்பட்டுள்ளது. அனேகமாக ஐந்து அல்லது ஆறு முறை நிகழ்ந்திருக்கக் கூடும் என்று கருதுகிறேன்.

இப்படிப்பட்ட கனகாபிஷேகங்களை நம் இல்லங்களில் நம் தாய் தந்தையருக்கும் அவர்களின் 80-ஆம் ஆண்டு நினைவில் சிலர் செய்யக் காண்கிறோம். அது பற்றி பெரியவர் பல அரிய கருத்துகளைக் கூறியிருக்கிறார். அதை இன்று, வைதீகத்தைத் தொட்டுக் கொள்வதும்

துடைத்துக் கொள்வதுமாகவும் இருக்கும் நாம் அனை வருமே அவசியம் அறிய வேண்டும். நம் இல்லங்களில் எண்பது வயதை எட்டிப் பிடித்தவர்க்ள் இருந்தால் அவர்களை மகாவிஷ்ணு ஸ்ரீதேவியாக, பார்வதி பரமேஸ்வரனாகக் கருதி அவர்களுக்கான சதாபிஷேகத்தையும் செய்து அவர்களின் ஆசிகளைப் பெற்றுக்கொள்ள நாம் தவறிவிடக் கூடாது. அவர்களுக்கு எண்பது வயதாவது என்பது நாம் நம் இல்லத்தில் வேதபாராயணம் பண்ணக் கிடைத்த ஒரு வாய்ப்பாகும். அதன் பின்னே எத்தனை அரிய விஷயங்கள் இருக்கின்றன என்பதை பெரியவரின் வார்த்தைகளாலேயே அறிவோமா?

‘சாந்தி கர்மாக்களைச் சொல்கிற புஸ்தகங்களில், சதாபிஷேகத்தின்போது கனகாபிஷேகமும் ஒரு ஆப்ஷனல் ஸம்ஸ்காரமாக பண்ணுவது பற்றி சொல்லியிருக்கிறது. சதம் என்றால் நூறானபடியால், ஆரம்ப காலத்தில் நூறு வயதை ஒருவர் அடையும்போது சதாபிஷேகம் செய்யப்பட்டது. ஆனால் போகப் போக, இந்த நூறு வருஷ வாழ்வு என்பது இளைத்து எழுபது எண்பதாகிவிட்டது பலருக்கு... இதனால் நூறு வயசுக்காரர்கள் ஆபூர்வமாகி விட்டபடியால், ‘ஸஹஸ்ர சந்திர தர்சனம்’ - அதாவது ஆயிரம் பௌர்ணமிக்காலம் ஜீவித்தவர்களுக்கு சதாபிஷேகம் என்று ஒரு திருத்தம் செய்து கொள்ளப்பட்டு, அதுவே இப்போது நடைமுறையில் உள்ளது.

ஆயிரம் பௌர்ணமியைப் பார்க்க 81 வருஷம் ஆகிறது. அதை ஒட்டி எண்பது முடிந்து 81 தொடங்கும் காலம் உகந்த காலமாகிவிட்டது. இதை, பிள்ளை வழியில் பிறந்த கொள்ளுப்பேரன் இருந்து செய்வது விசேஷம். நூறுக்கு உபசாரமாகத்தான் இதைச் செய்து கொள்கிறோம்.

சரி! நூறுக்கும் கனகாபிஷேகத்துக்கும் என்ன சம்மந்தம்? இது விஷயமாக எனக்குத் தோன்றுவதைச் சொல்கிறேன். சமஸ்கிருதத்திலே மொத்தம் ஐம்பது அட்சரம். நம் தேசத்தில் அந்தத்தை, அதாவது முடிவை மறுபடி ஆதிக்கு, அதாவது தொடக்கத்துக்குக் கொண்டு வந்து அந்தாதியாக ரௌண்ட் (round) பண்ணிமுடிக்கும் ஒரு மங்கள வழக்கம் உண்டு. அதாவது அந்தாதி என்றால் நூறு பாடல்கள் கணக்கு. இதில் ஆதி ஐம்பதும், அந்தம் ஐம்பதுமாக நூறாகிறது. அந்தாதியோ அட்சரம் என்னும் எழுத்தால் கணக்காக இருப்பது, இந்த அட்சரத்துக்கு அழியாதது என்னும் ஒரு பொருள் உண்டு. அதனால் பூரண ஆயுள் என்று வேதம் சொல்கிற நூறு வயதை, எழுத்து என்கிற அட்சரத்தைக் கொண்டு நூறோடு சம்பந்தப்படுத்துவது பொருத்தமாக இருக்கிறது.

எழுத்தாகிய அட்சரத்துக்கு, ‘வர்ணம்’ என்று சமஸ்கிருதத்தில்

இன்னொரு பேர் உண்டு. தேவ பாஷையானதால் உயர்வைக் காட்டும் விதமாக ‘ஸு’ சேர்த்தால் ‘ஸுவர்ணம்’ என்றாகும். அதாவது தங்கம் என்றாகிறது. ஆக, எழுத்தே தங்கம்தான். இரண்டுமே சிரஞ்ஜீவியானவை அல்லவா? தங்கம் வெளிச்சம் படும்போது ஒளிவிடுகிறது. நெருப்பில் வளைந்து கொடுக்கிறது. எழுத்தும் நமக்குள் அறிவொளியை ஏற்படுத்துகிறது. அதனால் நாமும் வாழ்வில் வளைந்து கொடுத்து செல்கிறோம். இதனால்தான் எழுத்தட்சரமான ஸுவர்ணத்தில் அந்தாதிக் கிரம நம்பரான நூறை ஆயுசில் அட்சரமான பூர்ண வயசாக வைத்துக் கொண்டு அப்போது ஸுவர்ணமாக இருக்கப்பட்ட தங்கத்தினால் அபிஷேகம் செய்யும்படி வைத்திருக்கிறார்கள். நம் பாரத வழக்கில் இதுவே கோல்டன் ஜுபிலி.

ஆதி அந்தம் சேர்ப்பது என்றில்லாமல், வெறும் அட்சரக் கணக்கு மட்டும் பார்த்தால் ஐம்பது அட்சரம் மட்டும்தானே? இந்த நியாயத்தில் வெள்ளைக்காரர்கள் ஐம்பது வயசை கோல்டன் ஜுபிலி என்பதும் சரிதான்! இன்னொரு நியாயமும் சொல்லலாம். இவர்களது ABCD 26 எழுத்துக்கள்தான்.

ஐம்பதில் பாதிக்கு ஒன்றுதானே கூட? இங்கேயும் ஆதி அந்தம் ரவுண்ட் செய்தால் ஐம்பது வருகிறதே! எனவே, வெள்ளையர்களின் கோல்டன் ஜுபிலியிலும் அர்த்தம் இருக்கிறது!’

- இப்படிச் சொல்லும் பெரியவரின் வியாக்யானத்தில்தான் எத்தனை விரிந்த, ஆழமான பார்வை!

இத்தனை விரிவும் ஆழமும் கொண்டிருந்த போதிலும், தனக்கான கனகாபிஷேகத்தை தான் ஏற்பதற்கு பெரியவர் அரிதான இன்னொரு காரணத்தையும் கூறியுள்ளார்.

அது என்ன தெரியுமா?

32

வர் எப்படிப்பட்டவர்?

அஸ்ருதிகள், ஸ்மிருதிகள், புராணங்கள் என்று எல்லாமே அவருக்குள் அடக்கம். சகல ஜீவராசிகளிடமும் பாய்கிற கருணை முழுதும் அவருக்குள் அடக்கம். அப்படிப்பட்டவரின் நாம தாரண மந்திரத்துக்காகவே எனக்கு இத்தனை நடக்கிறது. கனகாபிஷேகமே நடக்கிறது.

பெயர் ஒன்றை வைத்திருப்பதற்கே இத்தனை பெருமை என்றால், எப்படி வாழ வேண்டும் என்று அவர் ஆக்ஞையிட்டிருக்கிறாரோ அப்படியே வாஸ்தவத்தில் நடந்தும் காட்டிவிட்டால், சாஸ்வத கனகாபிஷேகமாக, நித்ய பொன்மாரியாக அல்லவா இருக்கும்?' - என்கிறார்.

எனக்குத் தெரிந்து, மகாபெரியவர் போல ஒரு அப்பழுக்கற்ற ஞானியை நாம் எவருமே பார்த்திருக்க வாய்ப்பில்லை. அப்படிப்பட்டவருக்கு கனகாபிஷேகம் என்ன? நவரத்னங்களாலேயே அபிஷேகிக்கலாம். ஆனால், நம்மால் முடிந்த மிக உயர்ந்தபட்ச மரியாதை என்பது, பக்தியோடு அவரது திருவடிக்கு பூக்களைப் போடுவது ஒன்றுதான்.

நம்மால் இத்தனை பெரியவராகப் பார்க்கப்படுபவரே, 'இதெல்லாம் எனக்கில்லை; என் பெயருக்குத்தான்... நான் மிகச் சாதாரணமானவன்' என்பது போல் பேசுகிறார் என்றால், நாம் ஒவ்வொருவரும் எவ்வளவோ பெருமைப்பட்டுக் கொண்டிருப்போம்? நமக்கிருக்கும் தகுதிக்கு நாம் எங்கோ இருக்க வேண்டும் என்று கருதிக்கொண்டு, இப்போதுள்ள நிலைப்பாட்டை சந்தோஷமாகக் கருதாமல், தாபமும் ஏக்கமும் கொண்டு இருப்பதெல்லாம் எத்தனை கீழ்மையான செயல்?

ஒரு இமயமே தன்னை ஒரு சிறு துளி என்று கூறும் போது, அந்தத் துளிகளைவிட சிறிய நாம் என்னவென்று கூறிக்கொள்வது? ஆதிசங்கரர் சொன்னபடி நடந்து கொண்டால், நித்யமும் பொன்மாரிதான் என்றாரல்லவா? ஆதிசங்கரர் அப்படி என்ன சொன்னார்?

சங்கர பகவத் பாதரின் அந்திமக் காலம். சரீரத்தை அவர் பிரியப்போகிற தருணம். சிஷ்யர்கள் அவரிடம், 'இறுதியாக, எங்களுக்குச் சுருக்கமாக ஒரு உபதேசம் தந்து கடைத்தேற்ற வேண்டும்' என்று வேண்டி நிற்க, அவரும் பெருங்கருணையோடு உபதேசிக்கிறார். அந்த உபதேசம்தான் 'ஸோபான பஞ்சகம்.' இதில் ஐந்து சுலோகங்கள் இருக்கின்றன. மிக எளிமையான, குழந்தைக்கும் புரிகிற விதத்தில் இந்த சுலோகக் கருத்துக்கள் இருக்கின்றன.

'வேதா நித்யம் அதீயதாம்' - அதாவது, தினமும் வேத பாராயணம் செய்யுங்கள்.

'தத் உதிதம் கர்மஸீ அனுஷ்டியதாம்'- அந்த வேதத்தில் சொன்ன கர்மங்களைச் செய்யுங்கள்.

'தேன ஈசஸ்ய வீதியதாம் அபசிதி' - இதுவே அவனுக்கான வழிபாடாகும். தனியே பூஜை தேவையில்லை. வேத பாராயணமும்

அதன்வழிநடப்பதுமே கூட பூஜைதானாம் இப்படிப்பட்ட செயல்பாடுகள் எங்கு போய் முடிகின்றன அல்லது சேருகின்றன தெரியுமா?

‘ஸர்வ தேவ நமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி’ - அதாவது, கேசவனிடம் போய்ச் சேருகிறது.

கேசவன்தான் பரமாத்மா!

க, அ, ஈச, வ – என்று நாலும் சேர்ந்தால் ‘கேசவ’ என்றாகும். இதில் ‘க’ பிரம்மா, ‘அ’ விஷ்ணு; ‘ஈச’ ருத்ரன் ‘வ’ இவர்கள் மூன்றின் தொகுப்பான முடிவு.

விஷ்ணு சகஸ்ரநாமத்தில் வரும் கேசவ என்னும் நாமத்துக்கு ஆதிசங்கரரின் பாஷ்யம் இது. பல மூர்த்திகள் இருந்தாலும், அவர்களில் யாரை நமஸ்கரித்தாலும் அது அத்தனை மூர்த்திகளுமாயிருக்கிற ஒரே ஸ்வாமியைத்தான் சென்றடையும்.

இதனாலேயே துறவிகளை நமஸ்கரிக்கும் போது ‘நாராயண’ என்கிறார்கள். அது நாராயணனாகிய கேசவனிடம் போய்ச் சேர்கிறது. கேசவனுக்குள்ளே மும்மூர்த்திகளும் அடக்கம்! இவர்களை தனியே வணங்கிடும்போதும், அது நாராயணனிடம் வந்த சேர்ந்து விடுகிறது. ஏனென்றால், அவனே கேசவன்!

இதன்படி ஸர்வ தேவ நமஸ்காரம் கேசவனைச் சென்றடைவது போல், ஒரு சன்யாசிக்குச் செய்கிற நமஸ்காரமும் அந்த பரமாத்மாவையே சென்றடைகிறது. இதனாலேயே மடத்து சன்யாசிகளான என் போன்றவர்களும் ஆசீர்வதிக்கும்போது ‘நாராயண... நாராயண’ என்று அதை ஏற்கிறோம்.

இப்படி ஆதிசங்கரர் பெயர் தனக்கிருப்பதால் தனக்கு இந்த கனகாபிஷேகம் என்றவர், அவர் காட்டிய வழியைச் சொல்லி அதன்படி நடக்கின்ற கர்மச் செயல்பாடே பூஜையாகி, அது ‘ஸர்வ தேவ நமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி’ என்று பரமாத்மாவை அடையும் விதத்தை, எளிதாகவும் அதேசமயம் வலிமையோடும் சொல்லியிருப்பதை என்னவென்பது?

கேசவ எனும் பெயர்க் காரணத்தை விளக்கும் அதே ஞானத்தோடு, பெரியவர் மிகுந்த வரலாற்றுச் சிந்தையோடும் விஞ்ஞான மேதமையோடும் ‘ரச வாதம்’ பற்றி சொல்லியிருப்பது, என்னை மிகவும்

வியக்கவே வைத்தது.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக எழுதிவரும் நான், 'ஆன்மீக மர்மம்' எனும் ஒரு புதிய தளத்தை உருவாக்கி, அதில் ஐம்பதுக்கும் மேலான நாவல்கள் செய்தவன். அவற்றில் சிவம், எங்கே என் கண்ணன்?, கிருஷ்ணதந்திரம், சிவமயம், ருத்ர வீணை, மகாதேவ ரகசியம் போன்றவை மிகவே பெயர் பெற்றவை. இதில் ருத்ர வீணையும் சிவமயமும் தொலைக்காட்சி தொடராகவும் வந்து, எனக்குப் பல பரிசுகளையும் பெற்றுத் தந்தன. ருத்ர வீணைக்கு ஒரு மிகப் பெரிய இலக்கிய அந்தஸ்தும் கிடைத்து, இன்றும் அது புத்தக விற்பனையில் சாதனை புரிந்துகொண்டுதான் இருக்கிறது. இந்த நாவல்களில் நான் ரசவாதம் பற்றியெல்லாம் நிறைய எழுதியுள்ளேன். ரசவாதம் என்றாலே சித்தர்கள் நினைப்பு வந்துவிடும். என் கதைகளிலும் நிறையவே சித்த சம்பந்தம் உண்டு. அவர்களைப் பாத்திரமாக்கி, நிறைய ஆன்மீக விஷயங்கள் பேசி இருக்கிறேன்.

இந்த சித்த சம்மந்தம் என்பது, என் வரையில் எழுத்தோடு மட்டும் தொடர்ந்தபடி உள்ளது. ஆனால், இந்த சித்தர்கள் போற்றி வணங்கும் சிவபிரானை நான் தனித்த காதலோடு வணங்கி வருகிறேன். எனது சார்ஜிங் சென்டராக விளங்கி வருவது மதரை கூடலழகன் மட்டுமல்ல... அந்த ஆலவாயழகனும் கூட!

இம்மட்டில் நான், முதல் மூலவாழ்வார்களே பேதமின்றி துதித்தது போல அவர்கள் வழியில் செல்பவன்.

மீண்டும் சித்தர்களிடம் வருகிறேன்.

இவர்களிடம் அஷ்டமா சித்திகளும், மூலிகை ரகசியங்களும், அபார மருத்துவமும், அதோடு ரசவாதமும் இருந்தது.

போகர், கொங்கணர் போன்றோர் பித்தளை, இரும்பை போகிற போக்கில் தங்கமாக்கி விடுவார்கள். இவர்கள் சிறுநீர் கழித்த மணற்திட்டு தங்கமாகியுள்ளது. அந்த சிறுநீருக்கே அத்தனை ரசவாத சக்தி! இந்த ரசவாதம் என்பதோ இன்று பெரும் ரகசியம்! இது தெரிந்தால், தங்கள் எவர்சில்வர்போல சர்வ சாதாரணமாகி விடும்.

ஆனால், அப்படி ஆக வாய்ப்பே கிடையாது. ஏன் என்றால், அந்த ரசவாத ரகசியத்துக்குப் பின்னே, அதைத் தங்கமாக்க முடிந்த சித்தன் என்பவன் துளியும் பற்றில்லாதவனாக, அவனே ஒரு ரசவாதப் பொருளாக இருப்பதுதான் விந்தை!

இதை இப்படிக் கூட சொல்லலாம். வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டு வருபவர்களுக்கே இங்கே விருந்து பரிமாறப்படும் என்றால், அந்த விருந்தை யாராலாவது சாப்பிட முடியுமா? கண்ணால் இலையில் உள்ளதைப் பார்க்கலாம். அவ்வளவுதான்! அதே போலத்தான் முற்றும் துறந்தவர்க்கே ரசவாதம் வசப்படுவதும்! ஆசையோடும் அணுகினால் இது அவ்வளவுதான்!

மகாலட்சுமியும் நாரணனும் கோள்களில் குருவும் ஆட்சி செய்யும் இந்த உலோகத்தை அடைவது என்பது அவ்வளவு சுலபமா என்ன? சுலபமில்லாத செயல்பாடு தான் ரசவாதம்!

இந்த ரசவாதத்துக்கு, இரும்பைத் தங்கமாக்குவது மட்டுமல்ல... வேறு பல பொருளும் இருக்கிறது. அதை பெரியவர் வாயிலாக நான் அறிந்தபோது அந்தப் பொருட்செறிவில் பிரமித்துப் போனேன்.

‘பித்தளையைப் பொன்னாக்கும் ரசவாதம் என்று ஒன்னு கேள்விப்பட்டிருக்கலாம். சித்தர்கள் அப்படிச் செய்தவர்களாவர். அப்படிச் செய்வதை பாட்டாகப் பாடியும் வைத்துள்ளனர். ஆனால், நமக்கெல்லாம் அது புரியாது. காரணம், அது சங்கேத பாஷையில் இருப்பதுதான்... ஏன் தெரியுமா? தங்கம் என்பது மிக நல்ல வஸ்து.

ஆனால் நாமோ, நல்லதும் கெட்டதும் என்று இரண்டுமானவர்கள். அதனால் கெட்டதில் புத்திபோய் ரசவாதம் செய்து, தங்கம் பண்ணி வெறும் போகத்திலேயே நாம் போய்விடுவோம் என்பதால், பரிபாஷையில் அதை மூடு மந்திரமாக எழுதி வைத்தார்கள்.

இந்த ரசவாதம் மேல்நாட்டிலும் இருந்திருக்கிறது. ‘ஆல்கெமி’ என்று பேர் சொல்வார்கள். அதர்வ வேதத்தில் இருந்து அனேக ரகசியங்கள், ஆவி சம்மந்தமான மந்திரங்கள், வைத்ய சம்பந்தமான குறிப்புகள் எல்லாம் அரேபியாவுக்குப் போய் அங்கேயிருந்து ஐரோப்பாவுக்கும் போயுள்ளது. ஐரோப்பாவுக்கு மட்டுமல்ல... எகிப்துக்கும் போயிருக்கிறது. அப்படிப் போனதில் ஒன்றுதான் ஆல்கெமி!’

34

அந்த வியாக்யானத்தைக் கேளுங்கள்.

“மூலிகைகளை சேர்த்துக் காய்ச்சி கீய்ச்சி எல்லாம் பண்ணி baser metals என்கிற இரும்பு, பித்தளை முதலான உலோகங்களைத் தங்கமாக்குவது என்பது சித்த சாஸ்திரங்களில் ஒரு வழிமுறையாகும்.

இன்னொரு வழி ரசாயனம். இங்கே ரசம் என்பது பாதரசத்தைக் குறிக்கும்.

ரசாயனத்தில், பாதரசமாகிய மெர்க்குரியைப் பயன்படுத்தி தங்கமாக கன்வர்ட் பண்ணினார்கள். இதிலே பாதி கெமிஸ்ட்ரி, பாதி மந்திரம் - அதாவது மிஸ்ட்ரி. அதாவது, கெமிகல் ப்ராசெஸ் மற்றும் மந்த்ரானுஷ்டானம் இரண்டும் சேர்த்தே மற்ற உலோகத்தைத் தங்கமாக்குவது என்பதாகும். இது காலம் செல்லச் செல்ல, மந்த்ரானுஷ்டானம் சித்தர்களுக்குப் பின் தெரியாமல் போய்விட, மிஸ்ட்ரி போய் கெமிஸ்ட்ரி மட்டுமே எஞ்சி ஒரு சயன்ஸாக நின்றுவிட்டது

நம் தேசத்தில் கெமிஸ்ட்ரிக்கு, ரசாயனம் எனும் பெயரிருப்பதும் இதனால்தான்! சிரஞ்ஜீவித்வம் தருகிற காயகல்ப மருந்துக்கும் ரசாயனம் என்றே பெயர். இதை மேல்நாட்டில் elixit என்பார்கள். இதில் முக்கியமாக, ரசம் என்கிற பாதரசமே உபயோகமானதால்தான் ரசாயனம் என்று பெயர் ஏற்பட்டது.

சிரஞ்ஜீவித்வம் (அ) தீர்க்காயுள் உண்டாக்குகிற மருந்தை பண்ணுபவனை 'ஆல்கெமிஸ்ட்' என்றார்கள். ஒன்று, உலோகத்தைத் தங்கமாக்குகிறது. இன்னொன்று, உடம்பை நீடித்த ஆயுள் உள்ளதாக (கிட்டத்தட்ட தங்கம் போல்) ஆக்குகிறது. அதைச் செய்பவன் ஆல்கெமிஸ்ட் இதைச் செய்பவன் கெமிஸ்ட்!

ரசாயனம் என்கிற பெயர் சமஸ்க்ருதப் பெயராக இருக்கிறதே என்று கருதி, பகுத்தறிவாளர் என்போர் அதை தமிழில் வேதியியல் என்றார்கள். வாஸ்தவத்தில் வேதி என்பதும் சமஸ்க்ருதம்தான். யாக மேடையை 'யக்ஞ வேதி' என்பார்கள்.

ரசத்தோடு சம்பந்தப்படும் பரசத்தை வைத்து, அதற்குப் பரசவேதி என்று பெயர். பிற்காலத்தில் வேதியின் ஸ்பரிசத்தால் பித்தளை பொன்னாவதால், அந்தக் கல்லுக்கும் ஸ்பர்சம் என்று பெயரிட்டு விட்டார்கள்.

இந்த பரசக் கல்லைத்தான், வெள்ளைக்காரர்கள் Philosophers Stone என்கிறார்கள்!"

பெரியவரின் இந்த வியாக்யானத்தில் - அவர் விஞ்ஞானம், சித்தம், மேற்கத்தியம் என்று மூன்றையும் தெளிவாக உணர்ந்து பேசியிருப்பது புலனாகிறதல்லவா? அப்படியே பெரியவர் தாயுமானவ சுவாமிகளிடம்

வந்து ரசவாதத்தை அவரோடு தொடர்புபடுத்திச் சொல்லும்போது மேலும் சிலிர்ப்பேற்படுகிறது.

“ஸ்பர்சவேதி பித்தளையைப் பொன்னாக்குகிறது. அப்படித்தான் ஈஸ்வரனும் தன்னிடம் மனதை வைத்த ஜீவர்கள் பித்தளை போல் கறுத்திருந்தாலும், அவர்களை பரமஞானிகளாக ட்ரான்ஸ்ம்யூட் (உருமாற்றம்) பண்ணி விடுகிறான். இதை உபமானம் சொல்லியே தாயுமானவர் மாதிரியானவர்கள் மனதைத் தொடும் பாடல்களாகவும் பாடிக் கொடுத்திருக்கிறார்கள்.

‘கரு மருவு குகையனைய காயத்தின் நடுவுட்

களிம்புதோய் செம்பனை யான்

காண்டக விருக்க நீ ஞான அனல்மூட்டியே

கனிவு பெற உள்ளுருக்கிப்

பருவமறிந்துநின் னருளான குளிகைகொடு

பரிசித்து வேதி செய்து

பத்து மாற்று தங்கமாக்கியே பணி கொண்ட

பட்சத்தை என் சொல்லுவேன்?’

- என்னும் இந்தப் பாடல் கெமிஸ்ட், ஆல்கெமிஸ்ட் என்று இரண்டுக்கும் சாட்சியாகத் திகழ்கிறதல்லவா?” என பெரியவர் கேட்கிறார்.

- மேற்கண்ட ரசவாதம் பற்றிய வியாக்யானங்கள் எனக்குள் பலவிதங்களில் தெளிவை ஏற்படுத்தின. எனக்கிருக்கும் சில திரைப்படத்துறை சார்ந்த நண்பர்கள், மிகுந்த விஞ்ஞானப் பார்வை உடையவர்கள். இரும்பை, சித்த புருஷர்கள் தங்கமாக்குவார்கள் என்னும் கருத்தையே ஒரு மாயாவாதமாக, துளியும் சாத்தியமில்லாத ஒன்றாகக் கருதுபவர்கள். குறிப்பாக, ரசவாதம் என்பதே கடந்த நூற்றாண்டில் கண்டறியப்பட்ட ஒரு வார்த்தை என்றெல்லாம் சொல்பவர்கள்.

சித்தர்களில் போகர், கருவூரார், கொங்கணர் போன்றோர் இரும்பைத் தங்கமாக்கி நிறைய சித்து புரிந்துள்ளனர். குறிப்பாக, சோழ அரசன் ஒருவன் சிதம்பரம் சென்று அந்தப் பொன்னம்பலத்தை தரிசனம் செய்த நிலையில் நெகிழ்ந்துபோய் அங்கு நாட்டியக் கோலத்தில் இருக்கும்

நடராஜ மூர்த்தியை தூய செம்பொன்னால் வார்த்து அதை பூஜிக்க எண்ணுகிறான். ஆனால், சுத்தமான பொன்னால் உருவங்கள் செய்வது சாத்தியமில்லை. அதில் குறிப்பிட்ட அளவு செம்பு கலந்தாலே உறுதிப்பாட்டோடு உருவத்தை உருவாக்க முடியும். கருவூராரும் செம்பு கலந்து பொன்னம்பல நடராஜ மூர்த்தியைச் செய்து தருகிறார். ஆனால் அதை ஏற்க மறுக்கும் அரசன், கருவூரார் செம்பு கலந்து அதற்கு இணையான அளவு தங்கத்தைக் களவாடிவிட்டதாகக் கருதி அவரைச் சிறையில் போட்டு விடுகிறான். இதை அறிந்த கருவூராரின் குருவான போகர் பெரும் கோபத்தோடு அரசனைச் சந்திக்க வருகிறார். அப்படி வருபவர் கையில், ஒரு பாறையை வெட்டி எடுத்து வந்தது போல தங்கம்! அதை அரசன் முன் வீசி எறிபவர், “ஒரு சித்தன் வரையில் தங்கம் என்பது மிக அற்பமான உலோகம். என் உமிழ்நீரால் கூட என்னால் தங்கம் உருவாக்க முடியும். சிறுநீரோ, பாயும் இடத்தை எல்லாம் தங்கமாக்கி விடும். பார்க்கிறாயா?” என்று கேட்டு அரசனோடு வாக்குவாதம் புரிந்திட, பிறகே அரசனுக்கும் உண்மை புரிகிறது. பின் கருவூராரும் வெளியே வருகிறார். இது ஒரு கதை!

இக்கதையின் அடிநாதம், சித்தர்கள் வரையில் தங்கம் ஒரு அற்பமான பொருள் என்பதைச் சொல்வதாக இருக்கிறது. இதை நான் சொன்னால், என் நண்பர்கள் துளிகூட நம்பிக்கை வைக்க மாட்டார்கள். இவர்களுக்கு எதை வைத்து புரிய வைப்பது என்று எண்ணியபோதுதான், பெரியவரின் தங்கம் தொடர்பான இந்த கருத்துக்கள் என் கண்ணில் பட்டன. குறிப்பாக, தாயுமானவர் பாடலையே சாட்சியாக அவர் காட்டியது என்னை துள்ளிக்குதிக்க வைத்தது.

இல்லாத ஒன்றைப்பற்றி எண்ணிப்பார்க்க முடியாது. எண்ணிப்பார்க்கவே முடியாதது எப்படி கற்பனைக்கு மட்டும் வசப்படும்? கற்பனை என்பது கூட, அதை செய்து பார்ப்பவருக்குத்தான் கற்பனையாக இருக்க முடியும்! உண்மையில் அது எங்கோ இருக்கப் போய், அதைக் கேள்விப்படப்போய், அது மனதில் தங்கப்போய்தான், கற்பனை செய்யும்போது அது வெளிப்படுகிறது. எனவே, நாம் Fantasy என்பதெல்லாம் எங்கேயோ எப்போதோ ஏதோ ஒரு விதத்தால் சாத்தியப்பட்ட ஒன்றே என்பது என் கருத்தாகும். அப்படி சாத்தியப்பட்ட ஒன்றால்தான் காலகாலத்துக்கும் வாழவும் முடியும். இல்லாவிட்டால் அது வழக்கொழிந்தே அல்லவா போயிருக்கும்?

ரசவாதம் வரையில் சித்த வியாக்யானங்கள் ஒருபுறம் இருக்கின்றன. எந்த மூலிகையை எப்படி, எப்போது பறிக்க வேண்டும் என்பதில்

இருந்து, அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்றெல்லாம் அவர்கள் பரிபாஷையில் எழுதிவிட்டுப் போயுள்ளனர். அதைப் புரிந்துகொள்ள நமக்கு மிகவே ஞானம் அவசியம். கூடவே, நல்ல நேரமும் அவசியம். அந்த ஞானம் அமைந்தால்தான், நாமே குபேரனாக ஆகிவிடுவோமே! குபேரனாகும் விதி இருந்தால், ஒரு வேளை ஞானமும் நேரமும் சித்திக்குமோ என்னவோ? இருந்துவிட்டுப் போகட்டும். பெரியவர் கூற்றுப்படி உடம்பும் மனசும் தங்கமாக வேண்டும். அதுதான் முக்கியம்!

இப்படி உடம்பும் மனசும் தங்கமாக இருந்த ஒருவரும் மதுரையில் இருந்தார். ஹோட்டலில் இவருக்கு சர்வர் உத்யோகம். மூன்று வேளை சாப்பாட்டுடன் தினசரி ஒரு ரூபாய் சம்பளம். இது எந்த நாளில் என்று கேட்கலாம். 1960களில் நடந்ததைத்தான் சொல்கிறேன். இவர் பணியாற்றிய ஹோட்டல், மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் பக்கத்தில்தான் இருந்தது. இதனால், மீனாட்சியை தரிசனம் பண்ணிவிட்டுத்தான் வேலையைத் தொடங்குவார். சம்பளப் பணத்தை சேர்த்து வைத்துக்கொண்டு தேவைக்குப் பயன்படுத்திக் கொள்வார். இவருக்கு, மீனாட்சியை மிக அருகில் பார்க்க வேண்டும் என்று ஆசை. ஆனால், யாராக இருந்தாலும் தூர நிறுத்திவிடும் ஆகம சாஸ்திரப்படி, அதில் எவ்வளவு அருகே நின்று சேவிக்க முடியுமோ அங்கே நின்று சேவித்தார்.

பரமபக்தரான இவரது பக்திக்குத் தீனி போடுவது போல, 1963ல் மீனாட்சியம்மன் கோயிலில் கும்பாபிஷேக ஏற்பாடுகள் ஆரம்பமாயின. நாள் நெருங்க நெருங்க வைதீக கட்டுப்பாடுகள் அதிகமாகி, இவரால் மீனாட்சியை அருகில் தரிசிக்க முடியவில்லை. இத்தனைக்கும் தன் சம்பளப் பணத்தை, கும் பாபிஷேக நிதிக்கு காணிக்கையாகக் கொடுத்துவிட்டார். இவருக்கு இன்னொரு விருப்பமும் இருந்தது. அது, காஞ்சிப் பெரியவரைத் தரிசிப்பது என்கிற விருப்பம். மதுரையில் இருந்து காஞ்சிபுரத்துக்குப் போய் பெரியவரை தரிசித்துவிட்டு வர காலமும் இடம் தரவில்லை; பொருளாதாரமும் இடம் தரவில்லை. ஆகையால் அந்த ஏக்கம் மனதில் அப்படியே இருந்த நிலையில், காஞ்சிப் பெரியவர் தலைமையில்தான் கும்பாபிஷேகம் நடக்கப் போகிறது எனும் செய்தி அவரை எட்டியது. அவருக்குள் ஒரே சந்தோஷம்!

ஒரு கல்லில் இரு மாங்காய் என்பார்களே! அப்படி கும்பாபிஷேகத்தையும் பார்த்து பெரியவரையும் தரிசனம் பண்ணப்போவதில் மனது ரமித்து திளைக்கத் தொடங்கிவிட்டது. ஆனால், நாள் நெருங்க நெருங்க கட்டுப்பாடுகள் அதிகமாகி

தனவான்களுக்கு முதலிடமும், வெகு ஜனத்துக்கு முடிந்த இடமும் என்று மாறிப்போனது. இப்படி மாறிப்போவதுதான் கலியுக தர்மம். இதை தவறு என்றும் வாதிக்கலாம். தவிர்க்க முடியாத தீமை என்றும் கூறலாம். எது எப்படியோ நம்முடைய சர்வர் சுந்தரத்துக்கு (சுந்தரம் என்பதுதான் அவர் பெயர்), கும்பாபிஷேக நாளைக்கு முதல் நாளே மிகவும் துக்கமாகிவிட்டது.

பெரிய வரைப் பார்ப்பதும் கும்பாபிஷேகத்தைப் பார்ப்பதும், தன் வரையில் அசாத்தியம் என்பது விளங்கிவிட்டது. மாசி வீதிகளில் ஏதாவது ஒரு வீட்டு மாடிக்குப் போய் நின்றுகொண்டு பார்க்கலாம் என்றால் அதற்கும் வழியில்லை. இந்த நிலையில், முதல் நாளே கோயிலுக்குச் சென்றவர் பொற்றாமரை குளத்தை ஒட்டி பல பேர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து இவரும் அங்கேயே உட்கார்ந்து விட்டார். விடிய விடிய கோயிலும் திறந்திருந்ததால், யாரும் வெளியே துரத்தவில்லை.

ஆனால், குளத்தங்கரையில் உட்கார்ந்து என்ன புண்ணியம்? வேண்டுமானால் ஒரு முழுக்கு போடலாம் (அப்போது முழுக்கு போடுமளவு ஜலம் இருந்தது. குளிக்கும் வழக்கமும் இருந்தது). எனவே, கும்பாபிஷேக வேளையில் முழுக்கு போட்ட நிலையில் அங்கிருந்து ஒரு மூலையில் நின்று கண்ணுக்குத் தெரியும் தெற்கு கோபுரத்தை முடிந்த மட்டும் பார்ப்போம். வேறு வழிதான் இல்லையே என்று மனக்கவலையோடு அவர் இருந்து விட, அவரைப் போலவே பலர் அப்படி அங்கிருந்ததுதான் ஆச்சரியம்! அதில் பல பாட்டிகளும், வைதீக பிராம்மணர்களும் அடக்கம். அழுக்கு உடையோடு, பார்க்கவே அவர்களிடம் தரித்திரம் பளிச்சிடும் நிலை. இந்த கும்பாபிஷேக தரிசனமும், கூடவே குருவின் தரிசனமும் கிடைத்தால் விமோசனம் கிடைத்துவிட்டதாகப் பொருள். ஆனால், கிடைக்க வேண்டுமே! அப்போது தான் அங்கே அந்த அதிசயம் நடக்கத் தொடங்கியது.

34

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் பொற்றாமரைக் குளக்கரையில், விடியும்போது நடக்கவிருக்கும் கும்பாபிஷேக வைபவத்தைக் காண்பதற்காக சாமான்யப்பட்ட ஜனங்கள் காத்திருந்த நிலையில், நள்ளிரவைக் கடந்துவிட்ட விடியற்காலை வேளையில் அங்கே சற்றும் எதிர்பாராதவிதமாக மகாபெரியவர் வந்துவிட்டார். அவரோடு மடத்தைச் சேர்ந்த அவரது தொண்டரடிப்

பொடிகள் சிலர்.

எந்த ஆர்ப்பாட்டமும் படாடோபமும் இன்றி நடந்த இந்தச் சம்பவம் அங்குள்ளோரை வியப்பில் ஆழ்த்திவிட்டது. அதிலும் நமது சர்வர் சுந்தரத்துக்கு தன் கண்ணையே நம்பமுடியவில்லை. காஞ்சிக்குப் போய் தரிசனம் செய்ய நினைத்தவர், அவர் இருக்கும் குளத்தங்கரைக்கே வந்துவிட்டார் என்றால், அதை சட்டென்று நம்பத்தான் முடியுமா என்ன?

ஒரு ஆச்சரியம் என்னவென்றால், கோயிலைச் சார்ந்த எவருக்கும் பெரியவர் இப்படி வந்துவிட்டதே தெரியாது. அப்போது கோயில் நிர்வாகத் தலைவராக இருந்தவர் மறைந்த முன்னாள் அமைச்சர் பழனிவேல் ராஜனின் தந்தை பி.டி. ராஜன். அவர் தலைமையில்தான் அந்த கும்பாபிஷேகத்துக்கு எல்லா மடாதிபதிகளையும் அழைத்திருந்தார். அதில் பரமாச்சார்யாரும் ஒருவர். ஒரு மடாதிபதி மட்டும், கும்பாபிஷேகத்தில் தனக்கான முக்கியத்துவம் குறைந்து போகுமாக என்று கவலைப்பட்டிருக்கிறார். அவர் அப்படி கவலைப்பட்டது மகாபெரியவர் கவனத்துக்கும் சென்றது. ஆனால் பெரியவரோ, 'தனக்கு எந்தவித முக்கியத்துவமும் தேவையில்லை. நடக்க இருப்பது ஒரு தேவகாரியம். அதில் குறையில்லாத போக்கு இருக்க வேண்டுமே அன்றி, என் போன்றவர்களில் யார் பெரியவர் சிறியவர் என்று கவனித்து அதன்படி நடப்பதெல்லாம் கூடாது' என்று கூறிவிட்டார். கூறிவிட்டதோடு கோயிலில் எவருக்கும் சிரமம் தராதபடி, ஒரு பக்தன் தன் வீட்டை விட்டு காலார நடந்து கோயிலுக்கு வருவதுபோல வந்தும் சேர்ந்து விட்டார்.

அப்படி வந்தவரைத்தான் சுந்தரம் போன்றவர்கள் கண் குளிர தரிசனம் செய்தனர். காலிலும் விழுந்தனர். தூரப் போகவும், விலகிப் போகவும் சொல்ல ஒருவருமில்லை. பெரியவரும் அவர்களோடு சகஜமாய் பேச ஆரம்பித்து விட்டார். சுந்தரத்திடம் என்ன உத்யோகம் என்று கேட்கவும், தயங்கிய சுந்தரம் தானொரு ஹோட்டல் சர்வர் என்று கூறியிருக்கிறார். பெரியவரிடம் உடனே உற்சாகம்!

"அடடே... பசியாத்தற உத்யோகமா? பலே... உற்சாகமா பிரியத்தோட பண்ணு. நநாம படற பாட்டுக்கு திருப்தி உடனடியா கிடைக்கிறது இந்த உத்யோகத்துலதான்" என்று கூறவும் சுந்தரத்துக்கு சிலிர்த்து விட்டது. அதைவிட சர்வர் என்னும் பதத்தை மிக அருமையாக பசியாத்தற உத்யோகமா என்று பெரியவர் மொழி பெயர்த்ததில், ஒரு தனி மதிப்பு அதன்மேல் அந்த நொடி ஏற்பட்டது சுந்தரத்துக்கு!

பெரியவர் இப்படி குளத்தங்கரையில் சகஜமாய் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பது மிகத் தாமதமாய் பி.டி. ராஜனுக்கு தெரியவரவும் ஆடிப் போய்விட்டார். மற்ற மடாதிபதிகள் எல்லாம் அவர்களுக்கான வாசல் வழியாக மேளதாளம் முழங்க வந்து இறங்கிவிட்ட நிலையில், பெரியவரைக் காணவில்லையே என்னும் கேள்விக்குப் பதிலாக அவர் வந்துவிட்டார் என்று தெரியவும், பி.டி. ராஜனுக்கு பெரியவரைச் சந்தித்தபோது தான் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. உடனேயே ஓடினார். குளத்தங்கரையில் பெரியவரை பூர்ண கும்பத்துடன் தரிசனம் செய்து கும்பாபிஷேக கோபுரம் நோக்கி அழைத்துச் செல்லத் தொடங்கினார். அந்த நொடி வரை அவரோடு தங்களை மறந்து கலந்து கிடந்த சுந்தரம் போன்றவர்களுக்கெல்லாம் திகைப்பு பெரியவரோ அவர்களுக்கும் ஜாடை காட்டி பின்தொடரச் சொன்னார். அவர்களும் பின்தொடர்ந்தனர். பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு நடுவில் பெரியவருக்கு மட்டும் பாதை கிடைத்தது. ஆனால், அவ்வளவு இடங்களிலும் பெரியவர் தான் நின்று பின்னால் திரும்பிப் பார்ப்பார். பஞ்சப்பரா ரிகளாய் நமக்கெல்லாம் எங்கே தரிசனம் கிடைக்கப் போகிறது என்கிற அவநம்பிக்கையில் இருந்த அந்தக் கூட்டத்தவர்கள் கண்ணில் பட, அவர்களை முன்னால் போகச் சொல்லி பின் பெரியவர் தொடர்ந்தார்.

அதிகாரிகளால் எதுவும் செய்ய முடியவில்லை ஆயிரக்கணக்கில் டொனேஷன் தந்தவர்களுக்கும், பெரிய அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் வழிவிட்டே பழகியவர்கள், அன்று பெரியவரால் சாமான்யர்களுக்கும் வழி விட்டனர். அதில் ஒரு பாட்டிக்கு தொண்ணூறு வயது. தடுமாறி மேலே கோயில் கூரைமேல் ஏற முடியாமல் சிரமப்பட, பெரியவர் தன் சகாக்களில் ஒருவரைப் பார்த்திட, ஓடிப்போய் பாட்டிக்குக் கை கொடுத்தார் அவர். அவர்களுக்கோ, பெரியவரால் தங்கள் வரையில் கைலாசத்திலும் வைகுண்டத்திலுமே இடம் கிடைத்துவிட்ட ஒரு நிறைவு. 'ஹரஹர மகா தேவ' என்று உற்சாகமாக கோஷமிடத் தொடங்கிய அவர்கள், 'ஜெய ஜெய சங்கர ஹரஹர சங்கர' என்றும் கோஷமிட, அந்த உதயநேரம் ஒரு உத்தம நேரமாக, உத்பாதம் தீர்க்கும் நேரமாக பலர் வரையில் ஆகிவிட்டது.

கோபுரம் முன் பல மடாதிபதிகள் காத்திருந்து, பெரியவரே முன் நிற்க வேண்டினர். தன் முக்கியத்துவம் குறைவுபடும் என்று கருதிய மடாதிபதியால், எதனாலோ நிகழ்வில் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால் நிகழ்வுதான் பெரிது எனக் கருதிய பெரியவரோ, ஆத்மார்த்த விருப்பம் கொண்ட ஒரு கூட்டத்தோடு வந்து சேர்ந்துவிட்டார்.

கும்பாபிஷேகமும் இனிது ஈடேறியது. சுந்தரத்துக்குள், நடப்பது கனவா நனவா என்கிற கேள்வி. ஆனந்தக் கண்ணீர் அவர் கண்களில் பெருகி ஓடியது. அடி மனதில் இருந்து எழும்பும் பவித்ரமான ஆசைகள் நிச்சயம் ஈடேறும் என்பதை அனுபவப்பூர்வமாகப் புரிந்துகொண்டார்.

மதுரை மீனாட்சி ஆலயத்தில், இன்றும் ஆத்மார்த்திகளுக்கு ஆனந்த அனுபவம்தான்! எனக்கும் ஏராளமான அனுபவங்கள்... அதில் ஒரு அனுபவத்தை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1995 வருடம்! நான் எழுத்துத் துறையில் மெல்ல மேலேறிக் கொண்டிருந்த காலகட்டம். ஒரு பெரிய வாய்ப்பு ஒரு இதழில் கிடைத்தது. ஆனால், அது கைவிட்டுப் போகும் ஒரு ஆபத்தும் அதற்கான போட்டியும் ஏற்பட்டிருந்தது. அந்த வாய்ப்பை இழக்க நான் விரும்பவில்லை. போட்டியைச் சமாளிக்கும் சக்தியும் என்னிடம் இல்லை. என் மனைவியோடு நேராக மீனாட்சி முன் சென்று நின்று மனதுக்குள் கதறினேன். அப்போது நேர்த்திக்கடனாக, அந்தத் தொடருக்கான சன்மானத்தை அப்படியே உண்டியலில் போட்டு விடுவதாக வேண்டிக் கொண்டேன். என் மனைவிக்கும் இது தெரியும். அதன்பின் என் பிரார்த்தனை பலித்து அந்த இதழில் என் தொடரும் வெளியானது. வெளியானதோடு ஒரு பெரும் வெற்றியையும் பெற்றது. முடிவில், சன்மானமாக பத்தாயிரம் ரூபாயை எனக்கு வழங்கினார்கள். அன்று, அது ஒரு நல்ல தொகை.

பணம் வந்துவிட்டது. ஆனால், எனக்குத்தான் கோயில் உண்டியலில் அதைப் போட மனம் வரவில்லை. ஒரு காசா, இரு காசா? பத்தாயிரம்! அடுத்து, மனதுக்குள் ஏராளமான சமாதானங்கள்...

‘நாம் போட்டா அன்னைக்கு விடியப் போகிறது? உலகத்துக்கே படியளப்பவள் அவள். அவளுக்குப் போய் நாம் அளப்பதா? உணர்ச்சி மேலீட்டில் மேற்கொள்ளும் முடிவுகளை அன்னை பெரிதாகக் கருதமாட்டாள்...’

இப்படி நான் சமாதானமாகக் கூறிக்கொண்டு, கோயிலுக்குப் போன இடத்தில் பணத்தை உண்டியலில் போடவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த என் மனைவி, ஒரு கட்டத்தில் என் கையிலிருந்த பணக்கட்டைப் பிடுங்கி நொடிப் பொழுதுக்குள் உண்டியலுக்குள் போட்டு விட்டாள். எனக்கு, தூக்கிவாரிப் போட்டது. கிட்டத்தட்ட எட்டுமாத உழைப்பு! இப்படி தூக்கிப் போட்டு விட்டாயே... போட்டது போட்டாய்! பாதியைப் போட்டிருக்கக் கூடாதா?’ என் மனைவியோடு

நான் மல்லு கட்ட, அவள் அமரிக்கையாக பதில் கூறினாள்.

“இதோ பாருங்கோ... சொன்னா சொன்னபடி நடத்துக்கணும். இந்த பாதி, கால் சமாசாரமெல்லாம் தப்பு. அவளுக்கு நம்ம கஷ்டம் தெரியும். அவ ஒண்ணும் தான் வெச்சுக்கமாட்டா. நீங்க வேணா பாருங்கோ, ஒண்ணுக்கு மூணா அவ திருப்பித் தருவா. இங்க பணம் கணக்கு கிடையாது. மாறாத குணம் தான்...” - என்று என்னை ஒரு பிடிபிடித்தாள். என் மனது சமாதானம் ஆகவில்லை.

ஒரு ஆழமான பக்தி இருந்தும், இப்படிப்பட்ட குறுகுறுப்புகளும் அப்போது என்னிடம் இருந்தன. மிகச் சரியாக ஒரு வாரம் சென்ற நிலையில், இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் அவர்கள் புதல்வர் கைலாசத்திடம் இருந்து அழைப்பு. சென்று சந்தித்தேன். அந்தத் தொடரை டி.வி. தொடராக செய்ய விரும்புவதாகக் கூறி, என்னையே திரைக்கதை வசனம் எழுதவும் கேட்டுக் கொண்டார். அப்படியே அட்வான்சாக முப்பதாயிரம் ரூபாய்க்கான ஒரு செக்கை கே. பாலசந்தர் கையாலேயே தரவும் வைத்தார். அந்த நொடி என் மனைவி சொன்ன சொல்தான் காதில் ஒலித்தது. ‘ஒண்ணுக்கு மூணா அவ திருப்பித் தருவா’ என்று அவள் சொன்னது எத்தனை சரி! அதன்பின் அந்தத் தொடர் தொலைக்காட்சியில் வெளிப்பட்டு, பத்திரிகைத் தொடராக வந்த போது அடைந்த புகழைவிட பல மடங்கு புகழை அடைந்தது. அதுதான் ‘மர்ம தேசம்’. இன்று வரை, எனக்கான ஒரு முகவரியாக மர்மதேசம் விளங்கி வருகிறது.

இதுபோல பல அனுபவங்களை எனக்களித்த அந்தத் தாய், என்னை மிகவே பக்குவப்படுத்தி வருகிறாள் என்பதுதான் அடிப்படையான உண்மை. அந்தச் சம்பவத்துக்குப் பின் எப்பாடுபட்டாவது சொல்லில் நிற்க நான் முயன்று வருகிறேன். தவறோ சரியோ, சொன்னபடி நடந்துவிட வேண்டும். மாறக் கூடாது. இதுதான் இன்று என் கொள்கை. ஒருபுறம் மீனாட்சி கருணை; மறுபுறம் பெரியவர் மூட்டிய அறிவுத் தெளிவு! இந்த எழுத்தாளன் மெருகேறக் கேட்க வேண்டுமா? திரும்பவும் பெரியவரிடம் வருகிறேன்.

அன்று சாமான்யர்களுக்காக குளத்தங்கரைக்கே வந்த பெரியவரைப் பற்றி சொன்னேன். இதே பெரியவர் இதேபோல ஒரு காலை வேளையில் ஒரு நீரோடையில் ஒரு வயற்காட்டுக்குள் நீராடும்போது நடந்த ஒரு சம்பவம் அசாதாரணமானது. இங்கே பெரியவரை வந்து சந்தித் தவர் ஒரு அசாதாரண மனிதர். தமிழக மக்களின் இதயங்களில் அசைக்க முடியாத இடத்தைப் பிடித்திருப்பவர். அப்போது பெரியவர்

தனது ஊரான கலவையில் முகாமிட்டிருந்தார். அனேகமாக வருடம் 1970 ஆக இருக்கலாம். அவரை அந்த அசாதாரணமான மனிதர் தரிசிக்க விரும்பினார். தன் விருப்பத்தை ஒரு பெரும் பத்திரிகை ஆசிரியரிடம் கூறவே, அந்த பத்திரிகை ஆசிரியர் பெரியவரின் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து கலவைக்கும் அழைத்துச் சென்றுவிட்டார்.

காலை மூன்று மணிக்குக் கிளம்பி பொழுது விடிவதற்குள் கலவையை அடைந்து பெரியவரை தரிசித்துவிட வேண்டும் என்பது திட்டம். பொழுது விடிந்துவிட்டாலோ, அந்த அசாதாரண மனிதரைப் பார்க்க கூட்டம் கூடிவிடும். அது மட்டுமல்ல; அவரது எதிரிகளும் விமர்சிக்க ஒரு இடம் ஏற்பட்டுவிடும். எனவே, பொழுது விடிவற்குள் கலவைக்குச் சென்றுவிட்டனர். ஆனால், பெரியவர் தன் கடமை நிமித்தம் நீராட வயலை ஒட்டி ஒடும் நீரோடைக்குச் சென்று விட்டிருந்தார். உடனே பத்திரிகை ஆசிரியர் பெரியவரிடம் தகவல் சொல்லி பெரியவரை அழைத்து வர வயற்காட்டில் இறங்கி ஓடினார். அதை காரில் இருந்து பார்த்தபடியே இருந்த அசாதாரண மனிதரும் காரில் இருந்தவாறே அவரைப் பின் தொடர்ந்தார்.

பத்திரிகை ஆசிரியர் பெரியவர் நீராடும் இடத்தை அடைந்து விஷயத்தைக் கூறும்போதே, பின்னாலேயே அசாதாரண மனிதரும் காரை விட்டு இறங்கி கும்பிட்டபடியே பெரியவரை நோக்கி நடந்தார். பொழுதும் விடிந்து விட்டது. அங்கேயே ஒரு 20 நிமிட நேரம் இருவரும் மனம்விட்டுப் பேசிட, மற்றவர்கள் ஒதுங்கிக் கொண்டனர். அதன் பின் அசாதாரண மனிதர் கண்கள் பனிக்க விடைபெற்றுக் கொண்டார். அவர் யார்? அப்படி என்ன பேசினார்கள்?

35

அவர் வேறு யாரோ இல்லை. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.தான் அவரை மகாபெரியவாளிடம் அழைத்து வந்த பத்திரிகையாளர் மணியன்! எம்.ஜி.ஆர். பற்றி எண்ணும்போது, அவரது அரசியல் சார்புகளும் கடவுள் நம்பிக்கைக்கு எதிரான சிந்தனைகளும் நமக்குள் எழும். காரணம், அவர் சார்ந்திருந்த கட்சி, கடவுள் நம்பிக்கையை பெரிதும் விமர்சனம் செய்ததும் ஆன்மீக நம்பிக்கைக்கு எதிராக விளங்கி வந்ததும்தான்!

ஒரு அரசியல்வாதியாக, சமூக நலனுக்காக எதைச் செய்ய வேண்டுமோ அதை மட்டும் செய்பவராக இருந்தார் எம்.ஜி.ஆர். அதே சமயம் ஆன்மீக

விஷயத்தில், உண்மையான ஆன்மீகவாதிகளிடம் அவருக்கு ஒரு போதும் பிணக்கு ஏற்பட்டதே இல்லை. அதனால் தான் திருமுருக கிருபானந்த வாரியார், முக்கூர் லட்சுமி நரசிம்மாச்சாரியார் போன்றோருடன் அவரால் நட்புபாராட்டவும் அவர்களைப் போற்றவும் முடிந்தது. இன்னும் சொல்லப்போனால், 'பொன்மனச் செம்மல்' என்கிற அவருக்கான பட்டத்தை வழங்கியவரே வாரியார் சுவாமிகள்தான். எம்.ஜி.ஆர்., தாய்ப்பற்று மிகுந்தவர். ஏழைகளுக்கு மிகவும் இரங்குபவர், பசியின் கொடுமை தெரிந்தவர், புரிந்தவர்! அதனாலேயே காமராஜரின் சத்துணவுத் திட்டத்தை தன் ஆட்சியில் விஸ்தரித்து மிகச் சிறப்பாக அதை நடைமுறைப்படுத்தினார்.

'வீட்டில் உலை வைத்துவிட்டு, அரிசிக்காக நம்பி எம்.ஜி.ஆரைப் பார்க்கச் செல்லலாம். மகராஜன் நிச்சயம் படியளப்பான்' - என்று திரையுலகைச் சேர்ந்த பலர் மிக நெகிழ்வுடன் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அவரது நடிப்பு மற்றும் சில அரசியல் சித்தாந்த கருத்துகளில் மாறுபாடு உடையவர்கள் கூட, அவர் தர்மத்தைப் பார்த்து வியந்தது உண்டு. அதை விமர்சனம் செய்ததில்லை.

எனக்குத் தெரிந்து அன்றைய காலகட்டத்தில் ஒரு தனி மனிதனின் மிக உச்சபட்சமான நல்ல பெயருக்கும் புகழுக்கும் எம்.ஜி.ஆரை விட பெரிய உதாரணமே இல்லை என்பேன். இப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி பெரியவரின் ஞான திருஷ்டிக்குத்தானா தெரியாது?

வாரியார் பட்டமளித்தது போல, எம்.ஜி.ஆருக்கு நிஜமாலுமே பொன்மனம், அந்தப் பொன் மனம் தான் பெரியவரைத் தேடிவந்து ஒரு காலை வேளையில் ஓடக் கரையிலேயே அமர்ந்துகொண்டு உரையாடியது.

என்ன பேசிக்கொண்டார்கள் என்பதெல்லாம், அவர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. என்றாலும், இன்றும் அந்த ஓடக்கரைப் பக்கம் செல்பவர்கள் அந்த இரு ஆத்மாக்களையும் நினைத்து சிலிர்த்துப் போகின்றனர். பத்திரிகையாளரான மணியனும் அன்று பூரித்துப் போனார். பத்திரிகையாளர்களில் மணியன் ஒரு அதிசயம். இவரைப் போல உலகம் சுற்றிய ஒருவரைப் பார்க்கவே முடியாது. சுற்றுவது மட்டுமல்ல; அதை ஒரு அழகான பயணக் கட்டுரையாகவும் ஆக்கி தொடராக எழுதி விடுவார். மிகுந்த ஆன்மீக ஈடுபாடும் உடையவர். குறிப்பாக, பெரியவரிடம் அடாத பக்தி. அவரைப் போலவே பெரியவரிடம் பெரும் பக்தியும் பற்றுதலும் கலைமகள் என்னும் இலக்கிய மாத இதழின் ஆசிரியராகத் திகழ்ந்த வாகீச கலாநிதி

கி.வா.ஜகன்னாதன் அவர்களுக்கும் இருந்தது.

கி.வா.ஜ., ஒரு நல்ல சொற்பொழிவாளர். சிலேடையாகப் பேசுவதில் இவருக்கு இணை இன்று வரை ஒருவர் கூட இல்லை. நான் செய்த புண்ணியம், என் குருநாதராக அவர் வாய்த்தார். கலைமகளில்தான் ஒரு எழுத்தாளனாக என் எழுத்துப் பயணம் தொடங்கியது. 1978ம் வருடம். எனக்கு இருபது வயது. கலைமகளில் குறுநாவல் போட்டி ஒன்றை அறிவித்திருந்தார்கள். ஒரு வேகத்தில் நானும் பங்கு கொண்டேன். பேப்பர் வாங்கி கதையை எழுத கையில் காசு இல்லை. ரீகல் என்னும் சோப்பு விளம்பர நோட்டீசின் பின்புறத்தில், நான் அந்தக் குறுநாவலை எழுதினேன். கிட்டத்தட்ட எண்ணூறு நாவல்கள் போட்டியில் பங்குகொண்டதில், எனக்கே முதல் பரிசு கிடைத்தது. அது நான் எழுதிய முதல் கதை. என் முதல் கதைக்கே முதல் பரிசு. அதுவும் கலைமகளிடம்! நான் திக்குமுக்காடிப் போனேன். பின், கலைமகளில் இருந்து என் புகைப்படம் கேட்டு கடிதம் வந்தது. எனக்கென்று ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள நான் முதன்முதலில் ஸ்டுடியோவுக்குச் சென்றது அப்போதுதான். நான் அனுப்பிய புகைப்படத்தைப் பார்த்து விட்டு கி.வா.ஜ. வியந்தார். 'இவ்வளவு இளையவரா முதல் பரிசு பெற்றவர்?' என்று கேட்டு ஆச்சரியப்பட்டார்.

அடுத்து அவர் சேலம் கம்பன் கழக நிகழ்வுக்கு வந்தபோது நேரில் சந்தித்தேன். அது முதல் அவரது சீடனாக என்னை வரித்துக் கொண்டேன். தொடர்ந்து என் கதைகளை கலை மகளில் போட்டு உற்சாகப்படுத்தினார். அவருக்கு நான் எழுதிய கடிதங்களில் ஏதாவது ஒற்றுப் பிழைகள் இருந்தால், அதை பேனாவால் வட்டம் போட்டு பத்திரமாக வைத்துக் கொள்வார். நான் அவரைச் சந்திக்கும்போது அந்தக் கடிதத்தை எடுத்துக்காட்டி இங்கே இப்படி எழுதக் கூடாது. உணர்ச்சிக்கு இது சரி. ஆனால், இலக்கணத்துக்கு இது தவறு' என்று கூறி திருத்துவார். அதேபோல் அவர் இல்லத்தில் சாப்பிடாமல் அனுப்பமாட்டார்.

சேலத்தில் நான் வாழ்ந்த நாளில் என் இல்லத்துக்கு வந்தும் விருந்துண்டிருக்கிறார். என் தங்கை அவருக்கு இட்லியை இலையில் பரிமாறியபோது, 'என்னம்மா தலைல வைக்க வேண்டியதை இலைல வைக்கறே?' என்று கேட்டு திகைக்க வைத்தார். பிறகுதான் புரிந்தது, இட்லி மல்லிகைப்பூ போல் இருந்ததால் அவர் அப்படிச் சொன்னாரென்று! இன்னும் அவரை நினைக்க இது போல ஆனந்தமான எண்ணங்கள் எவ்வளவோ நினைவில் அலைமோதும்.

பரம முருகபக்தரான கி.வா.ஜ., ஒருமுறை பெரியவரைச் சந்திக்க நேர்ந்தது. நல்ல சொற்பொழிவாளரான அவரிடம் பெரியவர் மிக விஸ்ராந்தியாகவே பேசுவார். அப்படித்தான் அன்றும் பேசினார்:

‘திருப்பதி முருகன் தலமா? திருமாலின் தலமா?’ என்பதுதான் அன்று பெரியவர் கி.வா.ஜ.விடம் கேட்ட கேள்வி.

‘இரண்டுக்குமே அங்கே ஆதாரம் உண்டு’ என்றார் கி.வா.ஜ.’

‘எப்படி?’ என்று கேட்டார் பெரியவர்.

‘வடநாட்டார் பாலாஜி என்று அந்த ஆண்டவனை அழைக்கிறார்கள். பாலனாக இருப்பவன் முருகன் தான். அடுத்து, வெள்ளிதோறும் திருமலையில் இன்றும் வில்வத்தால் அர்ச்சனை நடக்கிறது. மேலும், மலைகளுக்கெல்லாம் தலைவன் முருகன்தான் என்பது வழக்கு அவன் குறிஞ்சிநிலக் கடவுளல்லவா?’ என்றார் கி.வா.ஜ..

‘சரி! இதில் உன்னுடைய கருத்து என்ன?’ - என்று கேட்டார் பெரியவர்.

‘பழங்காலத்தில் அங்கே முருகன் கோயிலும், திருமால் கோயிலும் இருந்திருக்க வேண்டும். திருமால் கோயிலுக்கு சிறப்பு வர வர, முருகன் கோயில் மறைந்திருக்க வேண்டும். இதுதான் என் கருத்து’ என்றார் கி.வா.ஜ.

ஆனால், பெரியவர் தன் கருத்தாகச் சொன்னது என்ன தெரியுமா?

‘ஏதோ ஒரு புராணத்தில் அங்கே இரண்டு சக்திகள் இருப்பதாகப் படித்திருக்கிறேன். ஒன்று கௌமாரி; இன்னொன்று வைஷ்ணவி. அதனால்தான் அந்த கோயில் மதில்சுவரில் சிங்க வாகனம் உள்ளது!

திருமால் ஆலயம்தான் என்றால் கருட வாகனம் இருக்கும். முருகன் கோயிலாக இருந்தால் மயில் வாகனம் இருக்கும். ஆனால், சக்திக்கு வாகனமான சிம்மம்தான் அங்கே உள்ளது. தொண்டை மண்டலத்தில், சக்தி க்ஷேத்திரத்தில் சிம்மம்தான் இருக்கும். ஒரு காலத்தில் திருப்பதி, தமிழ்நாட்டின் தொண்டை மண்டலத்தோடு தான் சேர்ந்திருந்தது. பின், அரசியல் காரணங்களால் மொழிவாரியாக மாநிலம் பிரிக்கப்பட்டதில் ஆந்திராவோடு சேர்ந்துவிட்டது. இரண்டு சக்திகளுக்கான கோயிலாக அது இருப்பதனால் - முருகன் கோயில் என்றும், திருமால் கோயில் என்றும் சொல்வது பொருந்துகிறது’ என்றார்.

பிறகு அங்கு இருக்கும் மடத்துச் சிப்பந்தியிடம் ‘எனக்கு திருப்பதியில்

கொடுத்த பரிவட்டம் உள்ளே இருக்கிறது. அதைக் கொண்டுவா' என்று பணித்தார். அவரும் அந்த பரிவட்ட ஆடையைக் கொண்டு வந்தார். அதை கி.வா.ஜ.விடம் கொடுத்து அளக்கச் சொன்னார். கி.வா.ஜ.வுக்கோ ஒரே பரவசம். ஏனென்றால், அந்த பரிவட்டம் திருப்பதி பெருமாளுக்கு சாத்தியபின் பெரியவருக்கும் சாத்தப்பட்டது. இப்படி இருவர் திருமேனியைத் தழுவியதை அவர் தழுவும்போது சிலிர்ப்பு ஏற்படத்தானே செய்யும்?

கி.வா.ஜ.வும் அதை அளந்து பார்த்தார். சரியாக முப்பத்தி ஆறு முழங்கள் இருந்தது. இதுபோன்ற பரிவட்ட ஆடைகளை திருப்பதி தேவஸ்தானத்துக்கென்றே பிரத்யேகமாக தறிபோட்டு நெய்வது வழக்கம். இதற்கென்றே நெசவாள கிராமம் ஒன்று உள்ளது. அவர்களுக்கும் காலம் காலமாக முப்பத்தாறு முழம்தான் கணக்கு. கி.வா.ஜ.வும் முப்பத்தாறு முழம் இருப்பதைக் கூறினார். உடனேயே பெரியவர், 'நம்மவர்களில் பெண்கள் பதினெட்டு முழம் கட்டுகிறார்கள். இரண்டு பெண்களுக்கு என்றால் முப்பத்தி ஆறு தானே?' என்று கேட்டார். அதாவது வைஷ்ணவி, கௌமாரி என்னும் கணக்கில்... சமத்காரமான அந்த கருத்தும் கேள்வியும் கி.வா.ஜ.வுக்கு பிறகே புரிந்தது. அதேசமயம் திருமலை எப்படி திருமாலின் கோயிலாக பெரும்புகழை அடைந்தது, ஏன் சக்தி தலமாக தொடரவில்லை என்கிற கேள்வியும் எழுந்தது. பெரியவர் அதற்கும் பதிலைச் சொன்னார்:

'இன்றும் இரண்டு சக்திகளின் செயல்பாடுகளும் அங்கே அனுக்கிரகமாக மாறி வெளிப்பட்டபடிதான் உள்ளது. கௌமார சக்திக்கு முருகனையும், வைஷ்ணவிக்கு திருமாலையும் அடிப்படையாகச் சொல்வார்கள். இதில் இருவருக்கும் மாமன் மருமகன் உறவு முறை உண்டு. அவ்வகையில் மாமனே பெரியவர் என்பதால், மருமகன் மாமனுக்குள் ஐக்கியமாகி விட்டார் எனலாம். இது ஒரு கோணம்.

அடுத்து, காத்து ரட்சிப்பதில் திருமாலே முன் நிற்பவர். 'சர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்பது வழக்கு. சித்தாந்தப்படி அவனே எல்லாமுமானவன். அவனுக்குள் எல்லாமே அடக்கம். அடுத்து, அது ஏழாவதாக உள்ள மலைமேல் உள்ள ஆலயம்! அதில் ஆறு சுடர்களில் மலர்ந்த ஆறுமுகன் அடங்கிவிடுகிறான் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.'

இப்படி திருப்பதி குறித்து பல ரசமான எண்ணங்கள்...

இதைச் சொல்லி ஒரு வேற்றுமையைச் சிந்திப்பது பெரியவர்

எண்ணமில்லை. சர்ச்சையை உருவாக்குவது அவர் நோக்கமில்லை. கி.வா.ஜ., ஒரு தமிழாய்ந்த அறிஞர். இதிகாச புராண ஆராய்ச்சி உடையவர். அவரோடு உரை யாடும்போது அவருக்குப் பயன்தரும் விதமாயும், ஆழ்ந்த சிந்தனைகளோடும் உரையாடுவதே பெரியவர் நோக்கம். இம்மட்டில் பெரியவர் வழி பொய்கையாழ்வாரின் வழி என்றால் அது மிகை கிடையாது.

‘பொன் திகழும் மேனி புரிசடை அப்புண்ணியனும்

நின்றுலகம் தாய நெடுமாலும் - என்றும்

இருவர் அங்கத்தால் திரிவரேனும் ஒருவன்

ஒருவன் அங்கத்து என்றும் உளன்’

- என்னும் பொய்கையார் கருத்தே பெரியவருக்கும் ஒப்பான கருத்து. திருமலை குறித்து இப்படி ஒரு ஆய்வுக்குரிய சிந்தனையை கி.வா.ஜ.வின் ‘தனிவெளி’ எனும் நூலில் காணலாம்.

வெங்கடேச மகாத்மியமும் திருமலை புராணமும் அது வைணவத் தலம் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றன. எதுவாய் இருந்தால் என்ன? இன்று அந்த திருமலையும் வேங்கடவனுமே உலகின் முதல் அதிசயமாவர் எந்த ஒரு கண்டத்திலும், அங்குள்ள எந்த ஒரு நாட்டிலும் இதுபோல் ஒரு அதிசயமில்லை. ஒரு நாளின் ஒரு சில மணி நேரங்கள் நீங்கலாக, பக்தியோடு ஜனத்திரள் அந்த மலையில் தரிசித்தபடியே இருப்பதும், உண்டியலில் பணம் போட வரிசையில் காத்திருப்பதும் உலக அதிசயமல்லாமல் வேறென்ன?

இத்தனை ஜனத்திரளுக்கு இடையேயும் அந்தத் தலம் துளியும் பொலிவை இழக்காமல், தினந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கும். தன்னைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கும். அதற்குக் காரணமான சக்தியை எண்ணினால் பிரமிப்பாக அல்லவா உள்ளது?

அந்த மலையில் எதுதான் குறை என்று கேட்டபோது, வேங்கடவனை கண்குளிர நெடுநேரம் தரிசிக்க முடியவில்லை என்பதுதான் குறை என்ற பதிலே கிடைத்தது. ஆம்... திரும்பிய பக்கமெல்லாம் அன்னதானம்! நம்பிக்கையுள்ள பக்தர் கூட்டம், கோவிந்தா கோஷம், இதமான பருவச் சூழ்நிலை என்று திருமலையை நினைக்கும்போதே பரவசம் தருவதை என்னென்று சொல்ல...?

இந்தத் திருமலை ஸ்ரீனிவாசன், பெரியவர் வடிவில் காட்சி தந்த ஒரு அரிய சம்பவமும் நடந்துள்ளது. அது..?

36

ஒரு சன்னியாசியின் த்ரிதண்டம் காணாமல் போகிறது என்பதைக் கேள்விப்படும் போதே நமக்கு வியப்பாக இருக்கும். அது ஒன்றும் விலை மதிப்புள்ளதல்ல... அதாவது, லௌகீகப் பார்வையில்! ஆனால், பக்தியுடன் பார்த்தால் அதற்கு விலை மதிப்பே கிடையாது. இதுதான் யதார்த்தம்! கிடைப்பதை எல்லாம் அபகரிக்க நினைப்பவர்கள் கூட சன்னியாசியிடம் கை வைக்க அஞ்சுவார்கள். இருந்தும் அது காணாமல் போனதுதான் பெரிய விந்தை. இந்த விந்தைக்குப் பின்னாலே ஒரு நல்ல விஷயமும் இருந்ததுதான் ஆச்சரியம்.

அந்த சன்னியாசி பெரியவரை தரிசனம் பண்ண வந்தபோது, பெரியவருக்கு சரியான காய்ச்சல் பக்தர்களுக்குத் தான் பெரியவரைப் பிடிக்க வேண்டுமா? காய்ச்சல், குளிருக்கும் கூட பெரியவரை மிகப் பிடித்துவிட்டது போலும். உடம்பு எவ்வளவு படுத்தினாலும் பெரியவர் அதைப் பொருட்படுத்த மாட்டார்.

அதிகபட்சம் கஷாயம் வைத்து சாப்பிடுவார். அவ்வளவுதான்! இரண்டொரு நாளில் தானாகச் சரியாகிவிடும். ஆனால், அந்த சமயத்தில் அந்தக் காய்ச்சல் அவரை விடுவதாக இல்லை. உடம்பெல்லாமும் வலி எடுக்கத் தொடங்கிவிட்டது. இந்த நிலையில் அவருக்கு சேவை செய்ய எவ்வளவோ பேர் தயாராக இருந்தாலும் அவரைத் தீண்டி எதையும் செய்ய முடியாது. சன்னியாசிகளுக்குண்டான ஆசாரத்தில் - எதன் மேலும், எவர் மேலும் படாமல் இருப்பது என்பது முக்கியமான ஒன்றாகும். பட்டுவிட்டால், தீட்டு ஏற்பட்டு பின் சுத்தப்படுத்திக் கொள்ள மிகவே பிரயத்தனப்பட வேண்டும்.

இந்த ஆசாரமான விஷயத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு, சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட சாரார் மேல் காட்டப்பட்ட தீண்டாமைக்கும் நிறைய வேற்றுமை உண்டு. நுட்பமாகச் சிந்தித்து உணர வேண்டிய ஒரு விஷயம் இது.

நம் உடல் என்பது கண்ணுக்குத் தெரிவது மட்டுமில்லை. நம் ஊனக் கண்ணுக்குப் புலனாகாத ஒரு அலை இயக்கம் நம் உடம்பைச் சுற்றி உள்ளது. அதை ஆங்கிலத்தில் 'ஆரா' என்பார்கள். அதாவது, ஒருவித ஒளி வட்டம். இந்த ஒளிவட்டம் ஆளுக்கு ஆள் மாறுபடும்.

ஆரோக்கியமான உடம்போடு சாந்தமான எண்ணங்களும் கொண்டு அமைதியான மனநிலையில் இருக்கும்போது ஒருவித ஆரா. மனது படபடப்புக்கு ஆளாகும்போது வேறுவித ஆரா, உடம்பில் நோய் ஏதாவது இருந்தால் அதன் காரணமாக ஒருவித ஆரா என்று அதன் தன்மை மாறி யிருக்கும். மிக மிக சக்தி வாய்ந்த கேமராக்களில் படம் எடுத்து இதை நாம் காணலாம். சுருக்கமாகச் சொன்னால் இந்த ஒளிவட்டம் நம் செயல்பாட்டுக்கு ஏற்ப மாறியபடியே இருக்கும்.

சேலத்தில் டாக்டர் பாலு என்ற ஒரு அன்பர் இருக்கிறார். அக்குபஞ்சர் வைத்திய முறையில் வியாதிகளை விரட்டுவதில் சூரர். இவரைச் சந்தித்த சமயம் என் ஆராவைப் படம்பிடித்துக் காட்டினார். பின், என் சட்டைப்பையில் செல்போனை வைத்த நிலையில் என் ஆராவை படம் பிடித்தார். அதை எடுத்துவிட்டும் படம் பிடித்தார். செல்போனோடு என்னை எடுத்த புகைப்படத்தின் ஆராவில் செந்நிறம் மண்டிக் கிடந்தது. செல்போனை எடுத்துவிட்டு எடுத்த படத்தில் இளம் மஞ்சள் நிறம் மட்டும் இருந்தது. 'துறவிகளைப் பரிசோதித்தபோது அவர்கள் பின்னே தூய்மையான வெண்ணிறம் மட்டுமே தெரிகிறது. அவ்வாறு இருப்பவர்களுடன் நாம் அருகில் இருந்தாலே நம் ஆராவும் தூய்மையாகி, பின் உடம்பில் ரத்த ஓட்டம், இதயத் துடிப்பு, நாடித்துடிப்பு என்று ஒவ்வொன்றும் சீராகி ஆரோக்கியமாகத் திகழ்வோம்' என்றார்.

குறிப்பாக, சாவு வீடுகளுக்குச் செல்லும்போது அங்கே பிணத்திடம் மட்டுமல்ல; சுற்றி இருப்பவர்களின் ஆராக்களும் பொலிவில்லாமல் மிக நெகடிவ்வாக இருந்து, நாம் அங்கிருப்பதால் நம்மையும் அது தொற்றிக் கொள்கிறது.

வீடு திரும்பி தலைக்கு தண்ணீர் விட்டுக் குளிப்பது, வாய்விட்டு அழுது தீர்த்து விடுவது, ஒப்பாரி போன்ற செயல்களால் நாம் நம் மீது படியும் எதிர்மறை கதிர்வீச்சைக் கட்டுப்படுத்துகிறோம். பின் நம மனம் சகஜமாகத் தொடங்கவும் நம் ஆரா மாறிவிடுகிறது. எனவே, சுற்றுச் சூழலுக்கும் நம் ஆராவுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரிந்தது. இதனாலேயே கோயிலுக்குப் போய் வந்தால் ஒரு லேசான மனநிலை நிலவுவதற்கான காரணமும் புரிகிறதல்லவா!

எனவேதான், வீட்டுக்குள் நுழையும்முன் கால்களைக் கழுவிக் கொள்வதும், ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது குளிப்பதும், அழுக்குத் துணிகள் மேல் படாமலும், சுத்தமான துணிகளை உடுத்துவது என்பதும் நம் பெரியோர்களால் வற்புறுத்தப்பட்டது.

நாம் இந்த விஷயத்தில் தூய்மையாக இருக்க இருக்க முகத்தில் ஒரு பொலிவு, எண்ணத்தில் ஒரு சாந்தப் போன்றவையும் ஏற்படும். வாழ்வில் தெளிவான திடமான முடிவுகள் எடுப்பதும் சகஜமாகும். இது போதுமே, ஒரு நல் வாழ்வு வாழ்ந்திட!

நமக்கே இப்படி எனும்போது, துறவி இந்த விஷயத்தில் நெருப்பைப் போல தீண்டமுடியாதவராக இருந்தாலே, அவரால் தன் தவசக்தியை நல்ல விதமாகப் பேணி காக்க முடியும். இதை வைத்துத்தான் அவர்களுக்கு ஆசாரம் கட்டாயம் என்றானது. இப்போது நாம் பெரியவரிடம் திரும்ப வருவோம்.

பெரியவரைத் தொட்டுத் தூக்கி, அவர் உடம்பைத் துவட்டி அவருக்கு உதவ எல்லோர் மனமும் துடித்தபோதுதான், த்ரிதண்டத்தை இழந்துவிட்ட சன்னியாசி கடவுளாலேயே அனுப்பப்பட்டவர்போல வந்து சேர்ந்தார். சன்னியாசிக்கு சன்னியாசி, ஸ்பரிசம் படுவதில் பாதகமில்லை. அவர் வரவும், மடத்தில் உள்ளோர் மகிழ்ந்தனர். பெரியவர் அவருக்கு த்ரிதண்டத்தை வழங்கி, அவர் தன்னைத் தீண்ட வழி செய்தார். அவரும் அவருக்கு உதவிட, பெரியவர் வெகு சீக்கிரம் குணமாகி எழுந்தார். அதன்பின் சில காலம் அந்த சன்னியாசி பெரியவருடன் தான் இருந்தார்.

அந்த வேளையில் திருப்பதிக்கு யாத்திரை செல்லவும் நேர்ந்தது. பெரியவர் எப்போதும் விறுவிறுவென்று நடக்கக் கூடியவர். ஒடிசலான அவர் உடலமைப்பும் அவரது உணவுக் கட்டுப்பாடும் அவரை எப்போதும் சுறுசுறுப்பாகவே வைத்திருந்தது தான் காரணம். அப்படிச் சென்ற பெரியவர், பெருமாளின் திருச்சன்னிதிக்குள்ளும் விறுவிறுவென்று சென்று விட்டார். அங்கே அவருக்கு உரிய மரியாதை அளிக்கப்பட்டது. அவரும் ஏகாந்தமாக பெருமாளை எப்பொழுதும் தான் பிறர் கேட்கும்படியாக உச்சரிக்கும் நாராயணா எனும் நாமத்துக்குரிய விஷ்ணு பதியை மனம் நெகிழ வணங்கிவிட்டு வெளியே வரும் போது தான் அந்த த்ரிதண்ட சன்னியாசியின் ஞாபகம் வந்தது.

‘அடடா! அவரை விட்டுவிட்டு வேகமாக வந்து விட்டோமே...’ என்று தோன்றவே, அவரைத் தேடியபடி வெளியே வந்தார். வெளியே அந்த சன்னியாசியும் வந்து கொண்டிருந்தார். அப்படி வந்தவர், பெரியவரைப் பார்த்த மாத்திரத்தில் அப்படியே சிலிர்த்துப் போய்விட்டார்.

பெரியவர் பெரியவராகக் காட்சி தராமல், அந்த வேங்கடவனாகவே சங்கு சக்ரதாரியாகக் காட்சியளித்தது தான் காரணம்! அதன்பின்

பெரியவரே அவரை உள்ளே போய் சேவிதம் பண்ணச் சொல்லியும் அவர் கேட்கவில்லை.

‘ஆகிவிட்டது... தரிசனம் ஆகிவிட்டது... திவ்ய மங்கள ரூபமாக உயிர்த்துடிப்புடன் தரிசனம் செய்துவிட்ட நிலையில் உள்சென்று ஸ்தூலமான அந்த சிலாரூப தரிசனம் காண எனக்கு இப்போது தேவையில்லை!’ என்று கூறிவிட்டார். அவருக்கு ஏதோ பிரமை... அவர் கண்களுக்கு அப்படித் தெரிந்திருக்கிறது என்று இதற்கொரு அர்த்தம் கற்பிக்கலாம் தான். ஆனால், பிரமை எல்லாம் நம் போன்றோர்களுக்குத்தான்! சன்னியாசிகள் நம்மைப்போல உலக ருசிகளில் சிக்கி தங்களை இழந்தவர்கள் அல்ல; உலக ருசிகளை எல்லாம் வென்று தங்களை அடிமைப்படுத்தி விடாமல் செய்தவர்கள். பெரியவரின் ஆசாரத்தைத் தொடர்ந்து ஆகாம் பற்றி அறிய நேர்ந்தால்தான் நமக்கு அவரின் உள்ளொளிக்கான காரணமும் புரியும்.

தொடக்கத்தில் பெரியவரின் பிரதான உணவு நெல்பொரிதான். அந்தப் பொரிக்கு உப்பு, காரம் என்று எதுவும் கிடையாது. அதை இரண்டு கைப்பிடி அளவு சாப்பிட்டு தண்ணீர் குடிப்பார். படுக்கப்போகும் சமயம் பெரும் பாலும் ஆகாரம் அதிகம் எடுக்கமாட்டார். சில பழத் துண்டுகளோடு சரி. விரத நாட்களில் அதுவும் கிடையாது. இந்த நெல் பொரியைக் கூட ஒரு சமயம் விட்டுவிட்டார். நேந்திர வாழைக்காயைக் காயவைத்து, இடித்து சலித்து மாவாக ஆக்கி விடலாம். அந்த மாவை அரைத்து கூழ் போலவும் குடிக்கலாம், இட்லியாகவும் ஆக்கி உண்ணலாம். இந்த நேந்திர மாவுக்கூழ்தான் பெரியவரின் பிரதான உணவாகிவிட்டது.

நல்ல யோகி என்பவன் பிட்சை வாங்கி உண்ண வேண்டும் என்பதற்கேற்ப, இதை சிலர் பெரியவருக்கு தொடர்ந்து தந்து வந்தனர். பெரிய வரும் அப்படி வாங்கித்தான் கடைசிவரை உண்டார். மடத்தில் சொன்னால் செய்து கொடுக்க அதிக நேரமாகாது. ஆனால், அப்படி செய்யச் சொல்வதும் உண்பதும் எஜமான பாவனை. யோகிக்கு எதற்கு அது?

நெல்பொரியை அவர் தவிர்த்தபோது, அதை அவருக்கு தவறாமல் அளித்து வந்தவர் மிக வருத்தப்பட்டார். உங்களுக்கு பிட்சையிட முடியாமல் செய்துவிட்டார்களே என்றார். பெரியவரோ, “நெல்லை விட வாழையில் உயிர்ச்சத்து குறைவு. நெல்லில் அதிகம். ஆகவே அதைவிட ஒன்று இருக்கும்போது ஒரு சன்னியாசி அதை உண்பது பாவம் என்று படுகிறது. அதனால் பாதகமில்லை. நான் மாறவேண்டிய நேரம் இது...

போகப் போக உனக்குப் புரியும்” என்றார். ஒரு மாதத்தில் அவர் காலமாகவும்தான் பெரியவர் முன்னதாக மாற்றிக்கொண்டதன் காரணம் புரிந்தது.

நெல் பொரியில்தான் உயிர்ச்சத்து உள்ளதா? வாழையில் இல்லையா என்று கேட்கலாம். வாழை அழிவில்லாத ஒரு தாவரம். வெட்ட வெட்டத்தான் அது அதிகம் தழைக்கிறது. அடியில் உள்ள வாழைமரக்கிழங்குகள் புதிய கிழங்குகளைத் தந்தபடியே உள்ளன. இதை வைத்தே வாழையடி வாழை என்கிற பதப்பிரயோகமும் தோன்றியது. எனவே, இதை உண்கையில் உயிர்ச்சத்தைக் கொல்லும் பாவம் இல்லாது போகிறது!

இப்படி தாவரத்தில் எல்லாம் பார்த்தால் எதையும் சாப்பிட முடியாது என்று தோன்றக்கூடும். உண்மைதான்! இதனால்தான் உண்பதற்குமுன் அதை ஈஸ்வரார்ப்பணம் செய்துவிட்டு நம்மை உண்ணச் சொல்கிறார்கள். நெய் சேர்க்கச் சொல்வதும் அன்ன சுத்திக்காக! இதெல்லாம் நம்மால் முடிந்த அளவுக்கான விஷயங்கள். அதாவது, பெரியவர் அகிம்சையின் உயரத்தை எவ்வளவு தொட முடியுமோ அவ்வளவு தூரம் தொட முயன்றார் என்றே இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த அகிம்சை உணர்வால் பெரியவருக்கு மிருகங்கள் எல்லாம்கூட கட்டுப்பட்டன. புத்தர் கதைகளில் அவர் முன் கொடிய புலி கூட சாதுவாக வந்து நின்றது என்று படித்திருக்கிறோம். காரணம், புத்தரின் சாத்வீகமும் அருளும், கொடிய புலியின் உணர்வைக் கூட கட்டுப்படுத்தும் அளவு வலிமையோடு இருந்தது தான் காரணம். புத்தரிடம் கேள்விப்பட்ட இந்த ஈர்ப்பு பெரியவரிடமும் நிரம்பியிருந்தது. அதற்கு சாட்சியாக ஒரு சம்பவம்...

37

ஒரு புலி, தாராளமாக ஒரு மானை அடித்து ரத்தம் குடிக்கலாம். சித்ர குப்தன், அதற்கொரு பாவக் கணக்கை எழுதுவது கிடையாது. பாம்பும் தவளையை விழுங்கலாம்; தவளை, சிறு சிறு பூச்சி புழுக்களை விழுங்கலாம். ஒன்றுக்குள் ஒன்று அடங்கி, ஒன்றுக்கு இன்னொன்று உணவாகி ஒரு பகுத்தறிவற்ற உயிரோட்ட விசைப்பாட்டுக்குள் அவை அடங்கிக் கிடக்கின்றன. அவற்றுக்கும் மனம் வாய்த்துவிட்டால், பின் மொழி தோன்றி, எழுத்து தோன்றி, நான் யார் எனும் கேள்வி தோன்றி,

ஒரு புலிக்கு தான் புலி என்பது தெரிய வந்துவிடும்; மானுக்கும் தான் மான் என்பது தெரிய வந்துவிடும்.

அந்த நிலையில், ஒரு மனிதன் எந்த மிருகத்தையும் சுலபமாக வேட்டையாட முடியாது. எந்த மாவுத்தனாலும் யானைகளை ஒரு அங்குசத்தால் ஆட்டிப்படைக்கவும் முடியாது. சொல்லப்போனால், மனிதன் இப்போது வாழ்ந்துகொண்டிருப்பது போல வாழவே முடியாது. யார் கண்டது! வலிமை மிகுந்த யானைகள் நம்மை அடிமை செய்து சுவாமி ஊர்வலத்தில் நாம் சுவாமியைச் சுமந்திட, அவை கம்பீரமாக முன்னால் நடந்து வரலாம். அதன் பின் சர்க்கஸ் என்பதே, மிருகங்களிடம் சிக்கிவிட்டமனிதர் களின் குட்டிக்கரணங்களாலும் தோப்புக் கரணங்களாலும் ஆனதாக மாறிப் போகலாம்.

ஆறறிவு வாய்த்துவிட்டதால், நாம் அவற்றை எப்படியோ அடிமைப்படுத்தி ஆட்டிப் படைக்கிறோம். இதுதானே மனித வாழ்வின் நிலைப்பாடு? நமக்கும் ஏனைய உயிர்களுக்குமான இந்த வேற்றுமை தெரிந்ததுதானே என்று கேட்கலாம். பெரியவர் வாழ்வில் நடந்த ஒரு அசாதாரண சம்பவத்தோடு இதைத் தொடர்புபடுத்தி சொல்ல வரும்போதுதான் முழுமையாகப் புரியும்.

பெரியவர் தன் யாத்திரையில் இந்த பாரத பூமியில் செல்லாத இடங்களே இல்லை. அதிலும் தமிழ்நாட்டுக்குள் அவர் காலடி படாத கிராமங்களே கூட இல்லை எனலாம். தனது யாத்திரையின் ஒரு கட்டத்தில் ஒரு கிராமத்தில் தங்கினார். அப்போது அவரை ஒரு விவசாயி சந்திக்க வந்த போது, அவனிடம் நலன் விசாரித்தார். “அந்த வருடம் விளைச்சல் அபாரம். அதிலும் கடலை விளைச்சலால் நல்ல லாபம்” என்று அவர் கூறவும், பெரியவர் சற்றும் எதிர்பாராமல் அவரிடம் கடலையைக் கேட்டார். அந்த விவசாயியும் அதை எடுத்துவரச் சென்றார்.

ஆனால், விவசாயி வீட்டில் கொஞ்சமும் கடலை இல்லை. நல்ல விலை வந்தால் விற்றுவிட்டதின் எதிரொலி அது. யாரிடமாவது கேட்கலாம் என்றாலோ அதற்கும் அவகாசமில்லை. இப்படி ஒரு நிலையில் தான், அறுவடையான வயலில் எலி வளைக்குள் கடலைகள் எப்படியும் சேமிக்கப்பட்டிருக்கும் என்பது தெரிந்து, வயற்காட்டுக்குச் சென்று எலி வளைக்குள் கையைவிட்டு கடலையை எடுத்தும் வந்துவிட்டார்.

அதைப் பார்த்த பெரியவரும் அதில் எலிகள் கொறித்திருப்பதைப் பார்த்து, ‘இது பறித்ததா கொறித்ததா?’ என்று கேட்கப் போக, விவசாயியும் உள்ளதை உள்ளபடி கூறிவிட்டார். பெரியவரிடம் லேசான

சலனம். பின் அவரையும் அழைத்துக் கொண்டு எலி வளையுள்ள அந்த வயல் நோக்கி புறப்பட்டு விட்டார்.

“ஏம்ப்பா... உன்கிட்ட இல்லைன்னா வரவேண்டியது தானே? இப்படியா எனக்காக எலி வளைக்குள்ள அது தனக்காக சேமிச்சு வெச்சதை எடுத்துண்டு வந்து தருவே! அப்புறம் அது என்ன செய்யும்? சன்னியாசியான நான், ஒரு எலியோட சாப்பாட்டைப் புடுங்கிச் சாப்பிடலாமா?

பூமி மாதா எல்லோருக்குமாதானே பயிர்களைத்தரா! நமக்கு பயிர் பண்ணத் தெரிஞ்சதால விளைவிச்சு எடுத்துக்கறோம். அதுக்குத் தெரியாததால விளைஞ்சதை எடுத்துக்கறது. மரத்துல பழுக்கற பழத்தை, நாம மரத்துகிட்டே கேட்டுண்டா பறிக்கிறோம்? அது நமக்காகப் பழுத்ததுன்னு பறிச்சு சாப்பிடறத்தில்லையா! இதையே எலி செய்தா குத்தமா?”

- என்று நடந்தபடியே அவர் பேசியதில் கம்யூனிசம், சோஷலிசம் என்று எல்லாமே அடங்கி இருந்ததை என்ன வென்று சொல்ல? பிறகு, பெரியவர் அந்த எலி வளையின் முன்னால் நின்றார். அதில் இருந்து எடுக்கப்பட்ட கடலையுடன் பரிசாக வெல்லமும் பொரியும் எலி வளையின் முன்னால் வைக்கப்பட்டது. எல்லோரும் சூழ்ந்து நின்று பார்த்த நிலையில் பெரியவர் எலி வளையைப் பார்த்து உருக்கமாய் நிற்க, மெல்ல ஒவ்வொரு எலியாய் வெளிவரத் தொடங்கின. அந்தக் கடலையும் வெல்லமும் பொரியும் அவற்றுக்கு உணவாக ஆரம்பித்தன.

அடுத்த நொடியே பெரியவர் ஒரு கரிசனப் பார்வையும் நிம்மதிப் பெருமூச்சுமாய் அங்கிருந்து புறப்பட்டு விட எல்லோரும் திரும்பித் திரும்பி பார்த்தபடியே விலகினர். அந்த எலிகள் எவ்வளவு பாக்கியம் செய்திருந்தால் பெரியவரே தேடிவந்து அவற்றுக்கு உணவளித்திருப்பார்?

ஒரு புராணக் கதை ஒன்ற உண்டு.

வேதாரண்யம் கோயிலுக்குள் ஈஸ்வர சன்னிதியில் ஒரு எலி தினமும் தான் உண்பதற்கு ஏதாது கிடைக்காதா என்று புகுந்து பார்க்கும். அர்ச்சகர் பூ சாத்தி சில சமயங்களில் பழங்களை வைத்துவிட்டு நடையைச் சாத்தியிருப்பார். அந்தப் பழம்தான் அதற்கு உணவு. அப்படித் தேடி வரும் போது சன்னிதியில் உள்ள விளக்கொன்று அணையும் நிலையில் இருக்க, இந்த எலி அதன் திரியை தன் கூரிய மூக்கினால் ஏதோ உணவு என்று தீண்டிப் பார்க்க முனைந்ததில் அந்தத் திரி

மேலேறிட, தீபமும் விடிய விடிய எரிந்ததாம். அந்த ஒரு செயல்பாடே ஈஸ்வர சன்னிதியில் விளக்கேற்றிய புண்ணியமாகி, அந்த எலி அடுத்த பிறப்பில் மகாபலி சக்கரவர்த்தியாகப் பிறந்தது என்பார்கள். பெரியவரிடம் கடலை உண்ட எலி, நிச்சயம் ஒரு சிறந்த பிறப்பைத் தான் எடுத்திருக்கும் என்ற கூறத் தேவையில்லை.

பிற உயிர்களின் மீதான பெரியவரின் கருணைக்கு இது மட்டுமே சான்று இல்லை. இந்த எலி போல ஒரு நாயும் புண்ணியம் செய்திருந்தது. சாதுர்மாஸ்ய விரதம் அனுஷ்டிக்கும் நிலையில், நிதமும் மடத்தில் எல்லோருக்கும் பசியார அன்னம் போஷிப்பதுண்டு. அப்படி எல்லோரும் சாப்பிட்ட பின் அந்த இலைகளை எடுத்துச்சென்று போடும் இடத்தில், நாய் ஒன்று பசியோடு வந்து குலைத்தபடி இலைகளில் உள்ள உணவைச் சாப்பிட முயல்வதும், அதை இலையைப் போட வருபவர்கள் துரத்துவதும் தொடர்ந்து நடந்தது. அப்போது அந்த நாய் குரைக்கும்! அந்த சப்தம் முகாமிட்டிருந்த பெரியவர் காதிலும் கேட்டது.

“அந்த நாய் ஏன் குரைக்கிறது?” என்று கேட்கவும், அவருக்கு காரணம் சொல்லப்பட்டது. அப்போது ஒரு இலையில் அவருக்கான உணவு வைக்கப்பட்டிருந்தது. அதை அப்படியே எடுத்துச்சென்று அந்த நாய்க்கு வைக்கச் சொல்லிவிட்டார் பெரியவர்.

பிறகுதான் மற்றவர்களுக்குப் புரிந்தது. மறுநாள், எல்லோருக்கும் இலை போடும்போது நாய்க்கும் அதன் இடத்தில் அன்னமிடப்பட்டது. பெரியவரும் அது சாப்பிட்டு விட்டதா என்று கேட்ட பிறகே, தன் உணவில் கையை வைத்தார். அது குலைக்காததை வைத்தே அது பசியாறிவிட்டதைத் தெரிந்து கொண்டார். இந்தச் சம்பவங்கள் அவர் ஜகத்குரு என்பதோடு, எல்லா உயிர்களுக்கும் பொதுவானவர் என்பதை சொல்லாமல் சொல்லிவிட்டதே! எலிக்கும் நாய்க்குமே இந்த அளவு கருணை செய்தவர் நமக்குச் செய்யாமல் இருப்பாரா? நமக்கு அவர் செய்த பெரும் கருணைதான், அவரது ‘தெய்வத்தின் குரல்!’ கிட்டத்தட்ட 10,000 பக்கங்கள் கொண்ட பாகம், பாகமான நூல்! வாழ்நாளெல்லாம் அவர் பேசியதை, சிந்தித்ததை, செயல்படுத்தியதை அப்படியே பதிவு செய்து வைத்துள்ளது. இதில் இல்லாதது இல்லை. இந்த தெய்வத்தின் குரல் நூல் பற்றி மட்டுமல்ல, ஏனைய பல நூல்கள் குறித்தும் நான் அழுத்தமாக ஒரு கருத்தை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இன்றைக்கு நம் ஆன்மீகத்தை நாம் எந்த அளவு அழுத்தமாகவும் ஆழமாகவும் புரிந்து கொண்டுள்ளோம் என்ற ஒரு கேள்வி எல்லோர் முன்னாலும் உள்ளது.

இன்று நூற்றுக்கு எண்பது பேரிடம் நிறையவே பக்தி உள்ளது. அதன் எதிரொலி தான் திருப்பதியில் தரிசனத்துக்கு 30 மணி நேரம் ஆவதும், ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் சபரிமலை திணறிப் போவதும்... சாதாரண தெருக்கோயில்களில் கூட இன்று பிரதோஷம், ஏகாதசி போன்ற விசேஷ நாட்களில் கூட்டம் கட்டுக்கு அடங்கா மலும் போகிறது. இப்படி ஆன்மீகம் பார்ப்பதற்கு ஊட்டமாகக் காட்சி தந்தாலும், பலூன் போல ஒரு ஊசிக்குத்துக்குத் தாங்காத பருமன் என்றே கருதத் தோன்றுகிறது.

ஆன்மீகம் பேசும் நல்ல விதியமைப்பு இல்லாத சிலர், சில சமயங்களில் கிண்டலாக விமர்சனம் செய்யும்போது அழுத்தமாக ஒரு பதிலை அவர்களுக்குச் சொல்ல முடியாமல் போகிறது. காரணம், தெய்வத்தின் குரல் போல அற்புதமான நூல்கள் தாராளமாகக் கிடைத்தாலும் அதை ஆழ்ந்து படிக்காததே காரணம்.

புத்தகக் கண்காட்சிகள் இப்போது வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன. கோடிக்கணக்கில் விற்பனை என்று செய்தி வருகிறது. என் நண்பர்கள் பலர் ஆயிரக்கணக்கில் புத்தகம் வாங்கியதையும் பார்க்கிறேன். வாங்குகிறார்கள். ஆனால், வாசிக்கிறார்களா என்றால் அங்கேதான் இடிக்கிறது. கேட்டால், 'படிக்க வேண்டும்' என்கிறார்கள். எப்போது என்கிற கேள்விக்கு, அவர்களுக்கே விடை தெரியவில்லை.

படித்தால்தான் புத்தி விசாலமாகும், தெளியும். அதிலும் நமது ஆன்மீக நூல்களில் இல்லாததே இல்லை. வெகு சிலரே வாசிப்பவர்களாக உள்ளனர். அதிலும் நம்முடைய பிள்ளைகள், குறிப்பாக இன்று 30 வயதுக்குக் கீழே இருப்பவர்கள் சுத்தமாகப் படிப்பதில்லை. கேட்டால் பாடங்களைப் படிப்பதே பெரும்பாடாக உள்ளது என்கின்றனர். இதில் ஆங்கிலக் கல்விமுறை வேறு. இதனால் தமிழ்ப்புத்தகங்களை வற்புறுத்தித் தந்து படிக்கச் சொன்னால், இது ஆங்கிலத்தில் உள்ளதா என்று கேட்கின்றனர். வளர்ச்சி என்கிற பெயரில் நாம் கண்டிருக்கும் மிகப் பெரிய வீழ்ச்சி இது!

இப்படியே போனால் 50 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைய சமஸ்கிருத நிலைதான் தமிழுக்கும்... பல ஆய்வாளர்களும் இந்தக் கருத்தைக் கூறிவிட்டனர். ஒரு கொடுமை என்னவென்றால், எல்லாம் இருந்தும் எதுவும் இல்லாத ஒரு ஏழையாக நாம் ஆகிவிடுவோம். இதைத் தவிர்க்க தெய்வத்தின் குரலை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்ய வேண்டியது அவசியம். இதை யாராவது ஒரு அறப்பணியாகக் கருதி செய்ய முன்வராம். என் வருத்தத்தை இங்கே பதிவு செய்துவிட்டேன்.

பெரியவரின் பேரருள் இதற்கும் வழி காணட்டும்.

இப்போது பெரியவரின் பத்து கட்டளைகளுக்கு வருகிறேன். ஆங்கிலத்தில் மோசஸ் என்னும் ஞானியின் 'டென் கமாண்ட்மென்ட்ஸ்' மிகப் பிரசித்தி பெற்றவை. அந்தக் கட்டளைகள் பற்றி நமக்கெல்லாம் தெரியவரும் முன்பே பெரியவரும் ஒரு பத்து கட்டளைகளை நமது சமுதாயத்துக்கு என்று விடுத்துள்ளார். அவ்வளவும் எளியவைதான். இவற்றைப் பின்பற்ற பணம் காசே தேவையில்லை. மனமிருந்தால் போதும். அது...

38

பெரியவரின் அந்து பத்து கட்டளைகளை வரிசையாகப் பார்ப்போம்.

1. காலையில் எழுந்தவுடன் இரண்டு நிமிடங்களாவது கடவுளை மனதில் நினைத்து பிரார்த்தனை செய், 2. அன்றைய தினம் நல்ல தினமாக இருக்க கடவுளை வேண்டிக்கொள், 3. அடுத்து புண்ணிய நதிகள், கோமாதா, சிரஞ்ஜீவிகள், சப்த கன்னியர்கள் முதலியவர்களை குறைந்தபட்சம் ஒரு நிமிடமாவது நினை. 4. வாரத்தில் ஒரு நாளாவது அருகிலுள்ள திருக்கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடு, 5. உன் பக்கத்தில் வாழ்பவர்களையும், மற்றவர்களையும் நேசி.

6. சாப்பிடும் முன் மிருகங்களுக்கோ, பட்சிகளுக்கோ ஆகாரம் அளித்துவிட்டு பிறகு சாப்பிடு, 7 அன்றாடம் குறைந்தபட்சம் சக்திக்கேற்றபடி தர்மம் செய், 8. நெற்றியில் தவறாது திலகம் வைத்துக் கொள், 9. உறங்கச் செல்லுமுன் அன்றைய நாளில் நீ செய்த நல்ல கெட்டதுகளை எண்ணிப் பார், 10. ஆண்டவன் நாமத்தை 108 முறை உச்சரித்துவிட்டு பின்பு உறங்கு.

- இதுதான் அந்த பத்து கட்டளைகள். இதில் எதை நம்மால் பின்பற்ற முடியாது? இதில் எதைப் பின்பற்ற பிறர் தயவை நாம் எதிர்பார்க்க வேண்டும்? மிக மிகச் சுலபமான விஷயம் இது என்றால், இது போதுமா? இந்த பத்தைச் செய்தபடி எதை வேண்டுமானால் செய்து கொண்டு வாழலாமா என்று இடக்காக கேட்கக் கூடாது. இந்த பத்தின் வழி வாழப் பழகிவிட்டால் இடக்குமுடக்கான சிந்தனைகளே முதலில் தோன்றாது. வாழ்க்கை நிறைந்த மன நிம்மதியோடு ஒரு தெளிவுக்கு மாறுவதையும் உணரலாம். இதை வைராக்கியமாகப் பின்பற்ற வேண்டும். அதுதான் இதில் முக்கியம்.

இந்த பத்து கட்டளைகளில் பத்தாவது கட்டளையாக ஆண்டவன் நாமத்தை 108 முறை உச்சரித்துவிட்டு என்று இருக்கிறதல்லவா? அந்த ஆண்டவன் நாமம் எது என்று சிலருக்கு கேட்கத் தோன்றும். ஏன் என்றால் இஷ்ட தெய்வம் என்று ஒன்று, குலதெய்வம் என்று ஒன்று, இதுபோக ஒவ்வொருவரும் 'ரொம்ப சக்தி வாய்ந்த சுவாமி' என்று அவரவர் உணர்வு நிலைக்கேற்ப சுட்டிக் காட்டும் தெய்வங்கள் என்று பல தெய்வங்கள் நம்மிடையே இருக்கிறதே! இதில் எதை தியானிப்பது என்று கேட்கலாம். இம்மட்டில் அவரவர் மனமும் எந்த தெய்வத்திடம் போய் நிற்கிறதோ அதுதான் அவர்கள் தியானிக்க ஏற்ற நாமமாகும். ஆனாலும், அனைவருக்கும் ஏற்ற ஒரு நாமமும் உள்ளது.

கோவிந்த நாமம்தான் அது! 'கோவிந்தா... கோவிந்தா... கோவிந்தா...' - இதுதான் பெரியவருக்கே தியான மந்திரம்! இந்த கோவிந்த நாமத்துக்கு மட்டும் அப்படி என்ன சிறப்பு என்பதை அவரே திவ்யமாக எடுத்தும் காட்டுகிறார். அதை அவர் பாஷையிலே கேட்பது ஒரு அலாதி சுகம் அல்லவா?

இதை வாசிப்பவர்களில் பெரியவர் உபன்யாசம் கேட்டவர்கள் எவராவது இருந்தால், அவர்கள் அப்படியே அவர் குரலை கற்பனை செய்து கொள்ளுங்கள். அவரே இந்த தீபம் இதழ் வாயிலாக கோவிந்த நாம சிறப்பைச் சொல்ல மோட்சத்திலே இருந்து வந்தது போல் இருக்கும். இனி அவர் சொன்னது சொன்னபடி...

"ராமாயணத்தில் ஸ்ரீராமபட்டாபிஷேகம் மாதிரி, பாகவதத்தில் பகவானுக்கு பட்டாபிஷேகமான சந்தர்ப்பத்தில் சூட்டப்பட்ட பேர் 'கோவிந்த' என்பதே! ராமர் மாதிரி கிருஷ்ணர் பெரிய ராஜ்யத்துக்கு ராஜாவாக பட்டாபிஷேகம் பண்ணிக் கொள்ளாவிட்டாலும், தேவராஜாவாலேயே பட்டாபிஷேகம் பண்ணிக் கொள்ளாவிட்டாலும், தேவராஜாவாலேயே பட்டாபிஷேகம் பெற்றதால் இதற்கு ரொம்ப முக்கியத்துவமுண்டு. 'கோவிந்தராஜா' என்று, கிருஷ்ணனுடைய பல பெயர்களில் இதற்கு மட்டும்தான் 'ராஜா' சேர்க்கிறோம்.

எனக்கு ஒன்று தோன்றுவதுண்டு. ஆண்டாள், திருப்பாவையில் குறைவொன்றுமில்லாத கோவிந்தா என்று கூப்பிடுகிறாள். இங்கே பகவானுக்குக் கூட குறை இருந்தது போல ஒரு தொனி இருப்பதை உணர முடிகிறதல்லவா? சாதாரண மனுஷன் குறைபட்டுக்கொண்டே இருக்கும் சுபாவமுள்ளவன். அதனால் அப்படியில்லாத ஒருவனை 'குறைவில்லாத மனுஷ்யா' என்று விசேஷித்தால் அது பொருந்தும்.

பகவானைப் பார்த்து ஏன் இப்படிச் சொல்ல வேண்டும்? இப்படிச் சொல்வதாலேயே எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்கிற மாதிரி பகவானுக்கும் குறையிருந்த மாதிரி தான் எண்ணவேண்டி உள்ளது. யோசித்துப் பார்த்ததில் பகவானுக்கு வாஸ்தவமாகவே பூர்வத்தில் ஒரு குறை இருந்து அது கோவிந்தனாக அவன் ஆன போது தான் தீர்ந்தது என்று தெரிந்தது.

ராம பட்டாபிஷேகம் என்றேனே... அதிலேதான் குறை!

சக்ரவர்த்தியாக ராமன் முடி சூடியதில் என்ன குறை என்றால், இதை வால்மீகி தம்முடைய ராமாயணத்தில் வர்ணித்திருக்கிற தினுசிலேதான் குறை ஏற்பட்டுவிட்டது.

'வசிஷ்ட வாம தேவாதி ரிஷிகள் எட்டு பேர்' ஸ்ரீராமச் சந்திரமூர்த்திக்கு பட்டாபிஷேகம் பண்ணினார்கள். 'அது எப்படி இருந்தது தெரியுமா? அஷ்ட வசுக்கள் தேவேந்திரனுக்கு பட்டாபிஷேகம் பண்ணினது போல்' என்று வால்மீகி வர்ணிக்கிறார்.

'வசுவோ வாசவம்யதா.' அதாவது, வாசவன் எனப்படும் இந்திரனுக்கு வசுக்கள் பண்ணியது போல் என்று அர்த்தம்.

இந்த உதாரணம்தான், ராமருக்கு குறை உண்டாக்கிவிட்டது. எதனாலென்றால், இந்திரன் சீரழிந்த கதையை இதே வால்மீகி பாலகாண்டத்தில் சொல்லியுள்ளார். கௌதம பத்னியாகிய அகலிகையிடம் தப்பாக நடந்து கொண்டு மகாபாபம் பண்ணினவன் இந்திரன். அதற்காக சாபத்தை வாங்கிக் கட்டிக்கொண்டு அவமானப்பட்டவனும் கூட. ஆனால் ராமரோ, அகலிகைக்கு தன் பாதங்களாலேயே புனருத்தாரணம் தந்தவராவார்.

கதை இப்படியிருக்க, ராமர் பட்டாபிஷேகத்துக்கு இந்திர பட்டாபிஷேகத்தையா உதாரணம் சொல்வது? ஒரு ஏகபத்தினி விரதனை ஒரு பாவியானவனோடு ஒப்பிடலாமா? ஆனால், வால்மீகி பாத்திரங்களின் குணாம்சத்தை ஒப்பிட்டு இப்படிச் சொல்லவில்லை. பட்டாபிஷேக கோலாகலத்தைப் பார்த்ததும் அவருக்கு இந்திரனுக்கான பட்டாபிஷேக கோலாகலம் நினைவுக்கு வரவும் அந்த விமரிசையான தன்மையை உத்தேசித்து ஒப்பிட்டுவிட்டார். அங்கே எட்டு வசுக்கள்; இங்கே எட்டு ரிஷிகள். நன்றாக ஒத்துப்போனதும் ஒரு காரணம்.

ஆனால், இந்தக் குறை கிருஷ்ணனிடம் நீங்குகிறது. எப்படித் தெரியுமா? கிருஷ்ணன், கோவர்த்தன கிரியை சுண்டுவிரலால் தூக்கி இந்திரன்

பெய்வித்த மழையில் இருந்து யாதவர்கள் அவ்வளவு பேரையும் காப்பாற்றவும், இந்திரன் தன் தவறை உணர்ந்து கிருஷ்ணன் காலில் விழுந்து மன்னிப்பு கோருகிறான். இதைத்தான் ஆண்டாளும் உணர்ந்து, குறைவொன்றுமில்லாத கோவிந்தா' என்று சொன்னாள்.

குறையில்லாத என்றாலே பரிபூர்ண வஸ்து என்று பொருள். இதனால்தான் கிருஷ்ணாவதாரத்தை பூர்ணாவதாரம் என்றும் சொல்கிறோம். இப்படிப்பட்ட கோவிந்த நாமாவுக்குள்ள அனேக சிறப்புகளில் இன்னொரு சிறப்பு, ஆதிசங்கர பகவத்பாதாளுக்கும் மிகப் பிடித்த நாமம் இதுதான்.

'பஜ கோவிந்தம்' என்பது, அவருடைய சிவானந்த லஹரி, சௌந்தர்ய லஹரி அல்லது ஷட்பதீ ஸ்தோத்திரம் போன்று ஒரு ஸ்வாமியை ஸ்தோத்தரிக்கும் பிரார்த்தனை இல்லை. வைஷ்ணவர், சைவர் என்று பேதமில்லாதபடி சகல ஜனங்களுக்குமானது இது.

இப்படிப்பட்ட க்ரந்தத்தில் ஆசார்யாள் 'பரமாத்மாவை பஜியுங்கள்' என்று பொதுவாகச் சொல்லாமல், 'கோவிந்தனைப் பஜியுங்கள்' என்று சொல்கிறாரென்றால், அந்தப் பெயர் எத்தனை உயர்ந்ததாக, அவருக்குப் பிடித்தமானதாக இருக்க வேண்டும்?

கோவிந்த நாமத்துக்கு இன்னொரு விசேஷமும் இருக்கிறது. மகாவிஷ்ணுவுக்கு மிக ப்ரீதியான நாமாக்கள் பன்னிரண்டு. அதில் முதல் மூன்றில் ஒரு முறையாகவும், அதாவது 'அச்சுத, அனந்த கோவிந்த' என்பதில் ஒரு முறையும், பின் கேசவ, நாராயணா, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதசூதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ரிஷிகேச, பத்மநாப, தாமோதர என்பதில் ஒரு தடவையும் என்று இரு தடவை இடம்பெறும் ஒரே நாமம் கோவிந்தாதான்! அதனாலேயே இதை ஆசார்யாளும் 'பஜகோவிந்தம் பஜகோவிந்தம் பஜகோவிந்தம்' என்று மூன்று முறை சொல்லி சந்தோஷப்பட்டிருக்கிறார்.

ஒன்றை மூன்று முறை சொல்வது என்பது சத்யப் பிரமாணத்திற்காக என்றால், கோவிந்த நாமமே சத்யப் பிரமாணம் என்றாகிறது. இந்த சத்யப் பிரமாண நாமாவை பகவத் பாதாள் மட்டுமல்ல; ஆண்டாளும் தன் திருப்பாவையில் மூன்று இடங்களில் அழைத்து இந்தப் பிரமாண கதியை உறுதி செய்கிறாள்.

'கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா' என்று ஒரு இடத்திலும், "குறைவொன்றுமில்லாத கோவிந்தா' என்று இன்னொரு இடத்திலும், 'இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா' என்று

இன்னொரு இடத்திலும் குறிப்பிடுகிறாள்.”

இப்படி கோவிந்த நாமச் சிறப்பை பெரியவர் தகுந்த உதாரணங்களோடு கூறிடும் போதுதான், நமக்கும் அதன் பிரமாண சக்தி புரிய வருகிறது. அதேசமயம் இன்று இத்தனை உயர்ந்த கோவிந்த நாமத்தை, சிலர் மிக மலிவாக ஒருவர் தம்மை ஏமாற்றிவிட்டாலோ இல்லை பெரும் ஏமாற்றங்கள் ஏற்படும்போதோ ‘எல்லாம் போச்சு... கோவிந்தா’ எனச் சொல்வதைப் பார்க்கிறோம். யார் முதலில் இதைச் சொல்லி பின் இது எப்படிப் பரவியது என்றும் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

பெரும் ஏமாற்றம் ஏற்பட்ட நிலையில், தன் மனதைத்தட்டி எழுப்பி தான் நிமிர்ந்து நின்றிட கோவிந்த நாமா மட்டுமே உதவும் என்று நம்பியே அவர் ‘கோவிந்தா கோவிந்தா’ என்றிருக்க வேண்டும். ஆனால், அவர் சொன்ன அடிப்படை புரியாமல், ஏமாந்தவர்கள் ஏமாற்றியவர்களைப் பார்த்துச் சொல்லும் ஒன்றாக இது காலப் போக்கில் மாறிவிட்டது.

அது இந்த நாமத்திற்கு மட்டுமில்லை. நெற்றியில் இட்டுக்கொள்ளும் திருமண் காப்புக்கும் பொருந்தும். அமிர்தத்தை விஷமாக நினைத்துக்கொண்டு குடிப்பதால் அது விஷமாகி விடாது. அது தன் அமிர்த குணத்தைக்காட்டி எப்படி குடித்தவரைக் காப்பாற்றுமோ அப்படி கோவிந்த நாமத்தின் பொருளை உணராமலும், திருமண் காப்பின் அருமை தெரியாமலும் அதை தவறாக சிலர் பயன்படுத்தினாலும் அவர்களுக்கும் இது மறைமுகமாக நன்மையையே தான் செய்கிறது. அது மட்டுமல்ல! இத்தனை ஏமாற்றம் மிகுந்த வாழ்க்கையும் ஏமாற்றமும் எதனால் ஏற்பட்டது? அந்த கோவிந்தனை நினைக்க வேண்டிய நேரத்தில் நினைக்காமல் போனதால்தானே என்றும் அந்த ஏமாந்த தருணம் எடுத்துரைக்கிறது.

அதனாலேயே இதனை ‘பவக்கடல் கடையும் பகவத் மத்து’ என்றும் ஆதிசங்கரர் கூறுகிறார். அதாவது, பவம் என்றால் சம்சாரம்; ஜலதி என்றால் சமுத்திரம். பவஜலதி என்றால் சம்சார சாகரம். ‘பவஜலதி மதன மந்தர’ என்கிறார் பகவத்பாதர். அதாவது, சம்சார சாகரத்தைக் கடையும் மந்தர மலையாக பகவான் இருக்கிறானாம்!

அமிர்தம் கடைந்த சம்பவம் பற்றி கேள்விப்பட்டிருப்போம். தேவ அசுரர்கள் வாசுகி பாம்பைக் கயிறாகக் கொண்டு மந்திர மலையை மத்தாக்கி பாற்கடலைக் கடைந்தபோது, கீழே மதத்தைத் தாங்கும் ஆமையாகப் போய் நின்றவன் பகவான். இதுதான் கூர்மாவதாரம்!

இங்கே மத்தாகிய மலைக்கு உதவுபவன், நமது சம்சார சாகரத்தைக்

கடைவதில் அந்த மலையாகவே மாறிவிடுகிறான். அதில்தான் சூட்சுமம் உள்ளது. பெரியவர் இப்படிச் சொல்லி வருவதன் பின்னே நமக்கெல்லாம் ஒரு பெரும் தீர்வும் மனத்தெளிவும் ஏற்படுகிறது. இன்று பலரும் மாயையால் உந்தப்பட்டு சில பாவங்களைச் செய்துவிட்டு, 'ஐய்யய்யோ இப்படி ஆகிவிட்டதே' என்கிற வருத்தத்தில் இருக்கிறோம். இன்னும் சிலர், "நாம் பாவியாகி விட்டோம். நமக்கு எந்த நல்லதும் கிடைக்காது. எனவே இன்னமும் பாவங்கள் செய்து அதிலேயே மூழ்கிப் போய்விடுவோம்" என்று வெகு தவறான பாதையில் போய் விட்டதையும் பார்க்கிறோம்.

இன்னும் சிலரோ செய்த பாவத்துக்கு எது சரியான பரிகாரம் என்று கேட்கிறவர்களாகவும், பரிகாரம் செய்யத் தயாராகவும் உள்ளனர்.

ஒருவராவது, 'நான் பாவியில்லை. பெரும் புண்ணியன். என் போல ஒருவரைப் பார்க்க முடியாது' என்று நெஞ்சை நிமிர்த்துவதே இல்லை.

இந்தக் கலியுகத்தில், இந்த பூமியில் பாவம் செய்யாமல் வாழ முடியாது என்பதே யதார்த்தம். அதற்காக, பாவங்களைச் செய்துகொண்டே போவது தான் வாழ்க்கையா என்றால், அதுவுமல்ல!

பின் எது வாழ்க்கை? ஏன் பாவிகளாக இருக்கிறோம்?

மிகத் தெளிவாக பெரியவர் இதற்கான பதிலை இந்த அமிர்தம் கடையும் சம்பவத்தோடு சேர்த்து கூறப்போவதைக் கேட்போமா?

39

பாற்கடலில் - வீட்டில் நம் பாத்திரத்து தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல, ஒரு நிகழ்வு நடந்தது என்பது எத்தனை பெரிய ஆச்சரியம்? இங்கே ஒரு மத்தும் இரண்டு கைகளும் மூன்று முழக் கயிறும் கடைவதற்குப் போதும். கடலை இப்படி எப்படி கடைய முடியும்? நடக்கிற காரியமா? லாஜிக்கலாக கேள்வி எழத்தானே செய்யும்?

நம் வீட்டு பாத்திரத்துக்கு மரத்தால் ஆன மத்து. ஆனால், பாற்கடலுக்கோ மேருமலை. நமக்கு, கடைவதற்கான கருவியாக மூன்று முழக் கயிறு. இங்கோ வாசுகி என்னும் ராட்சஸப் பாம்பு. இது இருந்தால் போதுமா? இடது கை வலது கை என்று இரண்டும் சமமாக இழுத்து விட வேண்டும். நமக்கு கைகள்... இங்கோ இடது புறம் அரக்கர்கள் - வலது புறம் தேவர்கள். நம் பாத்திரத்தின் அடி உடைந்தால் அவ்வளவு தயிரும்

வீண். அது உறுதியாக இருக்க வேண்டும். அப்படி ஒரு உறுதியைத் தர மகாவிஷ்ணுவே கூர்மமாக ஆகி தன் உறுதியான ஓட்டை அடியாகக் கொடுத்து மேரு மலையைத் தாங்கிப் பிடிக்கிறார். அப்புறம் என்ன! கடைசல் தொடங்குகிறது. வாசுகிப் பாம்பு திணறிப் போகிறது. அதனிடம் தாளமாட்டாத விஷப் பெருமூச்சு. முதலில் அதுதான் வருகிறது. அதை தேவர்களும் அசுரர்களும் சுவாசித்தாலோ விழுங்கினாலோ அவர்கள் கதையே முடிந்து விடும். அப்புறம் எங்கே போய் எதைக் கடைவது? இங்கேதான் ஈசனார் தன் பங்காய் அதை வழித்து வழித்து தன் வாயில் போட்டுக்கொள்ளத் தொடங்குகிறார்.

‘உம் ஆகட்டும்... நிற்க வேண்டாம்... உங்களை அழித்துவிடும் சமாச்சாரத்தை நான் அழித்து விடுகிறேன்... அமிர்தம் வரும்வரை நிறுத்தாதீர்கள்’ என்கிறார். ஈசனின் கருணை, உமையை உருக்குகிறது. இந்தக் கருணை வாழ வேண்டும். இது அமிர்தபலி என்று ஆகிவிடக் கூடாது எனத் தீர்மானிக்கிறாள். ஈசனார் விழுங்கிய விஷத்தை விழுங்கச் சக்தியற்றவராக அவரை ஆக்கி விடுகிறாள். அவர் கண்டத்திலேயே அந்த விஷம் தேங்கி விடுகிறது. அவரும் இதனால் நீலகண்டனாகிறார். கருணையும் வாழ்ந்திடும் வழி பிறக்கிறது.

அத்தனை விஷமும் வந்த பிறகே மெல்ல ஒவ்வொரு நல்ல விஷயமாக வர ஆரம்பிக்கிறது. பாற்கடல் தாழிக்குள் இருந்து ‘சளக் புளக்’ எனும் கடைசலுக்கு நடுவே உச்சை சிரவஸ் என்னும் வெள்ளைக் குதிரையில் தொடங்கி காமதேனு, கற்பக விருட்சம், சியமந்தக மணி என்று அதிசயப் பொருட்களும் உயிர்களும் வருகின்றன. இறுதியாக அமிர்தத்தோடு மகாலட்சுமி வந்து அடியில் நின்று தாங்கிய அந்த கூர்மாவதாரியிடம் சரண் புகுந்து அமிர்தத்தையும் அவன் வசம் ஒப்படைக்கிறாள்.

அமுதம் விநியோகமாக வேண்டும். ஒன்றுபட்டு கடையப் பாடுபட்ட தேவர்களும் அசுரர்களும் இவ்வேளையில்தான் நியாயமாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் அசுரர்களிடம் எப்போதும் ஆத்திரம், தாழ்வு மனப்பான்மை, குரூர எண்ணம், சந்தேகம் என்று மலிவான உணர்ச்சிகள் அதிகம். இதன் காரணமாக மனமானது சுரம் தப்பிப் போனதால் தான் அசுரம் என்கிற காரணப்பெயரே உருவாகியது. தேவத்துக்குள் கூர்ந்து பார்த்தால் தவம் தெரியும்.

எனவே, தேவர்கள் அவர்களுக்கான தன்மையோடு இருக்க அசுரர்கள் அவர்கள் புத்தியைக் காட்டப்போய் விஷ்ணுவின் சாதுர்யத்தால், அற்புத அமிர்தம் இறுதியில் அவர்களுக்கு இல்லாமல் போனது. இதுதான் அமுதம் கடையப்பட்ட கதை!

இந்தக் கதை மனதுக்கு மிகப் பிடித்தமான ஒன்றாக இருப்பதை மறுக்கவே முடியாது. காரணம், அந்த காட்சிக் குரிய பிரம்மாண்டம். ‘மலையே மத்து... பாத்திரமாய் கடல்... கயிராய் பாம்பு... முயற்சியாக செயல் - விளைவாக முதலில் விஷம்; பின் அமுதம். இதனூடே ஈசனின் கருணை ஒரு புறம் - திருமாலின் கருணை மறுபுறம். அல்டிமேட்டாக ஹைலைட்டான அமிர்தம் நல்லவர்களுக்கு மட்டும் என்பது தான் ட்ரமாடிக் ஐரனி.

இதனால் இந்தக் கதை காலம் காலமாக துளியும் அழிவின்றி எந்த மாறுதல்களுக்கும் இடைச்செருகல்களுக்கும் இடமின்றி வாழ்ந்தபடியே இருக்கிறது. இனியும் இது வாழவும் போகிறது. இதை அழிக்கும் ஒரு சக்தி எக்காலத்திலும் வரப்போவதும் இல்லை. அப்படி வந்தால் என்னாகும் என்பதற்கு விடை இக்கதைக்குள்ளேயே உள்ளது. அந்த சக்தி அரக்கர்களாக மாறி அமுதம் பெறாது அழிந்துவிடப் போகிறது. இதை பிரமிப்போடு பார்த்து இதன் சாரத்தை லாஜிக் பார்த்து ஒதுக்காமல் ‘இந்தக் கதைக்குள் ஒரு நல்ல செய்தி இருக்கிறது... அதுதான் நம் வரையில் அமுதம்’ என்று எடுத்துக் கொள்கிறவர் எவரோ அவரே தேவர்!

நமது பெரியவரோ தேவருக்கும் தேவர்! அவர் இதைப் பார்த்த விதத்தை இனி நாம் பார்ப்போம். இனி அவர் குரலில்...

“பாற்கடலைக் கடைந்தபோது முதலில் விஷம் வந்தது. அப்புறம்தான் அமுதம் வந்தது. கடைந்து கடைந்து முதலில் அதிலிருக்கிற கெட்டதை எல்லாம் விஷ ரூபத்தில் திரட்டி வெளிப்படுத்திய பிறகுதான் நல்லதான அமுதம் வந்தது.

நம்முடைய வாழ்க்கையையும் சம்சாரத்தையும் இப்படிக் கடைய வேண்டும். கநாம க்ரோதிகளாலான பல சலனங்களால் அது அலையடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அதற்குள்ளே ஈஸ்வரதத்துவமும் அம்ருதம் போல இருக்கத்தான் செய்கிறது. இந்த சம்சார சாகரத்தை நன்றாகக் கடைந்து க்ரோதாதிகள் விஷமாகத் திரண்டு வெளியே போகும்படி செய்துவிட்டால், அப்புறம் திவ்ய அனுபவம், ஈஸ்வர சாட்சாத்காரம் என்கிற அம்ருதம் வந்துவிடும்.

முதலில் கெட்டதை எல்லாம் திரட்ட வேண்டும். எதற்காக என்றால், வைத்துக்கொண்டு அனுபவிப்பதறகாக அல்ல. வெளியே துரத்துவதற்காகத்தான்! குப்பையை எல்லாம் ஒரு இடமாக பெருக்கித் திரட்டி வெளியிலே கொட்டுவதுபோல!

அப்படி வெளியிலே துரத்துகிற வரை கெட்டதுகள் இருக்கத்தான் செய்யும். அவற்றை பகவானே மத்தாக வந்து ஒன்றாகச் சேர்த்து ஒரு இடத்தில் கான்சன்ட்ரேட் செய்து திரட்டித் தருகிறான். பூஜை, க்ஷேத்ராடனம், ஸ்தோத்ரம் படிப்பது, ஜபம், த்யானம் என்கிற சாதனை எல்லாம் பகவானின் அனுக்ரக ஸ்வரூபம்தான்!

இப்படிப்பட்ட சாதனைகளால் வாழ்க்கைக் கடலை கடைந்து முதலில் விஷத்தைத் திரட்ட வேண்டும். பிறகு அதை வெளியே அனுப்பிவிட வேண்டும். அப்புறம் அம்ருதத்தை அடைய வேண்டும்.

ஆகக் கூடி, எடுத்தவுடன் அம்ருதம் என்றால் அது முடியாது. விஷத்தை அனுபவித்தத் தீர்த்தபின்தான் அம்ருதம் வரும். வாழ்க்கையில் கெட்டது, கஷ்டம், காமக்ரோதம் எல்லாம் இருந்துதான் ஆக வேண்டும்.

போகப் போக இதை எல்லாம் விலக்கிவிட்டு, ஒரே நல்லதாக பேரின்பமாக ஆக வேண்டும். கெட்டதுகள் இருக்கின்றனவே என்று நாம் ஓயாமல் அழுதுகொண்டும் பயந்துகொண்டும் நம்பிக்கை இழந்து கொண்டும் இருக்க வேண்டாம் என்று ஆறுதலாக தெம்பு ஊட்டுகிற விதத்தில், 'பவஜலதி மதன மந்தர' என்று ஆச்சார்யாள் சொல்கிறார். மத்து போட்டு கடைகிறபோது எத்தனை கொந்தளிப்பு, எத்தனை பாடுபட வேண்டியிருக்கிறது?

அம்மாதிரி நம் பூர்வகர்மா, பழைய வாசனைகள் தீருவதற்கும் வாழ்க்கையைக் கடைகிற கடையலில் மொத்துப்பட வேண்டும். இப்படிப் பல சோதனைகளில், பரிட்சைகளில் தேறின பிறகுதான் விமோசனம் கிடைக்கும்.

விமோசனம் தரத்தான் பகவான் இத்தனை கொந்தளிப்பை உண்டாக்குகிறான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் புரிதல் வந்துவிட்டால், நம்முடைய பயம், அழுகை, நம்பிக்கைத் தளர்ச்சியெல்லாம் போய்விடும்.

சம்சார சாகரத்தைக் கடைகிறபோது முதலில் ஏன் கஷ்டம் வர வேண்டும், கெட்டது இருக்க வேண்டும் என்றால், அதுதான் பகவானுடைய விளையாட்டு. இயற்கை நியதியிலேயே இப்படித்தான் வைத்துள்ளார்!

காய் கசக்கத்தான் வேண்டும். அப்புறம் கசப்புக் காயே துவர்ப்பாக வேண்டும். அதற்கப்புறம் துவர்ப்பு புளிப்பாக வேண்டும் கடைசியில்தான் புளிப்பு தித்திப்பாக வேண்டும்.

நம்மிடமும் காமம், க்ரோதம் முதலிய கசப்பு எல்லாம் படிப்படியாகத்தான் துவர்த்து, புளித்து அப்புறம் ப்ரசாந்த மதுரமாக வேண்டும். ஆனதால், நமக்கு இத்தனை தோஷங்களா என்று அழ வேண்டாம்.

பகவானை நினைத்துக்கொண்டு பக்தியோடு இருந்து கொண்டு கர்மானுஷ்டானங்களைப் பண்ணிக் கொண்டு ஜனங்களுக்கு நம்மாலான தொண்டைச் செய்துகொண்டு இருந்தால் தன்னால் காலக்ரமத்தில் இந்த தோஷம் எல்லாம் போய், பழுத்த பழமாக அன்பு என்கிற ஒரே மதுரமயமாக ஆகிவிடுவோம். இந்த மாதிரி பக்தி, கர்மானுஷ்டானம், சேவை, தியானம் முதலியவை இல்லாவிட்டால் கசப்பு மாறவே மாறாது!”

இதைவிட எளிமையாகவும் வலிமையாகவும் அந்த அம்ருதம் கடைந்த கதையில் இருந்து ஒரு கருத்தை ஒருவரால் கூற முடியுமா? இதைக் கேட்கும் போது நமக்குள் ஒரு நம்பிக்கையும் ஒளியும் ஏற்படுகிறதல்லவா? ஏன் என்றால் நம்மில் பாவம் செய்யாதவர் எத்தனை பேர்? நம் பாவங்கள் நம் மனசாட்சியைக் குடையும்போது அது குறித்து உள்ளுக்குள் அழாதவர்கள் ஒருவராவது இருப்போமா? இந்தப் பாவச் செயலும் இதன் காரணமாய் உருவான உறுத்தலும் தானே நம்மை வேண்டுதல், பரிகாரம், பிரார்த்தனை என்று கடவுளிடம்கூட பிச்சைக்காரனாக சென்று நிறுத்துகின்றன?

என்ன காரணம்? தவறு செய்துவிட்டோமே என்கிற அந்த பயமும் தடுமாற்றமும்தானே! இந்த நிலையில், ‘இது இயல்புதான்.... இதற்காக நாம் நம்மைத் தாழ்வுபடுத்தி நம்மையே நாம் தொலைத்து விடத் தேவையில்லை’ என்று பெரியவர் கூறும்போது, எத்தனை இதமாக உள்ளது?

அவர் கருத்தின் கடைசி வரிகளை திரும்ப ஒரு முறை சிந்திப்போம். ‘இந்த மாதிரி பக்தி, கர்மானுஷ்டானம், சேவை, தியானம் முதலியவை இல்லாவிட்டால் கசப்பு மாறவே மாறாது’ என்னும் அந்த வரிகளில்தான் மானிட சமுதாயம் உய்வதற்கான கருத்து வைரம் போல ஒளிந்துள்ளது.

உதாரணமாக, ஒரு விவசாயியை எடுத்துக் கொள்வோம். வயலோடு வாழ்பவன்... எது பக்தி என்று பெரிதாகத் தெரியாது... தியானம், கர்மானுஷ்டானம் எல்லாம் என்னவென்றே தெரியாது. ஆனால், இவனையும் அறியாமல் இவன் சேவை செய்பவனாக இருப்பதுதான் விந்தை! அதாவது, இவன் விளைவிக்கும் நெல்தான் சமுதாயத்தின் பசிக்கு உணவாகிறது. அதற்கு அவனுக்கு கூலி தந்துவிட்டாலும்,

அதைக் கடந்து அந்தப் பசியாற்றும் விஷயம் அவனுக்குப் புண்ணியத்தை அளிக்கிறது.

அக பக்தி, கர்மானுஷ்டானம், தியானம் இல்லாத நிலையிலும் சேவை - வாழ்வின் கசப்பிலிருந்து அவனை இனிப்புக்கு இட்டுச்செல்ல உதவுகிறது.

இந்த நிலையில்தான் கடவுள் இல்லை என்பவர்களுக்கும் கூட நூறாண்டு எல்லா நலங்களுடன் வாழ்ந்திடும் விஷயத்துக்கான காரணம் புலப்பட்டது. அதோடு, அமுதம் கடைந்த கதையில் பெரியவர் சொல்லியிருக்கும் ரசமான விஷயமும் பாக்கி உள்ளது. அது...

40

முன்னதாக சில பரிமாற்றங்கள்.

இந்தத் தொடரை தொடர்ந்து வாசித்து வரும் பல அன்பர்கள், தொலைபேசி வழியாக என்னைத் தொடர்புகொண்டு மிக நெகிழ்வோடு பல கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு வருகிறார்கள்.

குறிப்பாக, தாழ்வுமனப்பான்மை ஏற்பட்டு தன்னை பாவியாக பாவித்துக்கொண்டு இப்படி ஒரு பாவியாகிவிட்டேனே என்று தங்களுக்குள் வருத்தப்படுகிறவர்களுக்கு பெரியவரின் விளக்கம் மிகப்பெரும் மனத்தெளிவை அளித்ததை அறிந்து மிகவே மகிழ்ந்தேன். அதோடு, தொடர்ந்து பக்தி புரியும் நிலையில் எத்தனை பக்தியோடு இருந்து என்ன பயன்? நடப்பது தானே நடக்கிறது... என்று விசாரத்தில் இருப்பவர்களையும் பெரியவரின் விளக்கம் பெரிதும் தெளிவுக்கு ஆட்படுத்தியுள்ளது.

எனக்குத் தெரிந்து சிறு தவறு கூட செய்யாமல், தான் உண்டு தன் வேலை உண்டு என்று வாழ்பவர்கள் பலர். அப்படிப்பட்டவர்களின் குடும்பங்களில் மிகவே ஏற்ற இறக்கங்கள்! குறிப்பாக, ஒரு கோயில் குருக்களுக்கு புத்தி சுவாதீனம் இல்லாத பெண் குழந்தை. திருமணம், குடும்பம் என்பதெல்லாம் அவள் வரையில் சாத்தியமே இல்லை. குருக்கள் தன் காலம் வரையில் எப்படியாவது அந்தப் பெண்ணைப் பராமரித்து விடுவார். அவர் காலத்துக்குப் பிறகு?

இந்தக் கேள்விக்கு விடை தெரியாமல் அவர் தவிப்பதும் துடிப்பதும் எனக்குத்தான் தெரியும். தினமும் கோயில் பூஜைகளில் அவர் குறை வைப்பதே இல்லை. ஒரு நாத்திகர் வரையில், 'இவர் கடவுள்

அருகிலேயே இருந்து அவருக்கே பிரசாத நைவேத்தியமெல்லாம் செய்து பசியாற்றுபவர். ஆனால், அந்தக் கடவுளோ அவரையே பெரிய மனபாரத்தோடு தான் வைத்துள்ளான். இவரா கடவுள்?' என்று கேட்கிறார்.

இதுபோல கோடி உதாரணங்களைக் காட்ட முடியும். எனக்குத் தெரிந்து குடும்பத்துக்குக் குடும்பம் ஒரு சோகக்கதை இருக்கிறது. 'எங்கள் பரம்பரைக்கே ஒரு குறைவுமில்லை' என்று ஒருவர் சொல்லி நான் இதுவரையில் கேட்டதே இல்லை.

'ஏன் இப்படி? எதனால் இப்படி?' என்னும் கேள்விக்கு, எனக்குத் தெரிந்து நமது மதம் மட்டும்தான் 'கர்மவினை' என்று ஒரு தெளிவான பதிலைக் கூறியுள்ளது. அந்த பதிலும் மனதுக்குச் சமாதானமாகவே உள்ளது.

தவறையே பிழைப்பாகக் கொண்டிருப்பவன் சுகமாக வாழ்வதும், நேர்மையாகப் பிழைப்பவர்கள் துன்பப்படுவதும் மிக எதிர்மறையான சமாச்சாரங்கள். கர்மா லாஜிக்படி பார்க்கும்போது, இந்த எதிர்மறை விஷயம் ஒரு புரிதலை அளித்து விடுகிறது.

தவறானவன் கணக்கில் பூர்வ புண்ணியம் செயலாற்றுவதையும், நிகழ்வில் அவன் செய்யும் பாவங்கள் எதிர்காலத்தில் அவன் பாவியாகப் போவதையும் உணர்த்துகின்றன. ராமாயணத்தில் கூட ஒரு காட்சி! சீதா தேவியைத் தேடி இலங்கை வரும் அனுமன், ராவணனை அவன் தர்பாரில் நேருக்கு நேர் சந்திக்கும்போது ராவணனை திருந்தத்தான் சொல்கிறான். அப்போது, இந்த பூர்வ புண்ணியத்தைக் குறித்து அவன் சொல்வது மிக முக்கியம்.

"ராவணா... இதுவரை செய்த பாவங்கள் போதும். உன் பூர்வ புண்ணியங்களால்தான் நீ அழியாமல் இதுவரை தாக்குப்பிடித்துக் கொண்டிருக்கிறாய். அந்த புண்ணியக் கணக்கு பூஜ்யமாகி விட்டால், உன்னைக் காப்பாற்ற எவர் வந்தாலும் இயலாது. அதன்பின் உனக்கு நீயே எதிரியாகி விடுவாய். உன் அழிவும் உறுதியாகிவிடும். இப்போது கூட நீ திருந்திவிட அவகாசம் இருக்கிறது. நீ உன் தவறை உணர்ந்து சீதா மாதாவை என் பிரபுவிடம் ஒப்படைத்துவிடு. அவரும் உன்னை மன்னித்து விடுவார். நீயும் உன் இலங்கை நகரமும் ரட்சிக்கப்படுவீர்கள்" என்கிறான்.

ஆனால், ராவணன் அதைக் கேட்கவில்லை. முடிவு என்னாயிற்று என்பதும் நமக்குத் தெரியும். எனவே, இன்று பளபளப்பாக பலர்

இருப்பதற்கும் சரி, நலிந்து வலியோடு கிடப்பதற்கும் சரி, கர்ம வினைப்பாடே காரணம். இந்த வினைப்பாடு ஒன்றும் சாதாரணமானதல்ல. அதை இப்போது பெரியவர் வாயாலேயே கேட்போம்...

“இந்த மனித சமூகத்தை ஒரு மரம் என்று எடுத்துக் கொள்வோம். இந்த மரத்தில் எத்தனை இலைகள், பூக்கள் இருக்கின்றன? சீசனுக்கு சீசன் அத்தனை இலைகளும் பூக்களும் உதிர்ந்து கொண்டு இருக்கின்றன. விழுகிற பூக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், பூ விழுந்த பின் உண்டாகிற பிஞ்சுகள் கொஞ்சம்தான்!

அந்தப் பிஞ்சுகளிலும் வெம்பி விழாமல் கடைசி ஸ்டேஜ் வரை பக்குவமாகி பழுத்த பழமாகிறவை மிகவே கொஞ்சம்தான்! இயற்கையில் இப்படித்தான் இருக்கிறது. ஜீவ சிருஷ்டியிலும் ஏராளமானவர் இலையாயும், பூவாயும், சருகாய், வாடலாய் கருகி விழுந்து, காயிலும் ஏராளமானவை வெம்பி விழுந்தும், பட்சிகளும், குரங்குகளும் கடித்து விழுந்தும், முடிவாக மிஞ்சும் கொஞ்சமே பழமானாலும் போதும். அதுவே சிருஷ்டிக்கு பிரயோஜனம் என்று தான் பகவான் லீலை பண்ணிக் கொண்டிருக்கிறான்.

ஜன சமூகத்திலும் எல்லோரும் நிறைந்த நிறைவாக ஆகி பூர்ணத்வம் அடையாவிட்டால் பரவாயில்லை. மரத்துக்குப் பழம் மாதிரி, ஜனத்தொகையில் எவரோ ஒருத்தர், ஆயிரத்தில் லட்சத்தில் ஒருத்தர் பூர்ணமாகி விட்டால்கூட போதும். அப்படி ஒருவர் உருவாவதற்குத்தான் இத்தனை பேர் சிருஷ்டியாகி, காமக்ரோதங்களிலும் மாட்டிக்கொண்டு தவிக்கிறதெல்லாம் நடக்கிறது.

அவ்வளவு பெரிய சமுத்திரத்தைக் கடைந்து ஒரு சின்ன அமிர் கலசம் எடுத்தது போல, இவ்வளவு ஜீவ கோடிகளுள்ள சம்சாரங்களைக் கடைவதிலிருந்து அமிர்த தத்துவமாக ஒரு உதாரண புருஷன் உண்டானாலும் போதும்.

மத்தைப் போட்டு கடைந்த உடனேயேவா வெண்ணெய் வந்துவிடுகிறது? பல நாழிகை போட்டு சிலுப்பினால்தான் வருகிறது. நடுவில் அவசரப்பட்டால் ஒரு பயனுமில்லை. நம்பிக்கை இழக்காமல் இருக்க வேண்டும்.

நிதானமாக, படிப்படியாக அபிவிருத்தி எல்லோருக்கும் உண்டு. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அந்த மத்து கயிற்றிலிருந்து நழுவிவிடாமல் பார்த்துக்கொள்வது ஒன்றுதான்.

அது என்ன கயிறு?

பக்தி என்கிற கயிறுதான்...

சிவானந்த லஹரியில் ஆச்சார்யாள் பரமேஸ்வரனிடம், 'பக்திக் கயிற்றால் என் மனக்குரங்கை நன்றாகக் கட்டிப்போடு' என்று சொல்லியிருக்கிறார் (த்ருடம் பக்த்யா பத்த்வா). நாம் விடாமல் பக்தி செய்ய வேண்டும். துன்பம் நீங்காமலேயே இருக்கிறது என்றால், விஷம் அதிகமாக உள்ளது என்று பொருள்.ஆனால், அது நீங்காமல் இருக்கும்போதுதான் ஆழ்ந்த தீவிர பக்தியைக் காட்ட வேண்டும். ஆனால், தலைகீழாக நாம் இவ்வேளையில் நடந்து கொள்கிறோம். நடப்பதுதான் நடக்கிறது; பக்தி ஒரு பலவீனமே என்று குறைபட்டுக் கொள்கிறோம். இங்கெல்லாம் நமக்கு துன்பத்தைச் சமமாகக் கருதி நேசிக்கும் மன அமைப்பு வேண்டும்" என்கிறார் பெரியவர்.

'துன்பத்தை இன்பத்துக்குச் சமமாகக் கருதி ஒருவரால் நேசிக்க முடியுமா? அது சாத்தியமா? ஒரு தலைவலி காய்ச்சல் என்றால் கூட தாங்கிவிடலாம். புற்றுநோய் வந்து புழுவாய் துடிக்க நேரிடும்போது அதை எப்படி மனதார நேசிக்க முடியும்? இந்த மாதிரி விஷயங்களைச் சொல்வதற்கு சுலபமாக இருக்கிறது. ஆனால், நடைமுறையில் ஒருவராவது அப்படி இருந்திருக்கிறார்களா?"

- இப்படிக் கேட்பவர்களும் இருக்கின்றனர். இந்தக் கேள்வியையும் புறந்தள்ள முடியாது. எனக்குள்ளும் இதுபோன்ற கேள்விகள் உண்டு. அதேசமயம் என் கேள்விக்குப் பதிலாக சிலர் கிடைத்தபோது நான் ஆச்சரியப்பட்டுப் போனேன்.

அந்தச் சிலர் யாரோ அல்ல! ரமண மகரிஷியும் பிராந்தர் எனும் சித்தர் பெருமகனாரும்தான்... இதில் பிராந்தரை முதலில் சிந்தித்து விடுவோம். பிராந்தர் என்றால் பைத்தியக்காரர் என்று பொருள். ஒரு பைத்தியக்காரரா சித்தராக விளங்கினார் என்று ஆச்சரியமாக இருக்கும்.

உண்மையில் அவர் பைத்தியமே அல்ல! அவரை அப்படிச் சொன்னவர்கள்தான் பைத்தியக்காரர்கள். அவர் மகாஞானி. அவர் வரையில், வாழ்கிற அன்றைய தினம் மட்டும்தான் அவருக்கு கணக்கு. நாளை என்பதை அது வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்றவர் அவர். கையில் இருப்பது இன்றைய தினம். இந்த தினத்தை சுயநலமில்லாதபடியும், அச்சமில்லாதபடியும், குழப்பமில்லாதபடியும் வாழ்ந்துவிட வேண்டும் என்பதே அவர் கொள்கை.

பிட்சை கேட்டு வீடுகள் நோக்கி செல்வார். தேவைக்குக் கிடைத்த நொடி திரும்பி விடுவார். ஒரு மரத்தடியில் அவரே மண் பானையில் குளத்துநீர் கொண்டு பிட்சை எடுத்துவந்த அரிசியைக் கொண்டு சோறு பொங்குவார். அதில் சில கவளங்கள் அவருக்குப் போதுமானது. மிச்சத்தை காக்கை குருவிகளக்குப் போட்டு அவை உண்பது கண்டு மகிழ்வார்.

‘நீ எடுப்பதே பிச்சை... இதில் உனக்கு தானம் ஒரு கேடா?’ என்று யாராவது அவரைப் பார்த்து கேட்டால், ஒரு சிரிப்பு சிரிப்பார்.

‘நாளைக்கும், அதன் மறுநாளைக்கும், அதற்கும் பின் வரப்போகிற தினங்களுக்கும் என்று பயத்தோடு சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிற நீ, முதலில் பிச்சைக்கும் பிட்சைக்கும் வேறுபாட்டைத் தெரிந்து கொள்’ என்பார் ‘பிச்சை கேட்பவன் பாவி... அந்தப் பாவிக்கு பிச்சையிடுபவன் அடைவது புண்ணியத்தை பிட்சை கேட்பவன் பாவியல்ல - பரதேசி! அந்தப் பரதேசிக்குப் பிட்சையிடுபவன் இழப்பது கொடிய கர்மங்களை...! உன் கர்மங்களை அழிக்கவே நான் பிட்சை கேட்கிறேன்’ என்பார்.

பிச்சைக்கும், பிட்சைக்கும் நடுவில் இவ்வளவு பொருட்செறிவா என வியப்பு ஏற்படும்.

‘பிறந்தவர் ஒருநாள் இறந்தே தீர வேண்டும் என்பது தெரிந்திருந்தும், கால காலத்துக்கும் வாழப்போவது போல சொத்து சேர்ப்பவன் புத்திசாலியா கோழையா?’ என்றும் ஒரு கேள்வி கேட்பார்.

இப்படி கருத்துச் சுரங்கமாக விளங்கும் இவரது இருப்பிடம் எது தெரியுமா? சுடுகாடு! அந்த சுடுகாட்டில் ஒருநாள் பிராந்தர் வரையில் ரசமான நிகழ்வு ஒன்று நிகழ்ந்தது. அது...

41

தொப்பூள்வரை தொங்கும் சிவந்த நாக்கு, மண்டை ஓட்டு மாலை, கரிய முட்டை விழிகள், பதினாறு கரங்கள். ஒவ்வொன்றின் பிடியிலும் ஒரு கொடிய ஆயுதம் என்று இவள் ஒரு அச்சமூட்டி! இத்தனை கொடிய தோற்றம் கொண்டவளிடமும் ஒரு கருணை மிகுந்த தன்மை இருப்பதுதான் விந்தை. அதுதான் அவளைத் துதிப்பவர்களுக்கு அவள் தரும் வரங்கள்!

இந்தக் காளிக்கு, அச்சமின்றி மயானத்தில் உறங்கும் பிராந்தரைப்

பார்க்கவும் கோபம்தான் வருகிறது.

‘ஒரு அற்ப மானுடன், அதிலும் கப்பரைப் பரதேசி! இவனுக்கு துளிகூட மயானம் குறித்த பயமோ, குறிப்பாக தன்னைப் பற்றிய அச்சமோ இல்லவே இல்லையே...’ என்று வியப்பவள், பாதித் தூக்கத்தில் இருந்த பிராந்தரை எழுப்புகிறாள்.

பிராந்தரும் கண் விழிக்கிறார். மயானக் காளியைப் பார்த்தபடியே கொட்டாவி விடுகிறார். துளிகூட திடுக்கிடலோ அச்சமோ பதற்றமோ இல்லை. பதிலுக்கு, காளியிடம்தான் ஆச்சரியப் பெருக்கு. கூடவே கோபமும்!

“அடேய் நான் நடமாடும் இடத்திலா உறங்குகிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்...” என்று கர்ஜிக்கிறாள். ஆனால், பிராந்தர் அதைக் கேட்டு சிரிக்கிறார்.

“அடிக் காளி... போயும் போயும் சிவனே என்று கிடக்கும் என்னிடத்திலா உன் வீரத்தைக் காட்டுவாய், நானே ஒரு பரதேசி! எல்லோரும் இறுதியாக வந்து அடக்கமாகும் இடத்தில் நான் இப்போதே வந்து படுத்துக் கிடக்கிறேன். என்னைப் போய் மிரட்டிப் பார்க்கிறாயே! பைத்தியக் காரி... போ... போ...” என்று மிக ஏளனமாக பதிலுரைக்கிறார்.

காளியின் ஆச்சரியம் இம்முறை இரு மடங்காகியது.

“அடேய்! என்னையா ஏளனம் செய்கிறாய்? உன்னை பட்சணமாய் புசித்து விடுவேன்! பார்க்கிறாயா?” என்று கேட்டாள். பிராந்தர் அசரவில்லை.

“அட, என்ன நீ? விடாமல் மிரட்டுகிறாய்! என்னை பட்சணமாய் புசிக்க விரும்பினால், சொல்லாதே! செய்துவிடு. இந்தப் பாழும் உடம்பைச் சுமந்து கொண்டு இதற்குச் சோறிடுவதற்காக நான் பிட்சை கேட்டு அலைவதெல்லாம் உன்னால் ஒழிந்து போகட்டும். மண்ணோடு மண்ணாகியோ, இல்லை தீயில் வெந்து சாம்பலாகவோ போகப் போவது! உன் பசிக்கு பட்சணமானால், அதைவிட பெரும்பயன் என்ன இருக்க முடியும்?” என்று திருப்பிக் கேட்டார் பிராந்தர்.

காளியால் இதற்குமேல் பேச முடியவில்லை. பிராந்தர் அச்சமற்றவர் மட்டுமல்ல! துளியும் சுயநலமில்லாதவர், முற்றிலும் பற்றற்றவர், அசலான ஒரு யோகி என்பது காளிக்குப் புரியவும், தன் கோர உருவை

மாற்றிக்கொண்டாள். லட்சுமீகரமாய் பிராந்தரைப் பார்த்து சிரித்தாள்.

“அடடே, தோற்றம் மாறிவிட்டதே! இது எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா? உனக்கெதற்கு அந்த கோர உருவம்?”

“அப்படியானால், உனக்கு இந்த அழகான ரூபம் தான் பிடித்திருக்கிறதா பிராந்தா?”

“இது நன்றாயிருக்கிறது என்றேன். பிடித்திருக்கிறது என்று உடனே பொருள் கொள்ளாதே! எனக்கு எல்லாமே ஒன்றுதான்!”

“ஆம்... உன் சொல், செயல் இரண்டிலும் நான் உயர்ந்த யோக லட்சணங்களைப் பார்க்கிறேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்!”

“வரமா? எனக்கா?”

“ஆம்... நான் ஒருவருக்குக் காட்சி தரும்போது அவர் கேட்கும் வரங்களை அளிப்பதுதான் என் வழக்கம்.”

“நான் இங்கே அப்படி எதையும் கேட்கப் போவதில்லை...”

“எதனால் இப்படிச் சொல்கிறாய்?”

“எனக்கு இப்போது என்ன குறை என்று உன்னிடம் வரம் கேட்க? ஒரு குறையுமில்லை! தூக்கம் கெட்டதுதான் இப்போது ஒரே குறை. நீ விலகினால், திரும்பவும் தூங்கத் தொடங்குவேன்.”

“பிராந்தா... இந்த மயான வெளியின் தூக்கத்தைப் பால பல ஆயிரம் மடங்கு சுகமான விஷயங்கள் சொர்க்கத்தில் உள்ளன. அங்கு செல்ல உனக்கு விருப்பமில்லையா?”

“இல்லை... நான் இப்போதே மனதளவில் சொர்க்கத்தில்தான் இருக்கிறேன். எனக்கெதற்கு தனியாக ஒரு சொர்க்கம்?”

“சரி, சொர்க்கம் வேண்டாம். மோட்ச கதி கூடவா வேண்டாம்?”

“மோட்சம் வேண்டும்தான்! ஆனால், நான் அனுபவிக்க வேண்டிய கர்மங்கள் நிறைய உள்ளன. என் காலைப் பார் தெரியும்...”

- பிராந்தர் தன் காலைக் காட்டுகிறார். காளியும் பார்க்கிறாள். அது யானைக்கால்! சரியான வியாதிக்கால்!

“அடடே... கொடிய ரோகம் உன்னைப் பீடித்துள்ளதே! நான் இதை இப்போது போக்கி விடட்டுமா?”

“வேண்டாம்... வேண்டாம்... இது கர்மத்தால் வந்தது. இதை நான் அனுபவித்தே தீர்க்க விரும்புகிறேன். அனுபவித்து தீர்த்த பிறகு மோட்சம் பற்றி சிந்திப்பேன்.”

“நான் வரம் தருகிறேன் எனும்போது ஏன் வேதனையை அனுபவிக்க எண்ணுகிறாய்?”

“தாயே... நான் உன் பொருட்டு ஒரு உபாசனையும் செய்யவில்லை. இருந்தும் நீ பிரசன்னமாகி உதவுகிறேன் என்கிறாய். நான் இந்த வலிக்கு பயந்து உன் உதவியை ஏற்பதை இகழ்வாகக் கருதுகிறேன். நீ தவறாகக் கருதாமல் விலகுவாயாக!”

“நான் பராசக்தியின் அம்சம். என் அருளைப் பெறுவதா இகழ்வு?”

“அருளைப் பெறுவது இகழ்வல்ல அம்மா! அதைப் பெற்றிடும் வழிமுறை மிக முக்கியம், அடுத்து உன் வரத்தை நான் ஏற்றால், இந்த யானைக்கால் வியாதிக்கு நான் பயந்ததாக ஆகிவிடும். வியாதிக்குப் பயப்படுவது சராசரி மானுடன் தன்மை. நான் அந்த நிலையைக் கடந்து எதற்கும் அஞ்சாமல் திகழ விரும்புகிறேன். அந்த விருப்பத்தில்தான் இப்போதைய என் வாழ்வு உள்ளது. என்வரையில் வலிதான் வலிமை, துன்பமே நன்மை! நீ போய் வா...”

- பிராந்தர் சொல்லவும் காளி வியந்தாள். மகிழ்ந்தாள். மலர் மாரி தூவி வாழ்த்தினாள். ‘பிராந்தா! நீ ஞானிகளுக்கு இலக்கணம்’ என்றாள்.

பிராந்தர் இப்படி என்றால், நம் சம காலத்தில் வாழ்ந்த ரமண மகரிஷி வலியை நேசித்த பெரும் உதாரண புருஷர்.

புற்றுநோயால் அவர் பாதிக்கப்பட்டதை நாடறியும். அந்த நோயின் வேதனையை அணு அணுவாய் ரசித்தவர் அவர். அந்த நோய்க்கு சிகிச்சை தந்து அறுவை சிகிச்சை புரிய மருத்துவர் விழைந்தபோது, மயக்க ஊசி போடத் தயாராகிறார். ரமணரோ, “எதற்கு இந்த ஊசி? தேவையில்லை. நீ உடலை அறுத்து அறுவை சிகிச்சை செய். அப்போது வலிக்கும் என்பது எனக்கும் தெரியும். இந்த உடம்பால் பேரின்பங்களையும் பரவசங்களையும் மட்டும் தான் அனுபவிக்க வேண்டுமா? பெரும் வலியையும் அனுபவித்து அறிய விரும்புகிறேன். இல்லாவிட்டால், இன்பம் துன்பம் இரண்டும் என் வரையில் சமம் என்று

கருத வேண்டிய ஒரு சன்யாசி நான் என்பது பொய்யாகி விடாதா” என்று கேட்டவர் ரமணர்!

இப்படி ஒருவருக்கு இருவர் வலியையும் நேசித்துள் ளனர். இவர்களின் மனப்பாங்கு நமக்கு வாய்ப்பது மிக அரிது. இவர்கள் அளவு நாம் வலியை எதிர்கொள்ள வேண்டாம். இவர்கள் நூறு சதவிகிதம் என்றால், நாம் ஒரு ஐந்து அல்லது பத்து சதவிகிதம் கூடவா வலியை எதிர்கொள்ளக் கூடாது?

பெரியவரின் பக்திக்கான விளக்கமும், பிராந்தர், ரமணர் மூலமாக உறுதிப்படுவதை நாம் உணர வேண்டியது முக்கியம்.

பக்தியின் சிறப்பு, மனதின் தன்மை பற்றி எல்லாம் பெரியவர் விளக்கமாய் சொன்ன பிறகு நமக்குள்ளேயும் ஒரு தெளிவு. நாம் எவ்வளவு பெரிய பாவியாக இருந்தாலும் அது குறித்து விசனப்பட தேவையில்லை. பாவி என்பதை உணர்ந்து பரிகாரமாக பக்தி செய்து பிராயச்சித்தம் தேடிக்கொள்ள ஏராளமான வழிகள் இருக்கின்றன. இந்த வழிகளில் சென்றால் கடைத்தேறி விடலாம் என்பதும் தெளிவாகிறது.

கூடவே எதற்கு இத்தனை வழிகள்? ஏன் ஒரு வழி என்றோ, ஒரே வழி என்றோ இல்லை என்றும் கேள்விகள் எழுகின்றன. இதெல்லாம் ஆன்மீகத்தில் அவ்வப்போது எழுப்பும் கேள்விகள். நமக்குள் எழும்பும் கேள்விகள் பெரியவரிடம் மட்டும் எழும்பாது போகுமா என்ன? அது குறித்த அவர் கருத்தை அவர் சொற்களின்படியே பார்ப்போமே!

“ராமானுஜர் என்னும் மகான் சரணாகதி என்கிற ஒரு விஷயத்தை மட்டுமே மையமாக வைத்து விசிஷ்டாத்வைத பாதையை அல்லது மதத்தை உருவாக்கியருளினார்.

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு முக்கியமானவை அஷ்டாட்சரம், த்வயம் என்ற இரு மந்திரங்களும் தான். கீதையின் சரம ஸ்லோகமான ‘ஸர்வதர்மான் பரித்யஜ்ய’ என்கிற ஸ்லோகமும், விபீஷண சரணாகதியின்போது ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி தம்முடைய சரணாகத ரட்சக விரகத்தைச் சொல்கிற ராமாயண ஸ்லோகமும் முக்கியமானவை ஆகும்.

ராமானுஜருக்குப் பிறகு வடகலை, தென்கலை என்று இரண்டாகப் பிரிந்ததும் இந்த சரணாகதிக்குள்ளேயே இருக்கிற மாறுபாடுகளை வைத்துத்தான்.

பூனைக்குட்டி, தனக்கென்று ஒரு பிரயத்தனமும் இல்லாமல்

இருக்கிறதல்லவா? அதை தாய்ப்பூனை, தானாகத் தானே வாயில் கவ்விக்கொண்டு போகிறது? இம்மாதிரி நாம் பெருமாள் விட்ட வழி என்று கிடப்பது தான் நிஜ சரணாகதி என்பது தென்கலைக்காரர்களின் அபிப்ராயம். இதற்கு 'மார்ஜார கிசோர நியாயம்' என்று பேர். மார்ஜாரம் என்றால் பூனை, கிசோரம் என்றால் குட்டி இந்தப் பூனைக்குட்டி முறைதான் தென்கலை.

வடகலைக்காரர்களின் அபிப்ராயம் என்னவென்றால், குரங்குக்குட்டி என்ன பண்ணுகிறது? அது தானே தாய்க் குரங்கை இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறது. இதே மாதிரி நாமேதான் பிரயத்தனம் செய்து பகவானைப் பிடித்துக்கொள்ள வேண்டும். இந்த ஒரு யத்தனம் தவிர பாக்கி விஷயங்களில்தான், அவன் விட்ட வழி என்று இருக்க வேண்டும். இதற்கு "மர்க்கடகிசோர ந்யாயம்' என்று பெயர்.

இதில் இரண்டுக்கும் அடிப்படையாக இருப்பது சரணாகதி.

தானே பிரம்மம் என்கிற பிரம்மபாவனை ஞானமார்க்கத்துக்கு மையம். தான் ஒன்றுமே இல்லை என்னும் சரணாகதி பாவனை பக்தி மார்க்கத்தின் மையம். இந்த இரண்டும் ஒன்றுதான்! அதெப்படி? இரண்டுக்கும் மலைக்கும் மடுவுக்குமான இடைவெளி உள்ளதே என்று மேலெழுந்தவாரியாக பார்க்கிறபோது தோன்றும். ஆழ்ந்து பார்த்தால் இரண்டும் ஒன்றுதான் என்பது புரியும்.

எப்படி?"

42

அவர் வாயாலேயே அவர் சொல்ல நாமும் கேட்போம்.

"தானே பிரம்மம் என்று சொல்லும்போது சொல்கிற 'தான்' வேறு. 'தான் ஒன்றுமேயில்லை' என்கிறபோது சொல்கிற 'தான்' வேறு. தானே பிரம்மம் என்று ஒரு அத்வைதி சொல்கிறபோது, தன்னுடைய சரீரம், இந்திரியம், புத்தி, மனஸ் - என்று இந்த எதுவும் நிஜமான தான் இல்லை என்று தள்ளிவிட்டு, மிஞ்சி நிற்கிற ஆத்மாவைத்தான் பிரம்மம் என்கிறான்.

சாதாரணமாக எந்த ஜீவாத்மாவும் - அஞ்ஞானத்தினால் 'தானாக' நினைக்கும் இந்த சரீரம், இந்திரியம், புத்தி, மனஸ் இதுகளிலிருந்தெல்லாம் நாம் விடுபட வேண்டும். இவை இழுத்துக்கொண்டு போகிறபடி ஓடாமல், இவற்றை இறைவனின்

பொற்பாத கமலங்களில் ஒன்றுமேயில்லை என்கிற மாதிரி கிடத்திவிட வேண்டும் என்கிற அர்த்தத்தில் தான், 'தான் ஒன்றுமேயில்லை' என்று பக்தி மார்க்கக்காரன் சரணாகதி பண்ணுகிறான்.

அத்வைதி 'தானாக'ச் சொல்லும் ஆத்மாவுக்கு அன்னியமாக அவன் தள்ளுவதையேதான், த்வைத, விசிஷ்டாத்வைதிகள் 'தான்' என்று வைத்து பகவானின் பாதத்தில் தள்ளுகிறார்கள். ஆகையால், இரண்டும் ஒன்று தான்.

அகங்காரம் (Ego) போக வேண்டும் என்பதுதான் இரண்டு மார்க்கத்துக்கும் பொதுவான லட்சியம்.

அத்வைத பாஷ்யங்களிலும் ப்ரகரண க்ரந்தங்களிலும் ஞான மார்க்கத்தைச் சொன்ன ஆச்சார்யாள், இங்கே பக்தராக இருந்து அதே லட்சியத்துக்கு சரணாகதியை வழியாகச் சொல்லியிருக்கிறார்.

'சரணம் கரவாணி தாவகௌ சரணௌ' - உன் இணையடிகளில் சரணாகதி செய்கிறேன் என்கிறார்.

'கருணாமய' என்றதால் கருணைக் கடலான பகவான் சரணாகதனை நிச்சயம் ரட்சிப்பான் என்று உணர்த்துகிறார்.

'நாராயண கருணாமய'

முதல் சுலோகத்தில் 'விஷ்ணோ' என்று ஆரம்பித்துவிட்டு, ஆறாவது சுலோகத்தில் 'தாமோதர' என்று கிருஷ்ணாவதாரத்தைச் சொல்லி அழைத்தவர், இங்கு 'நாராயண' என்கிறார். மதத்தின் பெயரைப் பார்க்கும் போது விஷ்ணுவின் பெயரை வைத்து அது வைணவம் எனப்பட்டாலும், அதற்கு முக்கியமான அஷ்டாக்ஷரீ மந்திரத்தில் நாராயண நாமம்தான் வருகிறது. 'கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்று ஆழ்வாரும் பாடியிருக்கிறார். ஆச்சார்யாளேகூட தமது அத்வைத பாஷ்யங்களில் சகுண பிரம்மத்தைச் சொல்லும்போது நாராயணன் என்றே குறிப்பிட்டிருக்கிறார். சன்னியாசிகளுக்கு யார் நமஸ்காரம் பண்ணினாலும் அவர்கள், 'நாராயண நாராயண' என்றே ஆசீர்வதிக்க வேணுமென்று அவர்தான் ஏற்பாடும் பண்ணியிருக்கிறார்.

இங்கே ஆச்சாரியாள் 'நாராயணனின் சரணத்தை நான் சரண் அடைகிறேன்' என்கிறார் அல்லவா? இதே அர்த்தத்தில்தான் ஏறக்குறைய இதே வார்த்தைகளிலேயே வைஷ்ணவர்களின் த்வய மந்திரம் இருக்கிறது.

இந்த மாதிரி அத்வைத, விசிஷ்டாத்வைத ஒற்றுமைகளைப் பார்க்கிறபோது ரொம்பவும் சந்தோஷமாயிருக்கிறது.”

- பக்தி குறித்தும், ஞானம் குறித்தும் விளக்கம் தந்து வந்த நிலையில், இறுதியில் அது அத்வைத, விசிஷ்டாத்வைத ஒன்றுமையாக இருப்பதைச் சுட்டிக் காட்டி அந்த ஒற்றுமைக்காக பெரியவர் சந்தோஷப்படுவதைப் பார்க்கும்போது நமக்கும் மிகவே சந்தோஷமாயிருப்பதை மறுக்க முடியுமா?

அப்படி ஒருவேளை யாராவது மறுத்தால், அவர்களை நாம் மறுத்துவிட்டு அந்த ஒற்றுமையைத் தொடர்வதுதான் சரி என்று என் மனதுக்கும் படுகிறது.

இந்தத் தொடரை எழுதிவரும் நான் ஒரு வைணவன் என்பதை முன்னே பதிவு செய்திருக்கிறேன். என் முன்னோர்களில் பலர் வீர வைணவர்களாய், மறந்தும் புறந்தொழாது வாழ்ந்து மறைந்தவர்கள்.

ஆனால், என் வரையில் வைணவரோ சைவரோ இல்லை. மாத்வரோ... இன்று பிராம்மணனாக வாழ்வதே பெரிய விஷயம். குறிப்பாக, பிராம்மண அடையாளங்களைத் துறந்து விடாதபடி வாழ்வது இன்று மிகவே பெரிய விஷயம். அந்த நாளில் ஒரு பிராம்மணன் அவனது நெறிப்படி வாழ்ந்திட பெரிய தடைகளோ குறுக்கீடுகளோ அதுவுமில்லை எதிர்ப்போ பெரிதாக இருந்ததில்லை. அந்த நாளில் அவன் பிராம்மண நெறிப்படி வாழாது போனால்தான் அது தவறாகவும், ஏன் பாவமாகவும் கூட கருத இடமளித்தது. இன்று அப்படி இல்லை.

பிராம்மணன் வேதம் மட்டுமே ஓதிக்கொண்டு ஒரு கோயிலை மட்டுமே நம்பி தன் குடும்பத்தை கரை சேர்க்க முடியாது. கோயில் ஊழியம் பார்ப்பவர்களில் பெரும்பாலோர், வாடகை வீடுகளில் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்க மிகவே சிரமப்படுகிறார்கள்.

இவர்கள் எதிரில் சக பிராம்மணர்கள் படித்து டாக்டர், வக்கீல், பேராசிரியர் என்று திகழ்வதைப் பார்க்கும்போது, இவர்களுக்கும் அதுபோல் ஆகத்தான் தோன்றுகிறதே ஒழிய, அப்பா தாத்தா வழியில் கோயில் ஊழியம் பார்க்கப் பிடிக்கவில்லை. இருந்தும் விடாப்பிடியாக நம்முடைய பெருமாள், நம்முடைய சுவாமி நாம் விட்டுவிடக் கூடாது என்று இந்த இறைபணியை தொடர்கின்றவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

எழுபது சதவிகித பிராம்மணர்கள் இன்று உயிர் வாழ வேண்டுமானால்,

கிடைத்த வேலையைச் செய்தாக வேண்டும். எந்தத் தொழிலும் தாழ்வில்லை என்று, 'செய்யும் தொழிலே தெய்வம் அதில் திறமைதான் நமது செல்வம்' என்று வாழ்ந்தாக வேண்டும். அப்படித்தான் வாழ்ந்தும் வருகிறார்கள்.

அவ்வளவு ஏன்? ராணுவத்தில் சோல்ஜர் ஆக இன்று பிராம்மணர்கள் சேர்ந்துள்ளனர். அங்கே பிராம்மண அடையாளமாக அவர்களிடம் காணப்படுவது பூணூல் ஒன்று மட்டும்தான். மற்ற அடையாளங்களுக்கு அந்த வாழ்வில் இடம் இல்லை.

இன்று குடும்பத்துக்கு ஒருவராவது கடல் கடந்து வெளிநாடுகளுக்குச் சென்று அங்கே பிழைக்கும் நிலை! கடல் கடந்து எனும்போதே ஒரு ஆசார நெறி மீறப்பட்டு விடுகிறது. உள்ளூரில் வாழ வழியற்ற நிலையில், தன் திறமைக்கும் அறிவுக்கும் ஏற்ற வேலை எங்கு கிடைக்கிறதோ அங்கு செல்வதில் தவறில்லை எனும் நிலையில், 'அக்ரஹாரம்' எனும் கட்டமைப்பில் ஒன்றாக வாழ்ந்தவர்கள், அந்த அமைப்பு மெல்ல உடைபட, உதிர்ந்து உதிர்ந்து உலகின் எல்லா பாகங்களுக்கும் செல்ல வேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள்.

மனிதன் எப்போதுமே உலகம் எனும் பூகோளம் சார்ந்த, அதன் பஞ்சபூத சக்திகளுக்குக் கட்டுப்பட்டு அதையொட்டியே வாழ முடிந்தவன் என்பதே பேருண்மை. வெளியே மழை கொட்டும்போது ஒரு குடையால் நாம் வேண்டுமானால் நனையாமல் காத்துக் கொள்ளலாம். பெய்யும் மழையின் அளவைக் கூட்டவோ குறைக்கவோ அவனால் ஆகாது. வெயிலின் போதும் இது தான் நிலைப்பாடு. இந்த பூகோள நிலவியல்படி ஒரு வருடம் பஞ்சம் வந்து அரிசி கோதுமை கிடைக்காமல் போக நேரிடும்போது, எந்த தேசத்தில் விளைந்துள்ளதோ அந்த தேசத்திலிருந்து இறக்குமதி செய்துதான் சாப்பிட்டாக வேண்டும். அதில் ஆசாரம் பார்க்க முடியாது.

ஒரு கோணத்தில் கொஞ்சம் ஞானத்தோடு சிந்தித்தால், இந்த ஆசாரம் என்பதே ஒற்றுமையாக ஒரே இடத்தில் வாழ்ந்த காலத்தில் மட்டும்தான் சாத்தியம் என்பது தெரியவரும். அப்போது வாழ்ந்த ஊரிலேயே அரிசி பருப்பில் இருந்து காய்கறிகள் வரை சகலமும் தன்னிறைவோடு கிடைக்கும் ஒரு சூழலும் இருந்தது. எப்போது மக்கள் கூட்டம் பெருகி, ஊர் உடைந்து நகரமாகி, நகரம் உடைந்து நாடாகி, நாடும் உடைந்து உலகமாகிவிட்டதோ, அப்போதே அன்றைய சாத்தியக்கூறுகள் எதுவுமே இன்று சாத்தியமில்லை என்றாகிவிட்ட.

என்னோடு டி.வி.எஸ்.நிறுவனத்தில் பணியாற்றிய ஒரு நண்பர், கம்பெனி கேன்டீனில் கூட சாப்பிட மாட்டார். வீட்டிலிருந்தே சமைத்துக்கொண்டு வந்துவிடுவார். இதற்காக அவர் மனைவி அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து அடுப்பு மூட்டி சமைத்தாக வேண்டும். அவர் அசரவில்லை. அதேபோல பளிச்சென்று திருமண் காப்பு தரித்துதான் வருவார். நிறுவனமும் இவரது இந்த ஆசாரத்துக்கு குறுக்கே நிற்கவில்லை. ஆனால், நிறுவன பாதுகாப்பு விதிமுறைப்படி இவர் காலுக்கு ஷூ போட்டுக்கொண்ட ஆக வேண்டும். அதுவோ, மிருகங்களின் தோலால் ஆனது. அடுத்து நிறுவனம் தரும் யூனிஃபார்மைத்தான் அணிந்தாக வேண்டும். அது ஒரு வடநாட்டு மில்லில் பல தொழிலாளர்கள் கைபட்டு தயாரான ஒன்று. இங்கே எல்லாம் அவரால் தன் ஆசாரத்தை கடைபிடிக்க முடியவில்லை. இதை சிலர் வேடிக்கையாக, 'இப்படி சாப்பாட்டு விஷயத்தில் மட்டும் ஆசாரத்தோடு இருந்துதான் தீர வேண்டுமா? இது என்ன பாதி ஆசாரம்?' என்று அவரிடம் கேட்கும்போது, 'என்னால் முடிகின்ற இடத்தில் எல்லாம் இருக்க முற்படுவதே இன்று என் ஆசாரம்' என்று உறுதியாக அவர்களுக்கு பதில் கூறுவார்.

காலமாற்றம், காலமாற்றம் என்று பலரும் கூறுவதன் பின்புலம், பிராம்மணர்கள் வரையில் அவர்களது ஆசாரத்தை அசைத்துப் பார்த்தது போல, எல்லா இனமொழி மக்களிடமும் அது தன் சக்தியைக் காட்டி பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்துவிட்டது.

கைத்தறி நெய்கிறவர்கள் பவர்லூமுக்கு மாறிவிட்டனர். நகை செய்யும் ஆசாரிமார்களும் எந்திரம் வரவும் பிழைப்பிழந்து அதற்கேற்ப மாறவேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டது.

மக்கட்தொகைப் பெருக்கம், பொருளாதாரம் சார்ந்த வாழ்க்கைப்பாடு இந்த இரண்டும் பல நியதிப்பாடுகளை உடைத்து புதிய விதிப்பாடு உருவாகி வருகிறது. இன்னமும்கூட அதில் மாற்றம் வரும். மாற்றம் - இது ஒன்று தான் மாறாதது!

இந்த மாற்றங்களில் நல்லதென்றும் தீயதென்றும் இரு கூறுகள். இதில் எதன் பக்கம் நாம் தெளிவோடும் திடத்தோடும் இருக்கிறோம் என்பதில்தான் நம் அன்றாட வாழ்வின் வெற்றி உள்ளது. ஆன்மீகம் மட்டுமே இதற்கு பெரும்பலம் தருவதாக இருக்கிறது. ஆனால் அதனுள்ளும் - அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் என்று பிரிவுகள்; வர்ணாஸ்ரம வேறுபாடுகள்!

இதில் அவரவரும் என் நிலைப்பாடே உயர்வானது, உன்னதமானது என்று செருக்கு கொள்ளும் தன்மை வேறு! ஆனால், பெரியவர் பார்வை இதனுள் உள்ள பேதங்களை காரண காரியத்தோடு பார்த்து, எல்லாம் ஒன்றுதான் என்கிற பேருண்மையை உணர்த்தும்போது, அந்த ஞானத்தை எண்ணி மனது இரும்பூதெய்துகிறது. இதற்குப் புறம்பாக சிலர் பேசிடும்போதோ அல்லது சிந்திக்கும்போதோ அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் என்றும் கருத வேண்டியுள்ளது.

43

இப்போது நடந்துகொண்டிருப்பது கலியுகம். இந்தக் கலியுகத்தில் நம் காலத்தை 'விஞ்ஞான காலம்' என்று தாராளமாகச் சொல்லலாம். இந்த விஞ்ஞானம் ஒரு வகையில் நம் அவ்வளவு பேரையும் சப்தத்தால் ஒன்றாகச் சேர்த்து கட்டிப் போட்டுவிட்டது. இது கிட்டத்தட்ட அரை தேவநிலை!

அதாவது, விண்ணில் உள்ள தேவர்களின் நிலையைத்தான் நான் இப்படிச் சொல்கிறேன். அவர்களைப் பற்றி புராணங்கள் வாயிலாகத் தெரிந்து கொண்டதில் அவர்களின் பலவித சக்திகள் நமக்கு ஆச்சரியம் தருவதாக இருப்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், அவர்களின் ஒரு சக்தி நமக்கு வசப்பட்டுவிட்டது. அதுதான், நினைப்பதை நினைத்தபோது பேச முடிவது! நாம் பேச நினைப்பவர் இந்த உலகில் எந்த மூலையில் இருந்தாலும், செல்போன் மூலமாக இன்று நொடிப் பொழுதில் தொடர்புகொண்டு பேச முடிகிறது நம்மால்... பேசுவதோடு அவர்களைப் பார்க்கவும், அதே செல்போன் திரையில் கேமரா வந்துவிட்டது. இதனால் நமது திட சொரூபம்தான் அருகருகே இல்லை. மற்றபடி ஒளிச் சரீரமும் ஒலிச் சரீரமும் பிரிந்தெல்லாம் இல்லை.

சமீபத்தில், அமெரிக்காவில் இருக்கும் என் நண்பரின் மகன் அங்கிருந்து கொண்டே இங்கே கிரிமிடோரியத்தில் தன்னைப் பெற்ற தாய்க்கு கொள்ளி போட்ட சம்பவத்தை நான் காண நேர்ந்தது. 12,000 மைல் தொலைவுக்கு அப்பால் இருந்து கொண்டு அவன் தாயின் சடலத்தைப் பார்த்து அழ, அவன் அழுவதை இங்கிருப்போர் பார்த்து அழ, வெப் கேமராவை அந்தத் தாயின் காலடிக்குக் கொண்டு சென்று வைத்த நிலையில் அவன் அதை அங்கிருந்து கொண்டே பிடித்துக்கொண்டு அழுததைப் பார்த்தபோது, அங்கே அசலுக்கும் நிழலுக்கும் எனக்கு

வேற்றுமையே தெரியல்லை.

தாய்க்குச் செய்யவேண்டிய அந்திமக் கிரியைக்கான மந்திரங்களைக் கூட பிராம்மணர் சொல்லச் சொல்ல அவன் திருப்பிச் சொல்லி, அவன் சார்பில் இங்கே பார்க்க தாயின் மார்பு மீது கற்பூரம் கொளுத்தப்பட்டு அந்தச் சிதையும் மின் தகனத்துக்கு, ஷெல்ட்டருக்குள் நுழைந்ததும். பின் ஒரு மணி நேரத்தில், ஒரு மண் கலயத்தில் சுடச்சுட தகனச் சாம்பலைக் கரைத்துவிட்டுத் திரும்பினோம். கிட்டத்தட்ட எல்லாமே ஒரு இருபது மணி நேர கால அவகாசத்துக்குள் நடந்து முடிந்துவிட்டது.

இதே அந்த நாளாக இருந்தால், பிணத்தைப் போட்டுக் கொண்டு காத்திருக்க வேண்டும். மயானத்துக்கு ஊர் பார்க்க நடந்தேதான் சென்றாக வேண்டும். அங்கே ஒருநாள் முழுக்க போட்டு எரிப்பான். மயானமும் அச்சமூட்டுவதாக இருக்கும்.

இன்று மயானம் ஒரு வென்னீர் அடுப்பு அளவு சுருங்கி, ஒன்றுமேயில்லாது போய்விட்டது. பத்து நாள் காரியமெல்லாம் கூட மூன்று நாளைக்குச் சுருக்கப்பட்டுவிட்டது.

ஒரு பிராம்மணர் ஒரு டூவீலரை வைத்துக்கொண்டு ஒரு நாளைக்கு மூன்று நான்கு அபர காரியமெல்லாம் செய்துவைக்குமளவு போய்விட்டார். அவரை விட்டால் அபர காரியம் செய்து வைக்க ஆளும் இல்லை. அபர காரியம் என்றில்லை. திருமணங்களே கூட இன்று பேக்கேஜ் விஷயங்களாகிவிட்டன. அந்த நாளில் ஒரு கல்யாண விஷயம், ஆறு மாத காலத்துக்கு சம்மந்தப்பட்ட குடும்பத்தை ஒரு ஆட்டு ஆட்டி வைத்துவிடும். அதிலும் கல்யாண முகூர்த்த நாளன்றும், அதன் முதல் நாள், மறுநாள் எனும் மூன்று நாளில் குடும்பத்தவர்க்கு இருக்கும் டென்ஷனைச் சொல்லி மாள முடியாது. வைதீக காரியம் ஒருபுறம், லௌகீகங்கள் மறுபுறம், விருந்து, சீட்டாட்டம் என்கிற ஜிகினாக்கள் ஒருபுறம் என்று கல்யாண வீட்டுக் களையை வார்த்தைகளால் விவரித்துவிட முடியுமா என்ன?

இன்று அது ஒரு பேக்கேஜ் விஷயம். ஒரே ஒரு செக்கில் தீர்கின்ற விஷயம். கல்யாண வீட்டில் வாசலில் கோலம் போடுவதில் இருந்து இறுதியாக கட்டுச் சாதக்கூடை கட்டித்தந்து பெண் மாப்பிள்ளை ஊருக்குப் புறப்படுவது வரையிலான சகலத்தையும் செய்து தர, இன்று பல விற்பன்னர்கள் வந்து விட்டனர்.

‘சந்திரசேகரம்’ என்று பெரியவர் குறித்த சிந்தனைப் போக்குக்கு நடுவே, எதற்கு இன்றைய இந்த வாழ்வின் பார்வைகள் என்று சிலருக்கு கேட்கத்

தோன்றலாம். காரணம், நிறையவே இருக்கிறது.

கணத்துக்கு கணம் மாறும் இந்த வாழ்வின் மாற்றங்களில், எல்லா அனுஷ்டானங்களும் வைதீக சம்பிரதாயங்களும் மாறலாம். ஆனால், பக்தி பாவனையில் மட்டும் மாற்றம் வந்துவிடவே கூடாது. அந்த பக்தி குறித்து பெரியவர், இன்றல்ல; 1960களிலேயே மிகுந்த தூரப் பார்வையோடு அனேக விஷயங்களைப் பேசியிருக்கிறார்.

இன்று என்னதான் விஞ்ஞானம் கையை வீசிக் கொண்டும் காலை ஆட்டிக்கொண்டும் கூத்தடித்தாலும், பக்திக்கு ஒன்றும் பெரிய கேடு வந்துவிடவில்லை என்றே கருதத் தோன்றுகிறது. இருபது முப்பது வருடங்களுக்கு முன்னால் நான் அழகர் கோயிலுக்குப் போனால், உள்ளே போய்விட்டு வர சற்று அச்சமாக இருக்கும். பெரிதாய் மனித நடமாட்டமே இருக்காது. உள்ளே சன்னிதியில் பட்டர் ஒரு ஓரமாய் உட்கார்ந்து கொண்டிருப்பார். இல்லாவிட்டால் சன்னிதி திறந்திருக்க, மடப்பள்ளியில் பிரசாதம் தயார் செய்து கொண்டிருப்பார். அங்கே போய் அவரைத் தேடிப்பிடித்து அழைத்துவர வேண்டும். இது தான் திருமோகூர் கோயிலிலும்! மீனாட்சி அம்மனைத் தரிசிக்க எனக்கு அன்று தேவைப்பட்டதெல்லாம் அதிகபட்சம் 30 நிமிடங்கள் தான். இன்று இந்த முப்பது நிமிட நேரம், பார்க்கிங் செய்ய மட்டுமே தேவைப்படுகிறது. உள்ளே போய் தரிசனம் முடித்துவர குறைந்தது இரண்டு மணி நேரமாகிறது.

இங்கேயே இப்படி என்றால், திருப்பதியில் கேட்கவே தேவையில்லை. ஐநூறு ரூபாய் கொடுத்து டிக்கெட் எடுத்து தரிசனம் செய்யவே ஆறு ஏழு மணி நேரமாகிறது என்றால், ஜனங்களிடம் பக்தி கரைபுரண்டு ஓடுகிறது என்பதுதானே நிஜம்?

ஆனால், உண்மையான பக்தி எது என்பதை அறிந்த சான்றோர்களோ இந்த பக்திப்பெருக்கை ஊதப்பட்ட ஒரு பலூன் போலத்தான் நினைக்கின்றனர். பெரும்பாலும் இந்த பக்தியை - வர்த்தக பக்தியாக, பரிமாற்ற பக்தியாக, கடவுளை ஒரு அரசனைப் போல பாவித்து அவனை புலவர்கள் தாஜா செய்து பொன்னும் மணியும் பரிசாகப் பெறுவது போன்ற பக்தியாகவே நினைக்கின்றனர்.

இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு இந்து தன் மதத்தை விளக்கிக் கொள்ளவும், இதிகாச புராணங்களைத் தெரிந்து கொள்ளவும் இன்று கஷ்டப்பட தேவையே இல்லை. பார்த்தும் தெரிந்து கொள்ளலாம், படித்தும் தெரிந்து கொள்ளலாம். கூட்டிக்கழித்துப் பார்த்தால், பக்திக்கு இதுதான்

பொற்காலமோ என்று கருதத் தோன்றுகிறது. ஆனால், தோராயமாக முப்பது வயதுக்குக் கீழே உள்ளவர்களிடம் பக்தி விஷயத்தில் ஆழ்ந்த ஈடுபாடோ இறை நம்பிக்கை ஒரு உன்னதம் என்கிற உணர்வோ இல்லை என்பதே நிதர்சனமாக உள்ளது.

இன்று எந்த இளைஞனும் நெற்றிக்குத் திலகம் இட விரும்புவதில்லை. மீறி இட நேர்ந்தாலும் ஒட்டியும் ஒட்டாமலும் தூசி விழுந்த மாதிரி விபூதி தரிக்கின்றனர். பெண்களோ ஒரு முற்றுப்புள்ளி அளவு பொட்டு வைத்துக் கொள்வதையே பெரிதாக நினைக்கின்றனர். சற்று கூடிப் போனாலும் 'நான் என்ன பத்ரகாளியா?' என்று கேட்கின்றனர். பாரம்பரிய உடையான பாவாடை, தாவணி வழக்கொழிந்தே போய்விட்டது. வீட்டு வாசலில் கோலம் போடுவது, செம்மண் இடுவது என்பதெல்லாம் இன்று ஒன் டைம் மேட்டர். ஒரு ஸ்டிக்கர் கோலத்தை ஒட்டி, செம்மண் இழைக்குப் பதிலாக சிவப்பு பெயின்டை வரைந்துவிட்டால் தீர்ந்தது கோலப் பிரச்னை. மாவிலைக்குப் பதிலாக பிளாஸ்டிக் இலைகளில் ஆன தோரணம் என்று சகல வைதீக விஷயங்களுக்கும் ஒரு ஆல்டர்நேட்டைக் கண்டுபிடித்துவிட்டோம்.

இப்படி காலத்துக்குரிய மாற்றங்களோடு பக்தி உணர்ச்சியும் தன் பயணத்தைத் தொடர்ந்தபடிதான் உள்ளது. ஆனால், மானுட பக்தி எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? பெரியவரின் குரல் வழியாகவே கேட்போம்...

"பகவானை எதற்காக பிரார்த்தனை பண்ண வேண்டும் என்பதில் அபிப்ராய பேதங்கள் உண்டு. இந்த லோக வாழ்வில் - நமக்கு எண்ணி முடியாத கஷ்டங்கள், சிரமங்கள், க்லேசங்கள், துக்கங்கள் ஏற்படுகின்றன. சரீர கஷ்டம், மன சஞ்சலம், பணமுடை, பயம், அவமானம் இப்படி கணக்கேயில்லாமல் அவமதிப்படுகிறோம். இவை தீருவதற்கு வேறு வழிகளைத் தேடுகிறோம்.

உடம்பு சரியில்லை என்றால் டாக்டரிடம் போகிறோம். பணக் கஷ்டம் என்றால் கடன் கொடுக்கக் கூடியவர்களிடம் போகிறோம். பலவிதமான பிரச்னைகளைத் தீர்க்க ராஜாங்க அதிகாரியிடம் போகிறோம். இப்படிப் பலவிதமாக நாம் நடந்து கொண்டாலும் இந்த கஷ்டங்கள் அவ்வளவும் தீர பகவானிடம் பிரார்த்தனை பண்ணிக் கொள்கிறோம். டாக்டர் மருந்துதான் கொடுப்பார். அது நமக்குப் பலிதமாக வேண்டுமே! ஒருவர் சகாயம் செய்வார் என்று பார்க்கப்போகிறோம். வழியில் ஒரு விபத்து நமக்கே ஏற்பட்டு விட்டால் என்ன பண்ணுவது? இதற்காக பிரார்த்தனை பண்ணுகிறோம்.

இப்படி பிரார்த்தனை பண்ணுவது தப்பு என்பது சிலபேருடைய அபிப்ராயம். நம் கர்மாவுக்காகத்தான் கஷ்டம் வருகிறது. பகவானேதான் இந்தக் கஷ்டங்களைக் கொடுத்து தண்டித்து கர்மாவைத் தீர்க்கிறான். அதனால் இந்த மாதிரி லௌகீக விஷயங்களுக்கு பிரார்த்தனை பண்ணவே கூடாது. பகவானுக்கே நமக்கு எதை, எப்போது, எப்படித் தர வேண்டும் என்று தெரியும்.

அதனால் அவனிடம் எதுவும் பிரார்த்திக்கவே கூடாது. அவனை ஸ்மரித்தால் அது ஆனந்தமாக இருக்கிறதல்லவா? இந்த ஆனந்தம் ஒன்றுக்காகவே ஸ்மரிக்க வேண்டும். பக்தி பண்ணுவதற்குப் பலன், பக்தியில் கிடைக்கிற மனநிறைவேதான்! இந்தப் பெரிய நிறைவை விட்டு விட்டு, பக்தியை சின்னச் சின்ன தற்காலிக நிறைவுகளுக்கு ஒரு உபாயமாக வைத்துக்கொள்வது ரொம்பவும் தப்பு.

- இப்படிச் சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். இம்மட்டில் பகவானே சொல்கிற வாக்குதான் நமக்கு பெரிய பிரமாணம். இவ்விஷயமாக ஸ்வாமி என்ன சொல்கிறார்?

கீதையில் கிருஷ்ண பரமாத்மா இப்படிச் சொல்கிறார். ‘என்னை நாலு தினுசான ஜனங்கள் பூஜிக்கிறார்கள். யார் அந்த நாலு வகைக்காரர்கள்? ஒருவன் ஆர்த்தன், இரண்டாமவன் ஜிஜ்ஞாசு, மூன்றாமவன் அர்த்தார்த்தி, நான்காமவன் ‘ஞானி’ என்கிறார்.

சரி; இந்த ஆர்த்தன் என்பவன் யார்?”

44

எது பக்தி? என்று கேட்கப்போய், நாலாவிதமான பக்தி புரிபவர்கள் இருக்கிறார்கள் என்று கீதையில் கிருஷ்ணபரமாத்மாவே சொல்லியிருப்பதை உதாரணம் காட்டி, அந்த நான்கு விதமான பக்தர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை பெரியவர் விவரிக்கிறார்.

“இந்த ஆர்த்தன் என்பவன் லௌகீக வாழ்வில் மிகவும் கஷ்டப்படுகிறவன். மனக்கஷ்டம், சரீர கஷ்டம், பணக் கஷ்டம் என்று அனேக கஷ்டங்களை உடையவன். இந்த கஷ்டங்கள் படுத்தும்போது அதன் துன்பம் தாளாமல் இவன் பகவானிடம் முறையிடுகிறான். ‘அப்பா எனது பாரத்தை இறக்கி வையப்பா’ என்று இப்படிப்பட்டவர்களே பிரார்த்தனை புரிகிறார்கள்.

இரண்டாவது விதமான பக்தனான ஜிஜ்ஞாஸு என்பவன், பகவானிடம்

கஷ்டம் தாளாமல் அழுபவனில்லை. இவன் பகவானிடம் ஞானத்தை வேண்டுபவன். அதற்காக பகவானின் கல்யாண குணங்களைப் படித்தும் கேட்டும் நினைத்தும் இன்புறுபவன். பகவான் நினைப்பாகவே இருப்பதற்கு வசதியாகத்தான் கதா காலட்சேபங்கள், உபன்யாசங்கள் நடக்கின்றன. அப்புறம் பகவத்கீதை, பாகவதம் என்று தலையணை தலையணையாக புத்தகங்கள் இருக்கின்றன. இப்படி சிந்தித்தும் படித்தும் கேட்டும் பகவானிடம் உருகு பவன் ஜிஜ்ஞாஸு.

மூன்றாமவன் அர்த்தார்த்தி. இந்த அர்த்தார்த்தியை சரியாக உச்சரிக்க வேண்டும். அர்த்தார்த்தி என்றால் பொருட்கள் மேல் பற்று உள்ளவன் என்று பொருள். அர்த்தம் என்றால் Meaning என்று இங்கே பொருள் கொள்ளக் கூடாது. இங்கே அர்த்தம் என்றால் பணம். அர்த்தி என்றால் அதை வேண்டுகிறவன். இதில் பட்டம், பதவி, கௌரவம், புகழ் என்று எல்லாவற்றையும் சேர்த்துக்கொள்ளலாம்.

நாலாமவன் ஞானி. ஞானி என்பவன் ஒரு நிலையில் 'மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்' என்பது போல, பகவானோடு இரண்டறக் கலக்க முடிந்தவனாகி தனக்குள் பிரம்மத்தைக் கண்டுவிட்டவன் அவன். இப்படிப்பட்டவர்களே ஞான சமாதிகளில் உலக நினைப்பே இல்லாமல் ஆழ்ந்துவிடுகிறார்கள்.

இந்த ஞானிதான் உலகத்தில் எதைப் பார்த்தாலும் அதை பரமாத்மாவாகப் பார்த்து, இதுவும் கடவுளின் லீலை என்று ரசிக்கிறான். ஞானி அடையவேண்டியது இதற்குப் பின் எதுவுமேயில்லை. பகவானிடம், 'இதைத்தா, அதைத்தா' என்று கேட்கத் தேவையேயின்றி பரமாத்மா மேல் பக்தி செய்கிறான்.இந்த பக்தியையே காரணம் இல்லாத 'அஹைதுகீ பக்தி' என்று பிரம்மஞானியான சுகமுனிவர் கூறுகிறார்."

இப்படி நான்கு விதமான பக்தர்கள் இந்த உலகில் இருந்துகொண்டு பக்தி செய்கிறார்கள். இவர்கள் நால்வருக்குள்ளேயும் யார் பக்தி மேலானது, எது அப்பழுக்கற்றது என்று யோசிப்பது ஒரு விதம். ஆனால், கிருஷ்ண பரமாத்மா இந்த நான்கு விதமானவர்களையும் புண்ணியம் செய்தவர்கள் என்று கூறிடும்போது ஆச்சரியமாகத்தானே இருக்கும்?

அது எப்படி இப்படி கூறலாம்? இவர்களுக்குள் நிறைய வேற்றுமைகள் உள்ளதே என்று கேட்கத் தோன்றுகிறது. வலிக்கிறது என்று அழுபவனையும், ஞானம் தா என்று கேட்பவனையும் கூட ஒப்புக் கொள்ளலாம். அதிகப்படியாக வீடு, வாசல், கார் வேலைக்காரன் என்று தேவைக்கு மேல் பேராசைப்படுபவனை எப்படி நல்ல பக்தனாகக் கருத

முடியும்?

இந்தக் கேள்விக்கு பெரியவரின் பதில் இதுதான்: “லோகத்தில் பலவிதமான தர்மகாரியங்கள் நடக்க வேண்டியுள்ளது. கோயில் கும்பாபிஷேகம், பள்ளிக்கூடம் கட்டுவது, ஆஸ்பத்திரி, ஆசிரமம் என்று பல விஷயங்கள் தேவைப்படுகிறது. இதற்குப் பணம் தேவை. இந்தப் பணம் எங்கிருந்து வரும்? தர்மம் செய்பவர்கள் இருந்தால்தானே வரும்? தன் தேவைக்கு மேல் இருந்தால்தானே தர்மம் செய்ய முடியும்? இதனால் இப்படி ஆசையோடு மேலும் மேலும் கேட்கிறவர்களையும் பகவான் ஒப்புக்கொள்கிறான் எனலாம்.

வர்ணாஸ்ரம தர்மங்கள் நடைமுறையில் இருந்த காலத்தில் பிராம்மணன் சமுத்திரம் தாண்டக் கூடாது என்று இருந்தது. ஆனால் வைசியர்களுக்கு, ‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ என்று சொல்லப்பட்டது காரணம்?

அப்படி திரவியம் தேடி வந்தால்தான் தர்மகாரியங்கள் நடக்க முடியும். இந்த தர்மம் செய்ய வேண்டி அதிகப்படி செல்வம் கேட்பவன் கொஞ்சம் லக்சுரியாக இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். ஏன் என்றால், இதன் நிமித்த மும் நல்லதுதான் நடக்கப் போகிறது. ஒரு பங்களா இருந்தால் அதில் நாலு வேலைக்காரர்கள் இருப்பார்கள். கார் இருந்தால், டிரைவர் என்று ஒருவருக்கு வேலை கிடைக்கும்!”

பெரியவர் இப்படிச் சொல்வதை, சமாளிக்கிறார் என்பதா இல்லை இதுதான் சரியான பார்வையா என்று கேட்கத் தோன்றுகிறது. எதையும் நல்லவிதமாக மட்டுமே பார்க்கமுடிந்த ஞானியால், எப்படி தவறாக ஒன்றைப் பார்க்க முடியும்?

ஒரு கோணத்தில் கிருஷ்ண பரமாத்மாவே எல்லோரையும் பக்தனாக ஏற்க சித்தமாகி விட்டபடியால், நாம் அதிக ஆசையோடு பக்தி செய்வதில் தவறில்லை என்று சிலர் குறுக்குசால் ஓட்டினால் என்ன செய்வது என்ற கேள்வி நமக்குள் எழுகிறது.

நாஸ்திகனாக - கடவுள் நினைப்பே இல்லாமல், இருப்பதற்கு இப்படி கொஞ்சம் மேலும் கீழுமாய் இருந்துகொண்டு பக்தி செய்வது எவ்வளவோ மேல் என்பதால், கீதையில் கிருஷ்ண பரமாத்மா அப்படி சொல்லியிருப்பாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது. பெரியவர் அதை வழிமொழிவது போல் சொல்வதைக் கேளுங்கள்:

“என்னிடம் ரொம்ப பேர் வருகிறார்கள். பல கஷ்டங்களைச் சொல்லி அது தீர பிரார்த்தனை செய்கிறார்கள். இவர்கள் அவ்வளவு பேர்

பிரார்த்தனையும் ஈடேறிவிடுவதில்லை. இருந்தாலும், விடாமல் பக்தியோடு பிரார்த்திக்கிறார்கள். பிரார்த்தனை நிறைவேறவில்லை என்று நாஸ்திகனானவர்கள் மிகக் குறைவு. நாஸ்திகன் என்பவன் சுபாவமாகவே நாஸ்திகனாக இருக்கிறான். தான் கேட்டதை தராத தெய்வம் இல்லை என்றோ, தேவையில்லை என்றோ கருதுபவர்கள் மிக மிகக் குறைவு.

லௌகிகமான பலனை உத்தேசித்து ஏதோ கொஞ்சம் பக்தி பண்ணினால் கூட அது வீண்போகப் போவதில்லை. உடனடியாக பயன்தராமல் போயிருக்கலாம். ஆனால், நிச்சயம் பயன் உண்டு. இதனாலேயே கிருஷ்ண பரமாத்மா நீ ஞானியாகவோ, ஜிஜ்ஞாசுவாகவோ இல்லாவிட்டாலும் சரி; ஆர்த்தனாகவோ அர்த்தார்த்தியாகவோ என்னிடம் வருகிறாயா? அதுவும் சரி. ஏதோ காரணத்துக்காக வந்துவிட்டாய் அல்லவா? அதனால் நீயும் பக்தன் தானப்பா!' என்று பரம கருணையோடு இவர்களைச் சேர்த்துக் கொள்கிறாராம்!"

'தெய்வத்தின் குரலில்' அவரது இந்த கருத்துக் குரல், வாசிக்கையில் என் மனசுக்குள் விழுந்தது. இந்த பக்தி விஷயத்தில் ஒரு எழுத்தாளனாக எனக்குள்ளே எவ்வளவோ கேள்விகள் - சிந்தனைகள்!

அது என்ன எழுத்தாளனாக என்று அடிக்கோடிட்டு சிலர் கேட்கக்கூடும். நான் முதலில் ஒரு மனிதன், என் தாய் தந்தைக்குப் பிள்ளை, என் மனைவிக்குக் கணவன், என் பிள்ளைகளுக்குத் தகப்பன், என் எஜமானருக்கு ஊழியன். ஆனால், நான் ஒருவன்தான்... ஆனால் இத்தனை பொருட்செறிவும் இடத்துக்கு ஏற்ப ஏற்பட்டுவிடுகிறது. இதில் அனைவருக்கும் பொதுவாய் நான் வசிக்கும் நிலைப்பாடுதான் எழுத்தாளன் எனும் நிலைப்பாடு.

எழுத்தாளன் என்றாலே சமூக சிந்தனை வந்துவிட வேண்டும். நடந்துகொண்டிருக்கும் சமூக நிகழ்ச்சிகளை உள்வாங்கி, பின் அதனால் பாதிப்புக்கு ஆளாகி அதை எழுத்தாக்குபவன். இந்த எழுத்து, வாசிப்பவர்களை பலவிதமாய் பாதிக்கிறது.

ஒரு சாராருக்கு வேகமாய் பொழுது போனால் போதும். ஒரு சாராருக்கு பொழுது போனதோடு நாலு புது விஷயம் தெரிந்திருக்க வேண்டும். இன்னும் சிலருக்கோ, எழுத்து என்பது தோட்டா போன்று உஷ்ணம் தகிக்க நெஞ்சைச் சுடவேண்டும். இப்படி எழுத்தும் எழுத்தாளனும் பலவாறாக எதிர்பார்க்கப்படுகிறான்.

இதில் கேள்வி என்னவென்றால், எழுத்தாளர்களுக்குள் பக்தி குறித்த சிந்தனை எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதுதான். நான் உணர்ந்ததை இங்கே பதிவு செய்துவிட விரும்புகிறேன்.பக்தியைப் பொருட்படுத்தாத எழுத்தாளனை, வரலாறு ஏற்றுக்கொண்டதாய் எனக்குத் தெரியவில்லை. தமிழ் இலக்கியங்களில் கடவுள் மறுப்பு சார்ந்த இலக்கியம் என்று பளிச்சென்று ஒன்றுகூட என் கண்ணில் படவில்லை. உலகப் பொதுமறையான திருக்குறளில் எந்த மதம் குறித்தும், குறிப்பிட்ட கடவுள் குறித்தும் பதிவு இல்லாத நிலையில் அதை ஏன் அப்படி ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று சிலர் கேட்கக்கூடும். திருவள்ளுவர், பக்தி என்று இன்று நாம் புரியும் பாவனைகளை நேரடியாக சுட்டிக்காட்டவில்லையே தவிர, பக்திக்கு இணையான உணர்வு நிலைகளை அவர் மிகவே பதிவு செய்துள்ளார்.

திருவள்ளுவரின் ‘பொதுமை, அற விருப்பம், சார்பற்றநிலை’ இதெல்லாம் எனக்களித்த பிரமிப்பு இன்றுவரை குறையவில்லை. வள்ளுவர் போல ஒரு பொதுமையும், அறவிருப்பமும் சமண புத்த இலக்கியங்கள் சிலவற்றிலும் இருப்பதை மறுக்க முடியாது. அதனாலேயே உ.வே. சாமிநாதய்யர் ஐம்பெரும் காப்பியங்களை மீட்டெடுத்து அதை தன் சொந்தச் செலவில் அச்சிட்டும் வெளியிட்டார்.

வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் பளிச்சென முன்நிற்பதாக இதிகாச புராணங்களும், திருக்குறள் மற்றும் பெரிய புராணம், நாலாயிர திவ்ய பிரபந்தம், திருப்புகழ், திருவாசகம் என்று ஆன்மீக நூல்களே முன்நிற்கின்றன. அதே சமயம், அன்றும் மீமாம்சை என்றும் சண்டப் பிரசண்டம் என்றும் எதிர்மறையாக முழங்கியவர்கள் இருந்துள்ளனர். ஆனால், அவர்களை சமுதாயம் அங்கீகரிக்க வில்லை. வாழ்ந்த நாளில் அவர்களால் ஒரு சலசலப்பையே உருவாக்க முடிந்தது. வரலாற்றில் இடம் பெற்று இன்றுள்ள ஐ.டி. கலாசாரப் பிரியர்கள், அவர்களது நூலை வாசிக்கும் அளவு நீண்டுவர அவர்களால் முடியவில்லை. இதனால்தான் சித்தர்கள் கூட சிறுபான்மையர் ஆனரோ என எண்ணிப் பார்க்கிறேன்.

45

இந்த நாட்டில் நூற்றுக்கணக்கான சித்த புருஷர்கள் வாழ்ந்துவிட்டுப் போயுள்ளனர். இன்றும் சூட்சுமமாய் உலா வருபவர்களும் உண்டு. அவர்கள் அழிவற்றவர்கள். அதே சமயம் அவர்களில் பலருக்கு தன்னையறிதலும் தன்னை வெல்வதுமே பிரதானமாக இருந்தது. அப்படி அறிந்துகொண்டும் வென்றும் முடித்த

நிலையில் அவர்களுக்குப் புலப்பட்டது ஒன்றுதான். இந்தத் தன்னையறிதல் என்பது ஒரு சுயமான உள்ளுணர்வு. இதை போதித்தெல்லாம் புரியவைக்க முடியாது. விதிப்பாட்டில் தன்னையறியும் அமைப்பு இருந்தால் அதற்கேற்ப புறத்தில் சகலமும் நிகழும்.

இல்லாவிட்டால் திருச்சுழி எனும் ஒரு குக்கிராமத்தில் பிறந்த ஒரு பிராம்மணச் சிறுவன், 12 வயதில் வீட்டைத் துறந்து ரயிலேறி திருவண்ணாமலைக்குச் சென்று அங்கேயே தங்கி காலத்தால் 'ரமணர்' என்று ஆக முடியுமா? லட்சக்கணக்கான பிராம்மணச் சிறுவர்கள் உள்ள நாட்டில், ஒருவனுக்கு தான் இப்படி ஒரு போக்கு நேரிட்டது.

சித்தர்களைக் கூர்ந்து கவனித்தால் அவர்களிடம் இந்த சுயேச்சையான போக்குதான் அதிகமாயிருக்கும். ஒரு குருநாதரிடம் சிஷ்யனாகச் சேர்ந்து, பின் அவர் வழி நடந்து, அதனால் பின்னாளில் சித்தனானவர்கள் என்று எனக்குத் தெரிந்து ஒருவர் கூட கிடையாது. அதனால்தான் ஒரு கோவணம் கூட பற்றுக்குக் காரணமாகிவிடும் என்று அதைக்கூட அணியாமல் ஊரைச் சுற்றுவார்கள். மக்கள் போற்ற வேண்டும். காலில் விழ வேண்டும் என்றெல்லாம் துளி கூட எண்ண மாட்டார்கள். மீறி, யாராவது காலில் விழுந்தாலும் முகத்தைத் திருப்பிக்கொள்வார்கள். சில சமயம் 'போடா நாயே' என்று திட்டவும் செய்வார்கள். அந்தக் கோபத்தின் பின் புலம் எப்படிப்பட்டது தெரியுமா?

'என்னை தொந்தரவு செய்யாதே... நான் கொடுக்கவோ நீ பெறவோ எதுவுமே இல்லை. என் ஆசீர்வாதம் உன் துன்பத்தைக் குறைக்கக்கூடும். ஆனால், அது உனக்கு உலகப்பற்றைத்தான் வளர்க்கும். நான் இங்கே இருந்து தப்பிப்பது எப்படி என்ற சிந்தனையில் இருப்பவன். எல்லா வகையிலும் நான் உனக்கு எதிரானவன். ஆகையால் ஐயோ வலிக்கிறது என்றோ, இல்லை எனக்கு அது வேண்டும் இது வேண்டும் என்றோ என்னிடம் வந்து பிச்சை எடுக்காதே!"

என்றுதான் அந்தக் கோபத்தை மொழிபெயர்க்க முடியும். இதையும் மீறி சில சித்தர்கள் பலரின் துன்பங்களை நீக்கியுள்ளனர். அதற்கும் காரணம் உள்ளது. 'காரணமில்லாமல் காரியமில்லை' என்பது ஒரு சத்யப் பிரமாணமான வாக்கு.

ஒரு நாள் வேடிக்கையாக எண்ணிப் பார்த்தேன். மதுரையில் வசிக்கும் நான், என் தெருவிலேபேலரோடு ஒரு வார்த்தை கூட பேசியதில்லை என்பதில் இருந்து, மதுரையில் எனக்கு எவ்வளவு பேரோடு பரிச்சயம்

என்று கணக்கு போட்டபோது, அது சில நூறு பேரோடு நின்று போனது. ஆனால், மதுரையில் 30 லட்சம் பேர் உள்ளனர்.

இந்தக் கணக்கு எனக்குச் சிரிப்பை வரவழைத்தது. ஒரு எழுத்தாளனாய் என் எழுத்தை வாசிப்பவர்களுக்கு நான் பரிச்சயமானவன். அவர்கள் லட்சக்கணக்கில் இருக்கக்கூடும். ஆனால், அவர்களுக்கு என்னைத் தெரியும். ஆனால், அவர்களை எனக்குத் தெரியாதே! அவர்களாகக் கூறினால்தானே உண்டு? இந்த வகையில் எவ்வளவு கோடி பேர் இருந்தாலும், சில நூறு பேர்களோடு மட்டும் சம்மந்தம் ஏற்பட்டு, பரஸ்பரங்கள் உருவாகி நம் வாழ்வும் முடிந்துவிடுகிறது. இந்த சில நூறு பேர்களில் சராசரிகள், மகா மனிதர்கள், மகா மட்டமானவர்கள். கொலைகாரர்கள் என்று பலர் இருக்கக் கூடும். அவர்களிடம் இருந்து நமக்கு என்ன கிடைக்க வேண்டுமோ அதுவும் கிடைத்துவிடும். இதே கணக்குதான் நம் மட்டில் அவர்களுக்கும்!

இப்போது திரும்பவும் இந்த ‘காரணமில்லாமல் காரியமில்லை’ எனும் சொலவடையிடம் வருவோம். இது இப்போது, புதிய பொருளோடு நமக்குள் புலனாகும். எனவே ஒரு சம்பவமோ அல்லது சராசரி, விஷயமோ, அல்லது நாம் செயலற்று கோமா ஸ்டேஜில் இருக்கிறோம் என்பதுவோ கூட ஒரு காரணத்தோடு நடக்கிறது.

அது என்ன காரணம் என்பதை நம் போன்றவர்கள் மேலெழுந்தவாரியாகப் பார்த்து ஓரளவு உணர்ந்துகொள்ளலாம். சித்தர்கள் மிகவே கூர்மையானவர்கள். சொல்லப்போனால் பல சித்தர்கள் ஜீவன் முக்தி அடைய தயாராகிவிட்ட நிலையில், சமாதியில் அமராமல் சுற்றி வந்து கொண்டிருப்பார்கள். போகர் எனும் சித்தரும் இப்படி சுற்றி வந்தவர்தான். கோரக்கர், போகருக்கு உற்ற தோழராகிறார். போகரிடம், ‘ஏன் சமாதியில் இன்னமும் அமராது இருக்கிறீர்கள்?’ என்று கேட்கிறார். அதற்கு போகரும், சில கடமைகள் பாக்கி உள்ளன. இந்தப் பிறப்பில் அதைத் தீர்த்துவிட்டு என் வினைக்கணக்கை பூஜ்ஜியம் ஆக்கிக்கொள்ள வேண்டும். அதன் பிறகு சமாதியில் அமர்ந்தால்தான் சமாதியிலும் தீர்க்கமாய் அமர முடியும். இல்லாவிட்டால் கடினம்’ என்கிறார். அதற்கேற்ப பழனியம்பதிக்கு அருகில் உள்ள ஒரு சிற்றூரில் வசிப்பவர்களுக்கு ஒரு வெக்கை நோய் தாக்கி ஊரே மரணிக்கிற நிலை ஏற்படுகிறது. போகர் அங்கே போய், தான் கற்றுத் தெளிந்திருந்த மருந்துகளை அளித்து அனைவரையும் நோயில் இருந்து விடுபடச் செய்தவராக பின் சமாதியில் வந்து அமர்ந்தாராம். இதை மனிதநேயம் என்றும் கூறலாம். தன் கணக்கை

நேர் செய்துகொண்ட செயல் என்றும் கூறலாம். அந்த ஊர்க்காரர்களுக்கு வைத்தியம் செய்யும் கடமையை அவர் உணர்ந்திருந்தார். விதியை அவரால் தெரிந்துகொள்ள முடிந்தது. பூர்வ ஜென்மத்தில்,

அந்த ஊர்க்காரர்கள் அவருக்கு சோறு போட்டு அவர் உயிர் வாழ துணை செய்திருந்ததுதான் காரணம். இது சகலத்துக்கும் பொருந்தும்.

இதுதான் ஒருவனை சித்தனாக்குகிறது; ஒருவனை சராசரி மனிதனாகவே வைத்திருக்கிறது. இந்த சித்தர்கள் குறித்து நான் நிறையவே சிந்தித்துள்ளேன். எனது பல கதைகளில், நாவல்களில் அவர்கள் முக்கியப் பாத்திரமாகவே வலம் வந்திருக்கின்றனர்.

சமீபத்தில் 'அந்திப் பூக்கள்' என்று ஒரு மெகா தொடரை சன் டி.வி.யில் நான் எழுதி வந்தேன். அதில் ஒரு சித்தர் பாத்திரம் வரும். அவர் எந்த அற்புதங்களையும் செய்யமாட்டார். அற்புதம் என்றால் இந்த விபூதி வர வழைப்பது, விக்கிரகங்களை வரவழைப்பது, சுற்றுச் சூழலில் விபூதி வாசம் வீசச் செய்வது போன்ற சமாசாரங்கள்! அவர் பாட்டுக்கு வருவார். அழகாகச் சிரிப்பார். அதிலேயே பெரும் பொருள் இருக்கும். மிகவும் பேசமாட்டார். பேசினால் வார்த்தைக்கு வார்த்தை ஏராள அர்த்தமிருக்கும். இவ்வளவுதான் அந்தப் பாத்திரம். அதன் மூலம் நான் நிறைய நல்ல கருத்துக்களைச் சொன்னேன். அதற்கே அந்தப் பாத்திரம், பெரிய வரவேற்பைப் பெற்றுவிட்டது. அந்தப் பாத்திரத்தை ஏற்று நடித்த நடிகரை அந்த சித்தர் பாத்திரமாகவே பார்க்கத் தொடங்கிவிட்டனர். பலர் அந்தத் தொடரைத் தயாரித்த நிறுவனத்துக்குக்கடிதம் எழுதி, அந்த சித்தர் புகைப்படம் வேண்டும் என்று கேட்டு எழுத, நிறுவனமும் பலருக்கு புகைப்படத்தை அனுப்பி வைத்தது.

இந்தச் சித்தர் பாத்திரங்கள் என் படைப்பில் ஒரு பெரிய உயரத்துக்கு சென்றுவிடுவது என் வரையில் மிகவே சகஜம். சித்தர்களை, சுவாரஸ்யமான கதைகளின் பொருட்டே முதலில் அணுகினேன். ஆனால், அதன்பின் அவர்களைப் பற்றி முற்றாக அறிந்துகொள்ளும் விருப்பம் உருவாகி ஒரு 25 ஆண்டுகால அளவில் அவர்கள் குறித்து ஓரளவு தெளிவுக்கு வர முடிந்தது. யாரோ சித்தர்? என்று கேட்டால், ஓரளவு என்னால் விளக்க முடியும். எவரோ சித்தர்? என்று கேட்டாலும், நான் இவர்களை எல்லாம் சித்தர்களாகக் கருதுகிறேன் என்று கூற முடியும். இவ்வளவு சிந்திக்கும் எனக்கு, பெரிதாக சித்தானுபவம் ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா என்றால் அதுதான் இல்லை.

இம்மட்டில், என் பட்டறிவுக்குப் பட்டதைச் சொல்கிறேன். நம் மகாபெரியவரும் ஒரு சித்தப் புருஷர்தான்! சித்தமாகிய மனத்தை அலைபாய விடாது கட்டிப்போட முடிந்தவன் எவனோ அவனே சித்தன். அடுத்து, தன் உடம்பின் மேல் ஆதிக்கம் செலுத்தி அதை அடக்கி ஆள்வது என்பதும் முக்கியம். இப்படி அடங்கிவிட்ட உடம்பும் மனதும் எதற்கும் ஆசைப்படாது. ஆசைப்பட்டாலோ அவர் சித்தர் கிடையாது. இவ்வளவுதான் என் வரையில் சித்த லட்சணம். இது அப்படியே பெரியவருக்குப் பொருந்துகிறதே! அவரை சித்த புருஷராகப் பார்க்கலாம்; ஒப்பிடவும் செய்யலாம். 'சங்கராச்சார்ய சித்தர்' என்று அழைப்பது மட்டும் நிகழவில்லை. ஏன் என்றால், இந்த 'சித்தர்' என்ற வார்த்தை பார்க்கப்படும் விதம்தான் காரணம்.

ஆனால், சித்த புருஷர்களில் மகாபெரியவர் போல் எவராவது உண்டா என்று தேடிப் பார்த்தேன். ஒருவர் கூட அகப்படவில்லை. கொஞ்சம் போல திருமூலர் அகப்படுகிறார். ஆனால், அவர் தானறிந்ததை உலகறியச் செய்ய ஒரு ஸ்தாபனத்தை நிறுவவில்லை. அவர் எழுதிய திருமந்திரம் தான் நமக்கு இன்று வழிகாட்டி.

இந்தத் திருமந்திரமோ நம்மை தானாகத் தேடி வராது. நாம் இதை தேடிப்பிடித்து, கற்றுப் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், பெரியவர் இம்மட்டில் தேடித் தேடி வருகிறார். மனித சமூகம் கடைத்தேற என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவ்வளவையும் செய்கிறார்.

அவர் மட்டுமா? அவரைப் போல வைணவத்து மடாதிபதிகள், ஜீயர்கள், ஆச்சார்ய புருஷர்களும் செயலாற்றி வருகின்றனர். தேடிவந்து செயலாற்றுகின்றனர். தன்னை உணர்ந்து, 'தன் வழி தனி வழி' என்று சென்று சித்தனாவதை விட, சமூகம் உய்ய இடைவிடாமல் செயலாற்றுவோம் என்பது இவர்கள் கொள்கை. இதன் காரணமாகத்தான் சித்தர்களை இந்த சமுதாயம் பெரிதாகக் கொண்டாடாமல் விட்டுவிட்டதோ? இப்படிச் சிந்திக்க நிறைய இருக்கிறது யோசிப்போம்.

46

அப்படி வணங்கப்படும் நிலை உருவானால், அருள் தரவேண்டிய கடப்பாடு தோன்றிவிடுகிறது. அருள்தர தான் ஒன்றும் கடவுளில்லை. கடவுளிடம் கூட அவர்களுக்கு இம்மட்டில் நிறைய கருத்து மாறுபாடு உண்டு. எதற்காக உயிர்களைப் படைக்க

வேண்டும்? பின் அவர்களை மாயையில் ஆழ்த்தி ஒரு அலகிலாத விளையாட்டை விளையாட வேண்டும்?

அப்படியே விளையாடினாலும் அதற்கொரு அளவில்லையா? யுகம் யுகமாகவா இந்த விளையாட்டு தொடரும்?! எப்படி கடவுளுக்கே அலுக்காமல் இருக்கிறது? - இப்படி எல்லாம் சிந்திப்பவர்கள் சித்தர்கள். இதில் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதம்.

பால வர்க்கம், மூல வர்க்கம், கயிலாய வர்க்கம் என்று இவர்களில் உட்பிரிவுகள் வேறு. இந்தப் பிரிவுகளை இவர்கள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. காலப்போக்கில் இவர்களை வகைப்படுத்தும்போது பிரிவுகள் தானாக உருவாகிவிட்டன.

உலகில் மனித சமுதாயம் தனக்கான வாழ்நாளில் நிம்மதியான நல்ல வாழ்வை வாழவேண்டும் என்றால் வேத நெறிப்படி நடக்க வேண்டும் என்பது திருமூலர் கருத்து. ஆனால், இந்த வேதமெல்லாம் குப்பை. இதனால் ஆவதொன்றுமில்லை என்கிறார் சிவ வாக்கியர். பாம்பாட்டி யாரோ ஒருபடி மேலே போய்...

சதுர்வேதம் ஆறுவகை சாஸ்திரம் பல

தந்திரம் புராணங்களை சாற்றும் ஆகமம்

விதம் விதமானவான வேறு நூல்களும்

வீணான நூல்களேயென் றாடுபாம்பே!

என்கிறார்.

‘வேதாந்த வேதமெல்லாம் விட்டொழிந்தே நிட்டையிலே,

ஏகாந்தமாக இருப்பதினி எக்காலம்?’

- என்கிறார் பத்ரகிரியார்.

இப்படி சித்தர்களுக்குள்ளேயே பெரும் கருத்து வேறுபாடு? இதில் யாரைப் பின்பற்ற நம்மால் முடியும்?

சாத்திரங்கள் பற்றித்தான் இப்படிப்பட்ட முரண்பாடு என்றில்லை. உடல் குறித்தும் மாறுபட்ட கருத்துகள் இவர்களிடம் உண்டு.

‘உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்’ என்கிறார் திருமூலர். ஆனால் கடுவெளி சித்தரோ, ‘காயமே இது பொய்யடா வெறும்

காற்றடைத்த பையடா...' என்கிறார். இரண்டு கருத்திலும் உடன்பாடும் இருக்கிறது. மாறுபாடும் இருக்கிறது. அது, நாம் அவர்களை அணுகும் கோணத்தைப் பொருத்தது.

இப்படிப்பட்ட போக்கால்தான் ஒரு வழியில் ஒரு குருவின் அடியொற்றி நடப்பவர்களுக்கு இவர்கள் தேவையற்றுப் போயினர்.

அடுத்து இவர்களைப் பின்பற்றி இவர்கள் போல் ஆவதும் எளிதில்லை. அப்படி ஆகவேண்டும் என்றால் இவர்களுக்கு நேரிட்ட அனுபவங்கள் துளியும் மாறாமல் நமக்கு ஏற்பட வேண்டும். அது சாத்தியமே இல்லையே!

ஒரு புத்தருக்குப் பிறகு எப்படி இன்னொரு புத்தரை இந்த உலகம் இதுநாள் வரையில் காணவில்லையோ அப்படித் தான் இவர்களும்...

இவர்கள் விதிவிலக்கானவர்கள். இவர்களை நிறையவே வியக்கலாம், ரசிக்கலாம், கையெடுத்துக் கும்பிட்டு வணங்கவும் செய்யலாம். ஆனால், பின்பற்றி மட்டும் நடக்க முடியாது. சிலர் தங்களைத் தாங்களே இவர்களில் சிலருக்கு தங்களை சீடர் என்றாக்கிக்கொண்டு வாழ்ந்தவாறு இருக்கலாம். ஆனால், அவர்கள் எந்த அளவு அவர் வழியில் நடக்கிறார்கள் என்பதெல்லாம் பெரிதும் கேள்விக்குறிதான்!

இவர்களுக்கு எல்லாவகையிலும் மாறுபட்டவர்கள் மடங்களை ஸ்தாபித்து, அதற்கென கொள்கைகளை வகுத்து, அந்தக் கொள்கைக்காக வாழ்ந்து வரும் மடாதிபதிகள், இவர்களைக் கூர்ந்து கவனித்தால் வழிவழியாக ஒரே சம்பிரதாயம், கோட்பாடு, நியமங்கள் என்று அவர்கள் செயல்பட்டு வருவது தெரியும்.

மடாதிபதிகளை ஆச்சார்யனாகக் கொண்டு பின்பற்றிச் செல்வதும் சுலபம். இந்த உலகின் காம்யார்த்த வாழ்வை வாழ்ந்துகொண்டே இவர்களைப் பின்பற்றி வெகு சுலபமாக இறை திருவடியை அடைந்துவிடலாம். அதனால்தான் மத குருமார்களைப் பின்பற்றுபவர்கள் மிகுந்த ஒரு நாடாக இந்த நாடு உள்ளது.

இந்த மடாதிபதிகளுக்கும் தங்கள் பிரத்யேக கொள்கைகளும் வழிமுறைகளும் மிக முக்கியம். அதில் துளியும் பிசகில்லாமல் இவர்கள் செல்வார்கள். இவர்களைப் பின் தொடர்கின்றவர்களும் செல்ல வேண்டும். இம்மட்டில் மகாபெரியவரை வியந்து எழுதிவரும் எனக்கு அகோபிலமடத்து ஜீயர்தான் ஆச்சார்யன். அவர் வழியே என் வழி.

பெரியவரை நான் வியந்து போற்றக் காரணம் அவரது பொதுமை மற்றும் கருணை. அனைத்துக்கும் மேலாக, அவரது சீரிய தவம். என் வழியை என் பிறப்பே அறுதியிட்டுத் தந்துவிட்டது. அது மிக நேரிய வழி. அம்மட்டில் நாரணனே எனக்கான பரம்பொருள். நான் பற்ற வேண்டியதும் பற்றிக் கொண்டிருப்பதும் அவன் திருவடிகளைத்தான்.

ஆயினும், இன்றைய நவநாகரிக விஞ்ஞானபூர்வ வாழ்வில், என் வழியை எனக்காக பிரத்யேகமாகவும், என் மதத்தை நேசித்து அதன் சகல வழிகளையும் மதித்துப் போற்றுவதை ஒரு எழுத்தாளனுக்கான கடமையாகவும் நான் கருதுகிறேன். அதனாலேயே எனது பல கதைகளில் அதன் கருப்பொருளுக்கு ஏற்ப சிவபெருமானையும், சக்தி தேவியையும் போற்றி வணங்கினேன். இதை திட்டமிட்டுக் கொண்டெல்லாம் செய்யவில்லை. மிக இயல்பாகவே இது நடந்தது.

எனக்கு என் மதத்து இறை ரூபங்கள் அவ்வளவும் முக்கியம். அவ்வளவுமே கருணை உடையவைதான். காரண காரியம் கருதியே என் மதத்தில் பல பிரிவுகள். அவரவர் பிரிவை அவரவர் பிறப்பே முடிவு செய்து தந்துவிடுகிறது. எனவே, அவரவர் வழியில் பிசகின்றி நடப்போம். பிறிதொரு வழியை மதித்து நேசிப்போம். பிறிதொரு மதத்தையும் நட்போடு பார்த்து அதன் நற்கருத்துகளைப் போற்றினாலே நாகரிக மனிதனாகவும் திகழ முடியும்.

பணியின் நிமித்தம் மதுரையில் வாழ்ந்திடும் சூழல் எனக்கு 1980ல் இருந்து ஏற்பட்டது. மதுரை என்றவுடன் மீனாட்சிதான் நினைவுக்கு வருவாள். ஆண்டு முழுவதும் அவளுக்கான கொண்டாட்டங்களுக்கும் பஞ்சமே இல்லை. அந்த மீனாட்சி என் இஷ்டத்துக்குரிய தேவியானாள். அவளை சேவிக்கச் செல்லும்போதும் சரி, சொக்கநாதன் சன்னிதியிலும் சரி. நாராயணா என்றே என் நாவில் இருந்து வரும். அங்குள்ள பட்டர்களே வியப்போடு பார்ப்பார்கள். இப்போது அவர்களுக்குப் பழகிவிட்டது. இந்த நாராயண நாமத்தையும் நானொன்றும் திட்டமிட்டுக்கொண்டு வீம்பாகச் சொல்வதில்லை. மிக இயல்பாக மனத்தின் அடியாழத்தில் இருந்து அது தானாக வருகிறது.

இந்த விளக்கங்களுக்குக் காரணம் இருக்கிறது. பெரிய வர்பால் எனக்கிருப்பது பேதம் கடந்த ஆன்மநேயம். அவரது கருணை, எனக்கு எவ்வளவோ செய்துள்ளது. எனவே, மிகப் பொதுமையோடு அந்த உத்தமத் துறவியை இத் தெடர் வாயிலாக வியந்திருக்கிறேன். இந்த வியப்பு எனக்கு வைணவ சூரியனான வேதாந்த தேசிகனிடத்தும், ராமானுஜரிடத்தும் கூட உண்டு. அவர்களை வியந்து உள்ளம் நெகிழ

இதுபோல தொடர்கள் எழுதும் சந்தர்ப்பம் நாரணன் அருளால் எனக்கு எதிர்காலத்தில் கிட்டலாம், கிடைக்க வேண்டும்!

என் தொடக்கம் சமூக சிந்தனையுள்ள ஒரு எழுத்தாளனாகத்தான் இருந்தது. காலம் செல்லச் செல்ல, அனுபவங்களால் விழிப்பு ஏற்பட்டு தெளிவும் பிரகாசமும் ஏற்படத் தொடங்கியது. எழுத்தாளன் என்றாலே, இந்த பக்தி மார்க்கத்தில் சிக்கிவிடக் கூடாது. புதுமைப் புரட்சி என்று சமூக வாழ்வியலோடு நின்று விட வேண்டும் என்பதை நான் ஏற்கவில்லை. ஒரு வெர்சடைல் எழுத்தாளனாக சமூகம், சரித்திரம், மர்மம் என்ற எல்லா தளங்களிலும் இயங்கி வருகிறேன். இதில் பக்தி எனும் தளமும் அடக்கம். இந்தத் தளத்துக்குள்தான் சித்தர்கள் முதல் பலரும் வருகின்றனர். இவர்களில் பெரியவர் என்வரையில் நிதர்சனமானவர். மற்றவர்களைக் கேள்விப்பட்டும், ஏடுகளில் வாசித்தும்தான் அறிந்தேன். பெரியவரைத்தான் நேரிடையாக அறியமுடிந்தது. காஞ்சி காமகோடி மடத்தில் எவ்வளவோ பீடாதிபதிகள் திருக்கடமையாற்றிச் சென்றுள்ளனர். இவர்களில் பெரியவர், மிகப் பிரத்யேகமானவர். சைவர், வைணவர் என்று சகலரையும் கவர்ந்து நின்றவர். ஒரே காரணம்தான்... நம் மதத்தை அவர் போல புரிந்து உலகுக்கு மிக எளிமையாக எவரும் சொல்லவில்லை. அவருக்கே அந்த நீண்ட நெடிய வாய்ப்பும் கிட்டியது.

உளவியல், விஞ்ஞானம், சரித்திரம் என்று சகலத்திலும் அவருக்கிருந்த ஆழமும் அலாதியானது. இந்து மதத்தின் நூலென்று பகவத்கீதையைச் சொல்கிறோம். சமஸ்க்ருத நூலான அதனை தமிழில் மொழி பெயர்த்திருந்தாலும், கீதையை விளங்கிக்கொள்ள ஒரு வயதும் பக்குவமும் தேவைப்படுகிறது.

ஆன்மிகத்தில் நாட்டம் கொண்ட தமிழர்களுக்கெல்லாம் நான் கூறுவது ஒன்றுதான். பெரியவரின் 'தெய்வத்தின் குரல்' மற்றும் முக்கூர் லட்சுமி நரசிம்மாச்சாரியாரின் குறையொன்றுமில்லை' எனும் நூல்... இந்த இரண்டு போதும். ஆன்மிகத்தில், நாம் குறைந்தபட்சம் தெளிவோடு கடைத்தேற!

முக்கூர் அவர்களும் மிகக் கருணையானவர்! ஆக்ரோஷமான நரசிம்ம புராணத்தை அவர் சொல்லக் கேட்க வேண்டும். இத்தனை கருணையானவருக்குள்ளா இப்படி ஒரு ஆவேசம் என்று எண்ணத் தோன்றும். வைணவ சம்பிரதாயத்தில் துளியும் வழுவாதவர். அதே சமயம் பெரியவர் மேல் மிகுந்த மதிப்பும் ஈடுபாடும் கொண்டிருந்தார். துளியும் பொருள் நாட்டமின்றி உபன்யாசங்கள் புரிந்து வந்தார். நான்

செயலராக இருந்த இந்து சமய மன்றத்தில் ஒரு மார்கழிப் பெருவிழா நிகழ்வில் 30 நாளும் உபன்யாசம் நிகழ்த்தி நாராயண பக்தியை ஓடவிட்டார். அவருக்கு சம்பாவனை தர விழைந்தபோது, அதை மன்றத்துக்கே திருப்பித்தந்து எனக்கு உபன்யாசம் சொல்லக் கிடைத்த வாய்ப்பே பெரியது என்றார். அந்த முப்பது நாளில் ஆசாரத்துக்கு ஆசாரத்தோடும் அதே சமயம் சாதி பாகுபாடில்லாமல் அனைவரோடும் அவர் அன்பு காட்டிப் பழகியது என் கண்ணுக்குள்ளேயே இருக்கிறது. அவர் என் பொருட்டு ஆசீர்வதித்து தந்த பேனாவை இன்றளவும் பத்திரமாக பாதுகாத்து வருகிறேன்.

இவர்களெல்லாம் தங்கள் மேலான பக்தியால், அதில் நடந்து காட்டி நம்மை ஈர்த்தவர்கள். இவ் வேளையில் சில சித்துக்கள் செய்து பக்தியை வளர்ப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

விபூதி வரவழைப்பது, விக்ரகங்களை வரவழைப்பது, வாயில் இருந்து லிங்கங்கள் எடுப்பது என்று... இப்படிப்பட்டவர்கள், விமர்சனங்களுக்கும் ஆளாகியுள்ளனர். இவர்கள் பின்னால் செல்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இவர்களின் பக்தி எப்படிப்பட்டது என்பதற்கும், பெரியவர் வாழ்ந்த நாளில் சில சான்றுகள் இருக்கின்றன. ஒரு பெரும் சித்த யோகி, பெரியவரிடமே தன் சித்து வேலையைக் காட்டி பெரியவரை வியக்க வைக்க வேண்டும் என்று விரும்பினர். பெரியவரோ இந்த சித்துக்களை துளியும் விரும்பியதில்லை. ஒரு சமயம் அந்த சித்தயோகி, பெரியவரை நேரில் காண திருமடத்துக்கே வந்துவிட்டார். பெரியவரும் அவரின் சித்துகளைக் காணத் தயாரானார். ஆனால், பெரியவரிடம் துளிகூட சலனமில்லை. சித்தயோகி, இரண்டடி உயரத்துக்கு ஒரு விக்ரகத்தை பெரியவர் எதிரில் வரவழைத்துவிட்டார்.

47

சித்த யோகியின் முகத்தில், தான் ஒரு பெரும் சாதனையை நிகழ்த்திக் காட்டிவிட்ட பெருமிதம் வேறு... அதற்கு சாட்சியாக அவர் வரவழைத்த விக்ரகம் கம்பீரமாய் பெரியவர் எதிரில் நின்றபடி இருந்தது. பெரியவரிடமோ அதைப் பார்த்து எந்த உணர்ச்சிப்பாடும் இல்லை. மாறாக, எப்போதும் நிலவுகின்ற புன்னகைதான் அவர் முகத்தில். இது அந்த சித்தயோகி வரையில் சற்று சலனத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவரும் பெரியவரை அந்த சலனத்தோடு பார்த்திட,

பெரியவர் பதிலுக்கு கையை உயர்த்தி ஆசிர்வதித்தவராக ‘நான் கண்ணாரப் பார்த்து விட்டேன். இந்த விக்கிரகத்தைத் திருப்பி அனுப்பிவிடு’ என்றார். அந்த சித்த யோகியோ வரவழைக்க மட்டுமே தெரிந்தவர். அதை மறைக்க முடியாதவர். அந்த நொடி அந்த சித்த யோகிக்கு பெரியவர் எதை உணர்த்த வேண்டுமோ அதை உணர்த்திவிட்டார்.

இதுபோன்ற சித்துக்கள், பார்க்கிறவர்கள் மனதில் கடவுளைவிட அவரையே கடவுளாக முன் நிறுத்திவிடும். இப்படி ஒரு கருத்தைச் சொல்லும்போது சில கேள்விகளும் எழலாம். தூணிலும் துரும்பிலும் கூட இருக்கும் இறைவன் அவரிடமும்தானே இருக்கிறான். ஆகவே, அவருக்குள் கடவுளை அவர் பக்தர்கள் பார்த்தால் அதில் தவறு இல்லையே என்று கேட்கலாம். கடவுளை நாம் காட்டுவது வேறு; நாமே கடவுளாகக் காட்சியளிப்பது வேறு... அப்படி நம்மையே ஒருவர் கடவுளாய் கருதத் தொடங்கிவிட்டால், நாம் அவர் எதிர்பார்ப்பதை எல்லாம் பூர்த்தி செய்பவராகவும் இருக்க வேண்டும்.

பிரகலாதனை ஹிரண்யன் ஆற்றில் தூக்கிப் போட்டான். கடலில் தூக்கிப் போட்டான். பாம்புகள் நடுவில் விட்டான். தனியே அவிஷத்தைக் குடிக்கக் கொடுத்தான். காளவாயில் போட்டு அவிக்கக்கூட முனைந்தான். ஆனால் இங்கெல்லாம், ‘நாராயணா’ என்ற மாத்திரத்தில் விஷ்ணு ஓடோடி வந்தார். அவனை மீட்டுக் காத்தார். பிறகுதான் ஹிரண்யனுக்கே தன் அசுர புத்தி புரிந்தது.

இந்த உலகின் எந்த ஒரு சக்தியாலும் அழிவு வந்துவிடக் கூடாது என்று வரம் கேட்கத் தெரிந்த எனக்கு, எந்த ஒரு சக்தியையும் அழிக்கும் ஆற்றல் தனக்கு வேண்டும் என்று கேட்கத் தெரியவில்லையே என்று தன்னைத்தானே ஒரு கட்டத்தில் நொந்து கொண்டானாம். அப்போதுதான் தன்குறை அவனுக்குப் புரிந்தது. குறை புரிந்த மாத்திரத்தில் அவனிடம் உள்ள நிறை அவனுக்கு பெரிய மகிழ்வைத் தரவில்லை. இதுதான் மனித மனோபாவம். எவ்வளவு கோடி இருந்தாலும், எத்தனை உயரத்தில் இருந்தாலும், அதைவிட உயரத்தில் ஒருவர் இருந்தால், தானிருக்கும் உயரம் பெரிதாகத் தெரியாமல் போய் அந்த உயரத்தை அடைய மனம் தவிக்க ஆரம்பித்துவிடும்.

பெரியவர் முன் விக்கிரகம் வரவழைத்த சித்த யோகிக்கும் அந்த நொடி புரியவேண்டிய அவ்வளவும் புரிந்துவிட்டது.

ஒரு சித்த யோகிக்கும் ஒரு மடாதிபதிக்குமான வித்தியாசமும் இதில்

விளங்கியிருக்கும். மடாதிபதிகள் வழி வழியாக வருபவர்கள். பக்தியை வளர்ப்பதும் ஆன்மிகத்தை நிலைப்படுத்துவதும் அவர்கள் மூலமாக இந்த உலகில் நடைபெறும் செயல்களாகும்.

அவர்கள் துறவிகள். அதற்கேற்பவே அவர்கள் வாழ வேண்டும். அவர்கள் முற்றும் துறந்தவர்கள். அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பக்தர்களிடம் எந்த எதிர்பார்ப்பும் கிடையாது. முன்பே இத்தொடரில் ஒரு இடத்தில் குறிப்பிட்டதுபோல, நாம் அவர்களுக்குச் செலுத்தும் வணக்கமெல்லாம் நாராயண சமர்ப்பணமாகி அது அந்தக் கேசவனை அடைந்துவிடுகிறது.

நாம் அந்தத் துறவியைக் கடவுளாகக் கருதுவது நமது உயர்ந்த மனோபாவத்தைக் குறிக்கும். ஆனால், நாம் கருதுவதை வைத்து அவர்கள் தங்களை அப்படிக் கருதிவிடக் கூடாது. கருதவும் மாட்டார்கள். கருதாதவர்களே துறவிகள். மற்றவர்கள் சித்த சாதனை புரிபவர்களாக இருக்கலாம். அவர்கள் துறவிதானா என்றால், அங்கே துளி தயக்கம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இப்படிக் கூறுவதால் அந்த சித்தயோகிகளை தவறாகச் சித்தரிப்பதாக யாரும் கருதிவிடக் கூடாது. அவர்களாலும் ஒரு சாரார் மன அமைதி பெற்று வாழ்வதை நான் பார்த்து வருகிறேன். அதே சமயம் அவர்களில் சிலர் காலப்போக்கில் ஆன்மிக உலகில் மறக்கப்பட்டதையும் பார்த்திருக்கிறேன்.

இதில் ஸ்ரீசத்ய சாய்பாபா போன்ற சித்த புருஷர்கள் விதிவிலக்காக ஜீவன்முக்திக்குப் பிறகும் சான்னித்ய குறைபாடு இன்றி போற்றி வணங்கப்படுவதையும் காண்கிறேன். இவ்வேளையில் சாய் பக்தர்கள் குறித்த ஒரு கருத்தை அழுத்தமாய் பதிவு செய்யவும் விரும்புகிறேன். தூய்மை, பணிவு, சேவை உள்ளம் உடையவர்களே தீவிர சாய் பக்தர்களாக இருக்கிறார்கள். இவர்கள் ஆயிரக்கணக்கில் கூடும் இடங்களில் எல்லாம் ஒரு படாடோபமற்ற தன்மையையும் அமைதியையும், அத்தனை கூட்டத்திலும் ஒரு ஒழுங்கையும் நான் இவர்களிடம் காண்கிறேன். இன்று கூட்டம் கூடும் இடங்களில் ஆரவாரமும் ஆர்ப்பாட்டமும்தான் பிரதானமாக உள்ளது. இந்தக் கூட்டத்தில், பெரியவன் சிறியவன் பேதம் வேறு. ஆனால், சாய் பக்தர்கள் கூடும் இடங்களில் மூச்சு விடும் சப்தத்துக்குத்தான் இடம். இது அந்த மகானின் பெரும் சாதனை அடுத்து சாய் பக்தர்களை நம்பி நாம் எதையும் செய்யலாம். அவர்கள் உலக நன்மையை முதலில் நினைப்பவர்களாக இருப்பதுதான் காரணம்.

மீண்டும் பெரியவரிடம் வருகிறேன். பல சித்த யோகிகளின் சித்து விளையாட்டுகள் ஒன்றும் பெரியவருக்குப் புதிதோ அரிதோ அல்ல. அவர் ஆசைப்பட்டிருந்தால் எவ்வளவோ சித்துக்களைப் புரிந்திருக்கலாம். ஆனால், அதைத் தவிர்த்தார். ஆதிசங்கரரின் பாதையில் இருந்து எக்காரணம் கொண்டும் வழுவிவிடக் கூடாது என்றும் கருதினார். தனக்கான வணக்கங்களுக்கும் போற்றுதல்களுக்கும் ஆதிசங்கரர் பெயர் தன்னோடு இருப்பதுதான் காரணம் என்றும் தன்னடக்கத்தோடு கூறியவர் நம் பெரியவர்.

ஒரு சம்பிரதாயத்தைப் பின்பற்றி அதன் வழியில் நடப்பவர்கள் அதிலிருந்து துளியும் வழுவிட மாட்டார்கள். இது அத்வைதியான பெரியவருக்கு மட்டுமல்ல; விசிஷ்டாத்வைதியான ஜீயருக்கும் பொருந்தும். சம்பிரதாயங்கள்தான் இருவருக்கும் வெவ்வேறு. ஆனால், அதைக் கடந்து பெரும் ஆன்மநேயம், வாத்சல்யம் நம் பெரியவருக்கும் ஜீயருக்கும் இருந்தது. அதற்கு சாட்சியாக எவ்வளவோ விஷயங்களைச் சொல்லலாம். இருந்தாலும் ஸ்ரீரங்கம் ராஜ கோபுரம் தொடர்பான சம்பவங்கள் மனதுக்கு மிக உவப்பானவை.

இன்று கம்பீரமாகக் காட்சி தரும் இந்த ராஜகோபுரத்தை எழுப்பியவர் அஹோபில மடத்து 44-வது பட்டத்தை அலங்கரித்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவேதாந்த தேசிகன் என்னும் ஆசார்யகன் ஆவார். அழகிய சிங்கர் என்பது, சுருக்கமாக வைணவ உலகம் விளிக்கும் பெயராகும். அதற்கு முன் அந்த ராஜகோபுரம் வெறும் அஸ்திவாரம் மட்டும் எழுப்பப்பட்டு ஒரு நிலைவாயிலாக காலத்தால் அப்படியே நின்று போய்விட்டிருந்தது. இன்று அது பாரதநாட்டு கோபுரங்களுக்கெல்லாம் கோபுரமாய் ராஜகம்பீரத்தோடு காட்சி தருகின்றது. இந்தக் கோபுரத்தை பெரிதும் பாடுபட்டு முனைந்து கட்டியவர்தான் 44வது பீடாதிபதியாக விளங்கிய அழகிய சிங்கர்.

தன் வாழ்நாளில் இதைச் சாதித்துவிட அவர் திருஉள்ளம் கொண்டதன் பின்னே ‘ஒரு ரிஷியால் பின்னாளில் கோபுரம் எழும்பும்’ என்கிற அசரீரி போன்ற ஒரு கருத்தும் காரணமாகும்.

இந்த கோபுரம் எழுப்பி விண்முட்ட நிற்க வேண்டும். பெரிய கோயில் என்று உலகமே கொண்டாடும். அரங்கன் ஆலயத்தில் ஒரு மொட்டை கோபுரம் அதன் பிரதான நுழைமுகத்திலேயே இருப்பது அழகாகவும் இல்லை என்பதே பெரியவர் அவர்களுடைய கருத்தாகவும் இருந்தது.

ஒருமுறை ஸ்ரீரங்கம் ஆலயத்துக்கு நேர் தெற்கில் ஓடியபடி இருக்கும்



Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

காவிரிக்கரையான அம்மா மண்டபத்துக் கரையில் மகா பெரியவர் காவிரி ஸ்நானம் செய்துவிட்டு கோபுர தரிசனத்தின் பொருட்டு வடதிசை நோக்கிப் பார்த்த போது இந்த எண்ணம் அவருக்குள் உதித்ததாம்.

இந்த மொட்டை கோபுரம் மட்டும் உயர்ந்து ராஜ கோபுரமாக இருந்தால், காவிரியில் நீராடிய கையோடு கோபுர தரிசனம் புரிந்து கோடி புண்ணியம் பெறலாமே என்கிற எண்ணமே அவர் அவ்வாறு எண்ணிடக் காரணம். இதை அவர் தன் பொருட்டு எண்ணவில்லை. காவிரியில் நீராடப்போகும் கோடான கோடி பேரை உத்தேசித்தே அவர் இவ்வாறு சிந்தித்தார்.

புண்ணிய நதியின் நீராட்டமும், பெரிய கோயில் கோபுர தரிசனமும் பக்தர்களைக் கடைத்தேற்றும் பூலோக சஞ்ஜீவினிகளாகும். பெரியவர் இப்படி நினைத்த அதே வேளையில் ஸ்ரீமத் அழகியசிங்கரின் திருஉள்ளத்திலும் இந்த கோபுரத்தை எப்படியாவது கட்டிவிட வேண்டும் என்கிற எண்ணம் பெரிதும் மூண்டிருந்தது.

அதன் பொருட்டு பெரிதும் பாடுபட்டு கோபுரம் கட்டும் பணியும் தொடங்கியது. அப்போது தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆரும் அரசாங்க ஒத்துழைப்பை நல்ல வண்ணம் செய்து கொடுத்தார். எனவே, பணிகள் தடையின்றி தொடங்கின.

ராஜகோபுரமாயிற்றே! நிதி நிறைய தேவைப்பட்டது. ஆன்மிக உலகம் பலவிதங்களில் கைகொடுத்தது. 'இதயம் பேசுகிறது' இதழில் நான் எழுதிய கதைக்கு திரு. மணியன் அளித்த சன்மானத்தை அவர் மூலமாகவே நானும் கோபுர நிதியில் கொண்டு சேர்த்தேன்.

இந்த கோபுரம் எழும்பியதன் பின்புலத்தில் பெரியவரும் பெரிதும் பக்கத் துணையாக இருந்தார். அவரை நாடிவந்த பல நிதிகளை அவர் ராஜகோபுரப் பணிக்கு திசை திருப்பிவிட்டார். ஒரு தனவந்தர் பெரும் தொகையோடு பெரியவரிடம் வந்தபோது மௌனவிரதத்தில் இருந்த பெரியவர் ஜாடையாக நெற்றியில் நாமத்தை கையால் அபிநயித்துக் காட்டி பின் இரு கையை கூம்புபோல் இணைத்து கோபுரம் என்று உணர்த்தி அதற்குக் கொண்டுபோய் இந்த நிதியைக் கொடு என்று கூறியதை அவரும் புரிந்துகொண்டு அந்த நிதியை ஸ்ரீமத் அழகியசிங்கரிடம் சேர்ப்பித்தாராம்.

இதை அறிந்த அழகியசிங்கரும் பெரியவரிடம் என் மனமார்ந்த நன்றிகளைக் கூறிவிடுங்கள் என்றாராம். இதைவிட ரசமான ஒரு

சம்பவமும் இந்த ராஜகோபுரத்தின் பின்புலத்தில் உள்ளது.

44வது பட்டத்து ஸ்ரீமத் அழகிய சிங்கரவர்கள் மிகுந்த கருணை உள்ளம் படைத்தவர். அதேசமயம் சம்பிரதாயத்தை துளியும் மீறக் கூடாது என்கிற கொள்கைப் பிடிப்பு உடையவர். மிக எளியவர் யாரும் எளிதில் அணுகலாம். குறிப்பாக, ஹரிஜனங்கள் என்று மகாத்மாவால் அழைக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் மேல் பெரும் கருணை உடையவராக இருந்தார். அவர்களை எல்லாம் திருப்பாணாழ்வாரின் தொண்டர்களாகவே பார்த்தார். அப்படிப்பட்ட அந்த மகான் ஸ்ரீரங்கம் தசாவதார சன்னிதியில் இயங்கிவந்த மடத்தில் இருந்துகொண்டு திருத்தொண்டாற்றி வந்த சமயம், ஒருநாள் மடத்துத் திண்ணையில் அவர் அமர்ந்துகொண்டு அருளாசி வழங்கிய சமயம் ஒரு வயதான பாட்டி அவர் முன் வந்து வணங்கி நின்றாள்.

அந்தப் பாட்டியின் பரிதாபமான தோற்றம், மற்றும் நின்ற கோலத்தை உத்தேசித்து தன் காரியதரிசியிடம் இருந்து ஒரு தொகையை பாட்டிக்குத் தரச் சொன்னார். தொகை தரப்பட்ட நொடி அந்தப் பாட்டி அந்தத் தொகையை ஸ்ரீமத் அழகிய சிங்கரிடமே தந்தவளாக, 'இது ராஜகோபுரம் கட்டும் சேவைக்கு பயன்படட்டும். பிச்சை எடுத்தாவது இம்மட்டில் கோபுரத் திருப்பணியில் பங்குகொள்ள விரும்பினேன். அதை உங்களிடமே தொடங்கிவிட்டேன். கோபுரம் கட்டி முடியும் வரை என் திருப்பணி தொடரும்' என்றாளாம் அந்தப் பாட்டி! அவள் அப்படி சொன்ன மாத்திரத்தில் அழகிய சிங்கர் அருகில் உள்ள சிலரிடம் கூறினாராம்.

'நான் உங்களுக்கு ஆச்சார்யன் என்றால், எனக்கு இவள் ஆச்சார்யன் போன்றவள். பிச்சை எடுத்தாவது கோபுரத்தைக் கட்ட இவள் மூலமாக ரங்கன் எனக்கு உணர்த்துகிறான்' என்றாராம். இதன் மூலமாக வைணவப் பெருமக்கள் அடியவர்க்கு அடியவராகத் திகழ, தன்னையே ஒரு முன்னுதாரணம் ஆக்கிக்கொண்ட தவசீலர் அவர்!

இவரது கருணைக்கு எடுத்துக்காட்டாக பல சம்பவங்கள் உண்டு. அதனாலேயே காஞ்சிபுரத்துக் கருணையும் ஸ்ரீரங்கத்துக் கருணையும் பேதம் பாராது அன்பும் நட்பும் பாராட்டிக்கொண்டன. ராஜகோபுரமும் கம்பீரமாக இன்று எழும்பி நிற்கிறது.

48

ரியவர் எல்லா உயிர்களிடத்தும் கருணைகொண்டு அவற்றை சமமாக

பெ பாவித்த உணர்வுகளுக்கு சாட்சியாக இந்தத் தொடரில் பல சம்பவங்களைக் குறிப்பிட்டிருந்ததை வாசகர்கள் அறிந்திருக்கலாம். அதில் நாய் ஒன்றுக்கு பெரியவர் காட்டிய கருணையை யாரும் மறந்திருக்க முடியாது. ஒருநாள் மதிய நேரம் பூஜைகள் முடிந்து மடத்தில் அனைவரும் போஜனமும் புரிகின்றனர். இறுதியாக, பெரியவருக்கும் அவருக்கான போஜனமான கைப்பிடி நேந்திர மாவும், அவலும் தயாராகிறது. பெரியவரும் சாப்பிட முனைகிறார். அப்போது நாய் ஒன்றின் பலமான குரைப்புச் சப்தம். எதனால் என்று கேட்கிறார். “மடத்து போஜனம் முடிந்து இலைகளை போடும் இடத்தில், அதில் உள்ள மிச்சம் மீதிக்காக நாய் ஒன்று வந்து படுத்துகிறது” என்கிறார் உதவியாளர். உடனேயே தன் இலையில் இருந்ததை அப்படியே இலையோடு தள்ளி, “இதை எடுத்துப்போய் அந்த நாய்க்குக் கொடு” என்கிறார் பெரியவர். உதவியாளர் புரிந்து கொள்கிறார். மறுநாள் அதேநேரம் நாய் குரைக்கவில்லை. பெரியவர் உதவியாளரைப் பார்த்த நொடி உதவியாளர் சொல்கிறார்.

“நாய்க்கு முதல்ல போஜனமாயிடுத்து. அப்புறம் தான் எல்லாருக்குமானது” என்கிறார். அதிக வார்த்தைப் பிரயோகங்கள் இன்றி, இப்படி எல்லா தருணங்களிலும் கருணையோடு நடந்துகொண்டவர் பெரியவர்.

இந்த மண்ணில் மகான்கள் எல்லோருமே தங்கள் வழிமுறைகளில் மாற்றங்களோடு இருந்தாலும் உயிர்களின் மேலான கருணை எனும்போது ஒன்றாகவே இருக்கிறார்கள் என்பதுதானே உண்மை? அந்த வழி முறை மாற்றங்கள்கூட மக்கள் நலன் கருதித்தானே உருவாக்கப்பட்டன.

கல்வி பயில்பவர்களை மாணவர்கள் என்கிறோம். இறுதியாக அவர்கள் பெற வேண்டியது ஒரு பட்டம். அதைப் பெற ஒருவர் கணித பாடத்தைத் தேர்வு செய்கிறார். ஒருவர் ஆங்கிலத்தை தேர்வு செய்கிறார், ஒருவருக்கு வரலாறு... எல்லோரும் ஒரே பாடத்தைப் படிப்பதும், ஒரே பாதையில் நடப்பதும் எப்படி வளர்ச்சிக்குத் தடையோ அப்படித்தான் ஆன்மிகப் பாதைகளும். பாடம் வரையில் விருப்பம் அடிப்படையாக அமைகிறது. ஆன்மிகம் வரையில் பிறப்பே மதம், இனம், குலம் வழியாக அந்த அடிப்படையை அமைத்துத் தந்துவிடுகிறது. நாம் நம் முன்னோர்கள் நடந்த பாதையில் கேள்விகளுக்கு இடமின்றி நடந்தாலே போதும். கடைத்தேறி விடுவோம். நம்மைக் கடைத்தேற்றத்தான் ஞானாசிரியனாக, வழிகாட்டியாக, குருவாக, எல்லாமுமாக பெரியவர்

போலவும், அழகிய சிங்கர் போலவும் மகான்கள் இருக்கிறார்கள்.

இந்தத் தொடரை எழுதி வரும் இந்த நாட்களில், ஒரு நாள் இரவு கனவில் மகாபெரியவரின் திவ்ய தரிசனம் எனக்கு வாய்த்தது. பெரும் கூட்டம் முண்டித்தள்ள பெரியவர் வந்தபடி இருக்கிறார். கட்டுக்கடங்காத அந்தக் கூட்டத்தில் அவரது காவி மேலாடையும், மூக்குக் கண்ணாடியும் கீழே விழுந்துவிட, பதறிப் போய் அந்தக் காவி மேலாடையை எடுத்து என்தோள் மேல் போட்டுக்கொண்டு, கண்ணாடியை என் முகத்துக்கு முன் நிறுத்திப் பார்க்கிறேன். ஒரு பக்க கண்ணாடி உடைந்து சிதறல் கோடுகள் தெரிய, ஒரு பக்க கண்ணாடி நன்றாக இருக்கிறது. அவருடைய பட்டையான ஃபிரேம் போட்ட அதே கண்ணாடி! இந்த நிலையில் கனவும் கலைந்தது. கனவு கலைந்த நிலையில் படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தவனாக அந்த தரிசன நெகிழ்வில் கிடந்தேன்.

மறுநாள், அலுவலகப் பணியாக எனது நிர்வாக இயக்குநரைச் சந்திக்கச் சென்றபோது, அவரது உதவியாளர் திரு. ரகு, பெரியவரை ஓவியமாக வரைந்து தன் டேபிள் மேல் வைத்திருந்ததைப் பார்த்தவுடன் இரவு கண்ட கனவு நினைவுக்கு வரவும், அவரிடம் கனவைச் சொன்னேன். உடனேயே அந்த ஓவியத்தைத் தூக்கி எனக்குத் தந்துவிட்ட திரு. ரகு, “என்னிடம் இன்னொரு காப்பி உள்ளது” என்றார்.

கனவில் வந்த பெரியவர் ஓவியமாக கையில் வந்தது எனக்குப் பெரிய உற்சாகத்தைத் தந்தது. அடுத்து என் மகள் திருமணம் தொடர்பாக ஜாதக பரிவர்த்தனை நிமித்தம் ஜோதிடர் நரசிம்மனை கோடம்பாக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தேன். முதல் காரியமாக பெரியவர் படங்கள் சிலவற்றைத் தந்தவர், பெரியவர் படம் போட்ட ஒரு வெள்ளி நாணயத்தையும் தந்தார்.

‘என்ன இது... பெரியவரின் ஓவியம், படம், நாணயம் என்று வரிசையாக வந்தபடி இருக்கிறதே’ என்று அவரிடமும் என் கனவைக் கூறினேன். சிலித்துப்போன அவர் அப்போதுதான் சொன்னார்.

“நேத்துதான் பெரியவாளோட ஜன்ம நட்சத்திரம். அவரைப் பத்தி எழுதறேள் இல்லையா, அதான் அவரோட வஸ்திரம், பொன்னாடையா உங்களுக்குக் கிடைச்சிருக்கு. கண்ணாடில இடது பக்கம் உடைஞ்சு, வலது பக்கம் நல்லபடியா இருந்ததை வலது சார்புதான் சாஸ்தவம்னு அவர் சொல்ற மாதிரி நான் எடுத்துக்கறேன்” என்று மொழி பெயர்த்தார்.

அவரது ஜன்ம நட்சத்திர நாளில் கனவில் அவருடைய தரிசனம் பெற்றதை, அதிலும் அவர் அமரத்துவம் அடைந்து இருபது

வருடங்களுக்குப் பிறகு எனக்கு கிட்டிய அந்த தரிசனம் பெரும்பாக்யம். அது உற்சாகம், நம்பிக்கை என்ற சகலத்தையும் எனக்களித்தது. இப்போது இதை எழுதும் போதும் அந்தச் சிலிர்ப்பு எனக்குள் பரவுகிறது.

ஒட்டுமொத்தமாய் இந்த நிறைவுப் பகுதியில் பெரியவர் குறித்து ஒரு தீர்க்க சிந்தனையை மேற்கொண்டு யோசித்துப் பார்க்கிறேன்.

இறை சன்னிதியில் அபிஷேக ஆராதனைகள் நடக்கும். தொடர்ந்து தீபங்களும் காட்டப்படும். பஞ்சதீபம், குட தீபம், அப்புறம் 108 திரி போட்டு கோபுர தீபம் என்று காட்டி முடித்து, உச்சமாய் கற்பூர தீபம் பெரும் மணியோசைக்கு நடுவில் காட்டப்படும். அப்படி ஒரு கற்பூர தீபம் காட்டப்படும்போது தரிசனம் புரிவோர் அவ்வளவு பேரிடமும் ஒரு பரவசமும் மனக்குவிப்பும் ஏற்படுமல்லவா?

அப்படி ஒரு கற்பூர தீபம் போன்ற மனக்குவிப்போடு, பெரியவரை தரிசனம் செய்தவனாய் கடந்த வாரங்களை அசை போடுகிறேன். அவர் எதற்காக வாழ்ந்தாரோ, எதன் பொருட்டு இறைவன் அவரை அனுப்பினானோ, அது எனக்கு கொஞ்சமாகவது புரிந்ததா? அவரை என் பேனா வழியாக சரியாக பதிவு செய்தேனா, இல்லை அதில் ஏதாவது அறியாயப் பிழை செய்துவிட்டேனா? என்றெல்லாம் என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்.

அவர் தன்னை ஒரு அத்வைதி என்று அடையாளத்துக்காகச் சொன்னாலும், எல்லோராலும் அவரை நேசிக்க முடிந்ததை வைத்துப் பார்த்தால் அவர் அந்த அடையாளத்துக்கு அப்பாற்பட்டவராகி விட்டது தெரிகிறது. அவர் எல்லா மதத் தத்துவங்களையும் தெரிந்து வைத்திருந்ததையும், பிற மதத்தவரும் அவரை பெரிதும் மதித்து போற்றியதையும் நினைத்தால், ஒரு பொதுவான தன்மை அவருக்கு ஏற்பட்டுவிட்டது தெரிகிறது.

தானறிந்ததை, தன் முன்னோர் சொன்னதை மட்டும் சொல்லி, ஒரு பள்ளி ஆசிரியர் குறிப்பிட்ட பாடத்தை தன் பாணியில் நடத்துவது போல அல்லது, அனைவர்க்கும் பொதுவான, இலகுவான ஒரு ஆன்மிகவாதியாகவும் கருத்து உடையவராகவும்தான் அவரைக் கருத முடிகிறது.

‘பிடி அரிசியாவது தர்மம் செய், ஒரு காயத்ரியாவது சொல், வேதங்களைக் கொண்டாடு, எளிமையாக இரு, பெரியவர்களைப் பேணு’ என்று, ஆத்திச்சூடி போல அவர் வலியுறுத்திய கருத்துக்கள் எல்லாம் இப்போது என்னுள் அணிவகுக்கின்றன.

ஆன்மா அழிவதில்லை என்பது நம்முடைய கருத்து. அதிலும் யோகியர் ஆன்மா இருகூறாகப் பிரிந்து, ஒன்று பரத்துவமும் இன்னொன்று ஜீவ சமாதியில் அனுக்ரகமும் புரிந்தபடியே இருப்பதாக ஆன்மிக வல்லுனர்கள் கூறுவது ஒரு பேருண்மை என்பதற்கு, என் கனவில் சமீபத்தில் அவர் வந்ததே சாட்சியாகும்.

கனவை எண்ணங்களின் கசிவு என்பார்கள். அதை அசலான வாழ்வின் அம்சமாய் கருதத் தேவையில்லை என்றும் கூறுவர். ஆனால் அவர் ஜன்ம தினத்தன்று என்னுள் விரிந்த கனவாகிய அந்த நனவை, எண்ணக் கசிவாகக் கருத முடியவில்லை. அவர் அழிவற்று அருளாட்சியை தொடர்ந்து நடத்தியபடியே இருக்கிறார் என்பதே உண்மை என உறுதி யாக நம்புகிறேன்.

விவேகானந்தர் சொன்ன கருத்து நினைவுக்கு வருகிறது:

‘இந்த உலகம் என்பது ஒரு வீடானால் அதில் என் பாரத தேசம் ஒரு பூஜை அறையைப் போன்றது’ என்னும் அவர் கருத்தே, இங்கே மட்டும் ஏன் இத்தனை கோயில்கள்... புனித நதிகள்... புனித க்ஷேத்ரங்கள் என்கிற கேள்விகளுக்கு விடையாகத் திகழ்கிறது.

வேற்றுமையிலும் ஒற்றுமை, சகிப்புத் தன்மை, நெடிய வரலாறு என்று எது இல்லை நம்மிடத்தில்...? இவற்றை எல்லாம் தம் வழ்நாளில் கொஞ்சம் கொஞ்சமாய் உணர்த்தி, நம்மை நெறிப்படுத்திய பெரும் ஞானியர்களில் ஒரு மகா ஞானியாகத் திகழ்ந்த பெரியவர் குறித்து, 48 வாரங்கள் சிந்திக்கக் கிடைத்தது பெரும் பாக்யம். இன்னமும் சிந்திக்கக் கொட்டிக் கிடக்கின்றன. அவரது கருத்துக்கள். ஆயினும் ஒரு இடைவெளிக்குப் பிறகு புதிய சிந்தனைகளுடன் வந்திட காலம் இடம் தரட்டும். குருமகானாகிய அவரது கருணை மிகுந்த பேரருள் எனக்கு மட்டுமன்றி, அனைவர்க்கும் துணையாக விளங்கட்டும்.

நிறைந்தது.